செவ்விலக்கியமும் சித்தர் இலக்கியமும்

முனைவர் கோ. வெங்கடேசன்

செவ்விலக்கியமும்
சித்தர் இலக்கியமும்

முனைவர் **கோ. வெங்கடேசன்**

வைரமுல்லை பப்ளிஷர்ஸ்
கூட்டுறவு காலனி
தஞ்சாவூர் - 613 007

Sevvilakkiyamum Siddhar Ilakkiyamum

செவ்விலக்கியமும் சித்தர் இலக்கியமும்

Dr. G. Venkatesan

முனைவர் கோ. வெங்கடேசன்

© : Author

உரிமை : ஆசிரியருக்கே

First Edition

முதல் பதிப்பு

January 2026

ஜனவரி 2026

Pages : 256

பக்கங்கள் : 256

Printed by
Mullaibharathi Printers,
Thanjavur.

அச்சாக்கம்
முல்லைபாரதி பிரிண்டர்ஸ்,
தஞ்சாவூர்

Published by
Vairamullai Publishers,
Thanjavur.
Cell : 94865 62972

வெளியீடு
வைரமுல்லை பப்ளிஷர்ஸ்,
தஞ்சாவூர்.
கைபேசி எண். 9486562972

ISBN : 978-81-973947-0-6

விலை : ரூ. **320/–**

நூல் வேண்டுவோர் தொடர்புக்கு :

முனைவர் கோ. வெங்கடேசன்

கைபேசி எண். **97905 79163**

முனைவர் மு. இளமுருகன்
தமிழியல் ஆய்வாளர்,
நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார்
திருவருள் கல்லூரி,
தஞ்சாவூர் – 613 003.

தமிழர் மெய்யியலுக்குப் புதுவரவு

மெய்யியல் என்பது எல்லையற்ற ஆன்மத் தேடல் என்பர். இம்மெய்யியலைச் சமுதாய வாழ்வினின்று பிரிக்க முடியாமல் ஆராயும் முறை இன்று வளர்கிறது. இதற்கான தரவுகள் தொகுப் பாக இந்நூல் அமைந்துள்ளது.

மானுடத் தோற்றத்தில் உணவுத் திரட்டலுக்கு வேட்டைச் சமூக வாழ்வு தோற்றம் பெற்றது. இரும்பு, தீ பயனறியா அக் காலத்தே தனக்குப் பயன் தந்த நீர், நிழல், கதிரவன் ஒளி, அச்சம் தந்த நீர், நிழல், கதிரவன் ஒளி, அச்சம் தந்த விலங்குகளை வணங் கத் தலைப்பட்டான். இவ்வணக்கம் வேளாண்மைச் சமூகமாக வளர்ந்தபோது கட்டுப்படுத்தப்பட்ட கால்நடைகள், நிலத்தைப் பண்படுத்தப்பட்ட உற்பத்திக் கருவிகள், விளைச்சல் பொருள்கள் ஆகியவற்றைப் போற்றி வணங்கினான். இவ்வணக்கம் கற்கால கற்கோடரியில் பதிவாகி இச்சொல் முருகன் என அறிய வந்ததை ஐராவதம் மகாதேவன் மயிலாடு துறை செம்பியன் கண்டியூரில் கிடைத்த கற்கோடரி வழி தெளிவுறுத்தினார். இம்முருக வணக் கம் தமிழில் தொல் வழிபாடாக மாமல்லபுர அகழாய்வில் கல்லா லான வேல் வழியும், பிற தடயங்களாலும் சு. இராசவேலு உறுதிப்படுத்தியுள்ளார். இவை திரு.வி.க. எழுதிய 'முருகன் அல்லது அழகு' என்ற நூலுக்கு அரணாக அமைகின்றன.

இத்தகு தொல்லியல் சான்றுகள் *(Archeological antiquities)*தமிழ் உலகச் செம்மொழிகளில் மூத்தது என்ற முடிவை முன் வைப்பன. செம்மொழித் *(Classical Language)* தகுதிப்பாட்டில் முறையே தொல்லியல் சான்றுகள், இலக்கியத் தொடர்ச்சி, செம் மொழி பிற மொவிகட்கு கடன் தந்ததாக அமைந்து, தான் பிற மொழியிடம் கடன் பெறா தகுதியனவாக இருத்தல், இளமைத்

தன்மையுடனுமாக, புதியனவற்றை ஏற்று தகவமைத்துக் கொள் ளும் ஆற்றல் மிக்கதாகத் திகழல் ஆகிய ஐந்து கூறுகளே என்ற வரையரையை வி.கோ. பரிதிமாற் கலைஞர் தமிழ்மொழி வரலாற் றில் பதிவு செய்துள்ளார்.

மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் இவ்வைந் துடன் கூடுதலாகப் பன்னிரண்டு சிறப்புகள் உலக மொழிகளில் தமிழுக்கு உண்டென்று, 'Tamil is the primary classical language of the world' எனும் விரிவான நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விருவர் வரையறைப்படி 'தமிழே உலக முதன்மை உயர்தனிச் செம்மொழி' என்ற சிறப்பு அறிய வருகிறது. இப்புரித லில் தமிழர் வாழ்வுத் தொன்மை நிலத்தடி, கடலடி அகழாய்வால் தெளிவாகிறது. இத்தொன்மைக் கால மெய்யியலாக, 'நீர்வழிப் படூஉம் புனைபோல், ஆருயிர் முறைவழிப் படூஉம்' என்பது 'திறவோர் காட்சியின் தெளிந்தன மகாலின்' என்ற கணியன் பூங்குன்றனார் புறப்பாடல் 192 வழி அறியலாம்.

இம்மெய்யியல் இலக்கணமாகத் தொல்காப்பியர் காஞ்சித் திணையில் நில்ல உலகம் புல்லிய நெறித்தே (நூ. 1024) என வகுத்தார். மெய்யியல் சார் வாழ்த்தப்படும் பொருளாகக்

கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே (நூ. 1034)

என்று தமிழர் மெய்யியலை இயற்கை வழிபாட்டோடு தோற்று வாய் செய்தா ரென்பதை நூலாசிரியர் முனைவர் கோ. வெங்க டேசன் தெளிவுபடுத்தியுள்ள தேடல் பாராட்டிற்குரியது.

யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை என்ற நிலையாமை கோட்பாட்டில் முகிழ்த்த தமிழ் மெய்யியல் நம் புலனடக்கத்தை முன்னிறுத்தி, அவா அறுப்பைப் பரப்புரை செய்தன.

வீர நிலைக்கால (Heroic age) விளைவால் போர் அழிவு கள், வறுமை, மகளிர் நிலை தாழ்வு கண்டு அவலமுற்ற காலத்தே சமண, புத்த புறச் சமயங்கள் தமிழ் நிலத்தே செல்வாக்குற்றன.

இவை கொல்லாமை, புலால் மறுத்தல், தவம், துறவு, நற்காட்சி, நற்செயல், நல்லொழுக்க நெறிகளை பரப்ப பள்ளிகளை நிறுவி பிற்கால அரசுகளால் 'பள்ளிக்கூடம்' என்ற அறக்கொடை வழங் கப்பட்டதைக் கல்வெட்டுகள் உறுதிசெய்துள்ளன.

இம்மெய்யியல் உள்ளடக்கமுடன் பதினெண்கீழ்க்கணக்கு இலக்கிய ஆக்கம் எழுந்தது. இவற்றினூடே வைதீக சமய பிற் போக்குகள், சாதிய வலிமை, உயர்வு தாழ்வுடனான மெய்யியலை வளர்க்க முன்னெடுப்புகள் புராண, இதிகாசங்கள் வழி மானு டத்தை மடமை இருளில் இட்டுச் சென்றன.

மானுட வாழ்விந் அவலங்களுக்கு விதி, ஊழ், பிறவித் தொடர்பு காட்டுவது தமிழ் மரபில் அமைதி காண்பதாகவே உள. இவை பிணியின் அறிகுறிகளே. இவற்றை மாற்ற சமூக அறிவியல் வழி காணும் தீர்வு வர்க்கப் போராட்டமே என்பார் கருத்தும் தமிழியல் ஆய்வில் மேற்கொள்ளப்பெறல் வேண்டும்.

இவற்றிற்கு எதிராகச் சித்தர்கள் வாய்மை மெய்யியலை தமிழ் மண்ணிற்கு ஏற்றவாறு எவ்வித சமரசமும் இன்றி வெளிப்படையான எழுச்சிக் குரலை பதினெண் சித்தர்கள் தனிப்பாக்கள் வழி வலியுறுத்தியும், வலியுறுத்தியவாறு வாழ்ந்தும் காட்டினர். சுரண்டலற்ற தூய பற்றற்ற மெய்யியலை சங்க காலக் காஞ்சித் திணை, வள்ளுவப் பொருண்மைகளுடன், சமண, புத்த மெய்யியலையும் உள்வாங்கி மானுடத்தில் மண்டியிருந்த போலி மெய்யுணர்வைத் தகர்த்தனர். இவ் ஆய்வுப் பார்வையில் நூலாசிரியர் எழுத்தாக்கம் 2006இல் மேற்கொண்ட 'சித்தர்களின் சமூகப் பார்வை' ஆய்வு சிறப்பிற்குரியதாகும்.

தொடர்ச்சியாக 14 கருத்தரங்குகள், உயராய்வு அமர்வுகள் 10, பதிப்புப் பணி, இவற்றுடனான தமிழ்ப் பேராசிரியர் என இவரின் தமிழுறவு பாராட்டத்தக்கது. இறை நம்பிக்கை உள்ள இந்நூலாசிரியர் கள ஆய்வு வழி, 'செம்மங்குடி அருள்தரும் செல்லியம்மன் திருக்கோயில் வரலாறு' இவரின் கோயிற்கலை அறிவை வெளிப்படுத்துவனவாக 2023இல் வெளிவந்துள்ளது.

இதன் தொடர்ச்சியாக 'செவ்விலக்கியமும் சித்தர் இலக்கியமும்' என்ற இப்பனுவல் நான்கு இயல்களாக ஐந்நூற்றுப் பதினொன்று முதன்மை, துணைமைத் தரவுகளுடன் இந்நூலாக்கத்தை ஆசிரியர் திறம்பட எழுதியுள்ளார். செவ்வியல் தமிழுக்கு பதினெண் சித்தர்களும் காலவாரியாகத் தந்த மெய்யியற் கொடையை சங்க இலக்கியம் தொட்டு காலந்தோறும் ஏற்படுத்திய செல்வாக்கினை மதிப்பிட்டுள்ளார். இவ் எழுத்தாக்கம் ஒப்பீட்டு முறையிலும், விளக்க முறையிலும் தேடல் மிக்கதாக உருவாக்கியுள்ள ஆசிரியரின் திறன் பாராட்டத்தக்கதாகும்.

செம்மொழி இலக்கிய இறுதி காலப்பகுதிக்குரியதாக வரையறை செய்துள்ள 'முத்தொள்ளாயிரம்' பற்றிய ஆய்வியல் நிறைஞர் பட்ட (2007) ஆய்வுக் கொடையுடன், தமிழ்ச் செவ்வியல் சார் ஆய்வில் இந்நூலாசிரியரின் சித்தர் இலக்கிய மெய்யியல், தமிழ் மெய்யியல் வளத்திற்கு அளித்த கொடையாகவே கருதத்தக்கது.

இவ்வரிய நூலாக்கம் பெரும் வரவேற்பைப் பெறும் என் பதில் ஐயமில்லை. தன் மாணாக்கர் கற்றல், ஆய்தல், கற்பித்தல், கற்றறிந்தவற்றை ஆவணப்படுத்தி அறிவுலகிற்குத் தன் பங்களிப்பாக நூலாக்கம் செய்தல் கண்டு பயிற்றுவித்தவன் என்ற நிறைவில் தம்மினும் தம் மக்கள் அறிவுடையோராகத் திகழ்வதை நாளும் நற்காட்சிப்பேறு எமக்கு வாய்த்த மாணவர் வரலாற்றில் முனைவர் கோ. வெங்கடேசன் வளர்ச்சி பெரிதும் பாராட்டுதற்குரியதாகும்.

- மு. இளமுருகன்

என் உள்ளம் திறந்து...

இல்லமதில் இருந்து முக்தி பெறவே வேணும்
எட்டெட்டும் அடக்கி வெளியேற வேணும் (அகத்தியர்)

சீரப்பா உலகில் இல்லறத் தோடிருந்து
திருக்கறுக்க முக்தியுண்டாம் தெளிந்து பாரே
(குதம்பைச் சித்தர்)

உலகில் அறங்கள் இரண்டு என்று நமது முன்னோர்கள் பதிவிட்டுள்ளனர். ஒன்று இல்லறம், மற்றொன்று துறவறம். துற வறம் பிறர் பழிக்காத வகையில் அமைய வேண்டும். இல்லறமே நல்லறம் என்பது ஔவையின் அமுத வாக்கு.

சித்தர்கள் இயற்கையை ஆட்சி செய்பவர்கள். அவர்களின் அடிப்படைக் கொள்கை இறைவன் மீது கொண்டுள்ள அன்பு. அன்புடையவர் அனைவரும் இறையருள் பெறத் தகுதியுடைய வர்கள்.

சித்தர்களின் வாழ்வியலில் மனத்தைப் பறிகொடுத்தவன் என்ற அமைவில் இந்நூலினைப் படைத்துள்ளேன்.

தமிழ் படித்த காரணத்தினாலும் சித்தர் வாக்குகளில் ஈடுபாடு கொண்டதாலும் இரண்டையும் இணைத்து 'செவ்விலக் கியமும் சித்தர் இலக்கியமும்' என்னும் தலைப்பில் நூல் வடித்துள்ளேன். இந்நூல் தமிழிலக்கியப் படைப்பாளர்களுக்கும் சித்த அவதார நாயகர்களுக்கும் சூட்டிய கருத்து மாலை.

இந்நூல் உருவாக்கத்திற்கு உதவிய முனைவர் கு. விசய லெட்சுமி அவர்களுக்கும், என் தாய் கோ. ராஜரெத்தினம், தந்தை

வெ.பி. கோவிந்தராஜ் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு சிறப்பான வாழ்த்துரை வழங்கிய பேராசிரியர் மு. இளமுருகன் அவர்களுக்கும், முனைவர் இரா. குருநாதன் அவர்களுக்கும், நூல் உருவாக்கத்தின்போது பல வகைகளில் உதவிய என் இனிய நண்பர் நாகப்பட்டினம், அரசு கலை அறிவியல் கல்லூரி, தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் அ. வெங்கடேசுவரன் அவர்களுக்கும், என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நூலை சிறந்த முறையில் வடிவமைத்து அச்சிட்டுத் தந்த தஞ்சாவூர், முல்லைபாரதி பிரிண்டர்ஸ் நிறுவனத்திற்கும், வெளியிட்டுத் தந்த தஞ்சாவூர், வைரமுல்லை பதிப்பகத்திற்கும் என் நன்றிகள்!

வாழிய செவ்வியல் இலக்கியங்கள்
வளர்க சித்தர்களின் அருங்கருத்துகள்!

என்றும் அன்புடன்

- கோ. வெங்கடேசன்

பொருளடக்கம்

1.	சங்க இலக்கியம்- சித்தர் படைப்புகளில் உள்ளடக்கம்	11
2.	சங்க இலக்கியம் - சித்தர் படைப்புகளில் மெய்யியல்	86
3.	சங்க இலக்கியம் - சித்தர் படைப்புகளில் வடிவச் செல்வாக்கு	162
4.	சங்க இலக்கியம்- சித்தர் படைப்புகளில் உத்திச் செல்வாக்கு	200
5.	நிறைவாக...	237
	துணைநூற்பட்டியல்	242



1. சங்க இலக்கியம் – சித்தர் படைப்புகளில் உள்ளடக்கம்

தமிழின் தலைசிறந்த இலக்கியமாகப் போற்றப்படும் சங்க இலக்கியம், தமிழர்களின் பண்பாட்டு முதிர்ச்சியை இன்று வரை உலகிற்கு உணர்த்திக் கொண்டிருக்கிறது. சித்தர் இலக்கியங்கள் தமிழ் மெய்யியல் மரபைப் பற்றிய புரிதலுக்குப் பெருமளவில் பயன்படுகின்றன. இந்த அடிப்படையில் தமிழர்களின் வாழ்வியல் நெறிமுறைகளான அறம்,பொருள், இன்பம், வீடு ஆகிய வற்றின் உண்மைகளை எடுத்தியம்பும் சங்கப் பாடல்களையும் சித்தர் பாடல்களையும் உள்ளடக்க அடிப்படையில் இப்பகுதியில் ஒப்பிட்டு நோக்கலாம்.

சங்க இலக்கியத்தின் காலம்

"சங்க இலக்கியம் என்ற தொகுப்பில் உள்ள பாட்டுகளின் காலம் கி.மு. 500 முதல் கி.பி. 100 வரையில் என்று கூறுவர். தொல்காப்பியமும் ஏறக்குறைய அந்தக் காலத்தைச் சார்ந்தது"[1] என்று மு. வரதராசனார் குறிப்பிடுகிறார்.

சங்க இலக்கியங்கள் செம்மாந்த இலக்கியங்கள். "இலக்கியம் வாழ்க்கையின் பிரதிபலிப்பு (Literature is criticism of life)

என்றால் வாழ்ந்து வளர்ந்த தமிழ்ச் சமுதாயத்தின் சிறந்த ஒரு பிரதி பலிப்பாக ஆக்கப்பட்டவை. ஏறத்தாழ இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக வாழ்ந்து வருகின்ற இலக்கியப் பரப்பின் மிகச் சிறந்த இலக்கியங்களாகக் கருதப்படுபவை"[2] என்று அகத்தியலிங்கம் போற்றுகின்றார்.

"சங்க இலக்கியப் பாடல்களில் காணப்படும் பழைய மரபுகள் பல உண்டு. காதல் பற்றிய கற்பனையை அகம் என்றும், வீரம், கொடை, புகழ் முதலிய வாழ்க்கைத் துறைகளைப் புறம் என்றும் பகுத்த பாகுபாடு அந்த மரபுகளுள் முதன்மையானதாகும். அகப்பாட்டுகளில் கற்பனைத் தலைவன் தலைவியின் காதல் பாடப்படும். புறப்பாடல்களில் நாட்டை ஆளும் தலைவனுடைய சிறந்த வீரச் செயல்களும் கொடைப் பண்பும் குடிமக்களுள் சிறந் தவர்களின் அருஞ்செயல்களும் பிறவும் பாடப்படும். ஆகவே, பெரும்பாலும் அகப்பாட்டுகள் கற்பனையாகவும், புறப்பாட்டு கள் உள்ளது கூறலாகவும் அமைந்துள்ளன"[3] என்கிறார் மு. வரத ராசனார்.

"சங்கப் புலவர்களின் எண்ணிக்கை 473. அவர்களுள் பெண்பாற் புலவர்களும் அடங்குவர். அவர்கள் பாடிய மொத்தப் பாடல்கள் 2381. அவற்றுள் அகப் பாடல்கள் 1862; புறப்பாடல் கள் 519 "[4] என, இரா. சாரங்கபாணி சங்கப் பாடல்களின் எண் ணிக்கையைத் தருகிறார்.

சங்க இலக்கியப் பெயர்கள்

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்னும் இரண்டும் சங்க இலக்கியங்களாகும். இவற்றைப் பதினெண் மேற்கணக்கு நூல்கள் எனவும் கூறுவர். பத்துப்பாட்டில் உள்ள பத்தும் தனித்தனியான பாடல்களாகும். எட்டுத்தொகை நூல்கள் தனித்தனியாக உள்ள எட்டுப் பாடல்களால் ஆன தொகையாகும். இவற்றுள், 1. நற் றிணை, 2. குறுந்தொகை, 3. ஐங்குறுநூறு, 4. கலித்தொகை, 5. அக நானூறு ஆகிய ஐந்தும் அகம் பற்றியவை; 6. புறநானூறு, 7. பதிற் றுப்பத்து ஆகிய இரண்டும் புறம் பற்றியவை. அகமும் புறமும் இணைந்தது பரிபாடலாகும்.

இவை எட்டுத்தொகை நூல்கள் என்பதை,

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தோர் ஏத்தும் கலியோடு அகம் புறமென்று
இத்திறத்த எட்டுத் தொகை

என்ற பழம் பாடலால் அறிய முடிகிறது. இவற்றை விரிவாகக் காண்பது இன்றியமையாததாகும்.

எட்டுத்தொகை எனப் பெயர் வரக் காரணம்

"எட்டுத்தொகையில் குறுந்தொகை, நெடுந்தொகை, கலித் தொகை என்னும் மூன்றும் தொகை என்னும் பெயர் பெற்றிருக் கலாம். அத்தொகை என்னும் பெயரினை மேற்கொண்டு அத் தொகைநூல்கள் மூன்றும் சேர்ந்த தொகுப்பே எட்டுத் தொகை என்று பெயரிடுதல் பொருந்தும்"[5] என்கிறார் லெ.ப.கரு. இராம நாதன்.

நற்றிணை

எட்டுத்தொகை நூல்களைக் குறிப்பிடும் பழைய வெண்பா முதலில் நற்றிணையையே சுட்டுகிறது. ஒன்பதடி முதல் பன்னி ரண்டு அடிவரை கொண்டது. 'திணை' என்னும் சொல்லுக்கு ஒழுக்கம் என்று பொருள். ஐந்து திணைகளில் நடை பெறும் காதல் வாழ்க்கை. களவு, கற்பு என்னும் இரு பிரிவினுள் அடங்கும். அகத் திணை ஒழுக்கத்தில் களவுப் பகுதி மிகவும் சுவையுடையதாகும்.

"இக்களவொழுக்கம் இரண்டு திங்கள்தான் நடைபெற வேண்டும் என்பது இலக்கணம்"[6] ஆகும்.

காதல் நெறியினையும் இல்லற இன்பத்தைப் பற்றியும் விளக்கும் 400 அகப்பாடல்கள் இத் தொகைநூலில் உள்ளன. இப் பாடல்களை 175 புலவர்கள் பாடியுள்ளனர். இந்நூலைத் தொகுத் தவர் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி ஆவார். உயர்ந்த வாழ்க்கை அனுபவங்களும், நல்ல அறிவுரைகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. குடும்ப வறுமையைப் பெற்றோர்க்கு மறைத்து வாழ்வதையே அறமாக நினைத்தனர் சங்க மகளிர். இப் பண்பின் சிறப்பை,

கொண்ட கொழுநன் குடிவறனுற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ் சோறுள்ளாள்
ஒழுகுநீர் நுணங்கறல் போலப்
பொழுது மறுத்துண்ணும் சிறுமது கையளே [7]

என நற்றிணை உணர்த்துகிறது.

குறுந்தொகை

இது, 'நல்ல குறுந்தொகை' எனப் பாராட்டப்படும் சிறப் பினைப் பெற்றுள்ளது. 4 அடி முதல் 8 அடிகளைக் கொண்ட 400 பாடல்களைக் கொண்டது. 205 புலவர்கள் பாடிய பாக்களை, இலக்கிய இலக்கண ஆசிரியர்கள் மிகுதியாக மேற்கோளாகக் கையாண்டமை இந்நூலின் சிறப்பினை உணர்த்துகிறது. இதனைத் தொகுப்பித்தவர் 'பூரிக்கோ' என்பவராவார்.

உள்ளின் உள்ளம் வேமே உள்ளா
திருப்பினெம் அளவைத் தன்றே வருத்தி
வான்றோய் வற்ற காமம்
சான்றோர் அல்லர்யாம் மரீஇ யோரே [8]

என்று தலைமகள் தோழியிடம் தலைவனின் அன்புடைமையை விவரித்துக் கூறுவதை அறிய முடிகிறது.

''புறத்தே தோன்றும் காட்சிகளைச் செய்யுள்களிற் புனைந்து காட்டும் ஆற்றலினும், அகத்தே தோன்றும் காட்சிகளை உணர்ச்சியும் மெய்ப்பாடும் புலப்பட உரைக்கும் ஆற்றல் மிக வும் சிறந்தது''[9] *என்னும் கூற்றுக்குச் சான்று பகர்வனவாகக் "குறுந் தொகைப் பாடல்கள் இனிமையும் எளிமையும் கொண்டு இயங்கு கின்றன. இச்செய்யுள்களிற் காணப்படுவனவாகிய தலைவன் தலைவியரிடையே வளரும் அன்புநிலை, அவர் இல்லறம் நடத் தும் முறை முதலியன உலகியலைச் செம்மைப்படுத்தும் தன்மை யனவாக காணப்படுகிறது"*[10] *என்னும் கூற்று பொருத்தமுடைய தாகும்.*

ஐங்குறுநூறு

இந்நூலுக்குப் பாரதம் பாடிய பெருந்தேவனார் வாழ்த்துப் பாடல் பாடியுள்ளார். 3 அடி முதல் 6 அடி வரை உள்ளது. ஐந்

திணை ஒழுக்கங்களைச் செப்பமுறத் தனித்தனியே சிறப்பிக் கின்றமையின் ஐங்குறுநூறு என்ற பெயர் பெற்றது. இவ்வைந்து திணைகளில் தமிழரின் வாழ்வியல் போற்றப்படுகிறது.

முதல் நூறு பாடல்களும் மருதத் திணைக்குரியவை. இவற்றின் ஆசிரியர் ஓரம்போகியார். இரண்டாவது நூறு நெய்தல் திணைக்குரியது. இதனைப் பாடி யவர் அம்மூவனார். மூன்றாவது குறிஞ்சித் திணைக்குரிய நூறு பாடல்களின் ஆசிரியர் கபிலர். நான் காம் நூறாகிய பாலையினை ஓதலாந்தையாரும். ஐந்தாம் நூறாகிய முல்லையினைப் பேயனாரும் பாடியுள்ளனர். இந்த ஐந்திணையும் ஒருங்கு திரட்டிக் கோத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்கிழார். தொகுப்பதற்கு உதவிய அரசன் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை. சிவனைப் போற்றிப் பாடிய கடவுள் வாழ்த்தும் இடம் பெற்றுள்ள இந்தத் தொகை நூலுக்குச் சில சிறப்பியல்புகள் உள்ளன. ஒவ்வொரு திணை பற்றிய நூறு பாடல்களும் ஒரு தனி நூல் போன்றது.

"வாழி, ஆதன் வாழி அவினி நெற்பல பொலிக பொன் பெரிது சிறக்க" எனத் தலைவன் தலைவிக்கு ஈடாகத் தனது நாட்டையும் கொடுத்து மணக்கிறான். இதனை,

எக்கர் ஞாழல் மலரின் மகளிர்
ஒண்டழை அயருந் துறைவன்
தண்டழை விலையென நல்கினன் [11]

என்பதனால் அறிய முடிகிறது.

தலைவனிடம் தலைவி கொண்ட பேரன்பைத் தன் ஊரில் கிடைக்கும் தேன், பால் இவற்றையெல்லாம் விட, தலைவன் நாட்டில் உள்ள நீர், மான் உண்டு கலங்கிய நீராயினும் இனிய சுவை உடையது என்கிறாள். இதன்மூலம் அவர்களின் அன்பறம் வெளிப்படுகின்றது.

கலித்தொகை

கலிப்பாவால் ஆன 150 பாடல்களைக் கொண்ட தொகை நூல் இது. பரிபாடலால் ஆனது பிறிதொன்று. இவ்விரு பாக் களும் அகப்பொருள் சுவைபட இசையொடு மொழிவதற்கு ஏற்ற

தன்மை கொண்டவையாகும் என்பர் ஆசிரியர் தொல்காப்பியர். இக்கருத்தினை முதல் உரையாசிரியராகிய இளம்பூரணர்,

"நாடக வழக்காவது - சுவைபட வருவனவெல்லாம் ஓரிடத்துத் தொகுத்துக் கூறுதல்,

உலகியல் வழக்கமாவது - உலகத்தார் ஒழுகலாற்றோடு ஒத்து வருவது,

பாடல் சான்ற புலனெறி வழக்கமாவது - இவ்விரு வகையானும் பாடல் சான்ற கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்க் கூறப்படுகின்ற அகப்பொருள்"[12] என்று வலியுறுத்துகிறார்.

மேற்கண்ட இளம்பூரணர் விளக்கத்தை ஆயும் பொழுது நாடக வழக்கமென்பது களவு நிமித்தமாக ஒத்த வயதுடைய ஆணும் பெண்ணும் எதிர்ப்பட்டு ஏற்படுகின்ற ஒழுகலாறுகளையும் பெற்றோர் ஏற்காத பொழுது இவ்விருவரும் மேற்கொள்கின்ற கற்பு நெறி பற்றிய வரைதல் நிமித்தங்களையும் தொகுத்துரைப்பதே நாடக வழக்கமாகும்.

பாடல் சான்ற புலனெறி வழக்கில் கைக்கிளையும் அன்பின் ஐந்திணையும், பெருந்திணையும் பேசப்படுகின்றன என்பதை அறிய முடிகிறது.

இதிலிருந்து ஆசிரியத்தினும் சிறப்பாக அகம் பாடுவதற்குரியவை கலிப்பா என்பது விளங்குகின்றது. எனவேதான், கலிப்பா என்னும் யாப்பினைக் கலித்தொகையில் கையாண்டுள்ளனர்.

இரந்தோர்க் கொன்றீயாமை இழிவென
மலை இறந்து செயல் சூழ்ந்த பொருள்
இல்லென இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவெனக்
கல்லிறந்து செயல் சூழ்ந்து பொருள் பொருளாகுமோ [13]

வாழ்வதற்குப் பொருள் அவசியம். அது அறநெறியில் தேடி அறநெறியில் செலவிடப்பட வேண்டும். பொருளற்றவரையும் ஒரு பொருளாகச் செய்வது பொருள் மட்டுமே. பொருளைப் பிறர்க்கென வழங்கிவிட்டு அவர் இரந்து நிற்பவருக்கு எதுவும்

கொடுக்காமல் இருப்பது இழிவான செயலாகும். ஒருவர், தன்னிடத்தில் பொருள் எதுவும் இல்லை, தனக்குத் தந்து உதவி செய்க என இரந்தவர்க்குக் கொடுக்காமல் இருத்தல் நல்லதன்று. அற வழியில் நிற்கத் தலைவன் பொருள் தேடச் செல்கிறான் எனப் பொருளின் சிறப்பினை உணர்த்துகின்றன மேற்பாடலடிகள்.

ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்;
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை;
பண்பு எனப்படுவது பாடறிந் தொழுகுதல்;
அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை
அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்
செறிவு எனப்படுவது கூறியது மறா அமை;
நிறை எனப்படுவது மறைபிறர் அறியாமை
முறை எனப்படுவது கண்ணோடாது உயிர் வெளவல்;
பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்[14]

என்று கலித்தொகை, இல்வாழ்க்கை நடத்துபவர்கள் கடைபிடிக்க வேண்டிய அறங்களை வலியுறுத்துவது சிறப்பிற்குரியதாகும்.

'கற்றறிந்தார் ஏத்தும் கலி', 'கல்விவலார் கண்ட கலி' என்னும் தொடர்கள் கலித்தொகையின் மாட்சியினை நன்கு விளக்குவனவாகும். இந்நூல் ஐந்து திணைகளாகப் பகுக்கப்பட்டு மொத்தம் நூற்றைம்பது பாடல்களைக் கொண்டுள்ளது. இன்பப் பொருளைச் சொல்லும் கலிப்பாவால் ஆனது. ஐந்திணைக்கும் உரிய ஒழுகலாறுகளை இந்நூல் எடுத்தியம்பியுள்ளது.

அகநானூறு

அகநானூற்றைத் தொகுத்தவர் மதுரை உப்பூரிகுடிகிழான் மகன் உருத்திர சன்மன். இந்நூலைத் தொகுப்பதற்கு உதவியவன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி. முதல் 120 பாடல்களைக் களிற்றியானை நிரை என்றும், 121 - 300 பாடல்களை மணிமிடை பவளம் என்றும், 301 - 400 பாடல்களை நித்திலக்கோவை என்றும் பாகுபடுத்தினர். ஒற்றை எண் கொண்ட பாடல்கள் பாலைத் திணைக்கும், 2, 8 என்று முடிபவை குறிஞ்சிக்கும், 4 முல்லைக்கும் 6 மருதத்திற்கும் 10, 20 என்று வருவன நெய்தலுக்கும் உரியன. இப்பாடல்கள் 13 அடி முதல் 31 அடி வரை உள்ளன.

இவற்றைப் பாடிய பாவலர் 145 பேர் ஆவர். பாரதம் பாடிய பெருந்தேவனார் சிவனைப் பொருளாக வைத்துப் பாடிய கடவுள் வாழ்த்துப் பாடல் ஒன்றும் உள்ளது.

அகம் என்னும் பெயரமைந்த பழைய இலக்கிய நூல் பல் வேறு புலவர்களால் இயற்றப்பட்ட நானூறு பாடல்களைக் கொண் டது. அகநானூறு அகம் பற்றிய எட்டுத்தொகை நூல்களில் நீட்சி உடையதாகையால் 'நெடுந்தொகை' எனவும் வழங்கப்படுகிறது.

புறநானூறு

முரஞ்சியூர் முடிநாகராயர் முதல் கோவூர்கிழார் வரை பல் வேறு புலவர்கள் பாடிய 398 பாடல்களைக் கொண்டது. இதற் குப் புறம், புறப்பாட்டு என்னும் வேறு பெயர்களும் உண்டு. பண் டைத் தமிழரில் மன்னன் முதல் மக்கள் வரையிலான அனைவரின் புறவாழ்க்கை பற்றியும் போர், வீரம், கொடை முதலிய செயல்கள் குறித்தும் இந்நூல் விளக்கி நிற்கின்றது.

அறத்தோடு வாழ்ந்தால் முதுமை இல்லை என்பதை,

யாண்டுபல வாகி நரையில ஆகுதல்
யாங்கு ஆகியர்? என வினவுதிர் ஆயின்
மாண்ட என் மனைவியோடு மக்களும் நிரம்பினர்
யான் கண்டனையர் என் கிளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும்; அதன் தலை
ஆன்று அவிந்து அடக்கிய கொள்கைச்
சான்றோர் பலர் யான் வாழும் ஊரே[15]

மனிதனுக்கு வாழ்வியல் துன்பங்கள் நேரும் பொழுது அவனது உடலும், உள்ளமும் சோர்வடையும், தலைநரை ஏற் படும். ஆனால், சிறந்த வாழ்வியல் நெறியுடன் வாழும்போது அவன் முதுமையான பருவத்தில் வாழ்ந்தாலும் அவன் இளமை யாக இருப்பான். சங்க காலத்தில் மக்களும் மன்னரும் சிறந்த வாழ்வியல் நெறிகளைப் பின்பற்றியதாலும் தன் மனைவி, மக்கள், சுற்றத்தினர், அரசர், சான்றோர் அனைவரும் மாட்சிமையோடு நல்லறத்துடன் வாழ்ந்ததாலும் தனக்கு நரையில்லை முதுமை வரவில்லை என்கிறார் புலவர்.

பதிற்றுப்பத்து

பத்துச் சேர அரசர்களைப் பற்றிப் பத்துப் புலவர்கள் பாடிய பத்துப்பத்துப் பாடல்களின் தொகுப்பே பதிற்றுப்பத்து என்னும் நூலாகும். முதற் பத்தும் இறுதிப் பத்தும் கிடைக்க வில்லை. இரண்டாம் பத்தில் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனாரும், மூன்றாவது பத்தில் பல்யானைச் செல்கெழுகுட் டுவனைப் பாலைக்கௌதமனாரும், நான்காவது பத்தில் களங் காய்க் கண்ணி நார்முடிச் சேரலைக் காப்பியாற்றுக் காப்பிய னாரும், ஐந்தாவது பத்தில் கடல் பிறக்கோட்டிய செங்குட்டு வனைப் பரணரும், ஆறாவது பத்தில் ஆடு கோட்பாட்டுச் சேர லாதனைக் காக்கை பாடினியார் நச்செள்ளையாரும், ஏழாவது பத்தில் செல்வக் கடுங்கோ வாழியாதனைக் கபிலரும் எட்டாம் பத்தில் பெருஞ்சேரலிரும்பொறையை அரிசில்கிழாரும், ஒன்ப தாவது பத்தில் குடக்கோ இளஞ்சேரலிரும்பொறையைப் பெருங் குன்றூர்க்கிழாரும் புகழ்ந்து பாடியுள்ளனர். கபிலர்,

பார்ப் பார்க்கு அல்லது பணிபு அறியலையே [16]

எனச் சேரர்கள் பெரியவர்களுக்குப் பணிந்து நடத்தல் உண்டு, ஆனால், மற்றப் பகைவர்களைக் கண்டு பணிந்து நடக்க மாட்டார் கள் என்று போற்றுகிறார்.

பரிபாடல்

அகப்பொருள், புறப்பொருள் ஆகிய இரு பொருள்களும் கலந்து அமைந்தது. இதில் எழுபது பாடல்கள் இருந்தன என்று தெரிகிறது. ஆனால் முப்பத்துமூன்று பாடல்களே கிடைத்துள் ளன. திருமாலையும், முருகவேளையும், வையை ஆற்றையும் வாழ்த்துவதாக இப்பாடல்கள் அமைந்துள்ளன. "இதன்கண் திருமால், செவ்வேள் ஆகிய தெய்வ வழிபாட்டுப் பாடல்களும், வையை, மதுரை ஆகிய இயற்கைக் காட்சிப் பாடல்களும் அமைந்துள்ளன. அவைகளில் தமிழ் மக்களின் பழக்க வழக்கங் களும், அறம், பொருள், இன்பம், வீடுபேற்றுக் கூறுபாடுகளும் இயற்கைக் காட்சியின் நலங்களும், காதற்காமச் சிறப்பும், அன்பும் பண்பும் ஆடலும் பாடலும் பிறவும் நெஞ்சை அள்ளும் நீர்மையவாய்ப் புலமைச் சான்றோர்களால் பொருள் பொதிய

எடுத்துக்காட்டப் பெற்ற பெருமையுடையது."[17] பரிபாடல் என் பது பாட்டினால் பெயர் பெற்றதாகும். பரிபாடல் இசைப்பாட லாகவும், ஒவ்வொரு பாடலும் இசை வகுக்கப்பட்டும் காணப்படு கிறது. மேலும், நான்கு வகையான பாக்களையும் அவற்றின் உட் பிரிவுகளான பகுதிகளையும் பரிபாடலுள் காணலாம்.

பரிபாடல்லே தொகைநிலை வகையின்
இதுஃபா என்னும் இயல்நெறி இன்றிப்
பொதுவாய் நிற்றற்கும் உரித்தென மொழிப [18]

என்பார் தொல்காப்பியர்.

இதிலிருந்து எல்லாப் பாவிற்கும் பொதுவாய் நிற்றற்கும் உரியது என்று கூறுவர். திருமாலின் சிறப்பு பின்வருமாறு பரி பாடலில் விளக்கப்பட்டுள்ளது.

தீயினுள் தெறல் நீ
பூவினுள் நாற்றம் நீ
கல்லினுள் மணியும் நீ
சொல்லினுள் வாய்மை நீ
அறத்தினுள் அன்பு நீ மறத்தினுள் மைந்து நீ
வேதத்து மறை நீ பூதத்து முதலும் நீ
வெஞ்சுடர் ஒளியும் நீ திங்களும் அளியும் நீ
அனைத்தும் நீ அனைத்து உட்பொருளும் நீ [19]

அந்தர்யாமியாய்த் திருமால் பூமிக்குள் நீராய், பூவினுள் நறுமணமாகவும், வேதத்தின் மறையாகவும் எல்லாப் பொருள் களிலும் எல்லா உயிர்களிடத்திலும் உட்கலந்து இருப்பதை அறிய முடிகிறது.

பத்துப்பாட்டு

திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறு பாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப் பாலை, மலைபடுகடாம் ஆகிய பத்தும் பத்துப்பாட்டு நூல்களா கும். இவற்றைப் பழம் பாடலாலும் அறியலாம்.

முருகு பொருநராறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத் தொடும் பத்து

இப்பத்தினுள் ஆற்றுப்படையாக ஐந்து நூல்கள் அமைந் துள்ளன. முதல் நான்கும், பத்தாவதாக உள்ள மலைபடுகடாமும் ஆகிய இவ்வைந்து பாட்டும் ஆற்றுப்படை நூல்களாகும். முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, நெடுநல் வாடை என்னும் நான்கும் அகப்பொருளைச் சார்ந்த நூலாகும். மதுரைக்காஞ்சி என்பது நிலையாமையை உணர்த்தும் புறப்பாட லாகும்.

"பத்துப்பாட்டினுள் முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு என்னும் இரண்டும் பாட்டு என்னும் பெயர் பெற்றிருத்தலும், பட்டினப்பாலை, வஞ்சிநெடும்பாட்டு என்று கூறப்படுதலும் நோக்கி, அப்பாட்டு என்னும் பெயரினை மேற்கொண்டு, அப்பாட் டுக்கள் மூன்றும், பாட்டுக்கள் பிறவும் சேர்ந்த தொகுப்பிற்குப் பொதுவாகப் பத்துப்பாட்டு என்று பெயரிடுதல் பொருந்தும் எனக் கருதியிருக்கலாம்"[20] என்கிறார் லெ.ப.கரு. இராமநாதன்.

திருமுருகாற்றுப்படை

பத்துப்பாட்டில் முதலாவதாகக் கூறப்படும் நூல் இது. புலவராற்றுப் படை என்றும் வழங்கப்படும், 317 அடிகளை யுடைய ஆசிரியப்பாவால் அமைந்த நூல். சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் பதினோராந் திருமுறையில் இடம் பெற்றுள் ளது. வீடு பேற்றைப் பெறவிரும்பும் இரவலனை, வீடு பெற்றா னொருவன் முருகனிடத்து ஆற்றுப்படுத்துவதாகும். முருகனின் ஆறுபடை வீட்டின் சிறப்பான இயற்கைக் காட்சிகள் இதில் சிறப் பாகக் கூறப்பட் டுள்ளது. இந்நூலைப் பாடியவர் நக்கீரன்.

முருகன் வீற்றிருக்கும் இடங்கள் இவை என்றும், எவ்வாறு சென்று எவ்வகையில் வழிபட்டு முருகன் அருளைப் பெறலாம் என்றும் விளக்கி, உலக உயிர்களை நெறிப்படுத்துகின்றார் நக்கீரர். முருகனின் ஆறு திருத்தலங்களான திருப்பரங்குன்றம், திருச்சீரலை

வாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழ முதிர்சோலை ஆகிய இடங்களை அழகுபட வருணிக்கின்றார்.

..... மார்பின்
என்பு எழுந்து இயங்கும் யாக்கையர், நண்பகல்
பல உடன் கழிந்த உண்டியர், இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதும்
கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம் பாகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினம் கடிந்த காட்சியர் இடும்பை
யாவதும் அறியா இயல்பினர் [21]

என்று முருகனை வழிபடும் முனிவர்களைப்பற்றி விளக்குகிறார். உண்ணாமல் நோன்பு கழிந்தவர்கள் சினம் நீங்கிய மனத்தை உடையவர்கள், மெய்யறிவு பெற்றவர்கள் ஆசைகள் அற்றவர் என நக்கீரர் தனது பாடலில் விரித்துரைக்கிறார்.

பொருநராற்றுப்படை

கரிகாற் பெருவளத்தானை முடத்தாமக் கண்ணியார் பாடியது. பரிசில் பெற்ற பொருநன் பரிசில் பெற விழையும் பொருநனை ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளது. 248 அடிகளை உடையது. ஏர்க்களம் பாடுவோர், போர்க்களம் பாடுவோர், பரணி பாடுவோர் எனப் பொருநர் பலவகைப்படுவர்.

ஆறலை கள்வர் படைவிட அருளின்
மாறுதலைப் பெயர்க்கும் மருவின் பாலை [22]

பாலையாழின் இசையைக் கேட்டால் ஆறலை கள்வர் தங்கள் படைக்கலன்களைக் கீழே போட்டுவிட்டு மெய்ம் மறந்து நிற்பர் என்கிறார் புலவர்.

சிறுபாணாற்றுப்படை

ஓய்மா நாட்டு நல்லியக் கோடனை, இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியது. 269 அடிகளைக் கொண்டது. நல்லியக்கோடனின் நல்ல பண்புகளையும் வீரச் செயல்களையும் வள்ளல் தன்மையையும், பாணனை அவன் விருந்தோம்பும் முறையையும் அழகுற எடுத்துக்காட்டுகிறது இந்நூல். பழம்

பெரும் நகரங்களான வஞ்சி, கொற்கை, மதுரை, உறந்தை ஆகிய வற்றின் சிறப்புகளையும் ஏழு வள்ளல்களின் அருஞ்செயல் களையும் இந்நூலின் வாயிலாக அறியமுடிகின்றது. பெரும் பாணாற்றுப் படையைவிட அடிகளால் சிறியதாதல் பற்றியும் சிறு பாணரை ஆற்றுப்படுத்துவதாலும் சிறுபாணாற்றுப்படை என் னும் பெயரினது. பாணர்களில் யாழ்ப்பாணர், இசைப்பாணர், மண்டைப் பாணர் எனப் பல பிரிவினருண்டு. இந்நூலில் யாழ்ப் பாணரே குறிக்கப்பெறுகின்றனர்.

..... மால்வரைக்
கமழ்பூஞ் சாரல் கவினிய நெல்லி
அமிழ்துவிளை தீம்கனி ஔவைக்கு ஈந்த,
உரவுச்சினம் கனலும் ஒளிதிகழ் நெடுவேல்,
அரவக் கடல்தானை, அதிகனும் [23]

எனப் பாடுகிறார் புலவர். பெருமையுடைய மலையில் கமழும் பூக்களை உடைய பக்கமலையிலே அழகு பெற்ற அமிழ்தின் தன்மை கொண்ட இனிய பழத்தை ஔவைக்குக் கொடுத்தவனும், கடல் போல் படையினை உடையவனும் ஆகிய அதியமானின் சிறப்பைப் புகழ்ந்துரைக்கிறார் புலவர்.

பெரும்பாணாற்றுப்படை

தொண்டைமான் இளந்திரையனைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியது. 500 அடிகளை உடையது; ஆசிரியப்பா வால் இயன்றது. பரிசில் பெறுதற்குரிய பெரும்பாணன் ஒருவ னைப் பரிசில் பெற்ற பாணன் ஒருவன் காஞ்சி நகரத்திற் செங் கோல் செலுத்திக் கொண்டிருந்த தொண்டைமான் இளந்திரைய னிடத்தே ஆற்றுப்படுத்துவதாக அமைந்தது. ஐந்திணைகளைப் பற்றிய வருணனைகளும் அந்நிலத்து வாழும் பல்வகை மக்களின் இயல்புகளும், அவர்களின் விருந்தோம்பல் முறையும் அழகாகக் கூறப்பட்டுள்ளன. பேரியாழை வாசிக்கும் பாணர்கள் எனக் கூறப் படுவதனாலும் இந்நூல் இப்பெயர் பெற்றது.

அத்தஞ் செல்வோர்அலறத் தாக்கிக்
கைப்பொருள் வௌவுங் களவோர் வாழ்க்கைக்
கொடியோர் இன்று அவன் கடியுடை வியன்புலம்

உருமும் உரறா தரவும் தப்பா
காட்டுமாவும் உறுகண் செய்யா [24]

பிறர் பொருளைக் கவர்ந்து களவு செய்யும் கொடுமை உடையவன் அந்நாட்டில் கிடையாது. பாம்புகளும்கூடக் கொல்லும் செயலைச் செய்யா. காட்டு விலங்குகள்கூட யாருக்கும் வருத்தம் செய்யா. ஆதலால் அவ்வறம் சிறக்கும் நாட்டில் அச்சமின்றிச் செல்வாயாக என நாட்டின் பெருமையையும் அறத்தையும் எடுத்துரைக்கின்றது.

மலைபடுகடாம் (அ) கூத்தராற்றுப்படை

ஆற்றுப்படைகளில் அடியளவில் பெரிய பாட்டிது. 583 அடிகளை உடையது. 'நன்னன் சேய்' நன்னனிடத்து ஆற்றுப்படுத்தியதாகப் பெருங்கௌசிகனார் பாடியது. 'மலை'க்கு யானையையும் அதன்கண் பிறந்த ஓசையை 'கடாம்' என உவமித்துச் சிறப்பித்ததனால் 'மலைபடுகடாம்' எனப் பெயர் பெற்றுள்ளது. பண்களின் இசைக்கு ஆற்றல் உண்டு என்பதை மக்கள் உணர்ந்திருந்தனர். இதை,

..... கொழுநர் மார்பின்
நெடுவசி விழுப்புண் டணிமார் காப்பென
அறல்வாழ் கூந்தற் கொடிச்சியர் பாடல் [25]

என்னும் அடிகள் நோய்வாய்பட்டவர்கள் இசைப் பாடலால் அந் நோய் வருத்தம் உணராது இன்புறுவர் என்பதை வெளிப்படுத்து கின்றன.

முல்லைப்பாட்டு

பத்துப்பாட்டில் சிறிய அடியளவை உடையது. 103 அடிகளைக் கொண்டது. நப்பூதனார் பாடியது. முல்லைத் திணைக் குரிய இருத்தல் ஒழுக்கத்தைச் சிறப்பித்துக் கூறுகிறது. போர் மேற் சென்ற தலைவன் திரும்பி வருமளவும் அவன் கூறிய சொல் மறாது ஆற்றியிருந்த தலைவியின் செயலைக் கூறுகிறது. இடையே அகத் திணையான முல்லைக்குத் தொடர்பான புறவொழுக்கமாகிய வஞ்சியினையும் கூறியுள்ளது.

“பொழுது அளந்து அறியும் பொய்யா மாக்கள்,
தொழுதுகாண் கையர், தோன்ற வாழ்த்தி,
எறிநீர் வையகம் வெரீஇய செல்வோய்; நின்
குறுநீர்க் கன்னல் இனைத்து” என்று இசைப்ப [26]

என்பதால் நாழிகையை அளந்து பொய்த்தலில்லாது அறியும் நாழிகைக்கணக்கர், பகைவரை வெல்லச் செல்கின்ற மன்ன னின் பொழுது அறிந்து உரைக்கின்றவர்கள் சிறப்பை அறிந்து கொள்ள முடிகிறது.

மதுரைக்காஞ்சி

பத்துப்பாட்டில் அடியளவில் பெரியதாய் 782 அடி களைக் கொண்டது. இப்பாட்டைப் பாடியவர் மாங்குடி மருத னார். தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ் செழியனை உயர்நெறிக்கண் செலுத்துவதாய் அமைந்திருக்கிறது. “பெருகு வள மதுரைக் காஞ்சி” “கூடற்றமிழ்” என்னும் பெயர் களும். இந்நூலுக்கு உண்டு. உலகின் நிலையாமையை இந்நூல் அறிவுறுத்தியுள்ளது.

அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கிச்
செற்றமும் உவகையும் செய்யாது காத்து
ஞெமன் கோல் அன்ன செம்மைத்து ஆகி,
சிறந்த கொள்கை அறம் கூறு அவையமும் [27]

என்று, அறங்கூறும் அவையத்தாரின் இயல்பினை எடுத்துரைக் கிறது.

நடுநிலையுடன் தீர்ப்புக் கூறுபவர், அச்சத்தைப் போக்கித் துலாக் கோலைப் போல நடுநிலையுடன் தர்மத்தை நிலை நாட் டும் சான்றோர்கள் மதுரை நகரில் வாழ்ந்தனர் என்பதை அறிய முடிகின்றது.

குறிஞ்சிப்பாட்டு

குறிஞ்சித் திணையைப் பாடவல்ல கபிலர் பாடியது. ஆரிய அரசன் பிரகதத்தனுக்குத் தமிழ்ச் சுவையினையும், தமிழின் அகப்பொருள் மரபினையும் உணர்த்த வேண்டி 261 அடிகளில் பாடியுள்ளார். நச்சினார்க்கினியர் இதனைப் பெருங்காஞ்சி என்று

பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்நூல், தோழி செவிலிக்குத் தலைவியின் பொருட்டு அறத்தொடு நிற்கும் துறையைக் குறிக் கிறது.

அறத்தொடு நிற்றல் என்பது தலைவி மேற்கொண்ட கள வொழுக்கத்தைத் தோழி மூலம் பெற்றோர்க்குத் தலைவி உணர்த்துதலாகும். இச்செயல் ஓர் ஒழுங்குமுறையில் நடைபெறும். தலை மகள் தோழிக்கும், தோழி செவிலிக்கும், செவிலி நற்றாய்க்கும், நற்றாய் தந்தைக்கும் அறத்தொடு நிற்பர்.

நின்குற்றம் இல்லை நிரைதொடியும் பண்புடையன்
என்குற்றம் யானும் உணர்கிலேன் - பொன்குற்று
அருவி கொழிக்கும்அணிமலை நாடன்
தெரியுங்கால் தீயது இலன் [28]

நின்மேல் தவறு ஏதுமில்லை, தலைவியும் பண்புடை யவன், நான் எப்பிழை செய்தேன் என்று என்னால் உணர இயல வில்லை. பொன்கொண்டு வரும் அருவிகளையுடைய தலைவன் தீமையில்லாதவன் எனத் தோழி செவிலித்தாயிடம் கூறுகிறாள்.

பட்டினப்பாலை

'வஞ்சி நெடும்பாட்டு' என வழங்கப்படும் இந்நூல் 301 அடிகளை உடையது. சோழன் கரிகாற் பெருவளத்தானைக் கடிய லூர் உருத்திரங் கண்ணனார் பாடியது. சோழவளநாடும், காவிரி கடலோடு கலக்கும் இடமாம் காவிரிப் பூம்பட்டினமும், கரிகாற் பெருவளத்தானது நெஞ்சப் பாங்கும் இப்பாட்டில் இனிமையுற விளக்கப்பட்டுள்ளன.

வேளாண் மக்கள் யாவரும் நல்லவர்களாகவும் வல்லவர் களாகவும் இருந்தனர் என்பதைப் பட்டினப்பாலை,

கொலை கடிந்தும் களவுநீக்கியும், அமரர்ப் பேணியும்
ஆவுதி அருத்தியும்,
நல் ஆனோடு பகடு ஓம்பியும், நான் மறையோர்
புகழ் பரப்பியும்,

பண்ணியம் அட்டியும் பசும் பதம் கொடுத்தும்,
புண்ணியமுட்டாத்
தண் நிழல் வாழ்க்கை, கொடு மேழி நசை உழவர் [29]

என்றுரைக்கிறது. பத்துப்பாட்டுள் முல்லைப்பாட்டு, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை ஆகிய மூன்றும் அகத்திணைக்குரியவை. ஏனைய ஏழுபாட்டுகளும் புறப்பொருளைத் தழுவி எழுந்தவை. காவிரிப்பூம்பட்டினத்தையும், பாலைத் திணையையும் பற்றிக் கூறுவதால் இப்பாட்டு பட்டினப்பாலை எனப் பெயர் பெற்றது.

இது வணிகர்களின் வாழ்க்கை முறையைச் சிறப்பாக விவரிக்கிறது.

தமவும் பிறவும் ஒப்பநாடி
கொள்வதூஉம் மிகைகொளாது கொடுப்பதூஉம்
குறைகொடாது
பல் பண்டம் பகர்ந்து வீசும் [30]

தாம் கொள்ளும் பொருள்களைத் தாம் கொடுக்கும் பொருள்களுக்கு மிகுதியாகக் கொள்வதில்லை. தாம் கொடுக்கும் பொருள்களையும், வாங்கும் பொருள்களுக்குக் குறைவாகக் கொடுப்பதில்லை. தங்களுக்கு வரக்கூடிய இலாபத்தை வெளிப் படையாகக் கூறி வணிகம் செய்பவராகவும், உண்மையான வாழ்க்கை வாழ்பவராகவும் இருந்தனர் என்பதைக் காணமுடிகிறது.

நெடுநல்வாடை

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை நக்கீரர் பாடியது. வடக்கிலிருந்து வீசும் வாடைக்காற்று தலைவனைப் பிரிந்த தலைவிக்கு நெடிய வாடையாகவும், படையெடுத்துச் சென்ற தலைவனுக்கு நல்லவாடையாகவும் இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார் நக்கீரர்.

இந்நூலில் அகத்திணைக்குரிய செய்திகள் அதிகம் காணப்பட்டாலும் பாண்டியனை அடையாளப்படுத்தும் 'வேம்புதலையாத்த நோன்காழ் எஃகம்' என்னும் வரியால் புறப்பாட்டாயிற்று என்றும் கூறுவர்.

சித்தர் படைப்புகள்

"சித்தர் இலக்கியம் என்பது தமிழகத்தில் பல நூற்றாண்டு களாக வழங்கி வருகிற செம்மையான தனிப்பண்போடு கூடிய ஒரு பேரிலக்கியம் ஆகும். சித்தர்களைப் பார்க்கும்போது அவர் களுடைய வயதை அறுதியிட்டுச் சொல்ல முடியாது. இளமைப் பொலிவிருக்கும், ஆனால் வயதிலோ அவர்கள் முதியவர்களாக இருப்பார்கள். அவர்களுடைய உடலும் உள்ளமும் இளமையோடு காணப்படுவது சித்தர்களின் உடற்பண்பு. இதே போன்று சித்தர் பாடல்கள் தோன்றிய காலத்தையும் கணக்கிட்டுப் பார்த்தோ மானால், அவற்றின் வயதை அறுதியிட்டுச் சொல்ல முடியாது. பழமைக்குப் பழமையானதாகவும் புதுமைக்குப் புதுமையாகவும் அமைந்த தனிச் செம்பண்பு" [31] என மீ.பா. சோமசுந்தரம் தனது ஆய்வு நூலில் தெளிவுப்படுத்தியதை அறிய முடிகிறது.

சித்தர் - பெயர்க்காரணம்

'சித்தர்' என்னும் சொல் 'சித்' என்னும் வடமொழி வேர்ச் சொல்லிலிருந்து தோன்றியது. தமிழில் நிறைமொழி மாந்தர், அறிவர் என்னும் சொற்களால் மிகப் பழங்காலத்தில் சித்தர்கள் குறிக்கப் பெற்றனர்.

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளக்கும்
மறைமொழி தானே மந்திரம் என்ப [32]

என்பது தொல்காப்பியம்.

மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் [33]

எனச் சித்தர் குறிக்கப்பட்டுள்ளனர். "சாரணர் எனச் சமணத்திலும் பௌத்தத்திலும் குறிக்கப் பெற்றவர்கள் சித்தர்கள் ஆவர்." [34]

சித்தர் என்போர் யார்?

"சித்தர்கள் என்றால் வீடுபேறு அடைந்தவர்கள் எனப் பொருள் காண்பார் சிலர். ஒரு செயல் நிறைவேறியதா என வினவு வார் காரியசித்தி ஆயிற்றா என வினவுவது வழக்கம் ஆதலால் வீடுபேறு எனக் கருதப் பெறும் சாயுச்சிய நிலையை அடையப்

பெற்றவரே சித்தர் என்பர். அட்டமா சித்தி முதலிய யோக சித்தி பெற்றவரையும் சித்தர்கள் என்பர்"[35] என்று இரா. சாரங்கபாணி கூறுகிறார்.

சித்தர்கள் சித்திபெறும் வழிகளை அறிந்திருந்தனர் என்பதை அவர்தம் பாடல்களில் காட்டியுள்ளனர். அவற்றைத் தொகுத்து நோக்கினால் அவை ஐந்து வகைப்படும்.

"1. யோக சாதனைகளில் நன்கு தெளிதல்.

2. 'யுங்கிலிசங்' என்னும் மூன்றெழுத்தை இலக்கு முறை செபித்தல்

3. மௌனத்தில் இருத்தல்

4. அறிவாகிய சுழு முனையில் மனத்தை ஒருமைப் படுத்தித் தியானத்தில்

5. முக்திக்கு வித்தான மூர்த்தியைத் தொழுதல்

முதலிய சாதனை மூலம் சித்தர்கள் எண்வகை யோக சித்திகளான அட்டமா சித்திகளைப் பெற்றும் சித்தம் தெளியப் பெற்றவர் என அறிய முடிகிறது." [36]

சிலர் சித்துக்கும் சித்தத்துக்கும் தொடர்புண்மை காட்டிச் சித்தத் தெளிவுடையாரே சித்தர் என்று விளக்கம் தருவர்.

சிந்தை தெளிந்திருப்பவனாரவனே சித்தன்
செக மெலாஞ் சிவமென்றே யறிந்தோன் சித்தன் [37]

என வரும் சித்தர் பாடல் மேற்கூறிய கருத்திற்குச் சான்றாக அமை கின்றன.

சித்தர்கள் தங்கள் வாழ்வின் உண்மைகளைப் படைப்பு களாகப் படைத்துள்ளனர். அவற்றையெல்லாம் உளப்படுத்தின் ஆய்வுப் பரப்பு பெருகும். எனவே, திருமூலரின் திருமந்திரத்திலும் 'பதினெண் சித்தர்கள் பெரிய ஞானக்கோவை' எனும் நூலிலும் இடம் பெற்றுள்ள பாடல்களின் உள்ளடக்கம் குறித்து மட்டும் இனிக் காணலாம்.

பதினெண் சித்தர்கள் பெயர் வரக் காரணம்

"சித்தர்கள் கூட்டத்தைச் 'சித்தர்கணம்' என்று அழைப்பர். கழகத் தமிழ் அகராதி 'கணம்' என்னும் சொல்லிற்குப் 'பதினெட்டு என்னும் ஓர் இலக்கம்' என்று பொருள் கூறுகிறது. எனவே, இப் பொருள்படும் கணம் என்ற சொல்லைக் கொண்டு சித்தர்கள் பதினெட்டுப் பேர் என்று வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ் மரபு, வடமொழி மரபு ஆகிய இரண்டிலுமே பதி னெட்டு ஒரு குழூஉக்குறியாக வழங்கப்பட்டு வந்திருப்பதனை அறிய முடிகின்றது. இதனை,

தேவா சுரப்போர் பதினெட்டு ஆண்டுகள்
இராமாயணப் போர் பதினெட்டு மாதங்கள்
பாரதப் போர் பதினெட்டு நாள்கள்
பதினெண் புராணங்கள்
பதினெட்டு ஸ்மிருதிகள்
பகவத்கீதை பதினெட்டு அத்தியாயங்கள்
பதினெண் கணங்கள்
பாட்டும் தொகையுமாகச் சங்க இலக்கியங்கள் பதினெட்டு
பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டு
பதினெண் நிலங்கள்
பதினெண் மொழிகள்
பதினெண் மடங்கள்
பதினெண் சித்தர்கள்
பதினெட்டுப் படிகள்
பதினெட்டுச் சாதிகள்
ஆடி பதினெட்டாம் பெருக்கு [38]

இப்படிப் பற்பல பதினெட்டில் சித்தர்களையும் பதினெண் சித்தர்கள் என்று மரபாலும் வழக்கத்தாலும் குறிப்பிடுகின்றனர் ஊரன் அடிகளார்.

பதினெண் சித்தர்கள்

தமிழகத்தில் சித்தர்களைப் 'பதினெண்மர்' என்று அழைப் பது எண்ணிக்கையால் அல்ல. அவ்வாறு அழைப்பது ஒரு மரபு முறையாகும்.

பெரிய ஞானக் கோவையில் காணப்படும் முகவுரைப் பகுதி ஆறு பாடல்களைக் கொண்டதாக உள்ளது. இதில் சித்தர்கள் 'பதினெண்மர்' என்ற செய்தி வருகிறது. அப்பாடல்களில்,

அருள் சுரந்த நாதாக்கள் பதினெண் பேர்கள் [39]
வேதாந்த மென்றுபதி னெண்ம ராலே
விளக்கி வைத்த சூட்சுமம் [40]

முதலான அடிகள் பதினெட்டு சித்தர்கள் என்னும் எண்ணிக்கை யைச் சுட்டுகின்றன. சித்தர் பாடல்களில் 'பதினெண் சித்தர்கள்' என்ற குறிப்பு பரவலாகக் காணப்படுகிறது. காகபுசுண்டர் தம் குறளில்;

சித்தர் பதினெண்மர் செய்கையில் தோன்றாத
அத்த னருளும் புசுண்டன் யான் [41]

என்று குறிப்பிடுகிறார். இதே போல்அகத்தியர் தனது ஞானத்தில்

ஆச்சப்பா இந்த முறை பதினெண் பேரும் [42]

என்று கூறுகிறார். வால்மீகி தனது சூத்திரத்தில் சித்தர்கள் பதி னெண்பேர் என்ற குறிப்பைப் பதிவு செய்துள்ளார்.

சிவசிவா பதினெண்பேர் பாடற்கெல்லாம்
திறவுகோல் வால்மீகன் பதினாறாகும் [43]

என்பது வான்மீகர் கூற்று. மேற்கண்ட செய்திகள் பதினெட்டுச் சித்தர்கள் என்று உறுதி செய்கின்றன. இவ்வாறாக எண்ணற்ற சித் தர்களுள் முதன்மையானவர்கள் 'பதினெட்டுச் சித்தர்கள்' என்று அழைக்கப்பட்டுள்ளனர்.

பதினெண் சித்தர் வரலாறு என்னும் நூலில், மதுரை சோம சுந்தர கடவுளே முதல் சித்தரெனத் திருவிளையாடல் புராணம் கூறுவதாக, சி. எஸ் முருகேசன் எடுத்துரைக்கின்றார். [44]

சித்தர் பாடல்களில் இருபெரும் பிரிவுகள் உள்ளன. அவை ஞானப் பாடல்கள், சித்த வைத்திய பாடல்கள் என்று இரு பிரிவு களாகப் பிரிக்கலாம். ஞானப்பாடல்கள் என்னும் பிரிவில் சாமி. சிதம் பரனார் பின்வரும் சித்தர்களைக் குறிப்பிடுகிறார்.

"திருமூலர், இராமதேவர், கும்பமுனி, இடைக்காடர், தன் வந்திரி, வான்மீகி, கமலமுனி, போகநாதர், மச்சமுனி, கொங் கணர், பதஞ்சலி, நந்திதேவர், போதகுரு, பாம்பாட்டி, சட்டை முனி, சுந்தரானந்தர், குதம்பை, கோரக்கா"[45] என்று சித்த வைத் தியப் பாடல்கள் சித்தர்களைப் பற்றி எடுத்தியம்புகின்றன.

"கோதமர், அகத்தியர், சங்கரா, வைரவர், மார்க்கண்டர், வான்மீகர், உரோமர், புசுண்டர், சட்டைமுனி, நந்தீசர், திருமூலர், காலங்கி, மச்சமுனி, புலத்தியர், கருவூரார், கொங்கணர், போகர், புலிப்பாணி "[46] என்று கலைக்களஞ்சியம் சித்தர்களைப் பற்றிக் கூறுகிறது.

அரு. ராமநாதன், தாம் பதிப்பித்த ஞானக்கோவை என்னும் நூலில் சித்தர்கள் பெயர் பட்டியலாகக் காணப்படும் பின்வரும் பாடலை எடுத்துக் காட்டியுள்ளார்.

நந்தி, அகத்தியர், மூலர், புண்ணாக்கீசர்
நற்றவத்துப் புலத்தியரும், பூனைக் கண்ணர்
நந்தியிடைக் காடரும், போகர், புலிக்கையீசர்
கருவூரார், கொங்கணவர், காலாஞ்சி
சிந்தி எழுகண்ணர், அகப்பேய், பாம்பாட்டி
தேரையரும், குதம் பையரும் சட்டை நாதர்
செந்தமிழ் சேர் சித்தர் பதினெண்மர் பாதம்
சிந்தையுன்னிச் சிரத்தணியாய்ச் சேர்த்தி வாழ்வாம் [47]

மண்ணில் நல்வண்ணம் வாழலாம் என்னும் ஆய்வுமாலை யில் திருமூலர் காட்டும் வாழ்வியல் நெறி" என்னும் கட்டுரையில் "சித்தர் பரம்பரையில் முதன்மையானவராகக் கருதப்படுகின்றவர் திருமூலர். மூலன் மரபு என்று கூறப்படும் வழக்குச் சொல்லும் திருமூலருக்குச் சிறப்புச் சேர்ப்பதாகும்"[48] என்று இரா. குமார் குறிப்பிடுகின்றார்.

இதனை ஆதாரமாகக் கொண்டு பதினெண் சித்தர்களில் திருமூலரை முதன்மையாகக் கொண்டு பாடல்களை இயற்றியுள்ளனர். இக்கருத்து பெரும்பாலான அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப் பட்டதால் திருமூலரை முதன்மையாகக் கொண்டு பெயர் களை அறியலாம். "திருமூலர், இராமதேவர், கும்பமுனி, தன்வந்திரி, வால்மீகி, இடைக்காடர், மச்சமுனி, கொங்கணர், பதஞ்சலி, காலங்கி, போகநாதர், நந்திதேவர், போதகுரு, பாம்பாட்டிச் சித்தர், சட்டை முனி, சுந்தரானந்த தேவர், குதம்பைச் சித்தர் கோரக்கர்"[49] என்று பதினெண் சித்தர்களின் ஆய்வு வழி அறிந்துகொள்ள முடிகிறது.

"திருமூலர் பாடிய 3047 திருமந்திரப் பாடல்கள், திரு மந்திரம் மூவாயிரம் என அழைக்கப்படுகிறது. பதினெண் சித்தர் கள் எனச் சிறப்பாகச் சித்தர்களும் இவ் எண்ணிக்கையில் அடங் காத சித்தர்களும், பாடல்களாகப் பாடியுள்ள 3699 பாக்கள் பெரிய ஞானக்கோவையாகத் தொகுக்கப்பட்டுள்ளன. சித்தர்களால் பாடப்பெற்ற இவ்விரு தொகுப்புகளுக்குள் உள்ள 6746 பாடல் களில் உள்ள பாடுபொருட்கள் பெரும்பாலும் சித்தர்களின் பாடு பொருட்களாகக் காணக் கிடைக்கின்றன"[50] என, சை. சற்குணன் குறிப்பிடுகிறார்.

சித்தர்கள் காலம்

"காலம் கடந்து வாழும் ஆற்றல் பெற்ற இவர்களின் காலம் முதலியனவற்றைத் தெளிவாக வரையறை செய்தல் எளிதன்று. திருமூலர் காலத்தை கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு என்று டாக்டர். இரா. மாணிக்கவாசகம்"[51] குறிப்பிடுகிறார்.

"மிகப் பழங்காலம் முதல் இக்காலம் வரை வாழ்ந்த சித்தர்களின் காலம் கி.பி. 14 ஆம் நூற்றாண்டு என்று மு. ராதா கிருஷ்ணப் பிள்ளையும், பேராசிரியர் தெ.பொ.மீ. கி.பி. 15 ஆம் நூற்றாண்டு என்றும்; நீலகண்ட சாஸ்திரி எச். ஹண்டர், கால்டு வெல் முதலியோர் கி.பி. 16, 17 நூற்றாண்டுகள் என்றும் குறிப்பிடு கின்றனர். சித்தர்களைப் பொறுத்தவரை, அவர்கள் காலத்தை வரையறை செய்ய இயலாது என்பதே உண்மை" [52] என்று நிர்மலா மோகன் கூறுகிறார்.

சித்தரின் காலத்தைக் கணக்கிட இயலாது. ஏனெனில், யுகங்கள் தோறும் இருந்தேன் என்றும் கூறுகிறார் காகபுசுண்டர்.

பாரடா இப்படியே யுகங்கள் தோறும்
பார்தனில் நானிருந்தேன் எத்தனை யோ கோடி
ஆரடா என்னைப் போல் அறிவா ருண்டோ?
ஆதியென்ற சித்தருக்கும் ஆதியானேன் [53]

என, அவர் காலம் கடந்து வாழ்ந்த செய்தியை அறிய முடிகிறது.

சங்க இலக்கியத்தில் இருந்த அறக் கருத்துகள் சித்தர் பாடல்களிலும் வெளிப்பட்டுள்ளன. இது குறித்து இனிக் காண லாம்.

அறம்

அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூற் பயனே [54]

என்பது நன்னூல். வழி வழியாகத் தமிழர்கள் மரபாக வழங்கி வந்த கருத்தே இலக்கணத்தில் நூற்பா வடிவில் சுட்டப் பெற்றுள்ள வடமொழி வாணர்கள் இக்கருத்தையே தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்று கூறுவர்.

"அறம் என்ற சொல் விரிந்த பொருளை நல்கும் வண்ணம் அமைந்துள்ளது. அறம் என்பது உயர்ந்தோர் வழக்கு என்றும் வழக்கியலாணை என்றும் தொல்காப்பியம் கூறுகிறது.

அறனிழுக்காதல்லவை நீக்கி

என்பது அறம் என்னும் சொல்லிற்கு நீதி என்னும் பொருள் வழங்கியுள்ளது.

அறம் நனி சிறக்க
அறநெறி முதற்றே அரசின் குற்றம்
அறம் கடைப்பிடித்த செங்கோலுடன்
அரசியல் பிழையாது அறநெறிகாட்டி

என்றெல்லாம் நீதிமுறை ஆகியவற்றை உணர்த்தும் நிலையில் இச்சொல் பயின்று வந்துள்ளது "[55] என்பதை வாழ்வியற் களஞ் சியம் விளக்கம் தருகிறது.

அறத்தின் சிறப்பை அபிதான சிந்தாமணியின் மூலம் தெளிவாகக் காணலாம். இது ''இல்லறம், துறவறம் என இரு வகை, இல்லறம், கொடுத்தலு மளித்தலும், கோடலும், இன்மை யும், ஒழுக்கம், புணர்தல், புணர்ந்தோர்ப் பேணல் மற்றையுமாம். துறவறமாவது, துறவும், அடக்கமும், தூய்மையும், தவமும் அற வினையோம்பலும் மறவினை மறுத்தலும், பிறவுமாம்"[56] என விளக்குகிறது.

கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, அறத்தின் பாங்கினைப் பகர்கிறது. "குடும்ப வாழ்வும் பொது வாழ்வும் சீராக இயங்க ஒருவர் கடைப்பிடிக்கும் சமயச் சார்பான அல்லது ஒழுக்கக் கண்ணோட்டத்துடன் கூடிய நெறிமுறைகள் அல்லது கடமைகள் ethical or religious code of conduct"[57] எனத் தெளிவாக உரைக்கிறது.

அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல [58]

"அறநெறியில் வாழ்வதன் பயனாக வருவதே இன்ப மாகும். அறத்தோடு பொருந்தாது வருவனவெல்லாம் ஆரம்பத் தில் இன்பமாகத் தோன்றிப் பின் துன்பத்தையே கொடுக்கும்" [59] என வள்ளுவர் காட்டுகிறார்.

"அறம், பொருள், இன்பம், வீடென்றும் நான்கையும் சான்றோர் உறுதிப் பொருள்கள் என்பர். சங்கத்தமிழர் இவ்வுலக வாழ்விற்குரிய அறம், பொருள், இன்பம்"[60] ஆகிய மூன்றை மட்டும் மிகுதியாகக் குறிப்பிட்டுள்ளனர் என்பதைப் பெ. சுப்பிர மணியன் சுட்டியுள்ளார். மேலும் இதனை,

தொல்காப்பியர் பாவகைகளுக்கு இலக்கணம் கூறும் முகத்தான், அவை "அறம் முதலாகிய மும்முதற் பொருட்கும் உரிய" என்றார் களவுக்கு விளக்கம் கூறவந்த அவர் "இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு அன்பொடு புணர்ந்த ஐந்திணை" என்றார். தமிழ் இலக்கியம் இவ்வாறு சிறந்த அற அடிப்படை யிலேயே கால்கொண்டு நிற்பதால் அவை அனைத்திலும் நீதிக்

கருத்து ஊடுருவி நிற்கிறது" [61] *என்னும் இராம. பெரியகருப்ப னின் கருத்து எண்ணுதற்குரியது.*

தம்மால் முடியும் நல்ல அறங்களைச் செய்தால் நன்மை உண்டாகும் என்றும் தீமையைச் செய்தால் தீமை ஏற்படும் என்றும் புறநானூறு வலியுறுத்துகிறது.

நல்லதன் நலனும் தீயதன் தீமையும்
இல்லை என்போர்க்கு இனன் ஆகிலியர் [62]

நீதி நூல்களான நல்வழியும் நன்மைகளையே செய்தல் வேண்டுமென தெளிவுறுத்துகிறது.

புண்ணியம் ஆம் பாவம்போம் போன நாள் செய்த அவை
மண்ணில் பிறந்தார்க்கு வைத்த பொருள் எண்ணும் கால்
ஈது ஒழிய வேறு இல்லை! எச்சமயத்தார் சொல்லும்
தீதுஒழிய நன்மை செயல் [63]

புண்ணியச் செயல்களால் இன்பம் உண்டாகும். பாவச் செயல்களால் துன்பமுண்டாகும். எனவே, பாவத்தை ஒழித்துப் புண்ணியமே செய்ய வேண்டும் என்னும் அறத்தின் திறத்தை மேற்பாடல் உணர்த்துகிறது.

உலகில் அறத்தின் வழியில் நடக்காமல் தீய நெறியில் நடப்பவர் தேவர் உலக இன்பங்களை இழப்பர். மாறாக, அவர்கள் இருள் மிக்க துன்ப நரகத்தில் நடப்பவராவார். காமம், கோபம், மயக்கம் ஆகிய தீமைகளைக் களைந்து, அவற்றினின்றும் நீங்கிச் சன்மார்க்கத்தில் நிற்பவர் வினைகளைக் கடந்து நிற்பவராவார்.

வழி நடப்பார் இன்றி வானோர் உலகம்
கழி நடப்பார் நடந்தார் கரும்பாரும்
மழி நடக்கும் வினைமாசு அற ஓட்டிட்டு
ஒழி நடப்பார் வினை ஒங்கி நின்றாரே [64]

என்னும் திருமூலர் பாடலில் நன்மைசெய்பவருக்கு நன்மை என்ற புறநானூற்றுக் கருத்து இடம் பெற்றுள்ளது. புண்ணியம் செய்தால்

பாவம் போகும், நல்வினை செய்பவர்க்குத் தேவர் உலக இன்பம் கிட்டும் ஆகிய நீதி நூல் கருத்துகளும் திருமந்திரத்தில் இடம் பெற்றுள்ளதை அறிய முடிகிறது.

திறவோர் செய்வினை அறவது ஆகும் [65]

என்பதன் வழி, சான்றோர் செய்கின்ற செயல்கள் எல்லாம் அறத்தோடு பொருந்தி நிற்பது உணர்த்தப்படுகின்றது.

நல்ல செயல் செய்யவில்லை என்றாலும் தீய செயலைச் செய்யாமல் இருப்பதுதான் அனைவரும் விரும்புவதாகும். நல்ல நெறியில் செல்லும் எல்லோர் வழியும் அதுவேதான் என்பதை,

நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்; அதுதான்
எல்லாரும் உவப்பது [66]

என்னும் புறநானூற்றின் வழி அறிய முடிகிறது. இதனை,

தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னும் செருக்கு[67]

என்னும் குறளும் எடுத்துச் சொல்கிறது. மேலே காட்டிய புற நானூறு, குறட்பாக் கருத்துகளைச் சித்தர் படைப்புகளில் காண முடிகிறது.

நல்லவர் தம்மைத் தள்ளாதே - அறம்
நாலெட்டில் ஒன்றேனும் நாடித்தள்ளாதே
பொல்லாங்கில் ஒன்றுங் கொள் ளாதே - கெட்ட
பொய் மொழிக் கோள்கள் பொருந்தவிள்ளாதே[68]

தீயவற்றைப் பேசாமலும், பிறரைப் பற்றிக் குற்றம் சொல் லாமலும் நல்லவர்களை ஒதுக்காமலும் தீயது செய்யாமலும் இருப் பதே உண்மையான அறம் என்று கடுவெளிச் சித்தர் கூறியுள்ளார். நல்லது செய்யவில்லையென்றாலும் தீயது செய்யாமல் இருப்பதே நன்று என்று கடுவெளிச்சித்தர் அறிவுறுத்துகிறார்.

தம்மால் முடிந்த அறவினையை ஒவ்வொருவரும் செய்ய வேண்டும், மன்னனும் அவன் நாட்டு மக்களும் வறுமையின்றி வாழவேண்டும்.

வாழி ஆதன், வாழி அவினி!
பசி இல்லாகுக![69]

என்பது ஐங்குறுநூறு.

வறுமையினால் வாடுபவர்க்கு ஒரு பொருளைத் தருவதால் உண்டாகும் புகழும், வறுமையினால் தளர்ச்சி ஏற்பட்ட போதும் தன் குடிக்கேற்ற இயல்பினின்று குறையாத தன்மையும், அன்பைப் பெருக்கும் நண்பர்களை நாற்தோறும் பெருக்கிக் கொள்ளுதலும் ஆகிய மூன்றும் கேட்கப்படும் அறங்களில் சிறந்தவை என்று திரி கடுகம் சுட்டுகின்றது. இதனை,

அலர்ந்தார்க் கொன்று ஈந்த புகழும் துளங்கினும்
தன் குடிமை குன்றாத் தகைமையும் – அன்போடி
நாள்நாளும் நட்டார்ப் பெருக்கலும் இம்மூன்றும்
கேள்வியு ளெல்லாந் தலை [70]

என்னும் பாடல் மூலம் அறியமுடிகிறது. இக்கருத்தை உணர்த்தும் நல்வழிப் பாடலைக் காண்பது இங்கு இன்றியமையாதது.

இடும்பைக்கும் இடும்பை இயல்பு உடம்பு இது அன்றே
இடும்பொய்யை மெய் என்று இராதே – இடும்கடுக
உண்டாயின் உண்டாகும் ஊழில் பெருவலிநோய்
விண்டாரைக் கொண்டாடும் வீடு [71]

இவ்வுடல் நிலையானது என்று எண்ணாமல் விரைவில் தருமம் செய்து வறுமையில் வந்தவர்க்கும் வழங்கிப் பந்த பாசங் களை எல்லாம் நீக்கியவர்க்கு முக்தியுண்டாகும். எனவே, நல்ல அறங்களைச் செய்ய வேண்டும் என்பது வழியுறுத்தப்படுகின்றது. இதனையே திருமூலர்.

யாவர்க்கு மாம் இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம் பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம் பிறர்க்கு இன்னுரை தானே [72]

என்கிறார்.

இறைவழிபாடு செய்பவர் கடவுளுக்காக துளசி, வில்வம் முதலிய இலைகளைக் கொண்டு வணங்குதலும் வாயில்லாத

சீவனான பசுவுக்குப் புல் இலைகளை கொடுத்தலும் உண்ணும் போது ஒரு கைப்பிடி அன்னத்தையாவது பிற உயிர்களுக்கும் வறியவர்களுக்கும் வழங்குதலும் நோயினால் துன்புற்றோரிடம் இனிமையோடு இன்னுரை செய்தலும் அனைவரும் செய்யத்தக்க எளிய அறங்களாகும்.

கண்டவர் இல் என உலகத்துள் உணராதார்
தங்காது தகைவு இன்றித் தாம் செய்யும்
நெஞ்சறிந்த கொடியவை மறைப்பினும், அறிபவர்
நெஞ்சத்துக் குறுகிய கரியில்லை யாகலின் [73]

கண்டவர் யாவரும் இல்லையே என்று தாம் நெஞ்சறியவே செய்த கொடிய தீயவினைகளைப் பிறர் அறியாமல் செய்யும் ஒருவர், தாம் செய்த தீமையை அறிந்தவர்கள் அவர்களுடைய நெஞ் சத்துக்கு மறைக்க முடியாது என்றும் நெஞ்சத்தைக் காட்டி லும் சாட்சி தேவையில்லை என்று சங்கப் புலவர் ஒருவர் புலப் படுத்துகின்றார்.

தமக்கு இனி தென்று, வலிதின் பிறர்க்கு இன்னா
செய்வது நன்று ஆமோ மற்று [74]

தமக்கு இனிமையாக இருக்குமென்று கருதிப் பிறர்க்குத் துன்பந்தரும் செயல்களைச் செய்தால் இன்பத்தைத் தந்திடுமோ? என வினவுகிறார். இக்கருத்தினை ஒப்பவே பட்டினத்தார்,

ஓயாமற் பொய்சொல்வர்; நல்லோரை நிந்திப்பர்;
உற்றுப்பெற்ற
தாயாரைவைவர் சதியா யிரஞ்செய்வர் சாத்திரங்கள்,
ஆயார் பிறர்க்கு பகாரஞ் செய்யார் தமை அண்டினார்க்கொன்று
ஈயார் இருந்தென்ன போயென்ன காண்கச்சி ஏகம்பனே [75]

என வினவுகிறார்.

தாம் செய்த தீவினைகளை மறைப்பவர்களையும், பிறர்க் குத் தீங்கு செய்பவர்களையும், பிறர்க்கு உபகாரம் செய்து இனிது செய்யாதவர்களையும் நோக்கி, இவர்கள் வாழ்வில் இருந்தென்ன இறந்தென்ன என்று வெளிப்படையாகச் சாடுகிறார்.

பிறப்பினைப் போக்கும் அறம்

தவம் செய் மாக்கள் தம் உடம்பு இடா அது
அதன் பயம் எய்திய அளவை மான,
ஆறு செல் வருத்தம் அகல நீக்கி [76]

என்பது பொருநராற்றுப்படையாகும்.

தவம் செய்வோர், தம்முடைய தவம் செய்த இம்மையுடம் போடே அத்தவத்தின் பயனைப் பெற்றார் வாழ்வில் வழி நடந்த வருத்தத்தைத் தன்னிடத்தினின்றும் முற்றிலுமாகப் போக்கும் என்கின்றன மேற்பாடலடிகள். இதனைப் பாம்பாட்டிச் சித்தர்,

காய்த்த மரம் அது மிக்க கல்லடி படும்
கன்ம வினை கொண்டகாயம் கண்டனைபெறும்
வாய்த்த தவ முடையவர் வாழ்பவர் என்றே
வத்துத் திருவடி தொழுதாடாய் பாம்பே [77]

என்கிறார். கல்லடிப்படும் காய்த்த மரமும் தண்டனை பெறும் தீயவினை கொண்ட உடம்பும் ஒன்று என ஒப்புமைப்படுத்தித் தவத்தையுடையவரே வாழ்பவர் என்றும் பரம்பொருளாகிய இறை வனைத் தொழுது ஆடு பாம்பே என்றும் கூறுகிறார். இதே கருத் தைப் பொருநராற்றுப்படையும் தவம் செய்பவர் வருத்தம் நீங்கி வாழ்வார் என்று கூறுகிறது.

தலைவனின் அறநெறிச் சிறப்பினை நற்றிணை,

அறவர் வாழி தோழி மறவர்
வேலன் விரிந்த கதுப்பின் தோல
பாண்டில் ஒப்பின் பகன்றை மலரும்
கடும்பனி அற்சிரம் நடுங்கக் காண்தகக்
கைவல் வினைவன் தையுபு சொரிந்த
சுரிதக உருவின வாகிப் பெரிய
கோங்கங் குவிமுகை அவிழ; ஈங்கை
நற்றளிர் நயவர நுடங்கும்
முற்றா வேனில் முன்னிவந்தோரே [78]

என்று நவில்கிறது.

பகன்றை மலர் வீரர் கையில் உள்ள வேல்போல மலரும் காலம், முன்பனிக் காலமாகும். அந்தக் காலத்து நடுங்குமாறு பிரிந்து சென்று மீண்டும் வந்து இளவேனிற் காலத்துக் கோங்க முகைகள் மலர, ஈங்கைத் தளிர்கள் நுடங்கி வர அணி செய்யும் என்பதால் இளவேனிற் காலத்துச் சொன்ன சொல் தவறாமல் வந்து சேர்ந்தனர். எனவே, நம் தலைவர் அறநெறி தவறாதவர் என்று தலைவி எடுத்துரைக்கிறாள். சிறந்த மக்கள் அறநெறி தவ றாதவர்கள் என்னும் கருத்தைத் திருமூலரும் எடுத்து இயம்பு கிறார். சித்தர் திருமூலர், பிறப்பற்றுச் சிறப்புற்று உய்யும் வழி நன் னெறி நன்மையாகும். அந்நன்மையினுள்ளும் அறிவாகியாகிய உணர்வு நெறியே சிறந்தது. அந்நெறியினால் சிவபெருமானைப் போற்றவேண்டும். அதன்மேல் மெய்ப்பொருளாகிய அரனார் திரு வடியைக் கூடிப் பேரின்பம் நுகரும் நெறி ஆங்குண்டு. அத்தகைய பேறு பெற்றார் சிவனருள் உறுதிப்பாட்டுடன் பொய்ச் சொல் சொல்லாமல் பொய்ப்பற்று எதுவுமின்றி அகப் பொலிவித்துப் புறத்தும் சிவப்பொலிவாகத் திகழ்வார். அறநெறி தவறாதவர்கள் சொல் தவறாமல் பொய்யில்லாமல் சிவன் அருளை அகமும் புற மும் பெற்று வாழ்வர் என்று விளக்குகிறார். தலைவன் சொல் தவ றாதவன் என்னும் நற்றிணைக் கருத்தைச் சித்தர் படைப்புகளிலும் காண முடிகிறது.

உய்யும் வகையால் உணர்வினால் ஏத்துமின்
மெய்யன் அறநெறி மேலுண்டு திண்ணெனப்
பொய்யொன்று மின்றிப் புறம்பொலி வார் நடு
ஐயனும் அங்கே அமர்ந்துநின் றானன்றே [79]

என்பது திருமூலர் வாக்கு.

நல்லொழுக்கமும் அதற்கு ஏற்ற நல்லறிவுடைமையும் அறத்தையும் பற்றி பதிற்றுப் பத்துப்பாடலும் விளக்குகிறது.

வண்மையும் மாண்பும் வளனு மெச்சமும்
தெய்வமும், யாவதுந் தவமுடையோர்க் கென
வேறுபாடு நனந்தலைப் பெயரக்
கூறினை, பெரும! நின் படிமையானே [80]

குணவமைதியும் செல்வமும் மக்கட்பேறும் தெய்வ உணர்வும் பிறவும் முன்னைத் தவமுடையவர்க்கே உரியன எனத் தவத்தின் சிறப்பினைப் பதிற்றுப்பத்து உணர்த்துகின்றது. இக்கருத்தைத் திருவருட் பிரகாச வள்ளலாரும் தவத்திறம் போற்றல் பாடலில்,

மறப்பை அகன்ற மனத்துரவோர்
வாழ்த்த அவர்க்கு வான்கதியின்
சிறப்பை அளிக்கும் சிவபெருமான்
தியாகப் பெருமான் திரு நடத்தைப்
பிறப்பை அகற்றும் ஒற்றியில் போய்ப்
பேரா னந்தம் பெறக் கண்டேன்
இறப்பைத் தவிர்த்தேன் அம்மா நான்
என்ன தவந்தான் செய்தேனோ [81]

என்று வினவுகிறார்.

சிறந்த கதியை அளிக்கின்ற பெருமானாகிய தியாகப் பெருமானுடைய திருக்கூத்தைக் கண்டும் பிறப்பை நீக்கும் திருவொற்றியூர்க்குச் சென்றும் பேரானந்தத்தைப் பெற்றும் இறப்பை நீக்கவும் தான் செய்த தவத்தை வள்ளலார் வியந்து கூறுகிறார். தவம் செய்பவர்க்கு எல்லாம் கிடைக்கும் என்னும் இதே கருத்தைப் பதிற்றுப்பத்தும் பாடுகிறது. மேலும், இதனை இடைக்காடர் பாடலாலும் அறியமுடிகிறது.

ஆதி பகவனையே - பசுவே!
அன்பராய் நினைப்பாயேல்
சோதி பரகதி தான்
சொந்த மது ஆகாதோ? [82]

ஆதிபகவனையே நினைத்துத் தவம் செய்வார் மேல் நிலை எய்தலாம் என்று இடைக்காட்டுச் சித்தர் கூறுகிறார்.

ஞானத்தைப் பெறுவதற்கான வழிமுறைகளைக் கலித்தொகை தெள்ளென விளக்குகிறது.

வல்லாரை வழிபட்டு ஒன்று அறிந்தான் போல்
நல்லார்கண் தோன்றும் அடக்கமும் உடையன் [83]

ஞானநூல் தெளிவுடையோரைக் குருவாகக் கருதி, வழி பட்டு நின்று அந்நூலின் தெளிவை அறிந்தவன் போல, சான்றோ ரைக் கண்டால் அடக்கமாக நடந்து கொள்கின்றான் என்கிறார்.

குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே [84]

என்று குருவின் சிறப்பைத் திருமூலர் குறிப்பிடுகிறார். திருமூலரின் குரு நந்தியாவார். நந்தியருளிய உபதேசத்தை குருவே சிவமென்று எடுத்துரைக்கின்றார். குருவின் பெருமைகளை மேலும் விவரிக் கின்றார்.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குரு உருச் சிந்தித்தல் தானே [85]

சிரசின் மேல், சிவகுருவை ஜோதிப் பிழம்பாய்க் காணுதல் ஒருவருக்கு மனத்தெளிவினைத் தந்தருளும். அவர்தம் திரு நாம மாகிய திருவைந்தெழுத்தினைச் செயித்தால் உள்ளத் தெளிவினை நல்கியருளும். அக் குருநாதரின் உபதேச மொழிகளை, நாதத்தைச் செவிமடுத்துக் கேட்டல், ஆன்ம ஞானத் தெளிவினை அளித்தரு ளும் சிவ குருவினது ஒளியான திருமேனியினை இடைவிடாது எண்ணிக் கொண்டிருத்தல் ஆகிய அனைத்து நிலைகளிலும் மிகுந்த, தெளிந்த ஞானத்தைத் தந்தருளும் என்கிறார். கலித் தொகையும் சித்தர் பாடல்களும் குருவை வணங்குவதால் தெளிவு ஏற்படும் என்ற உண்மையினைத் தெளிவுப்பட உணர்த்துகின்றன.

பொருள்

ஒருவர் வாழ்வில் மதிக்காதவரையும் நன்கு மதிக்கும்படி செய்வது பொருளேயாகும். ஒருவர் எவ்வளவுதான் நேர்மையும் நன்மையும் இருந்தவராக இருந்தாலும், அவர் பொருள் இல்லை யென்றால் நன்கு மதிக்கப்படுவதில்லை, இகழவும்படுவர். பொருளுடையவர் எல்லாத் தீமையும் உடையவராயினும் பொரு ளுடைமை ஒன்றே கருதி எல்லோராலும் உயர்த்திப் பேசப்படுவர்.

இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு [86]

என்னும் வள்ளுவரின் சிந்தனையை இங்கு எண்ணிப் பார்க்கலாம்.

பொருளீட்ட வேண்டும் என்பதை வற்புறுத்தத் திருவள்ளுவர் வறுமையின் சிறுமையைச் சுட்டி பொருளில்லாதவரை உலகில் உள்ளவர் எல்லாரும் இகழ்ந்துரைப்பர் என்னும் உலகியல் உண்மையை உணர்த்துகிறார்.

"தண்டமிழ்த் தொல்லாசிரியன்மார் உயிர்க்கு வேறாகக் கொள்ளப்படும் பொருள்களைப் புறப்பொருளென்றே உணர்ந்த வராதலின், உயிர்கட்கு விளையும் எண்ணங்களும் புறப்பொருள்களின் தொடர்புடையனவாமென்பது நன்கு விளங்கும். புறப் பொருள்களைப் பற்றி இவ்வாறு எழுஉம் நினைவுகளில் நேரே விளையும் எண்ணங்களை எல்லாம் புறப்பொருளிலக்கணத்திலும், அவ்வெண்ணங்களின் விளைவான வேறு நுட்ப உணர்ச்சிகளையெல்லாம் அகப்பொருளிலக்கணத்திலும் ஆசிரியன்மார் பகுத்தடக்கி உரைக்கிளந்தனர். "[87] *அகம், புறம் குறித்துத் தி.சு. பாலசுந்தரம் பிள்ளை தெளிவுபடுத்தியுள்ளார்.*

தேவையான எல்லாப் பொருள்களும் இதனுள் அடங்கும். நம் உடைமைகள், நாம் வைத்து மகிழும் பொருள்கள் வீட்டுப் பாண்டங்கள் குடும்பச் சொத்துகள் முதலிய அனைத்துப் பொருள்களும் மனிதரின் வாழ்வா தாரமாக விளங்குகின்றன. முன்னோர்கள் தமது கடின உழைப்பால் ஊர் கடந்தும் கடல் கடந்தும் சென்று பொருளைத் தேடி வந்துள்ளனர்.

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்பது ஆன்றோர் வாக்கு. உலகம் தோன்றிய காலம் தொட்டு மக்கள் அறவாழ்க்கையை வாழ்ந்து பொருளை ஈட்டியுள்ளனர்.

அருளைப் பெற்றவர்களுக்குப் பொருள் ஒரு பொருட்டன்று. இருந்தாலும் பொருளின் உண்மை நிலையை உணர்ந்திருந்தனர் என்பதனால் பட்டினத்தாரும்,

பிறக்கும் போது கொண்டு வந்தது இல்லை
பிறந்து மண்மேல் இறக்கும் போது கொண்டு போவதும்
இல்லை [88]

என்று பாடுகிறார்.

இதனால்தான் சித்தர்கள் பெற்ற செல்வத்தைப் பிறர்க்குக் கொடுத்தும் பொருள்மீது பற்று இல்லாமலும் உள்ளனர். பழனியில் போகரும், திருமூலர் சிதம்பரத்திலும், பாம்பாட்டி மருத மலையிலும், தன்வந்திரி வைத்தீஸ்வரன் கோயிலிலும், வால்மீகி எட்டிக்குடியிலும் சமாதி கொண்டு அருவமாக அருள்புரிந்து வருகின்றனர் என்னும் கருத்து எண்ணுதற்குரியது.

இவற்றின்வழிச் சங்ககால மக்கள் ஈட்டிய பொருளைப் பிறர்க்குக் கொடுத்து வாழ்ந்தனர், அதே போல சித்தர்களும் பிறர்க்குக் கொடுத்தும், பொருள்மீது பற்றின்றி வாழ்ந்தார்கள் என்னும் உண்மையினை அறியமுடிகிறது.

இல்லறம் நல்லறம் சிறப்பு

ஈதலால் வரும் இன்பமே சிறந்தது எனக் கொண்டு அவ்வின்பம் தமக்கும் உரிமையாக வேண்டும் என விரும்பி, அத்தன்மை வந்தடைதற்குப் பொருள் ஈட்ட வேண்டும்.

ஈதல் இன்பம் வெஃகி, மேவரச்
செய் பொருள் திறவர் ஆகி, புல் இலை [89]

என அகநானூறு விளக்குகிறது. இதே போன்று விருந்தோம்பல் பண்பினைச் சிறப்பாக எடுத்துரைக்கிறது புறநானூறு.

நீள் நெடும் பந்தர் ஊண் முறை ஊட்டும்
இற்பொலி மகடூஉப் போல, சிற்சில்
வரிசையின் அளிக்கவும் வல்லன், உரிதினின் [90]

விருந்தினர் பலராய் இருந்து தம்மிடம் உள்ள உணவு குறைவாய் இருந்த போதும் கவலைப்படாமல் விருந்து படைக்கின்ற இல்லற மகளிர் போலச் சிறிய பொருள் இருந்தபோதும் அளிக்கத் திறம்படைத்தவன் என்று கூறுகிறது புறநானூறு.

குறள் நெறியில் விருந்தோம்பல் ஒன்றே இல்லற வாழ்வின் ஆதாரமாக விளங்குகிறது. இதனை,

தருந்தானம் நன்றாற்றி இல்லறத்தின் வாழ்வில்
பொருந்தவே வாழ்ந்திடல் நன்றாம் - பெருமை
இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந் தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு [91]

என்னும் பாடல்வழி அறியமுடிகிறது.

மனைவி மக்களொடு கூடி வாழ்கின்ற இல்லற வாழ்வில் இம்மை இன்பமும், மறுமைப்பேறும் தருகின்ற தானங்களைச் செய்து இல்லறத்திற்கேற்ற தன்மைகளைத் தம்மிடம் பொருந்து மாறு வாழ்வது சிறந்த இல்லறமாகும். புகழும் புதிதாக வருகின்ற விருந்தினரை, உணவு, உடை, இருக்கை ஆகியன தந்து காத்த வினாலேயே இல்லறம் சிறப்புப் பெறுகின்றது என்னும் உண் மையை உணரமுடிகின்றது.

பொருளின் சிறப்பினை உரைத்தல்

இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்
அசையுநர் இருந்தோர்க்கு அரும்புணர்வு ஈன்ம் [92]

என, உழைத்தும் பொருளீட்டாதார்க்கு வாழ்வில் ஒன்றும் இல்லை என்பதை நற்றிணை குறிப்பிடுகிறது. இதனை,

ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல் எனச்
செய்வினை கைம்மிக எண்ணுதி; அவ்வினைக்கு
அம்மா அரிவையும் வருமோ?
எம்மை உய்த்தியோ? உரைத்திசின் நெஞ்சே! [93]

என்னும் குறுந்தொகைப் பாடலும் வலியுறுத்துகிறது.

பிறர்க்குக் கொடுத்தலும் இன்பம் பெறத் துய்த்தலும் ஆகிய செயல்களைச் செய்வதற்கான பொருள்களை ஈட்டுவதற் குத் தனியாகச் செல்லவிடுவாளோ என்று தன் நெஞ்சுக்குக் கூறுவ தாக உள்ள குறுந்தொகைப் பாடல் கருத்தைப் பட்டினத்தார் வலி யுறுத்துகிறார்.

குறிக்குமிச் செல்வஞ் சிவன் தந்த தென்று கொடுக்கறியாது
இறக்குமிக் குலாமருக்கு என் சொல் லுவேன்
கச்சி ஏகம்பனே [94]

என்கிறார். சிவவாக்கியரும்,

மிக்க செல்வம் நீர்படைத்த விறகுமேவிப் பாவிகாள்
விறகுடன் கொளுத்திமேனி வெந்துபோவது அறிகிலிர் [95]

என்று கூறுகிறார்.

ஈட்டிய செல்வம் எல்லாம் சிவன் தந்தது என நினைந்து பிறர்க்கு உதவுங்கள் என்றும் கொடுக்காமல் சேர்த்துவைத்து இறப் பதால் என்ன பயன் என்றும் வினவுகிறார். மிக்க செல்வத்தைப் படைத்தவனாக இருந்து இறந்து போவதை அறியாமலும் பிறர்க்கு உதவி புரியாமல் இருப்பவர்களைப் பாவிகள் என்று சாடுகிறார் சிவவாக்கியர்.

பிறர்க்கெனக் கொடுத்து வாழ்ந்தவர் எம் தலைவன் என நற்றிணைப் பாடலில் தலைவி வெளிப்படுத்துகிறாள்.

பிறர்க்கு என முயலும் பேர் அருள் நெஞ்சமொடு
காமர் பொருட் பிணிப் போகிய
நாம வெங் காதலர் சென்ற ஆறே [96]

பிறர்க்கென்றே தன் வாழ்நாளையும் பொருளையும் உதவும் பேரருள் வாய்ந்த நெஞ்சம் கொண்ட எம் காதலர் பலராலும் விரும்பத்தக்க பொருளை ஈட்டச் சென்றார். அவர் வேனிற் காலத் தில் அவ்வழிச் செல்லும் பாணர் தம் வருத்தம் தீரச் சிறிது பொழுது யாழ் இசைக்க அவ்விசையைக் கேட்டு மரத்தின் மீது ஓணான் ஏறும். இத்தகைய நெறியிற் சென்ற காதலரை நினைந்து ஆற்று வேன் எனத் தலைவி கூறுகிறாள்.

பட்டினத்தார் இந்த நற்றிணைப் பாடலைத் தழுவி,

கொல்லாமல் கொன்றதைத் தின்னாமல் சூத்திரங் கோள் களவு
கல்லாமல், கைதவரோடு இணங் காமல்கனவி னும்பொய்
சொல்லாமல், சொற்களைக் கேளாமல்,
தோகையர் மாயையிலே

செல்லாமல், செல்வந் தருவாய் [97]

என்றும்,

பாராமல் ஏற்பவர்க் கில்லையென் னாமல் பழுதுசொல்லி
வாராமல் பாவங்கள் வந்தணு காமல் மனம் அயர்ந்து
பேராமல் சேவை பிரியாமல் அன்புபெ றாதவரைச்
சேராமல் செல்வம் தருவாய்! [98]

என்றும்,

ஓடாமல் பாழுக்கு உழையாமல் ஓரம் உரைப்பவர் பால்
கூடாமல் நல்லவர் கூட்டம் விடாமல் வெங் கோபம் நெஞ்சில்
நாடாமல் நன்மை வழுவாமல் இன்றைக்கு நாளைக் கென்று
தேடாமல் செல்வம் தருவாய் [99]

என்றும் இறைவனிடம் வேண்டுகிறார்.

உயிர்களைக் கொல்லாமலும், ஊன் உண்ணாமலும் களவு செய்யாமல் பிற பெண்களோடு செல்லாமலும் தம்மிடம் வந்து கேட்பவர்க்கு இல்லை என்று சொல்லாமலும் செல்வத்தை இன்றைக்கு நாளைக்கென்று தேடாமலும் செல்வத்தை அருள்வாய் என்கிறார். சங்க இலக்கியம் பிறர்க்கு உதவும் நோக்கோடும் உழைத்துப் பொருள் ஈட்டி உதவும் நெஞ்சத்தவர் என்று மக்களைக் குறிப்பிடுகிறது. ஆனால், சித்தர்கள் எந்தவித தீமை செய்யாமல் உயிர்கள் மீது அன்பும் கருணை கொண்டும், இறைவன் ஒருவரிடமே வேண்டிய செல்வத்தை அருள்வாய் என்றும் வேண்டுதல் எண்ணுதற்குரியது.

பிறர் ஏவாமல் வாழும் வாழ்க்கை

உலக வாழ்வுக்கு உயிர் போன்றது செல்வம். செல்வத்தை வெறுக்கும் கொள்கைகளை உடையோரும் செல்வமின்றி வாழ முடியாது என்று அறிந்து செல்வத்தைத் தேடிக் கொண்டே வாயினால் வெறுத்துக் கொண்டிருப்பர். பொருளாதார அடிப்படையில் உலகியல் வாழ்வு முறைகள் அமைகின்றன என்பதை யாராலும் மறுக்க இயலாது. இதனைச் சங்ககாலத் தமிழர் நன்கு அறிந்திருந்தனர். இதனாலேதான் தலைவன், தலைவியைப் பிரிந்து பொருளீட்டச் செல்வான். பிறரிடம் சென்று இரத்தல் கொடிது என்பதையும் அகநானூற்றுப் பாடல் உணர்த்துகிறது.

அறன் கடைப் படாஅ வாழ்க்கையும் என்றும்
பிறன் கடைச் செலாஅச் செல்வமும் இரண்டும்
பொருளின் ஆகும் [100]

அறன்வழி இல்லா வாழ்க்கையும் பிறரிடம் சென்று இரந்து கேட்டுப் பெறாத மேம்பாடும் ஆகிய இரண்டும் பொரு ளால் பெறக்கூடியவையாகும். இதையே அழுகணிச்சித்தரும் தம் பாட லில் அறிவுறுத்துகிறார்.

புல்லரிடத்திற் போய்ப் பொருள் தனக்குக் கையேந்திப்
பல்லை மிகக் காட்டிப் பரக்க விழிக்கிறண்டி!
பல்லை மிகக் காட்டாமல் பரக்க விழிக்காமல்
புல்லரிடம் போகாமல் என் கண்ணம்மா!
பொருளெனக்குத் தாராயோ! [101]

என வேண்டுகிறார்.

பிறர் வீட்டு வாயிலில் சென்று கையேந்தி நில்லாமலும், யாசித்து வாழாமலும் பல்லைக் காட்டாமலும், என் தெய்வமே பொருளெனக்குத் தாராயோ என அழுகணிச் சித்தர் இறைவனை அழைத்து வேண்டுகிறார்.

அருள் உடையவனாயினும், தலைவன் பொருள் இல்லா மல் இல்லறம் நடத்த இயலாது என்பதால் பொருளுக்காகத் தலைவியைப் பிரிந்து செல்வதாக வெண்பூதியார் பாடுகிறார்.

"இல்வாழ்க்கைச் சிறப்புற அமையச் செல்வமே அடிப் படையாகும். செல்வமின்றி இல்லறத்தில் நல்லறம் செய்தல் முடி யாது. எனவே, ஒவ்வோர் ஆடவனும் பொருளீட்ட வேண்டும். பொருளின்றி வாழ்க்கை இல்லை. நிறைந்த செல்வமே சிறந்த இல்லறப் பயனைத் தரும்"[102] என இல. பொம்மி தனது நூலில் சுட்டுவதை அறிய முடிகிறது. இதனால் தலைவன் பொருளீட்ட, தலைவியைப் பிரிந்து செல்வதைச் சங்க இலக்கிய பாடல்களில் காண முடிகிறது.

அத்தம் அரிய என்னார் நந்து றந்து
பொருள்வயிற் பிரிவார் ஆயின் இனி இவ் உலகத்துப்

பொருளே மன்ற பொருளே
அருளே மன்ற ஆரும்இல்லதுவே [103]

பொழிய வேண்டிய மழை பெய்யாது நீங்கிய துயரத்தைப் பெற்றுள்ள பாலை நிலத்திலே கிளைவிட்டு வளர்ந்த முட்களோடு கூடிய கள்ளியினது காய்கள் வெடிக்கும் பொழுது வெளிப்படும் கடிய ஒலியானது நெருங்கிய மென்மையான சிறகுகளையுடைய ஆணும் பெண்ணுமாய்ச் சேர்ந்திருந்த புறாக்களை நீங்கி ஓடச் செய்யும் அரிய வழிகளைக் கடத்தற்கு அரியன என்று கருதாமல் நம்மைப் பிரிந்து பொருள் தேடும் பொருட்டுப் பிரிவாராயின், இந்த உலகத்திலே உறுதியாகச் செல்வம் ஒன்றே உறுதிப் பொருளாக அமைந்தால் அருள் என்பதனை ஏற்றுக் கொள்வார் ஒருவரும் இல்லாததாகிவிடும் என்கிறார் புலவர்.

அருள் உள்ளம் உடையவராயினும் பொருள் இல்லாதவருக்கு ஈதல் என்பது இயலாது என்று அகநானூறு குறிப்பிடுகிறது.

இருள்படு நெஞ்சத்து இடும்பை தீர்க்கும்
அருள்நன்கு உடையர் ஆயினும், ஈதல்
பொருள்இல் லோர்க்கு அஃதுஇயை யாது ஆகுதல்
யானும் அறிவென் மன்னே; [104]

இன்னாதவற்றைச் செய்வதால் வறுமை இன்னும் என் பால் உள்ளது. மேலும் வந்தால் இனி என்ன செய்வேன் என்று மயங்குகின்ற நெஞ்சின் வருத்தத்தைப் போக்குகின்ற அருள் உள்ளம் உடையவராயினும் பொருள் இல்லாதவர்க்கு ஈதல் இயலாது என்பதை யானும் நன்கு அறிவேன் என்கிறாள் தலைவி. இக் கருத்தையொட்டித் திருமூலர்,

பெருஞ்செல்வம் கேடு என்றுமுன்னே படைத்த
அருஞ் செல்வம் தந்த தலைவனை நாடும்
வருஞ் செல்வத்து இன்பம் வர இருந்து எண்ணி
அருஞ் செல்வத்து ஆகுதி வேட்க நின்றாரே [105]

என்றுரைக்கிறார்.

மறுமையில் கிடைக்கின்ற சுவர்க்கச் செல்வத்தால் பெற உள்ள இன்பத்தை மிக எண்ணி, உங்களது அருஞ்செல்வமாகிய

வேள்வியைச் சரிசெய்யும் அந்தணர்களே! "பெருஞ்செல்வம், வறுமை" ஆகிய இரண்டிற்குமான காரணங்களைத் தொன்று தொட்டு விளக்கி நிற்பது அனைத்து நலன்களையும் தந்தருளும் அறிவுச் செல்வமாகிய வேதமாகும். எனவே, அருட்செல்வத்தை அருளும் சிவனை நினையுங்கள். அதுவே வறுமையை நீக்கும் வழி என்று அந்தணர்களுக்கு அறிவுறுத்துகிறார் திருமூலர். திருமந் திரத்தைத் தழுவிக் குறளும்,

அருளில்லார்க் கவ்வுலக மில்லை; பொருளில்லார்க்
கிவ்வுலகம் இல்லாகி யாங்கு [106]

என்று கூறுகிறது.

உயிர்கள் மேல் அருள் இல்லாதார்க்கு வீட்டுலகத்து இன் பம் இல்லை. பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலகத்து இன்பம் இல்லை என வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

''உலகாய்தத்தின் முதற் கொள்கை பொருளே பொருள் என்பது, உலகாயதர்களின் குறிக்கோள் இன்பம் ஒன்றே, அவ்வின் பம் பொருளான் அன்றிப் புறவழியான் எய்த இயலாது என்பதைத் தெளிந்து பொருளே பொருள் என்று எண்ணினார்'' [107] என்று வள் ளுவர் பொருள் செயல் வகையில் எடுத்து எடுப்பிலேயே மிக அழுத்தமாக வலியுறுத்துகிறார் என்கிறார் ப. மருதநாயகம். வாழ் வில் எய்தும் இன்னல்களைத் திருமந்திரம் விரித்துரைக்கின்றது.

புடவை கிழிந்தது போயிற்று வாழ்க்கை
அடையப் பட்டார்களும் அன்பிலர் ஆனார்
கொடையில்லை கோள்இல்லை கொண்டாட்டமில்லை
நடையில்லை நாட்டில் இயங்குகின் றார்கட்கே [108]

இது, வறியவர்க்கு நல்வாழ்க்கை இல்லை; சுற்றத்தினரும் அவரிடம் அன்பு வைக்கமாட்டார்; கொடுப்பதும் வாங்குவதும் இல்லை; கொண்டாட்டமில்லை; நாட்டு நடப்புமில்லை என வறுமையின் இன்னலை விரிக்கிறது. பொருளில்லார்க்கு இவ்வுல கில்லை என்றும் குறள் விளக்குகின்றது. திருமூலர் வறுமையில் இருப்பவர்க்கு இவ்வுலகில்லை, ஒன்றும் இல்லை என்றும் அருட்

செல்வத்தையும் பொருட்செல்வத்தையும் அருளும் "சிவனை" நினையுங்கள் என்றும் சொல்கிறார் திருமூலர்.

பொருளின் பயன் இன்பம்

அறம், பொருள், இன்பம் மூன்றையும் இணைத்துக் குறுந் தொகைப் புலவர்,

மருந்து எனின் மருந்தே வைப்பு எனின் வைப்பே
அரும்பிய சுணங்கின் அம்பகட்டு இளமுலைப்
பெருந்தோள் நுணுகிய நுசுப்பின்
கல்கெழு கானவர் நல்குறு மகளே [109]

எனப் பாடுகிறார். கற்கள் பொருந்திய காட்டிற்குரிய கானவர் பெற்ற மகளாகிய தலைவி, அழகிய பெருமை பொருந்திய இள முலைகளையும் பெருத்த தோள்களையும் நுண்ணிதாகிய இடை யினையும் உடையவள் நான் தேடும் பொருள் அமுதம் போன்று இனிது என்பதால் எனக்கு அமுதமாக அமைந்துள்ளவள் என்று தலைவன் குறிப்பிடுகிறான்.

போகம் நுகர, வைப்பாகப் பெருநிதி வேண்டும் என எண் ணின் இவளே எனக்குக் காப்பான செல்வமும் ஆவாள். ஆதலால், இவளைப் பிரிந்து சென்று பெறும் செல்வம் வேறு ஒன்றும் இல்லை எனத் தலைவியை இன்பமாகவும் பொருளாகவும் எண் ணிப் பார்க்கிறான் தலைவன்.

அதனால், அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்
ஆற்றும், பெரும! நின் செல்வம்;
ஆற்றாமை நிற் போற்றாமையே [110]

என்னும் கருத்தும் இவண் ஒப்புநோக்குதற்குரியது.

அறமும் பொருளும் இன்பமும் உடைய ஒருவன் செல் வத்தைப் பிறர்க்கு வழங்கவில்லையென்றால் போற்றுதலுக்கு உரி யவன் ஆகமாட்டான் என்னும் கருத்தும் ஒப்புநோக்குதற்குரியது.

இடைக்காடரும்,

மாடும் மனைகளும் மக்களும் சுற்றமும் வான்பொருளும்
வீடு மணிகளும் வெண் பொன்னுஞ்செம்

பொன்னும் வெண்கலமும்
காடுங் கரைகளுங் கல்லாம் பணியும் கரிபரியும்
தேடும் பல பண்டம் நில்லாது சிவகதி சேர் மின்களே [103]

என வலியுறுத்துகிறார். செல்வம் இல்லையேல் அறம், பொருள், இன்பம் இல்லை என்பதை இடைக்காடர் வலியுறுத்துகிறார். மாடு, மனை, மக்கள், சுற்றம், வான் பொருள், வீடு பொன், தேடும் பல பாண்டம், யாவும் இவ்வுலகில் நிலைத்து நிற்ப தில்லை என்னும் நிலையை நன்கு அறிந்து தெளிவான சிந்தனை யுடன் நிலைத்து நிற்பது சிவமே என்று வாழ்ந்துள்ளதைச் சித்தர் பாடல்கள் மூலம் உணரமுடிகின்றது.

இதனைப் பாம்பாட்டிச் சித்தரும்,

யானை சேனை தேர்பரி யாவும் அணியாய்
யமன் வரும்போது துணையாமோ அறிவாய்
ஞானஞ் சற்றும் இல்லாத நாய்கட்குப் புத்தி
நாடி வரும்படி நீ நின்று ஆடுபாம்பே! [112]

எனப் பாடுகிறார். யானைப்படை, சேனைப்படை, தேர்ப்படை, குதிரைப்படை யாவும் அணி திரண்டாலும் எமன் வரும் பொழுது துணைக்கு உதவா, தடுத்து நிறுத்தவும் முடியாது. போரில் புகழ் பெற்ற வீரர்களெல்லாம் மடிந்திருக்கிறார்கள். அவர்கள் திறமை களெல்லாம் அவர்களைக் காப்பாற்றவில்லை. ஆனால், இந்த அறிவை ஒருவரும் உணரவில்லை. எத்துணைக் கற்றாலும், கேட் டாலும் அவர்களது அறிவு கெட்டுத்தானே போய்விடுகிறது. காலம் நிற்காது. அப்படிப்பட்ட நாய்க் குணமுடைய மனிதர் களுக்குப் புத்தி வரும்படி, அவன் மரணமடையும்பொழுது, எந்தச் சேனையும் உடன் வராது என்பதை உணர வேண்டும் என் றும் சித்தர்கள் உரைக்கின்றனர். பொருளாசை அற்றவர்கள் பற் றற்றவர்கள் நித்திய பொருளாகிய சிவத்திலேயே ஒன்றி அதுவாக இருப்பர். பொருள் தேவையென்றால் இரசவாதம் மூலம் இரும் பைத் தங்கமாக மாற்றிக் கொண்டு அதன் மூலம் ஏழை மக்களுக்கு மருத்துவம் செய்வார்கள். அதன் மூலம் நோயில்லா வாழ்க்கை யையும் மரணமில்லா பெருவாழ்வையும் வாழ்வார்கள். "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" எனச் சித்தர்கள் அறிவுறுத் தினார்கள்.

இன்பம்

அறம், பொருள் இவற்றின் பயனாக விளங்குவது இன்ப மாகும். இவ்வின்பத்தின் விளக்கம் குறித்தும் இல்லறத்தில் இதன் நிலைக் குறித்தும் விரிவாகக் காண்பது இன்றியமையாதது.

இல்லறம்

"இல்வாழ்க்கை நிலைக்குச் செல்லுகின்ற நெறிக்கண் நின்று அதற்குத் துணையாகிய கற்புடைய மனைவியோடு செய் யப்படுவது இல்லறமாகும். இல்லறம் இல் என்றால் வீடு, அறம் என்றால் புண்ணியங்களைச் சேர்க்கக் கூடிய தர்மம். வீடு பேற்றை யும் ஆன்மாவிற்குத் துணையாய் வரும் புண்ணியத்தையும் ஒரு சேரக் கொடுப்பது இல்லறம்" [113] என உணர்த்துகின்றார். இல்லறத் திற்கு விளக்கம் தருகிறார் குரு தெட்சிணாமூர்த்தி சுவாமிகள்.

இல்லறத்தின் அறத்தைத் திவாகரம், பிங்கலம், சூடாமணி ஆகிய அகராதிகள் தரும் விளக்கங்களின் வழித் தெளிவுபடுத்திக் கொள்ளலாம். ஒத்த குலமும், ஒத்த ஆயுளும், ஒத்த செல்வமும், ஒத்த நலனும் அத்தக உடையது; ஒத்தகுலமும் ஒத்த ஒழுக்கமும், ஒத்த குணமும், ஒத்த ஆயுளும் அத்தக உடையது. ஒத்த பருவமும், ஒத்த குலமுடைய கன்னிகையை அக்கினி முன்பாக விவாகஞ் செய்து இல்லிலிருந்து அநுபவிக்கும் இன்பம். இல்லற வாழ்வில் இன்பமும் அறப்பண்புகளுடன் அமைய வேண்டும்" [114] என்பதை அகராதிகள் உணர்த்துகின்றன.

தேவநேயப் பாவாணர் இன்பம் மற்றும் காமம் குறித்துக் கூறுவது இங்கு நினைத்தற்குரியது. "அறம் வழிப்பொருள் ஈட்டி இன்பம் துய்க்கும் வகை பற்றிக் கூறும் பகுதியான் இன்பத்துப் பால் ஆகும். இதன் பொருட்பாகுபாடு தமிழர் வழியே ஆதலின் ஆசிரியர் இட்ட பெயர் இன்பத்துப்பால் என்பதாகச் சொல்லப்படு கிறது. காமம் என்பது தமிழ்ச் சொல்லே ஆயினும், காமம் என்பது ஆசையாகிய உளப்பாடு ஆகும். இன்பத்தினால் விளைவது துய்ப் பதாகும். காமம் என்பது காய்ப்பது போன்றதாகும். இன்பம் என் பது துய்ப்பது ஆகும். களவு என்பது மறைவு. களவாக ஒழுகும் ஒழுக்கம் களவெனப்பட்டது. அதில் தீதொன்றுமில்லை. கற்பெல்

லாம் களவொடு தொடங்க வேண்டும் என்பது இல்லை. கள வொழுக்கம் கற்பாக மாற வேண்டுவதே முறைமை என்று இன் பத்துப்பால் பற்றித் தேவநேயப் பாவணர்"[115] குறிப்பிடுகின் றார்.

"அன்பை வளர்த்துப் பேணுதற்கு ஏற்ற சூழ்நிலை இல் வாழ்க்கையே ஆகும். மாசிலாத அன்புடன் அறவாழ்க்கை நடத் துவதற்கு இல்லறமே ஏற்றது. 'இல்லறமல்லது நல்லறம் அன்று' என்பார் ஔவை மூதாட்டியார். 'அறன் எனப்பட்டதே இல் வாழ்க்கை' என்பர் தெய்வப் புலமைத் திருவள்ளுவர். அன்பு நெறியால் எளிதாகப் பேரின்பம் எய்துவதற்கு வாய்ப்பு உள தாகும். அறிவு நெறியால் அரும்பாடுபட்டு அதை எய்த விரும்பு வார்க்கு ஏற்படும் இன்னல்கள் பலவாம் என்று மேலும் வலியுறுத் தவே "அஃதும் (துறவறமும்) பிறன் பழிப்பதில்லாயின் நன்று" என்று அவர் உணர்த்துவாராயினார். அறிவு நெறி பற்றித் துறவறம் மேற்கொண்டவரது ஒழுக்கத்தில் சிறிது மாசு இருப்பினும் அவரைக் கண்டவரெல்லாம் பழிப்பார். எனவே, பழிப்புச் சிறிதும் ஏற்படாதவாறு ஒழுகவல்லார்க்கே அறிவுநெறி பற்றிய துறவறம் ஏற்றதாம் என்பது தெளிவாகிறது. கண்டவர் கூறும் பழிப்புரை யிலிருந்து தப்பி உய்தற் பொருட்டே பிறர் ஒருவரும் காணுதல் இல்லாத காடு மலை முதலியவற்றை நாடிச் செல்லும் வழக்கம் துறவறத்தார்க்கு அமைந்தது போலும்"[116] எனும் மொ.அ.துரை. அரங்கசாமியின் கருத்து பொருத்தமுடையதாகும்.

துறவறம்

இல்லிலிருந்து இல்லற இன்பத்தைத் துய்த்து அவ் வேட்கை தீர்ந்த பின்னர்ப் பிறப்பற்றும், அகப்பற்றும் விட்டுத் துறவு நிலையில் புகல் வேண்டுவது துறவறமாகும்.

"அறத்தின் பாற்பட்ட இந்த 'இல்லறம்', 'துறவறம்' என இரு நிலைகளும் உண்மையிலேயே இரண்டு வெவ்வேறுபட்ட வாழ்க்கை வழிகள் அல்ல. இந்த நெறிகளும் ஒன்றானதே. நிலை கள் தாம் இரண்டு (Not two ways and views of life, only two stage of life) இவை மனிதனது முழுமைத்துவம் படிப்படியாக பரிணாம வளர்ச்சி அடைவது எனலாம். இயற்கை வழி முழுமை

பெறுவதாகும். இல்லறம் என்பது துறவறத்திற்கு எதிரானது அல்ல. இல்லறமே நல்லறமாகும்."[117] அதனால்தான் வள்ளுவர் அறவழிபட்டதே இல்வாழ்க்கை என்றார்.

"சித்தர்கள் துறவு என்ற சொல்லுக்கு ஆன்மப் பொருள் கூறுகிறார்கள். துறவு என்பது குடும்பத்தைத் துறந்து செல்வது என்று பொருளாகாது. வெளியே செல்கின்ற உட்கருவிகளான கர்மேந்திரியங்கள் 1. வாய், 2. கை, 3. கால், 4. குதம், 5. கருவாய் ஞானேந்திரியங்கள், 1. மெய், 2. வாய், 3. கண், 4. மூக்கு, 5. செவி. இவற்றின் தன்மைகளை அறிதல் பஞ்ச ஞானேந்திரியங்கள் எனக் கூறப்படுபவற்றிலிருந்து பிரிந்து உள்முகமாகச் செலுத்து வதுதான் பேரின்பமாகிய துறவுநிலை என்று சித்தர்கள் கூறுகிறார் கள்"[118] என மீ.ப. சோமசுந்தரம் விளக்குகின்றார்.

அன்பு வாழ்க்கை

"ஒருவனும் ஒருத்தியும் தம்முள் தாமே எதிர்ப்பட்டு உள் ளத்தாலும் உடலாலும் ஒன்றுபட்டு, மறைவாகப் பழகி வருதல் களவு மணம் எனப் பெயர் பெறும். பலர் அறிய மணம் செய்து வாழும் வாழ்க்கை கற்பு மணம் எனப் பெயர் பெறும். களவு நடந்த பின்பே கற்பு நடைபெறுதல் வேண்டும் என்பது பண் டைய புலவர் குறிக்கோள். கணவனும் மனைவியுமாக வாழக் கூடிய இருவர் பிறர் இடையூறு இல்லாமல் தம்முள் தாமே ஒரு வரையொருவர் நன்கு அறிந்து திருமணத்திற்கு உடன்படுதல் வேண்டும். இவ்வாறு உடன்பட்டு மணந்து கொள்ளும் வாழ்க் கையே அன்பை அடிப்படையாகக் கொண்டு விளங்கும்"[119] என் னும் மா. இராசமாணிக்கனார் கருத்து ஈண்டுக் கருதத்தக்கது.

தொல்காப்பியர்,

> இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
> அன்பொடு புணர்ந்த ஐந்திணை [120]

என்கிறார். அன்போடு புணர்ந்த ஐந்திணை என்பது கைக்கிளை பெருந்திணையை ஒழித்தும் ஒத்த அன்பினராகிப் புணர்தலும் பிரிதலும் இருத்தலும், ஊடலும் இரங்கலும் நிகழ்ந்தது ஆக லானும் அவை நிகழக்கூடிய இடம், காலமும் கருப்பொருளும் துணையாகி நிகழுமாதலானும் இவை அன்பொடு புணர்ந்தவை

யாகும். இன்பம் என்பது எல்லா உயிர்களுக்கும் பொதுவாகும். இருந்தாலும் மனித வாழ்க்கையில் அறத்துடனும், ஒழுக்கத்துட னும், பொருள் ஈட்டித் துய்த்தலே இன்பம் ஆகும். சங்ககால மக் கள் கணவன், மனைவி, சுற்றம், மக்களுடன் சேர்ந்து வாழும் நன் னெறி வாழ்வையும் இன்பவாழ்வையும் வாழ்ந்துள்ளனர் எனச் சங்க இலக்கியம் உணர்த்துகிறது. இந்நிலையில் சித்தர் படைப்பு களினால் சித்தர்கள் இல்லற வாழ்விலும் இன்ப வாழ்விலும், ஈடு பட்டார்களா என்னும் ஐயம் எழுகிறது. அதற்கு ஆதாரமாகச் சதுர கிரியில் கோரக்கர் சித்தர் எனும் நூலில் சித்தர்கள் குடும்பத்துடன் வாழ்ந்த செய்தியை அறிய முடிகிறது. இவ்வகையில் சங்க இலக் கிய, சித்தர் படைப்புகளில் இன்பம் பற்றிய செய்திகளைக் காண் பது இன்றியமையாதது.

சித்தரில் நந்தீசர்க்கு எட்டு பெண்டிர்
சிறந்த ஈரெட்டே; பெண்ணொன்று
சத்திமச்சர் தமக்குப் பத்துப் பெண்டிர் சேய்தான் நூறு;
சட்டை முனிவர்க்கு இவர்போல் மனைவி மைந்தர்
வித்தகமாய் அகப்பேயர்க்கு மாதர் பத்து
விளங்கிடச் சேய் நூற்றிருப தாகும்
பத்தியுள்ள பாம்பாட்டிக்கு ஈராறு மங்கை
பாலர்களும் நூற்று நாற்பத்து நான்கே
ஆய்ந்திட மெய்க் கோரக்கன் என்றனுக்கே
ஐந்து பெண்டிர் அறுபதுசேய்; விளக்கம் உண்மை
மாய்ந்திடாது இவ்விதமாய்ப் பதினெண் பேர்கள்
மனைவி மக்களுடன் வாழ்க்கை; பேரன் பேத்தி
தோய்ந்திடவே இருந்தேற்றுக் காலன் தானும்
தொடர்ந்திடாது நீடூழி காலம் பெற்றோம்
வாய்ந்த உமை அரன் பாகத்து அமுது உண்டே,
வயங்கு புலிக்கைப் பொதிகை எங்கள் வாழ்வே [121]

என்கிறது ஒரு பாடல். இதன்வழிச் சித்தர்கள் பற்பல காயகல்பங் களைத் தயாரித்து உண்டு ஆயிரக்கணக்கான ஆண்டுகள் மர ணத்தை வென்று அக்கால வழக்கப்படிப் பல மனைவியரை மணந்து இல்லறத்தில் இருந்தனர் என்பதை அறிய முடிகிறது. இல்லற வாழ்க்கையே சிறந்த நன்னெறி வாழ்க்கையென ஓம்பு கிறது புறநானூறு.

இல்லற வாழ்க்கையின் சிறப்பு

அதள் எறிந்தனன் நெடு வெண் களரின்
ஒருவன் ஆட்டும் புல்வாய் போல,
ஓடி உய்தலும் கூடும் மன்;
ஒக்கல் வாழ்க்கை தட்கும்மா காலே [122]

மனைவி, மக்கள் சுற்றமுமாய் வாழும் இன்ப வாழ்வும் நன்னெறி வாழ்வே என்பதை உணர்த்த புல்வாய் மான் வேடனிட மிருந்து தப்பிப்பிழைத்தல் போல, துன்பம் தரும் இல்வாழ்க்கை யிலிருந்து துறவு வாழ்க்கைக்கு ஓடிப் பிழைத்தல் கூடும் என்ற எண்ணம் தோன்றுவது இயல்பு; ஆயினும், சுற்றத்துடன் கூடி வாழும் வாழ்க்கை இல்லாதவர்க்கே துறவும் தாபக ஒழுக்கமும் தகும். ஆதலால் சுற்றத்துடன் கூடி வாழும் இல் வாழ்க்கையே சிறந்த நன்னெறியில் நிற்பதற்கான வாழ்க்கை என்று உணர்த்து கிறார் ஓரேருழவர்.

சிவவாக்கியரும்,

மாதர் தோள்சே ராதவர் மானிலத்தில் இல்லையே!
மாதர் தோள் புணர்ந்தபோது மனிதவாழ்வு சிறக்குமே
மாதராகுஞ் சத்தியொன்று மாட்டிக் கொண்டதாதலால்
மாதராகும் நீலிகங்கை மகிழ்ந்து கொண்டான் ஈசனே [123]

எனக் கூறுகிறார். மாதரோடு சேர்ந்து வாழாதவர் மானிலத்தில் இல்லையெனவும், மாதரோடு சேர்ந்து வாழ்ந்தால்தான் மனித னின் வாழ்வு சிறப்புப் பெறும் எனவும் அறிவுறுத்துகிறார். அதைப் போன்று சிவனும் கங்கையை மணந்து மகிழ்ந்து வாழ்ந்து இல்லற வாழ்க்கையினை அமைத்துக் கொண்டார். இது நல்ல வாழ்வு எனத் தெளிவுறுத்துகின்றார் சித்தர். முற்பிறவியிலிருந்து தலைவன், தலைவியரின் அன்பு தொடர்ந்து வெளிப்பட்டு விளங் குவதாகக் கூறுகிறது குறுந்தொகை.

இம்மை மாறி மறுமை ஆயினும்
நீ ஆகியர் எம் கணவனை;
யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவளே [124]

இம்மையிலும் மறுமையிலும் நீயே என் கணவன், யானே நின் நெஞ்சில் வாழ்பவனாவேன் எனக் கற்பின் திறத்தினை அறி வுறுத்துகிறாள் தலைவி.

தவத்தின் பயனே இன்பத்தை அனுபவிப்பதாகும் என் கிறது கலித்தொகை.

அருந்தவம் ஆற்றியார் நுகர்ச்சிபோல் அணிகொள,
விரிந்து ஆனாச் சினைதொறூஉம் வேண்டும் தாது
அமர்ந்து ஆடிப்
புரிந்து ஆர்க்கும் வண்டொடு, புலம் தீர்ந்து எவ்வாயும்
இரும்தும்பி இறைகொள எதிரிய வேனிலான் [125]

அரிய தவம் செய்தோர், அதன் பயனாக இன்பத்தை நுகர் வது போல வண்டுகளும், தும்பிகளும் மலர்கள் விரிந்த வண்மை யாக இருக்கும் பூங்கொம்புகள் தோறும் சென்று, தாம் விரும்பிய மகரந்தப் பொடியை உண்டு, விருப்புடன் ஒலியெழுப்பி இன்ப மடைகின்றன. தனிமைத் துன்பத்தை விட்டு விலகுகின்றன என் கின்றன மேற்பாடலடிகள். இதே கருத்தினைத் திருமூலரும்,

மனையுள் இருந்தவர் மாதவர் ஒப்பர்
நினைவுள் இருந்தவர் நேசத்துள் நிற்பர்
பனையுள் இருந்த பருந்தது போல
நினையாதவர்க்கில்லை நீள் இன்பந்தானே[126]

என்று விளக்குகிறார்.

இல்வாழ்க்கையில் இருந்து கொண்டு இறைப்பணி புரிகின் றவர் பெரும் தவத்தை உடையவர்க்கு ஒப்பானவராவர். இடை விடாத தியானத்தில் இருப்பர். இறைவனின் அன்பிற்கும் பாத்திர மாகி இருப்பர். பனை மரத்தில் இருக்கும் பருந்தைப் போல நினைக்காதவர்க்கு இறை இன்பம் கிட்டாது. அதாவது ஐம்புல இன்பங்களையும் அனுபவித்துக் கொண்டு சிவபெருமானின் பணியைச் செய்வோர் புலன்களை வென்ற தவத்தவரோடு ஒப்பா வார்.

கற்பு வாழ்வின் கடமைகளில் இறுதி நிகழ்வாகப் பற்றற்ற வாழ்வை மேற்கொண்டொழுக வேண்டும் என்கிறது தொல்காப் பியம்.

காமஞ்சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ்சான்ற மக்களோடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே [127]

இது இல்லறம் நிகழ்த்திய தலைவனும் தலைவியும் பின் னர்த் துறவறம் நிகழ்த்தி வீடுபேறு அடைதலை உட்கொண்டது என்கிறார் நச்சினார்க்கினியர். "அறத்தினை விரும்பிய சுற்றத் துடனே (உயிரினும்) சிறந்ததாகிய செம்பொருளை இடைவிடாது எண்ணிப்போற்றும் நன்னெறியிற் பழகுதல், இதுகாறும் மேற் கொண்டு நிகழ்த்திய மனையறத்தின் முடிந்த பயனாகும்" [128] என் கிறார் க. வெள்ளைவாரணர்.

"பற்று நீங்கி வீடு பெறுதற்குச் சிறந்ததாகிய செயலினை நிகழ்த்துதல், நிகழ்ந்து முடிவுற்ற இல்லற வாழ்க்கையின் எய்தும் பயனாகும் என்கிறார்"[129] ச. பாலசுந்தரம். அ. தட்சிணாமூர்த்தி அவர்கள்,

துறவுக்கு மதிப்பளித்தனர் எனினும் மணவாத் துறவுக்கு மதிப்பளிக்கவில்லை மாறாக இல்லறத்தைச் செம்மையுற ஆற்றிக் காமம் சான்ற கடைக் கோட்காலை ஏமம் சான்ற மக்களோடு கூடி அறம்புரி சுற்றமொடு சிறந்தது பயிற்றலையே விரும்பியுள்ளனர் [130] எனக் கூறியுள்ளமையான் கற்பொழுக்கத்தின் இறுதியில் பற்றற்ற துறவு நிலைக்குச் செல்லும் கருத்து அக்காலத்தே நிலவியதை மறுக்கமுடியாது.

இளமை, எழில், செல்வம், யாக்கை, யாவும்
நிலையா இவற்றுள் எதுவும் இறந்த பிறகு
மனிதனைத் தொடரா அவருடன் உடன்
செல்வது ஆற்றிய அறமேயாகும் ஈன்ற
புதல்வன் மறுமை இன்பத்திற்கும் துணையாவான் (பா.எ. 66)

என்னும் துறவு நெறிக்கூறுகள் அகநானூற்றில் இடம்பெறுவதை,

இம்மை உலகத்து இசையொடும் விளங்கி
மறுமை யின்பம் மறுவின்றி எய்துப
செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
சிறுவற்பயந்த செம்மலோ ரெனப்
பண்டையோர் கூறிய பழமொழி எல்லாம்
வாயே யாகுதல் வாய்த்தனம் தோழி [131]

என்னும் பாடலின் வழி அறியமுடிகிறது. நாற்கவிராச நம்பியும்,

மக்களொடு மகிழ்ந்து மனையறங் காத்து
மிக்க காம வேட்கை தீர்ந்துழித்
தலைவனும் தலைவியுந் தம்பதி நீங்கித்
தொலைவில் சுற்றமொடு துறவறங் காப்ப [132]

என்றார். ஆக, கற்பு வாழ்வின் இறுதிப் பயனாகத்துறவு மேற் கொண்டொழுகுதல் எனும் பழக்கம் இருந்ததை அறிய முடிகிறது.

இல்லற, துறவற நிலை

சித்தர்கள் சமுதாயத்தில் வாழும் மக்களுக்குக் கூறுவன இல்லறத்தில் இருந்துகொண்டே துறவற வாழ்க்கை வாழ்தல் வேண்டும் என்பதாகும். அறம் செய்தல் என்பது இன்றியமையாத ஒன்றாகிறது. 'அறம் செய்தல்' என்பது உணவு, உடை, பொருள் முதலியனவற்றைப் பிறர்க்குக் கொடையளிப்பதோடு முடிவ தில்லை.

'சமுதாய வழக்கு' நிலைக்க வேண்டுமென எண்ணி அதற்கான தன் கடமைகளைச் சரிவரச் செய்வதும் அறமே. இதனைச் சரிவரச் செய்து உலகியல் வாழ்க்கை வாழுபவர்கள் இல் லறத்தார். உலக வாழ்விலிருந்து ஒதுங்கி நின்று அறம் செய்வோர் துறவறத்தார்.

சித்தர்களுள் இல்லறம் நடத்தியவர்களும் இருந்தனர். துற வறத்தில் ஒழுகியவர்களும் இருந்தனர். இதனை,

அறந்தான் இயற்றும் அவனிலும் கோடி அதிகம் இல்லம்
துறந்தான் அவனின் சதகோடி உள்ளத் துறவுடையோன்,
மறம்தான் அறக்கற்று அறிவோடிருந்திரு வாதனை யற்று

இருந்தான் பெருமையை என்சொல்லுவேன்?
கச்சி ஏகம்பனே [133]

எனப் பாடுகிறார் ஒரு சித்தர்.

இல்லறத்தார் புறவுலகில் காணப்படும் பொருளின்பால் நாட்டம் கொண்டிருந்தாலும் அறஞ்செய்தலைத் தவறாது செய்தல் இன்றியமையாததாகும் என்று சித்தர்கள் விளக்குகின்றனர். "மானுடத்தின் வாழ்வியல் ஒழுக்க நெறிகள் இல்லறம், துறவறம் என்ற இரண்டு நிலைகளில் அமைகின்றன. இவ்வொழுக்க நெறி யானது முதலில் தான் என்ற தன்நல உணர்வில் இருந்து தன் மனைவி மக்கள், உறவினர், சுற்றத்தார்கள் என்ற பொதுநல உணர் விற்குப் படிப்படியாக வித்திடுவதாக அமைகின்றது. இல்லற வாழ்விற்கு அன்பும், துறவறத்திற்கு அருளும் துணை செய்கின் றன. இல்லறத்தின் நிறைவு துறவறமாகும் அன்பின் முதிர்ச்சி அரு ளாகவும் மானுட வாழ்க்கை முழுமை பெறுகின்றது" [134] *என்று இல்லற, துறவற நிலைகளின் சிறப்பினை எடுத்துரைக்கின்றார் மா. செங்குட்டுவன்.*

கற்பைப் போற்றுதல்

கற்பின் சிறப்பினைப் பதிற்றுப்பத்து பின்வருமாறு குறிப் பிடுகின்றது.

ஆறிய கற்பின், அடங்கிய சாயல்
ஊடினும் இனிய கூறும் இன்நகை
அமிர்து பொதி துவர்வாய் அமர்த்த நோக்கின் [135]

அறக்கற்பினையும் அடக்கத்தோடு மென்மையான சாய லினையும், நின்னொடு ஊடல் கொள்ளும் காலத்தில்கூடப் புன்னகையுடன் கூறும் இனிய மொழியையும், அமிர்தம் ஊறிய வாயினையும் விரும்பிய பார்வையையும், ஒளி பொருந்திய நெற்றி யினையும் தளர்ந்த நடையையுமுடைய நின் மனைவியாகிய நின் பிரிவை எண்ணி வருந்துதலும் கூடும் என விளக்குகிறது பதிற்றுப் பத்து.

சித்தர்களில் வாலைக்கும்மி பாடும் கொங்கணச் சித்தர், கற்பின் பெருமையைப் பாடியுள்ளார்.

கற்புள்ள மாதர் குலம் வாழ்க நின்ற
கற்பை யளித்தவரே வாழ்க
சிற்பரனைப் போற்றிக் கும்மியடி குரு
தற்பரனைப் போற்றிக் கும்மியடி [136]

கற்புள்ள பெண்கள் வாழும் குலம் வாழ்க, கற்பை அளித் தவரே வாழ்க, சிற்பரனை நினைத்துச் சிவனைப் போற்றிக் கும்மி யடி என்று போற்றிப் பாடிய விதத்தை அறியமுடிகிறது. சங்க இலக்கியத்தில் கற்பைப் போற்றுதல்போல, சித்தர்களும் கற்பைப் போற்றி வணங்குகின்றனர். எனவே, இக்கருத்து ஒப்புமை சங்க மரபிலும் சித்தர் மரபிலும் இடம் பெற்றுள்ளது புலனாகின்றது.

அகவாழ்க்கையைப் போற்றுதல்

இல்லறத்தில் பிரிதல் இல்லாமல் வாழும் அன்பின் மிகுதி நிலையை ஐங்குறுநூற்றுப் பாடலில் காணமுடிகிறது.

மாலை வெண்காழ் காவலர் வீச,
நறும் பூம் புறவின் ஒடுங்குமுயல் இரியும்
புன் புல நாடன் மடமகள்
நலம் கிளர் பணைத் தோள் விலங்கின செலவே [137]

முன்னர்ப் பல்வேறு கடமைகளை மேற்கொண்டு தலைவி யைப் பிரிந்து சேரலை வழக்கமாகக் கொண்டிருந்த தலைமகன் பின்னர்ப் பிரிதலின்றி மனைவியோடு கூடியின்புற்றிருந்தான் அது கண்டோர் அவ்வாறு அவன் பிரிவின்றி வாழ்தற்குத் தன் காதலி மேற்கொண்ட மிகுகாதலே காரணம் என வியந்து கூறுவதாக அமைகிறது.

அன்பு ஒன்றினாலேயே உள்ளம் ஒத்து வாழும் மெய்யுறு புணர்ச்சியைப் பரிபாடல் காட்டுகின்றது.

காதற் காமம், காமத்துச் சிறந்தது
விருப்போர் ஒத்து மெய்யுறு புணர்ச்சி [138]

காம ஒழுக்கத்தில் சிறப்புடையது காதலையுடைய காம மாகும். காதலையுடைய காமம் என்பது முன்னர் உடம்பினால் எந்த உறவும் இல்லாத இருவர் தம்முள்ளே எழுந்த அன்பு ஒன்றி

னாலேயே உள்ளம் ஒத்து ஊழ் கூட்டுவிக்கத் தாமே தம்முள் கண்டு காதல் கொண்டு புணர்தலாகிய மெய்யுறு புணர்ச்சியாகும். இந்த இயல்பை சிற்றின்பத்தின் சேர்க்கைப் பயனைத் திருமந்திரத்திலும் காணமுடிகிறது.

புணர்ச்சியுள் ஆயிழைமேல் அன்பு போல
உணர்ச்சியுள் ஆங்கே ஒடுங்க வல்லார்க்கு
உணர்ச்சி இலாது குலாவி உலாவி
அனைத்தலும் இன்பம் அதுஇது ஆமே [139]

சிற்றின்பச் சேர்க்கையின்போது மங்கையர் மேல் வைத்த அன்பிலேயே ஆடவர் உணர்ச்சிவயப்பட்டு ஒன்றாய் ஒடுங்கி அறி வழிந்து நிற்பர். அதுபோலச் சிவனிடத்தில் செய்கின்ற அன்பிலே தம் அறிவழிந்து அந்த நிலையிலே நிற்க வல்லார்க்கு, அதனால் விளையும் பேரின்பம், அவரைப் பின்னும் அந்நிலையினின்றும், பெயராதபடிக்கும் பெருகி விளங்கி விழுங்கி இவ்வன்பே தானாகி நிற்கும். சங்க இலக்கியம் சிற்றின்ப நிலையைக் குறிப்பிடச் சித்தர் படைப்புகள் புணர்ச்சி கடந்த பேரின்ப நிலையை அடையும் வழியைக் காட்டுவதை அறிய முடிகின்றது.

இன்பத்தின் சிறப்பை விளக்க வருமிடத்து,

அம்மா வாழி தோழி, நம் வயின்
மெய்யுற விரும்பிய கையவர் முயக்கினும்
இனி மன்ற தாமே!
பனியிருங் குன்றம் சென்றோர்க்குப் பொருளே [140]

என்கிறது ஐங்குறுநூறு.

மெய்ப்பொருந்தக் கைதழுவிய புணர்ச்சியைக் காட்டிலும், பொருளீட்ட மலைவழிச் சென்ற தலைவர்க்கு அப்பொருளே இனியவாகத் தோன்றுகின்றனவே எனத் தலைவி தோழியிடம் இரங்கிக் கூறுகிறாள். திருமூலர் சிற்றின்பத்தின் பக்குவ நிலை யைப் பின்வருமாறு உருவகித்துள்ளார்.

இன்புற்று இருவர் இசைவித்து வைத்த மண்
துன்பக் கலசம் அணைவான் ஒருவனே

ஒன்பது நீர்ச்சால் கலசம் பதினெட்டு
வெந்தது சூளை விளைந்தது தானே [141]

சிற்றின்பத்தில் ஈடுபட்டிருந்த தாயும் தந்தையுமாகிய இரு வரும் மனம் ஒன்றிவைத்த மண்ணாலான துன்பமயமான குடத் துள்ளே சேர்ந்தவன் ஓர் ஆன்மா! அத்துடன் ஒன்பது வாயில்களான புரியட்டமாகிய எட்டும் ஞானேந்திரிய கன்மேந்திரமாகிய பத்தும் ஆகப் பதினெட்டுக் கலசங்களும் அந்தக் கருப்பையாகிய சூளை யில் வைக்கப்பட்டு வெந்து பக்குவமாயின எனக் குழந்தை உரு வாகுவதைப் பாடியுள்ளார்.

சங்க இலக்கியம் சிற்றின்பத்தை மட்டுமே பேசும். ஆனால் சித்தர் படைப்புகள் அதன்வழி உருவாகும் குழந்தைப் பேற்றையும் சிற்றின்பத்தின் வழி உரைக்கிறது.

கலித்தொகை தலைவனைப் பார்க்கும் தலைவியின் பார்வை துன்பத்தை உடையது என்கிறது. அது வருமாறு:

நோக்குங்கால் நோக்கின் அணங்கு ஆக்கும் சாயல் [142]

தலைவி நோக்கும் காலத்து அப்பார்வை பிறருக்கு வருத் தத்தைத் தரும் மென்மைத் தன்மையுடையதாகும். சித்தர் பத்திர கிரியாரும்,

கால்காட்டிக் கைகாட்டிக் கண்கள் முகங்காட்டி
மால் காட்டு மங்கையரை மறந்திருப்பதெக் காலம் [143]

என வினவுகிறார். கை, கால், கண், முகம் என்னும் உடல் உறுப் புகளை அழகுபடுத்திக் காட்டி, அவ்வழகிய உடலுறுப்புகளால் மயக்கத்தை உண்டாக்கி இறுதியில் ஒன்றுமில்லாமல் செய்து விடும் வேசியரை மறந்து திருவருளைப் பெறுங்கள் என உப தேசிக்கிறார். மேற்குறித்த சான்றுகள் இரண்டிலும் நோக்குதல் என முகம் காட்டுதல் எனும் கருத்து இடம்பெறக் காணலாம்.

வீடு

*"மக்கள் குடியிருக்கும் மனைக்குத் தமிழில் வீடு என்று பெயர். பேரின்ப உலகிற்கும் வீடு என்றே பெயர். இவ்விரு பெயரும் ஒரு சொல்லே. மாந்தன் பகலெல்லாம் உழைத்துக்

களைத்து உணவு அல்லது பொருள் தேடி, மாலைக் காலத்தில் மனையாகிய வீட்டையடைந்து இளைப்பாறி இன்புற்றிருக் கிறான். எழு வகையான எல்லையற்ற பிறவிகளில் உழன்று அறத்தை ஈட்டிய ஆன்மா, அல்லது அப்பிறவிகளில் அலைந்து திரிந்து வீட்டு நெறிச் செலவை முடித்த ஆன்மா, அடையும் பேரின்ப உலகம் வீடு பேறாதலின் வீடெனப்பட்ட தென்க"[144] என தேவநேயப்பாவாணர் விளக்குகிறார்.

"வீடு பேறு என்பது மனிதன் தன்னுடைய தற்கால நிலை கடந்து அப்பாலே போவது. தன்னைக் கட்டியிருக்கிற பல்வேறு பாசக்கயிறுகளின் கட்டை அறுத்து விடுபடுதல்"[145] எனப் பேராசிரி யர் டி.என் கணபதி சுட்டுகிறார்.

"வீடு பேற்றைப் பெறுவது என்பது தளைக்குட்பட்ட அல் லது அறியாமையின் பாற்பட்ட உயிர்கள் அதினின்றும் நீங்கித் தமது உண்மையான இயல்பை அடைவதாகும். அதுவே தன்னை உணர்தல் (Self - Realisation) அல்லது இறைவனை உணர்தல் (God - Realisation) எனப் பொதுவாகப் பேசப்படுகின்றது. வீடுபேற்று நிலையைச் சமயங்களும், மெய்ப்பொருளியல்களும் பலவாறாகக் குறிப்பிடுகின்றன. அந்நிலையில், உயிரின் நிலைபற்றியும் பல வாறு கூறப்படுகின்றது. சமண சமயம் வீடுபேற்றை அருகத நிலை எனக் குறிப்பிடுகின்றது. அந்நிலையில் உயிர் வினைத் தளையுடன் உயிரற்றதன் தொடர்புமற்று, எல்லையில்லா அறிவு (அனந்த ஞானம்) எல்லையில்லாக் காட்சி (அனந்த தரிசனம்) எல்லையில்லாச் சக்தி (அனந்த வீரியம்) எல்லையில்லாச் சுகம் (அனந்த சுகம்) ஆகியவற்றைப் பெற்று இலங்கும் பௌத்த சமயம் வீடுபேற்றை நிருவாணம் என்கிறது. நிருவாணம் எனும் சொல் அணைதல், குளிர்தல் முதலிய பொருட்களைக் கொண்டது. அதன்படி நிருவாணம் என்பது அடையாளம் எதுவுமின்றி முற் றாக அழிந்துபோதல் ஆகும். அது உயிரின் பேரின்ப நிலையை, எதிர்மறை நிலையில் துன்பம் இல்லாத நிலையாகக் குறிப்பிடுவ தாகும்." [146]

"மனித உடம்பைத் தவிர மற்ற எல்லா உடம்புகளும் வினைப்பயனைப் பெற்றுணர வாய்த்த பெருங்கருவியாகும். மனித உடல் ஒன்றுதான் முக்தியடைவதற்கு உதவி கருவியாக

அமைந்திருக்கிறது"[147] என்னும் உண்மையை உபநிடத வாஹினி எனும் நூல்வழி அறியமுடிகிறது. ஔவையார் இதனை,

அரியது கேட்பின் வரிவடி வேலோய்
மக்கள் யாக்கையிற் பிறத்தலும் அரிதே
மக்கள் யாக்கையிற் பிறந்த காலையும்
மூங்கையும் செவிடும் கூனும் குருடும்
பேடும் நீங்கிப் பிறத்தலும் அரிதே
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நன்குறல் அரிதே
ஞானமும் கல்வியும் நன்குறும் ஆயினும்
தானமும் தவமும் தரிந்தலும் அரிதே
தானமும் தவமும் தரிந்தார்க் கல்லது
வானவர் நாடு வழிதிற வாதே [148]

என வலியுறுத்துகிறார்.

மக்கள் யாக்கையில் வந்து பிறவி எடுத்தல் அரியதாகும். அப்படிப் பிறவி எடுத்தபோதும் ஊமையும், செவிடும், கூனும், குருடும், அலியுமாகிய குறைகள் நீங்கிப் பிறத்தல் அரியதாகும். அப்படியே குற்றமற்றுப் பிறந்தாலும், ஞானமும் கல்வியும் நன்றாக வந்தடைதல் அரியதாகும். அவையும் நன்றாக வந்தடைந் தாலும், தானமும் தவமும் மேற்கொள்ளல் அரிதாகும். அவற்றை மேற்கொண்டவர்க்கு அல்லாமற் பிறர்க்குச் சுவர்க்கம் வழி திற வாது போய்விடும். எனவே, தானமும் தவமும் மேற்கொள்ளலே அரிய பேறு எனப் பிறவியின் நோக்கத்தை ஔவையார் எடுத் துரைக்கின்றார்.

"வள்ளுவர் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என மூன்று பாலாகப் பகுத்து அவற்றின் வழி வீடுபேற்றை உய்த்து உணர வைப்பார். அறம், பொருள், இன்பம் மூன்றையும் முழுமையாக அனுபவித்தால் வீடுபேறு தானாகக் கிட்டும் என்பது வள்ளுவர் எண்ணம்" [149] என்கிறார் மா. செங்குட்டுவன்.

"அறம், பொருள் (புறம்) இன்பம் (அகம்) என்று கூறுவது பழந்தமிழர் மரபு. இதற்கு அவர்தம் நூல்கள் இன்றும் சான்றாக நிற்கின்றன. திருவள்ளுவர் அம்மரபையொட்டி வீட்டுப் பாலை

விடுத்திருக்கலாம். வீடு ஓர் உலகு அன்று. அஃது எல்லையற்றது வாக்கு, மனம் கடந்தது. அதை எப்படி நினைப்பது? சொல்வது? அறம், பொருள், இன்ப வழி நின்று ஒழுகினால் விளைவு வீடாகும். வீடு விளைவு, ஓர் இடமன்று" [150] என எடுத்துரைக்கின்றார் மு. வரதராசன்.

"வீட்டு இன்பத்தை அடைய இவ்வுலக இன்பத்தை முழுமையாக அனுபவிக்க வேண்டும். இன்பத்தை முழுமையாக அனுபவிக்கப் பொருள் வேண்டும். அப்பொருள் அறத்தின் வழி கிடைக்க வேண்டும். ஆக, அறத்தின் வழிக் கிடைக்கும் பொருளினால் இன்பம் நிறைவெய்தி வீடுபேறு அடைய வேண்டும். இவையே, வாழ்வியல் பண்பாட்டுக் கூறுகள்"[151] எனச் செங்குட்டுவன் விளக்கியுரைக்கின்றார்.

சங்க இலக்கியங்களில் மதுரைக்காஞ்சி இல்லறம், துற வறம் எதுவாக இருந்தாலும் அன்பும், பண்பும் உடையதாக இருக்க வேண்டும் என்கிறது.

சிறந்த வேதம் விளங்கப் பாடி
விழுச்சீர் எய்திய ஒழுக்கமொடு புணர்ந்து
நிலம்அமர் வையத்து ஒருதான் ஆகி
உயர்நிலை உலகம் இவண் நின்று எய்தும்
அறநெறி பிழையா அன்புடை நெஞ்சின்
பெரியோர் மேய இனிதின் உறையும்
குன்று குயின்றன்ன அந்தணர் பள்ளியும்

(மதுரைக்காஞ்சி, 467 - 474)

என்னும் அடிகள் இல்லறத்தில் இருந்தே உயர்நிலை உலகம் எய்தும் பண்பாளரின் சிறப்பை விளக்குகின்றன. எனவே, ஆண்டவனை அடைய விரும்புவோர் இல்லறத்தாராயினும் - துறவறத்தாராயினும் அன்பும் பண்பும் உடையவராக இருக்க வேண்டும். தன் முதுமையிலும் நரை தோன்றாமைக்குக் காரணமாகத் 'தம் ஊரில் ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்' வாழும் திறத்தை உடையவரைப் பிசிராந்தையார் காட்டுகிறார். அத்தகைய பண் பாடும் நல்ல ஒழுக்கமும் உடையவர்கள் முக்காலமும் உணர்ந்தவராய், மூவாத யாக்கையைப் பிசிராந்தையார் போல்

பெற்றவராய் மண்ணை மட்டு மன்றி, விண்ணையும் பிறவற்றை யும் தம் ஆய்வுக் கண்கொண்டு அறிந்துணரும் ஆற்றல் பெற்றவ ராய் இருப்பர் என்ற உண்மையை அறிய முடிகிறது. மாங்குடி மருதனாரும்,

சென்ற காலமும் வரூஉம் அமையமும்
இன்று இவண் தோன்றிய ஒழுக்கமொடு நன்கு உணர்ந்து
வானமும் நிலனும் தாம் முழுவது உணரும்
சான்ற கொள்கை சாயா யாக்கை
ஆன்றடங்கு அறிஞர் செறிந்தனர் நோன்மார்

என்று பாடுகிறார். இல்லறத்தில் துறவறத்தில் எதில் இருந்தாலும் அன்பும், பண்பும், ஒழுக்கமும் உடையவர் முக்காலமும் உணர்ந்து வாழ்வார்"[152] என்னும் அ.மு. பரமசிவானந்தத்தின் கூற்று நினைத் தற்குரியது.

சங்க இலக்கியங்களில் வீடுபேறு பற்றிய கருத்துகளைப் புறநானூறு, பரிபாடல், திருமுருகாற்றுப்படை ஆகியவற்றில் காண முடிகிறது.

நல்ல செயல்களைச் செய்வதால் வீடுபேற்றின்பம் கை கூடும் என்று புறநானூறு புலப்படுத்துகிறது.

செய்வினை மருங்கின் எய்தல் உண்டெனில்
தொய்யா உலகத்து நுகர்ச்சியும் கூடும்;
தொய்யா உலகத்து நுகர்ச்சி இல்லெனில்
மாறிப் பிறப்பின் இன்மையும் கூடும் [153]

ஒருவர் செய்த நல்வினைக்குப் பயன் எய்துமாயின் விண் ணுலக இன்பம் கூடும், அவ்விண்ணுலக இன்பம் கிட்டாது எனி னும் மீளப் பிறவாமை கைகூடும் என்கிறது. இந்நிலையில் திரு மூலர்,

பற்றிப் பதத்தன்பு வைத்துப் பரன் புகழ்
கற்றிருந்து ஆங்கே கருதும் அவர்கட்கு
முற்றெழுந்து ஆங்கே முனிவர் எதிர்வரத்
தெற்றுஞ் சிவபதம் சேரலும் ஆமே [154]

எனச் சிவபதத்தை அடையும் வழியைக் குறிப்பிடுகிறார்.

அட்டாங்க யோகத்தில் நியமம் என்ற பாடலில் சிவனின் திருவடியைப் பற்றி நின்று, அதன் பால் அன்பு செலுத்தி, சிவனின் புகழையே கற்றுக் கேட்டிருந்து அங்கு அவ்வண்ணமே சிந்தித் திருப்பவர்க்கு முனிவர்கள் எல்லோரும் எழுந்து எதிர்கொண்டு அழைக்க, தெரிந்த சிவபதம் சேர்தலும் கைகூடும் என அறிவுறுத்து கிறார்.

பிறவிக் கடலைக் கடக்க நல்வினை ஒன்றே உயர்ந்த தெப் பம் எனப் புறநானூறு இயம்புகிறது.

வாழச் செய்த நல்வினை அல்லது
ஆழும் காலைப் புணைபிறி தில்லை
ஒன்று புரிந்து அடங்கிய இருப் பிறப்பாளர்
முத்தீப் புரையக் காண்தக இருந்த [155]

எனும் சிவபதத்தை அடையும் வழியைக் குறிப்பிடுகிறார்.

நன்கு வாழ்வதற்கு வாய்ந்த நல்வினை ஒன்றுமேயல்லாது. பிறவிக் கடலில் வீழ்ந்த காலத்தில் அதனைக் கடப்பதற்கு அந்த நல்வினையே அன்றி வேறு துணையில்லை. புறநானூற்றுக் கருத்தை அகத்தியரும் கூறுவது இங்கு எண்ணுதற்குரியது. அகத் தியர் வீடு பெறுதற்குச் சில தீமைகளை விலக்க வேண்டும் என விளக்கிக் காட்டுகிறார்.

மோட்சமது பெறுவதற்குச் சூட்சம் சொன்னேன்
மோகமுடன் பொய்களவு கொலை செய்யாதே
காய்ச்சலுடன் கோபத்தைத் தள்ளிப்போடு [156]

மோட்சத்தைப் பெறுவதற்கு நல்லவை செய்ய வேண்டு மென்றும், தீயவற்றை விலக்க வேண்டும் என்று புறநானூறும் அகத்தியர் ஞானமும் கருத்தால் ஒன்றுபடுதலை அறிய முடிகிறது.

பிறந்தது மீண்டும் பிறவாமல் இருப்பதற்கே என்று சங்க இலக்கியமும், சித்தர் பாடல்களும் உணர்த்துகின்றன. திருமுரு காற்றுப்படை இறைவன் திருவடியிற் செல்லுதற்கு உரிய நன்மை களைச் செய்க என வலியுறுத்துகிறது.

சேவடி படருஞ் செம்மல் உள்ள மொடு
நலம்புரி கொள்கைப் புலம்புரிந்துறையும்
செலவுநீ நயந்தனை ஆயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்னிசை வாய்ப்ப
இன்னே பெறுதி நீ முன்னிய வினையே [157]

என வழிகாட்டுகிறார் நக்கீரர்.

திருவடியிற் செல்லுதற்குரிய தலைமை பெற்ற உள்ளத் தோடே நன்மைகளைச் செய்யும் குறிக்கோளுடன் மெய்யுணர்ந்து எஞ்ஞான்றும் தங்குதற்குரிய நெறியில் செல்லும் செலவை விரும் பினால், வீடுபேறு வாய்க்கும் என்று ஒருவன் மனத்தில் எழுந்த எண்ணம் கைகூடுவதோடு, அவன் நினைத்த காரியங்களையெல் லாம் நல்வினைப் பயனால் இப்பொழுதே அடையப் பெறலாம் என வழிகாட்டுகிறது.

பிறவிப் பிணிக்கு இறைவன் திருவடியே மருந்து என்று பட்டினத்தார் கூறுகிறார்.

பிறவா திருக்க வரம் தரல்வேண்டும் பிறந்து விட்டால்
இறவா திருக்க மருந்துண்டு காண் இதுஎப்படியோ
அறமார் புகழ்த்தில்லை அம்பலவாணர் அடிக்கமலம்
மறவா திருமனமே! அதுகாண் நல் மருந்துனக்கே [158]

என்றும்,

அவியா விளக்கைப் பொன்னம்பலத் தடியை ஐந்தெழுத்தால்
செவியாமல் நீ செபித்தால் பிறவா முத்தி சித்திக் குமே [159]

என்றும் விளக்குகிறார் பட்டினத்தார்.

சித்தர்கள் பிறப்பின் இரகசியத்தை அறிந்தவர்கள். அத னால் திருவடியை நினைத்து ஐந்தெழுத்து மந்திரத்தை அசையா மல் செபித்தால் பிறவாநிலை சித்திக்கும் என உறுதியாகப் புகல் கின்றனர். வள்ளுவரும் இதே கருத்தை முன் வைக்கின்றார்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடி சேராதார் [160]

பிறவிக்கடலைக் கடப்பதற்கு இறைவன் திருவடியே தெப்பமாக அமைகிறது என உறுதிப்படுத்துகிறார் வள்ளுவர்.

அறவழியில் செல்வோரும், தவத்தினால் இறையருள் பெற்றோரும் ஆகிய இவர்களே இறைவனது திருவடி நிழலை அடைந்தவர் எனப் பரிபாடல் கூறுகிறது.

நின்குணம் எதிர்கொண்டோர் அறம் கொண்டோர் அல்லதை,
மன்குணம் உடையோர் மாதவர் வணங்கியோர் அல்லதை,
செறுதீ நெஞ்சத்துச் சினம் நீடினோரும்,
சேரா அறத்துச் சீர் இலோரும்,
அழிதவப் படிவத்து அயரி யோரும்
மறுபிறப்பு இல் எனும் மடவோரும், சேரார்
நின் நிழல் [161]

பழவினையின் காரணமாக இப்பிறவியில் கடவுள் மீது பற்று வைத்து அவன் அருளை அடையும் நோக்கத்துடன் உலகப் பற்றினை எல்லாம் நீக்கி அற நெறியில் திருவருளில் திளைத்துப் பிறர் போற்றி வணங்கும் தெய்வத்தன்மை பொருந்திய அருளாளரும் ஆகிய இவர்களே இறைவனது திருவடி நிழலை எளிதில் அடைபவராவர்; தீ நெஞ்சமும் கடுஞ்சினமும் உடையவர், அற வழியில் செல்லாத இழிந்த செயலைச் செய்யும் கீழ்மக்கள், போலி வேடதாரிகள், இவ்வுலகை மட்டும் ஏற்றுக் கொண்டு மறுமையை மறுக்கும் உலகாய்த வாதிகள் ஆகியோர் இறைவனது திருவடி நிழலை அடையாதவராவர். அறவழியில் செல்வோர் வீடுபேறு பெறுவர் என்று பரிபாடல் உணர்த்துகின்றது.

உண்மையான உணர்வு நிலையைத் திரிகடுகமும் மெய்ப்பிக்கின்றது.

வாயின் அடங்குதல் துப்புரவாம் மாசற்ற
செய்கை அடங்குதல் திப்பியாம் – பொய்யின்றி
நெஞ்சம் அடங்குதல் வீடாகும் இம்மூன்றும்
வஞ்சத்தின் தீர்ந்த பொருள் [162]

தீயவழியில் செல்லாமல் மனத்தை அடக்கித் தூய்மை செய்தும் குற்றமற்ற செயல்களை நீக்கி ஒழுக்கமாக இருத்தலும்

பொய்மையில்லாது மனம் அடங்கி வாழ்தலும் முடிவிலே வீடு பேற்றை அளிக்கும் என உறுதியாகக் கூறுகின்றது.

"இவ்வுலக வாழ்வில் அறத்தைப் பேணி, பொருள் இன்பங்களை நெறிப்படித்துய்த்து வாழ்வோர் முறையாக வீடு பேற்றினையடைவர் என்பது தமிழர் நம்பிக்கை. நல்வினை செய்தோர் தாம் செய்த நல்வினையின் பயனைத் தேவருலகில் சென்று துய்ப்பர்"[163] என்னும் பெ. சுப்பிரமணியன் கருத்து இங்கு எண்ணுதற்குரியது.

பொய் பேசுவதனால் போவதும் வருவதுமாகிய பிறவி உண்டாகும். உண்மையைப் பேசினால் பிறவியாகிய கயிறு நீங்கி வீடுபேறு கிட்டும் என்கிறார் அகப்பேய்ச்சித்தர்.

பொய்யொன்று சொல்லாதே
போக்கு வரத்துதானே
மெய்யொன்று சொன்னாக்கால்
வீடு பெறலாமே [164]

இடைக்காட்டுச் சித்தரும் பிறப்பினால் துன்பமுண்டாகும் என்றும், அதே பிறவியில் பற்றில்லாமல் வாழ்ந்தால் வீடுபேறு கிட்டும் என்றும் அறிவுறுத்துகிறார்.

தொல்லைப் பிறவி தொலைக்கார்க்கு முக்திதான்
இல்லை என்று ஊதுகுழல் கோனே!
இல்லை யென்று ஊது குழல் [165]

என்றும்,

பற்றே பிறப்புண்டாக்கும் தாண்டவக்கோனே அதைப்
பற்றாது அறுத்து விடு தாண்டவக் கோனே! [166]

என்றும் குறிப்பிடுகிறார்.

சங்க இலக்கியமும் சித்தர் படைப்புகளும் வீடுபேறு உண்டு என்றும் அறவழியில் நின்று பற்று நீங்கி வாழ்ந்தால் வீடு பேறு உறுதி என்றும் வலியுறுத்துகின்றன.

நல்வினைகள் நல்லவைக்கு ஆதாரம், தீவினையே தீமைக்கு ஆதாரம், நல்வினை செய்து வீடு பேற்றை அடைக எனப் புறநானூறு வலியுறுத்துகிறது.

பல் சான்றீரே! பல்சான்றீரே!
கயல் முள் அன்ன நரை முதிர் திரை கவுள்,
பயன் இல் மூப்பின், பல் சான்றீரே!
கணிச்சிக் கூர்ம் படைக் கடுந்திறல் ஒருவன்
பிணிக்கும் காலை, இரங்குவிர் மாதோ,
நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்; அதுதான்
எல்லாரும் உவப்பது; அன்றியும்,
நல் ஆற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே [167]

பலவாகிய குணங்கள் அமைந்த சான்றீர்! சான்றீர்! முதிர்ந்த மீனின் முள்ளும் முதிர்ந்த நரையும் கன்னத்தினையும் உடைய பலவாகிய குணங்களை உடையீர், படைக் கலத்தையும், கடும் வலிமையும் உடைய ஒருவன் யமன் பாசமாகிய கயிற்றால் கட்டிக் கொண்டு போகுங்காலத்து நீர் நும் நிலைக்கு இரங்குவீர். ஆதலால் நல்வினைகள் செய்ய மாட்டிராயினும், தீவினைகளை யாவது செய்யாமல் இருந்தால் நும்மை நன்னெறியில் வீடுபேறு செலுத்தும் வழிமுறையும் அதுவாகும் என்கிறது புறநானூறு.

சிறுபஞ்ச மூலமும் மனிதனின் உடல் நலத்தை மருந்து காப்பது போல ஐந்து கருத்துக்களும் மனிதனின் அறியாமை என்னும் நோயை நீக்கி வீடு பேற்றை அளிக்கும் என உரைக்கிறது.

கள்ளான் சூது என்றும் கழுமான் கரியாரை
நள்ளான் உயர் இரங்க நா ஆடான் – எள்ளானாய்
ஊன் மறுத்துக் கொள்ளானேல் ஊனுடம்பு எந்நாளும்
தான் மறுத்துக் கொள்ளான் தளர்ந்து [168]

பிறர் பொருளைத் திருடாமலும், சூதாட்டத்தில் ஈடுபடா மலும், மற்ற உயிர்களை வதைக்காமலும் புலால் உண்ணா மலும் வாழ்பவன் ஊனுடம்புடன் கூடிய பிறவியை எடுக்க மாட்டான் என, நீதிநூல் திண்ணமாகக் கூறுகிறது.

இல்லறம், துறவறம் ஆகிய இரண்டிற்கும் அடிப்படை இல்லறமாகும். ஆயினும், துறவறத்தான் ஆயினும், மனத் தூய்மையே இன்றியமையாததாகும். இதனை, யோகிகளுக்குச் சிவவாக்கியர் வலியுறுத்திக் கூறுகிறார்.

மனத்தகத்து அழுக்கறாத மவுனஞான யோகிகள்
வனத்தகத்து இருக்கினும் மனத்தகத்து அழுக்கறார்
மனத்தகத்து அழுக்கறுத்த மவுன ஞானயோகிகள்
பிணத்தடத்து இருக்கினும் பிறப்பறுத்து இருப்பரே [169]

மனிதனின் மனமே பிறப்பிற்கும், பிறவாமைக்கும் மூல மாக அமைகிறது. மனத்தில் உள்ள மாசுக்களைப் போக்குவதற்கே காடுகளிலும், குகைகளிலும் வெயியிலும் மழையிலும் துன்பப் படுகின்றனர். மனத்தில் உள்ள அழுக்குகளைப் போக்குவதற்கே சித்தர்கள் தலையைக் காடுகளிலும் கைகளைச் சமூகத்திற்கும் பயன்படுத்தியுள்ளனர். (Head is the forest, Hand is the society) மனத்திலுள்ள அழுக்கறுத்தவரான யோகிகள் பிணத்துடன் இருப் பினும் பிறப்பற்று இருந்தனரே எனும் உண்மையை வெளிப்படுத் துகிறார்.

மூவாசை விட்டோம் என்றே தும்பீபற - பர
முத்தி நிலை சித்தி யென்றே தும்பீபற!
தேவாசை வைத்தோம் என்று தும்பீபற - இந்தச்
செகத்தை ஒழித்தோம் என்று தும்பீபற [170]

மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசையை விட் டோர்க்கு முத்தி நிலை சித்திக்கும். இவ்வுலகின் மீது ஆசையற்று இறைவன் மீது என ஆசை வைக்கவேண்டும் என மக்களுக்கு வீடு பேற்றை அடைவதற்குரிய வழியை உபதேசிக்கின்றார்.

பேய்போல் திரிந்து பிணம்போற் கிடந்திட்ட பிச்சையெல்லாம்
நாய்போலருந்தி நரிபோல லுழன்றுநன் மங்கை யரைத்
தாய்போற் கருதித் தமர்போ லெவருக்குந் தாழ்ச்சி சொல்லிச்
சேய் போலிருப்பர் கண் டிருண்மை ஞானந்தெளிந் தவரே [171]

எனப் பட்டினத்தாரும் ஞானநெறியினை அறிவுறுத்துகின்றார். துறவு வாழ்க்கை வாழும் முறையைச் சித்தர் தம் வாழ்வில் கடைப்

பிடித்ததையும் படைப்பாக்கியுள்ளனர். அவாவும், செருக்கும் அடியோடு ஒழிந்தால் ஒருவன் வீடுபேற்றை எய்தலாம் எனக் கூறுகின்றார்.

தீய செயல்கள் செய்தால் தீமையும் நல்ல செயல்கள் செய்தால் நன்மையும் ஏற்படும் எனக் கடுவெளிச்சித்தர் கீழ்வருமாறு உரைக்கிறார்.

சொல்லருஞ் சூதுபொய் மோசம் செய்தாற்
சுற்றத்தை முற்றாய்த் துடைத்திடும் நாசம்
நல்லபத் திவிசு வாசம் – எந்த
நாளும் மனிதர்க்கு நன்மையாய் நேசம் [172]

சித்தர்கள் மூவாசைகளையும் மனத்தின் அழுக்குகளையும் அறுத்தவர் பிறப்பறுத்தவர் என்கின்றனர். நன்மைகளையே செய் என்னும் கடுவெளிச் சித்தரின் கருத்தும் புறநானூற்று கருத்தைத் தழுவி அமைந்துள்ளது.

இன்னா வைகல் வாரா முன்னே,
செய் நீ முன்னிய வினையே,
முந்நீர் வரைப்பகம் முழுது உடன் துறந்தே [173]

என்பது புறநானூறு.

துன்பம் பொருந்திய வாழ்நாள் முடியும் முன்னரே, கடல் சூழ்ந்த நிலத்தையும் வாழ்வையும் முழுமையாகத் துறந்து, கருதிய தவமாகிய நல்வினையைச் செய்ய வேண்டும் என வலியுறுத்துகிறார் புறநானூற்றுப் புலவர்.

இதனை அடியொற்றியே பட்டினத்தாரும், ஒருவருக்கும் தீங்கினை எண்ணாதே எனப் பாடுகிறார்.

இருப்பது பொய் போவது மெய் என்றெண்ணி நெஞ்சே
ஒருத்தருக்கும் தீங்கினை எண்ணாதே [174]

காலன் வருமுன்னே கண்பஞ்சடை முன்னே
பாலுண்ண கடைவாய்ப் படுமுன்னே மேல் விழுந்தே
உற்றார் அழுமுன்னே ஊரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு [175]

என்பன பட்டினத்தாரின் கருத்துகளாகும். இருப்பது பொய் இவ் உடலை விட்டுப் போவது உண்மை என்று எண்ணி ஒரு வருக்கும் தீங்கினைச் செய்யக் கூடாது. எமன் வருமுன்னே இறப்ப தற்கு முன்னே இறைவன் குற்றாலத்தானையே கூற வேண்டும் என்கின்றன சித்தர் படைப்புக்கள். வாழ்க்கையில் முழுமையாகத் துறந்து தவம் செய்யவேண்டும் என்கின்றன சித்தர் படைப்புகள். ஆனால் சித்தரில் அகத்தியர் தவம் செய்ய வேண்டுமானால் வீடு, வாசல், அனைத்தையும் துறந்து காடு, மலை, குகை என்று தேடிப் போக வேண்டாம் எனக் கூறுகிறார்.

இல்லமதில் இருந்து முக்தி பெறவே வேணும்
எட்டெட்டும் அடக்கி வெளியேற வேணும் [176]

சீரப்பா உலகில் இல்லறத் தோடிருந்து
திருக்கறுக்க முத்தியுண்டாம், தெளிந்து பாரே [177]

அகத்தியர் முதல் குதம்பைச் சித்தர்வரை அனைவருமே இல்லறத்தில் வாழ்ந்தே முத்தியடையலாம் என்று திண்ணமாகக் கூறுகிறார்கள். இடைக்காட்டுச் சித்தரும்,

அல்லும் பகலு நிதம் பசுவே
ஆதி பதந் தேடில்
புல்லுமே மோட்சநிலை பசுவே
பூரணங் காண்பாயே[178]

என்று விழைகிறார்.

இல்லறத்தில் இருந்து கொண்டே அல்லும் பகலும் எந் நாளும் இறைவனாகிய ஆதிசிவனின் பாதத்தைத் தேடிக் கண்டு விட்டால் மோட்சம் கிட்டும், பூரண பரபிரம்மைத்தையே காண லாம், என இடைக்காட்டுச் சித்தர் தெரிவிக்கின்றார். "உயிர்கள் அடையும் இறுதியான இன்பம் வீடுபேறு. இதுவே பேரின்பம் எனப்படுவது. திருமுருகாற்றுப்படையில் "சேவடிபடரும் செம் மல் உள்ளமொடு, நலம்புரி கொள்கை புலம் பிரிந்துறையும், செலவு நீ நயந்தனையாயின்" என்னும் அடிகளில் (61 - 64) பேறு எய்திய இரவலன் அதனையடைய விரும்பும் இரவலனுக்கு வழி

சொல்லும் பகுதி திருவடிப் பேறே வீடு"[179] என விளக்கப் பெறுகிறது என்கிறார் ச. தண்ட பாணி தேசிகர்.

இதே போன்று சித்தரான திருமூலரும் திருவடியே சிவனை அடைவதற்கு வழி என வலியுறுத்துகிறார்.

திருவடியே சிவமாவது தேரிற்
திருவடியே சிவலோகஞ் சிந்திக்கில்
திருவடியே செல்கதி அதுசெப்பில்
திருவடியே தஞ்சம் உள்தெளிவார்க்கே [180]

இடைக்காட்டுச் சித்தர், தண்டபாணி தேசிகர், நக்கீரர் ஆகியோர் இல்லறத்தில் இருந்து கொண்டு இறைவனின் திருவடியை நாடியிருத்தலே வீடுபேறு என்று விரித்துரைக்கின்றனர்.

தொகுப்புரை

அறமும் பொருளும் மானிட வாழ்க்கைக்கு அடிப்படையாகும். இவற்றின் வழியாகப் பெறும் இன்பம் நிலையானதாகவும், பெருமைக்கு உரியதாகவும் உள்ளது. அறம், பொருள், இன்பம் இம்மூன்றும் ஒரே நேர்க்கோட்டில் செல்லுகிறபொழுது வீடுபேற்றை இலக்கை அடைந்து மனித வாழ்க்கை முழுமை பெறுகிறது.

அறம், பொருள், இன்பம், வீடுபேறு ஆகியவற்றை அடைவது குறித்துச் சங்க இலக்கியங்களும் சித்தர் பாடல்களும் விரிவாக எடுத்துரைக்கின்றன. சங்கப் புலவர்கள் இல்லறத்தைப் புறக்கணித்து நேராக துறவு வாழ்க்கை வாழ வேண்டும் என்று கூறவில்லை. இல்லறத்தைச் சிறப்பாக முடித்துப் பின் முதுமையில் துறவறம் மேற்கொள்ளலாம் என்கின்றன. சங்க இலக்கியம் பகர்ந்த சிற்றின்பம், சித்தர் படைப்புகளில் பேரின்பமாக வளர்ச்சி பெறுவதனை அறிய முடிகிறது. சுருங்கக்கூறின் இல்லறத்தில் இருந்து கொண்டு, அறவழியில் வாழ்க்கை வாழ்ந்து பொருள் ஈட்டி அளவோடு இன்பம் துய்த்து வீடுபேறு அடைவதற்கான வழி முறைகளைச் சங்க இலக்கியமும் சித்தர்கள் படைப்புகளும் சிறப்பாகக் கூறுவதனை அறியமுடிகின்றது.

சான்றெண் விளக்கம்

1. மு. வரதராசனார், தமிழ் இலக்கிய வரலாறு, ப. 27
2. ச. அகத்தியலிங்கம், சங்க இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்களே, ப. 86
3. மு. வரதராசனார், தமிழ் இலக்கிய வரலாறு, ப. 30
4. இரா. சாரங்கபாணி, சங்க இலக்கிய மேற்கோள்கள், ப. 5
5. லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார், பத்துப்பாட்டு வளம், ப. 9
6. இறையனார் களவியலுரை, நூ. 32
7. நற். பா. 11
8. குறு. பா. 102
9. டாக்டர் உ.வே.சாமிநாதையர், குறுந்தொகை, முன்னுரை
10. மேலது
11. ஐங். பா. 7
12. தொல். பொரு. அகத்திணையியல், ப. 70
13. கலி. பா. 125, 1 - 4
14. அக. பா. 133, 6 - 14
15. புற. பா. 187
16. பதி. பா. 63 : 1
17. தி. அரங்கநாதன், கா. வாசுதேவன், தமிழ் இலக்கிய வரலாறு ஒரு புதுப்பார்வை, ப. 34
18. தொல். செய். நூ. 425
19. பரி, பா. 63 - 70
20. லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார், பத்துப்பாட்டு வளம், ப. 7
21. திருமுரு. பா. 130 - 136
22. பொருந. பா. 21 - 22
23. சிறுபா. பா. 99 - 103
24. பெரும். பா. 39 - 43
25. மலைபடு. பா. 303 - 305
26. மு.பாட்டு, பா. 55 - 58
27. ம.காஞ்சி, பா. 489 - 492
28. கு.பாட்டு, பா. 1 - 4
29. பட்டின. பா. 199 - 205

30. நெடு. பா. 209 - 211
31. சை. சற்குணன், சித்தர் கருவூலம், பாகம் 1, ப. 55
32. தொல். செய்யுளியல், நூ. 480
33. தொல். புறத்திணையியல், நூ. 74: 4 - 5
34. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி 8, ப. 903
35. இரா. சாரங்கபாணி, சித்தர் இலக்கியங்களில் திருக்குறள், ப. 12
36. க. இளமதி சானகிராமன், சித்தர்களும் சமூகப் பார்வையும், பக். 6, 7.
37. வால். பா. 3 - 4
38. சன்மார்க்க தேசிகன் ஊரன் அடிகள், வள்ளுவரும் வள்ளலாரும், ப. 33
39. பதினெண் சித்தர்கள் பெரிய ஞானக்கோவை, முகவுரை, ப. 3
40. மேலது, ப. 3
41. காக. குறள். 6
42. அகத். பா. 2
43. வால். பா. 11
44. சி.எஸ். முருகேசன், பதினெண் சித்தர் வரலாறு, ப. 23
45. சாமி. சிதம்பரனார், சித்தர்கள் கண்ட விஞ்ஞான தத்துவம், ப. 24
46. கலைக்களஞ்சியம், தொகுதி - 4, ப. 645
47. அரு. ராமநாதன், ஞானக்கோவையென வழங்கும் சித்தர் பாடல்கள், ப. 7
48. மண்ணில் நல்லவண்ணம் வாழலாம், ஆய்வுக்கோவை, இரா. குமார், திருமூலர் காட்டும் வாழ்வியல் நெறி, ப. 350
49. தமிழ்ப்பிரியன், பதினெட்டு சித்தர்களின் முக்கியப் பாடல்களும் விளக்கங்களும், ப. 7
50. சை. சற்குணன், சித்தர் கருவூலம், பாகம் - 1, ப. 76
51. டாக்டர் இரா. மாணிக்கவாசகம், திருமந்திர ஆராய்ச்சி, ப. 27
52. நிர்மலா மோகன், தமிழ்ச் சித்தர் இலக்கியம், ப. 26
53. அரு. ராமநாதன், ஞானக்கோவையென வழங்கும் சித்தர் பாடல்கள், ப. 49, - 1 4

54. நன். நூற். 10
55. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி - 8, ப. 41
56. ஆ. சிங்காரவேலு முதலியார், அபிதானசிந்தாமணி, ப. 108
57. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப. 56
58. பரிமேழலகர் உரை, அறத்துப்பால், குறள் - 39
59. கோ. சின்னத்தம்பி மூப்பனார், வள்ளுவர் காட்டும் பேரின்பம், ப. 22
60. பெ. சுப்பிரமணியன், பழந்தமிழ் இலக்கியங்களில் ஊழ், ப. 60
61. இராம. பெரியகருப்பன், இலக்கிய ஒப்பீடு வகைகள், ப. 143
62. புறநா. பா. 29, 11 - 12
63. வளர்மதி விளக்கவுரை, நீதிநூல்கள் நல்வழி, பா. 1
64. தி. பாலசுப்பிரமணியன், திருமந்திரம் விளக்கவுரை, திரு. பா. 265
65. குறுந். பா. 247: 2
66. புறம். பா. 195: 6 - 9
67. புலியூர்க் கேசிகன் (பதி), திருக்குறள் பரிமேலழகர் உரை, குறள். 201
68. கடு. பா. 7
69. ஐங். பா. 5
70. தமிழ்ப்பிரியன், நீதிநூல்கள், திரி. பா. 41
71. வளர்மதி விளக்கவுரை, நீதிநூல்கள், நல். பா. 3
72. திரும. பா. 252
73. கலித். பா. 125
74. கலித். பா. 62: 7 - 8
75. பட்டி. பா. 19
76. பொருந. பா. 91 - 93
77. சுவாமி ஆத்மானந்தா, பாம்பாட்டிச் சித்தர் பாடல்கள் விளக்கமும், பா. 66
78. நற். பா. 86
79. த.ம. குமரகுருபரன் பிள்ளை, திருமந்திரம், திரு, பா. 2606
80. பதிற். பா. 74: 25 - 28

81. இராமலிங்க சுவாமிகள், திருவருட்பா ஐந்தாம் திருமுறை தவத்திரம் போற்றல், பா. 6
82. இடை. பா. 33
83. கலி. பா. 47 : 3 - 4
84. திரும. பா. 1581
85. திரு. பா. 139
86. குறள் - 752
87. தி.சு. பாலசுந்தரம் பிள்ளை, பண்டைத் தமிழ் பொருளியல் வாழ்க்கை, ப. 3.
88. பட்டி. பா. 6:1- 2
89. அக. பா. 69 : 5 - 6
90. புறநா. பா. 331 : 8 - 10
91. ச. தமிழரசி, குறள் நெறி வெண்பா, குறள் - 81
92. நற். பா. 214
93. குறு. பா. 63
94. பட்டி. பா. 7
95. சிவ. பா. 79
96. நற். பா. 186 : 8 - 10
97. பட்டி. பா. 4
98. பட்டி. பா. 5
99. பட்டி. பா. 6
100. அக. பா. 155 : 1 - 3
101. அழு. பா. 31
102. இல. பொம்மி, சங்க இலக்கியங்களில் கற்புக்கோட்பாடு, ப. 149
103. குறு. பா. 174 : 4 -7
104. அக. பா. 335 : 1 - 4
105. திரு. பா. 220
106. குறள். 247
107. ப. மருதநாயகம், ஒப்பில் வள்ளுவம், ப. 63
108. திரு. பா. 209
109. குறு. பா. 71
110. புறநா. பா. 28, 15 - 17
111. இடை. பா. 23

112. ச. மெய்யப்பன், சித்தர் பாடல்கள், பாம். பா. 41
113. கி. நாகராஜன், ஸ்ரீ குருதட்சிணாமூர்த்தி சுவாமிகள் அருளுரை, ப. 29
114. திவாகரம், பிங்கலம், சூடாமணி அகராதி அட்டவணைகள், ப. 214
115. க. கலியபெருமாள், திருக்குறள், வாழ்வியல், ப. 39
116. மொ.அ. துரை அரங்கசாமி, அன்புநெறியே தமிழர் நெறி, ப. 37
117. க. கலியபெருமாள், திருக்குறள், வாழ்வியல், ப. 39
118. மீ.ப. சோமசுந்தரம், சித்தர் இலக்கியம் முதற்பகுதி, ப. 102
119. மா. இராசமாணிக்கனார், இல்வாழ்க்கை, ப. 14
120. தொல். பொரு. நூ. 89
121. பா. கமலக்கண்ணன், சதுரகிரியில் கோரக்க சித்தர், ப. 105
122. புறநா. பா. 193
123. சிவ. பா. 505
124. குறுந். பா. 49 : 3 - 5
125. கலி. பா. 30 : 1 - 3
126. திரு. பா. 47
127. தொல். பொரு. நூ. 190
128. க. வெள்ளைவாரணர், தொல். கற். 51இன் உரை
129. ச. பாலசுந்தரம், தொல். கற். 194இன் உரை
130. அ. தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப. 81
131. சோ.ந. கந்தசாமி, பௌத்தம், ப. 170
132. நாற்கவிராச நம்பி, நம்பி அகப்பொருள், நூ. 116
133. பட்டி. பா. 1
134. மா. செங்குட்டுவன், தொல்காப்பியம், திருக்குறள் வாழ்வியல் நெறியும் ஆன்மீகமும், ப. 184
135. பதிற். பா. 16 : 10 - 13
136. கொங். பா. 45
137. ஐங். பா. 421
138. பரி. பா. 9:14 - 15
139. திரு. பா. 283
140. ஐங். பா. 337
141. திரு. பா. 468

142. கலி. பா. 131 : 5
143. தமிழ்ப்பிரியன், பதினெட்டுச் சித்தர்களின் முக்கியப் பாடல்களும், விளக்கங்களும், பத்தி, பா. 9
144. புலவர் இரா. இளங்குமரன், தேவநேயப் பாவாணர், 13, ப. 136
145. டி.என். கணபதி, தமிழ்ச் சித்தர் மரபு, ப. 1
146. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி மூன்று, ப. 923, 924
147. தமிழாக்கம் டாக்டர், பி.கே. சுந்தரம், உபநிடத வாஹினி, ப. 90
148. புலியூர்க் கேசிகன், ஔவையார் தனிப்பாடல்கள், பா. 58
149. மா. செங்குட்டுவன், தொல்காப்பியம், திருக்குறள், வாழ்வியல் நெறியும் ஆன்மீகமும், ப. 47
150. மு. வரதராசன், திருவள்ளுவம் (அ) வாழ்க்கை விளக்கம், ப. 16
151. மா. செங்குட்டுவன், தொல்காப்பியம், திருக்குறள், வாழ்வியல் நெறியும் ஆன்மீகமும், ப. 179
152. அ.மு. பரமசிவானந்தம், பாட்டும் பயனும், ப. 144
153. புறநா. பா. 214 : 6 - 9
154. திரு. பா. 633
155. புறநா. 367 : 10 - 13
156. அகத். பா. 2
157. திருமுருகு. பா. 66
158. பட்டி. பா. 16
159. மேலது, பா. 17
160. குறள். 10
161. பரி. பா. 5 : 71 - 77
162. தமிழ்ப்பிரியன் உரையாசிரியர் நீதிநூல்கள், திரி. பா. 43
163. பெ. சுப்பிரமணியன், பழந்தமிழ் நூல்களில் ஊழ், ப. 60
164. அகப். பா. 89
165. இடை. பா. 96
166. இடை. பா. 19
167. புறநா. பா. 195
168. தமிழ்ப்பிரியன் உரையாசிரியர், நீதிநூல்கள், சிறு. பா. 21
169. சிவ.பா. 186

170. இடை. பா. 80
171. பட்டி. பா. 35
172. கடு. பா. 2
173. புறநா. பா. 363 : 16 - 18
174. பட்டி. பா. 17, 1 - 2
175. மேலது, பா. 12
176. பா. கமலக்கண்ணன், சதுரகிரியில் கோரக்க சித்தர், ப. 153
177. மேலது, ப. 154
178. J.M. Somasundaram Pillai, Two thousand years of Tamil Literature, இடை. பா. 3.
179. மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகன், வள்ளுவத்தில் மெய்ப்பொருள் சுவடுகள், ப. 56
180. திரு. பா. 138.

2. சங்க இலக்கியம் – சித்தர் படைப்புகளில் மெய்யியல்

பழந்தமிழ் இலக்கியமான சங்க இலக்கியத்தினை, அகம், புறம் எனப் பிரிப்பர். அவற்றுள் நற்றிணை, கலித்தொகை, புற நானூறு, மதுரைக்காஞ்சி ஆகிய பாடல்கள் நிலையாமையைப் பற்றி உரைக்கின்றன. மெய்யியல் (Philosophy) வாழ்வியலின் நிலையாமையைப் பொருளாகக் கொண்டு புலவர், மன்னனுக்கு உணர்த்திய கருத்துகள் சங்க இலக்கியங்களிலும் சித்தர் படைப்பு களிலும் காணப்படுகின்றன. நிலையாமை பற்றிய கருத்துகளைத் திருமூலர், அகத்தியர், பட்டினத்தார், சிவவாக்கியர், அழுகணிச் சித்தர் முதலான சித்தர்களும், வாழ்வின் நிலையாமையைப் பற்றி யாக்கை, இளமை, செல்வம், உலகம், உயிர் மூலமாக மக்களுக்கு உணர்த்துவதைக் காண முடிகிறது. சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள மெய்யியல் கோட்பாட்டைச் சித்தர்கள் கையாண்ட வகையினை ஒப்பீட்டு ஆய்வின் வழி இப்பகுதி ஆராய்கிறது.

மெய் - விளக்கம்

மெய் என்பது ஆணை, உண்மை, கச்சம், சத்தியம், சரதம், தத்தியம், திடம், திண்மை, நிசாதனம், நிச்சயம், நியாயம், நிலைமை, நீதி, பசுமை, பட்டாங்குப் பொருள், மன்றம்,

வண்மை, வாய், வாய்மை, விதி என்று மதுரைத் தமிழ்ப் பேரக ராதி விளக்கமளிக்கின்றது.[1]

மெய் என்பது உடலைக் குறிக்கின்றது. அது அழியக்கூடி யது. அழியாத பொருளான ஆன்மாவே உண்மையிலே மெய் என்று பொருள்படும். அழியக்கூடிய உடலைப்பற்றி அறிந்து கொண்டால்தான் அழியாத மெய்யான ஆன்மாவைக் கண்டு கொள்ள முடியும். இதனால்தான் சங்ககாலப் புலவர்கள் நிலை யாமையைப் பாடி வீடுபேற்றை அடையும் வழியை வலியுறுத்தி னர். சித்தர்களும் தம் படைப்புகளில் நிலையாமையை உணர்ந்து 'தானே தன்னை அறிதல்' என்ற உண்மை நிலையை உணர்த்து கின்றனர்.

காஞ்சித் திணை

"காஞ்சித் திணை என்பது உலகம் நிலையாமை, செல் வம் நிலையாமை, வாழ்வு நிலையாமை எனப் பல்வேறு நிலை யாமையைப் பற்றிச் சான்றோர் கூறும் குறிப்பை உடையது"[2] என்று இராசமாணிக்கனார் பத்துப்பாட்டு ஆராய்ச்சியில் எடுத் துரைப்பது இங்கு எண்ணுதற்குரியது.

தொல்காப்பியர் காஞ்சித் திணையின் இலக்கணத்தை,

காஞ்சிதானே பெருந்திணைப் புறனே
பாங்கரும் சிறப்பின் பல்லாற்றானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே [3]

என்று குறிப்பிடுகிறார்.

காஞ்சி என்னும் திணை பெருந்திணைக்குப் புறனாகும். ஒருவருக்கும் துணையாகாமை நிலையாமை, நில்லாத உலகத் தைப் பொருந்திய நெறியை உடையது. அந்த நிலையாமை மூவகைப்படும். இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை, யாக்கை நிலையாமை என்பனவாகும்.

''உலகியலில் பலவகைத் துன்பியற் கூறுகளையும் கண்டு அஞ்சிப் பின்னிடாது எதிரேற்றுத் தாங்கி நிற்றல் காஞ்சித்திணை. எல்லாப் பொருளினும் சிறந்த சிறப்பென்னும் செம்பொருளைப்

பெறுதல் வேண்டி யாக்கை, இளமை, செல்வம் ஆகியவற்றால் நிலைபேறில்லாத இவ்வுலக வாழ்க்கையில் நேரும் பலவகைத் துன்பங்களையும் பொறுத்து நிற்றல் காஞ்சித்திணையாதல் போல, ஒன்றாவுலகத் துயர்ந்த புகழைப் பெறுதல் வேண்டி உலகியலில் நேரும். பல வகையின்னல்களுக்கிடையே தன்மேற் படையெடுத்து வந்த பகைவர் சேனையைத் தடுத்து நிறுத்தலாகிய இப்போர்ச் செயலும் காஞ்சித்திணையாகும்''[4] என்பர். க. வெள்ளை வாரணன்.

மெய்யியல் விளக்கம்

"உலகையும் வாழ்வையும் பற்றிய கல்வியே மெய்யியல் அஃது ஓர் அகநிலை உலகு. அகநிலை உலகாகப் பின்னப்பட்டிருக்கின்றதே அம்மெய்யியல். புற மெய்மையாகிய உலகுக்கு எதிராக நிற்கின்றது. அம்மெய்யியல் குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் அருவமான கற்பனைகளில் முற்றுமாக இறுகிப் போய்விடுகின்றது"[5] என்று குணா விளக்கம் தருகிறார்.

சத்குரு விஜயம் என்னும் ஆன்மீக இதழில் "மெய் என்பதை அழியும் இத்தேகத்திற்குத் தமிழிலே 'மெய்' என்ற சொல் வழக்கத்தில் உள்ளது. எப்படி! மெய் என்றால் உண்மை என்ற பொருளும் உள்ளதே!" என்று சத் குருநாதன் விளக்குகின்றார்.

தன்னை உணரும் வரை ஜீவன் பொய்
தன்னை உணர்ந்தால் ஜீவன் மெய்

அதற்கு அடுத்த நிலையாய், "தன்னை அறிந்து தலை வனைச் சார்தல்"[6] எனப் பகர்கின்றதை அறியமுடிகின்றது.

"தத்துவம் என்பது அதிகாரம், உண்மை, இயல்பு, வலி, அறிவு, பூதங்களும் அவற்றின் காரியங்களும் முதலான பல பொருளைக் காட்டும் ஒரு பெயர் என்று நிகண்டுகளும், இலக்கியங்களும் இயம்புகின்றன. இப்பொருள்கள் அனைத்தும் சொற்கு இயல்பானவையல்ல. இச்சொல்லின் வேரினைக் கொண்டு (பகுதியை) இத்துணைப் பொருள்களை உணர்த்தும் ஆற்றல் எங்ஙனம் கிடைக்கிறது என்பதை அறியக்கூட இல்லை. ஆனாலும் ஒட்டுமொத்தமாகப் பொருள்களையும் அவற்றின்

இயல்புகளையும் அறிவதே தத்துவம் என்று மட்டும் உணர முடி கிறது. சிறப்பாகப் பொருள்களின் உண்மைகளையும் தன்மை களையும் உணர்வதே தத்துவத்தின் நோக்கமாகும். உண்மை இருப்பு இச்சொல் ஆளப்படுகின்ற சூழ்நிலையிலிருந்து அறிந்த உண்மைகள் எங்கெல்லாம் காணப்படுகின்றனவோ அப்பொருள் களும் அப்பொருள்களைப் பற்றி ஆய்தலும் மெய்ப்பொருள் உணர்வாகும்" [7] என்னும் உண்மையை, ச. தண்டபாணி தேசிகர் வலியுறுத்துகிறார்.

மெய்ப்பொருள், சமயக்கணக்கு என்னும் குறியீடுகள் தமி ழிலக்கியங்களில் காணப்படுகின்றன. வள்ளுவப் பெருந்தகை மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்தில்,

> எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு [8]
>
> எப்பொருள் யார்யார்வாய் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு [9]

என்று மெய்ப்பொருளின் பொருளை எடுத்துரைக்கிறார். தத்துவ ஞானம்தான் தலையாய அறிவு என்றும் அறிவுள்ள ஒவ்வொரு மனிதனும் யாரையும் எல்லாமறிந்தவராகக் கருதி அவரது அடிமையாகாமல், அவர் கூறும் ஒவ்வொரு கருத்தையும் சீர்தூக் கிப் பார்த்து முடிவு செய்து கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத் துகிறார்.

"மெய்ப்பொருள் என்பது உள்பொருள் (reality) எனவும் கொள்ளத்தகும். வடமொழியில் தத்துவத்தைக் குறிப்பதற்குத் தரிசனம் என்ற சொல்லை வழங்கினர் கணியன் பூங்குன்றனார் "திறவோர்காட்சி" (புறநா. 192) என்பதாக"[10] சோ.ந. கந்தசாமி கூறுவதன் மூலம் அறிய முடிகின்றது.

மேலும் இதனை, தத்துவமே மெய்பொருள் என்று சோ.ந. கந்தசாமி குறிப்பிடுகிறார்.

"தத் - அது = துவம் - தன்மை = தத்துவம் என்ற சொல் "அதன் தன்மை" எனப்பொருள்படும். 'அது' என்ற சுட்டுச்சொல் சமயந்தோறும் வேறு பொருளைக் குறிக்கும். ஆதலின் பொருள்

தன்மைகளை ஆராய்ந்து மெய்ம்மையினை நிலைநாட்டும் அறிவுக் கலைக்குத் தத்துவம் என்ற குறியீடு வழங்கியது." [11]

இச்சொல்லுக்கு இணையாக மெய்ப்பொருள் என்பது, எல்லையற்ற ஆன்மாவின் தேடலே என்று இதன் மூலம் அறிய முடிகிறது.

"மெய்யியல் என்பதற்கு மெய்மை நோக்கிய பயணம், பயணம் என்றும் முடியவில்லை"[12] என, கா. அரங்கசாமி கூறும் விளக்கம் தெளிவாக உள்ளது.

"நம் நாட்டுச் சான்றோர்கள் மெய்ப்பொருளை அறிதலும் பயிலுதலுமே பிறந்ததின் குறிக்கோள் என்பர். நாம் மக்களாகப் பிறந்ததே கடவுளை வணங்கி முக்தியின்பம் பெறும் பொருட்டேயாம் என்பது பண்டையோர் கூற்று. ஆகவே, மெய்ப்பொருட் சிந்தனை தமிழகத்தின் பழைய சொத்து, வழிவழி வருகிற சொத்து, உரிமைச் சொத்து. அச்சொத்தினைத் தொன்றுதொட்டுக் காத்து வருவன சங்க நூல்கள்"[13] என்கிறார் ச. தண்டபாணி தேசிகர்.

அம்மெய்ப்பொருளை உணர்த்தும் குதம்பைச் சித்தர், வெட்ட வெளியை மெய்யென்றிருப்போர் இறைஞானிகளாகிய சித்தர்கள் ஆவர். வெட்டவெளி என்பது ஏகவெளி, ஆகாயம் ஆகும். பட்டயம் என்பது அடையாளப்படுத்திக் கொள்ளும் விருதுகள் ஆகும். "வெட்டவெளி தன்னை மெய்யென்றிருப்போர்க்குப் பட்டயமேதுக்கடி குதம்பாய்" என்று வினவுகிறார் குதம்பைச் சித்தர்.

பொய்யை வெறுத்திட்டு மெய்யை விரும்பினோர்
மெய்யவராவாரடி - குதம்பாய்
மெய்யவராவாரடி[14]

மனிதன் மெய்யவராவதற்குப் பொய்யை வெறுத்து நீக்கி மெய்யை விரும்பி வாழ வேண்டும் என்கிறார் குதம்பைச் சித்தர். பதினெண்சித்தர் பாடல்களிலும் வாழ்வியலில் யாக்கை, இளமை, செல்வம், உலகம், உயிர் இவை எல்லாம் பொய்யானது நிலையில்லாதவை என்னும் கருத்தைக் காண முடிகிறது. "சித்தர்கள் அனைவரும் வாழ்வின் லட்சியமாகவும் குறிக்கோளாகவும்

கொண்டு உடல், பொருள், ஆவியெல்லாம் அர்ப்பணித்து வாழ்ந்த வர்கள். அவர்கள் அடைந்த மெய்யியல் நிலையை அனைவரும், தங்களது வாழ்விலும் அடைய வேண்டும் என்பதே சித்தர்களின் விரும்புகின்றனர்"[15] என்கிறார்.

"ஓர் ஊருக்கு நடந்து செல்கின்றவன் செல்ல வேண்டிய வழியின் தன்மையை உள்ளவாறு அறிந்து கொண்டு பிறகு நடந்து செல்வானானால் கலக்கமும் தயக்கமும் கொள்ளாமல் அஞ்சாமல் நடப்பான். வழியில் உள்ள இடர்களை முன்னே அறிந்திருப்பதால் இடர்வந்தபோது வருந்தவும் மாட்டான். நல்ல வழி என்று நம்பி நடந்தால் முள்ளும் கல்லும் கண்டபோது வருந்துவான். முன்னமே கண்டபோது கவலைப்படமாட்டான். வாழ்க்கையும் அப்படிப்பட்டதே. வாழும் உலகம் இத்தன்மையானது, உடல் இத்தன்மையானது, செல்வம் இத்தன்மையானது, என்று முன் னமே அவற்றின் நிலையாமை அறிந்து கொண்டால், பிரிவோ மாறுதலோ நேர்ந்தபோது மனம் கலங்கி வருந்திச் சோர்வடைய நேராது. ஆகையால் நிலையாமை உணர்தல் வாழ்க்கையைக் கண்டு அஞ்சி ஓடுவதற்காக அன்று, வாழ்க்கையின் தன்மையை உள்ளவாறு அறிந்து அஞ்சாமல் நின்று சோர்வற்று வாழ்க்கையை நடத்திச் செல்வதற்கே"[16] என்னும் மு. வரதராசனாரின் கருத்து இங்கு மெய்யியல் குறித்துத் தெளிவை ஏற்படுத்துகிறது.

நிலையாமை

"சமய வாழ்க்கையில் நிலையாமையை உணர்தல் அடிப் படையாகும். செல்வமும், இளமையும் பிறவும் நிலையாத இயல் பின எனவுணர்ந்து நிலைத்த இன்பமாம் வீடு பெறுதலே வாழ்வின் நோக்கம் என்று தமிழர் உணர்ந்தனர். கூத்தாட்டும் அவையில் மக்கள் கூடுதல் போன்றது செல்வம் சேர்வது என்றும், அக்கூட்டம் கலைவது போன்றது அது நீங்குவது என்றும் வள்ளுவர் கூறுவார். உறங்குவது போன்றது சாக்காடு, உறங்கி விழிப்பது போன் றது பிறப்பு. நேற்று இருந்தான் இன்று இல்லை என்னும் பெருமையுடையது இவ்வுலகம். நாள் என்பது உண்மையில் வாழ்நாளை அறியும் வாளேயாகும். பனிபடுசோலைப் பயன் மர மெல்லாம் கனி உதிர்ந்தது போன்றது இளமை, நீர்மேல் மீனால் கழிக்கப்பட்ட கோடு மறைவதுபோல் செல்வம் நிலையில்லாதது.

எனவே, மன்னாவுலகத்தில் மன்னுதல் குறித்தோர், தம் புகழை நிறுவுதல் வேண்டும். நிலைத்த அறத்தைச் செய்ய வேண்டும் நில்லாதனவற்றை நிலைத்தன என்று பிறழவுணர்தலாலேயே பிறப்பு அமைகிறது. எனவே, நிலையாமையைக் கருத்திற் கொண்டு மனிதன் அறத்தைத் தலைப்பட வேண்டும் "[17] என்று நிலையாமையை அ. தட்சிணாமூர்த்தி விரித்து உரைத்தார்.

உலகில் பெரிதாகப் போற்றிப் பாதுகாக்க நினைக்கும் இளமை, செல்வம், யாக்கை ஆகியவற்றின் நிலையாமைத் தன்மையை மனிதன் உணர்ந்தால் துன்பம் அகலும், இன்பம் நிலைக்கும். இம்மூன்றும் நிலையற்றவை என்பதனைப் பட்டினத் தார் உரைக்கிறார். இளமை நிலையாமையை உணர்ந்தால் மனம் இளமையிலேயே நாடி நல்லன செய்யுமென்றும், வீண் ஆடம் பரத்தையும் ஒப்பனையையும் அகற்றுமென்றும் உடல் இச்சை யைத் தவிர்க்கும் என்றும் குறிப்பிடுகின்றார் செ. இராஜமோகன்.

பிறக்கும் போது கொண்டுவந்ததில்லை
பிறந்து மண்மேல் இறக்கும் பொழுது
கொண்டு போவதில்லை

என்ற கருத்தின் அடிப்படையிலேயே செல்வநிலையாமை பட்டி னத்தார் பாடல்களில் அறிய முடிகிறது. "அழியும் உடலைப் போற்றி இன்பம் கண்டு இறுதியில் வீணே அழியவிடுவதைக் காட்டிலும் இறப்பதற்கு முன் அழியா இன்பம் தரும் இறையைத் தேடுக என்பதே மனிதர்களுக்குப் பட்டினத்தார் விடுக்கும் வேண்டுகோளாகும்"[18] என்னும் செ. இராஜமோகனின் கூற்று பொருத்தமானதாகும்.

யாக்கை நிலையாமை

உடல், யாக்கை, மெய் என்பன ஒரே பொருள்தரும் சொற் கள். உடலில் உயிர் சேர்ந்து செயல்படும்போது ஒரு பெயராகும். ஒன்றில் ஒன்று நீங்கினால் பெயர் மாறி அழைக்கப்பெறும். இதனை,

குடம்பை தனித்து ஒழியப் புள்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு [19]

என்பார் வள்ளுவர்.

இத்தகைய யாக்கையானது உயிரோடு இணைந்து இருக்கும் பொழுது கணந்தோறும் கண்ணுக்குத் தெரியாமல் மாற்றம் பெற்று வருகிறது. இதனை அறிந்த சான்றோர்கள் யாக்கை ஒரே தன்மையுடன் இருக்காது என்று கருதி அதனை நிலையாமை என்ற கொள்கையில் வைத்துத் தங்கள் கருத்துகளை இயம்பியுள்ளனர். இக்கருத்தானது சங்ககாலம் தொட்டு நிலவி வருகின்றது என் பதைச் சங்க இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது.

சங்க இலக்கியத்தில் நிலையாமை

சங்க இலக்கியத்தில் யாக்கை பற்றிய கருத்துகள் குன்றி லிட்ட விளக்குப் போல் மிளிர்கின்றன. கலித்தொகை, புறநானூறு, மதுரைக்காஞ்சி முதலிய நூல்கள் யாக்கை நிலையாமையினைப் பற்றிக் கூறுகின்றன. அவை பின்வருமாறு அமைகின்றன.

கலித்தொகை யாக்கை, செல்வம், இளமை நிலையாமை ஆகியவற்றைப் பாடியுள்ளதைக் காண முடிகிறது.

> **ஆற்றல் நோய் அட, இவள் அணி வாட அகன்று நீ**
> **தோற்றம் சால் தொகு பொருள் முயறிமன்; முயல்வளவை,**
> **நாற்றம் சால் நளி பொய்கை அடைமுதிர் முகையிற்குக்**
> **கூற்று ஊழ் போல் குறைபடூஉம் வாழ்நாளும் நிலையுமோ?**[20]

ஆற்ற முடியாத காம நோயினால், இவள் பிரிவினால் அழகு கெடும்படி அமைந்தது. பொருளைத் தேடுவதற்கு முயன்று செல்லும்போது பொய்கையின் இலைக்கிடையே முகிழ்க்கும் முகைக்குக் கூற்றமாகிய அலர்ச்சி அதன் வாழ்நாள் குறைவிற்குக் காரணம் ஆதல் போல, விதித்த காலம் குறைப்பட்டு, வாழுகின்ற நாள்களும் இவளுடன் நிலைத்திருக்க விடுமோ? என யாக்கையின் நிலையாமையைப் புலவர் பாடியுள்ளது அறியத்தக்கது.

> **வளியினும் வரைநில்லா வாழுநாள், நும் ஆகத்து** [21]

என்கிறார் ஒரு புலவர்.

வரையறுத்துக் கூறவியலாத, நிலையாமை உடைய காற்றைக் காட்டிலும் ஓர் எல்லையில் அகப்பட்டு நில்லாது வாழுகின்ற நாள் என்று யாக்கை நிலையாமை கூறப்படுகிறது.

புறநானூற்றில் யாக்கை நிலையாமை

"புறநானூற்றில் மட்டும் காஞ்சித் திணைப் பாடல்கள் முப் பத்தொன்று"[22] என்று கு.வெ. பாலசுப்பிரமணியன் தனது நூலில் குறிப்பிட்டுள்ளது இங்குச் சுட்டத்தக்கதாகும்.

யாக்கை நிலையாமையைப் பற்றிப் புறநானூற்றில் ஐயூர் முடவனார்,

நுண்பல் சிதலை யரிது முயன் றெடுத்த
செம்புற் றீயல் போல
ஒரு பகல் வாழ்க்கைக் குல மருவோரே [23]

என்று பாடுகிறார். உடம்பைக் கரையான் புற்றிற்கும் உயிரை ஈயலுக்கும் உவமையாகக் கூறி, யாக்கை நிலையாமைப் பண் புடையதென்பதை விளக்கியுள்ளார்.

இக்கருத்தினைப் பட்டினத்தாரும் யாக்கை நிலையற்றது; அது அழியக் கூடியது எனவும் உலக வாழ்க்கை பொய்யானது உடல் மீது பற்றுதலை வளர்க்காதீர். ஏனென்றால் வாழ்வில் பிறந் தனவெல்லாம் இறக்கும் இறந்தனவெல்லாம் ஒரு நாள் தோன்றி மறையும், மறைந்தன தோன்றும் எனத் தெளிவுறுத்துகிறார்.

உலக பொய்வாழ்க்கையை யுடலையோம் பற்க!
பிறந்தன இறக்கும், இறந்தன பிறக்கும்;
தோன்றின மறையும், மறைந்தன தோன்றும்;
பெருத்தன சிறுக்கும், சிறுத்தன பெருக்கும்;
உணர்ந்தன மறக்கும், மறந்தன உணரும் [24]

என்பது பட்டினத்தாரின் கொள்கை. வாழ்க்கையில் பிறப்பு, இறப்பு, தோன்றுதல், மறைதல், பெருத்தல், சிறுத்தல், உணருதல், மறத்தல் ஆகியவற்றில் ஏற்படும் நிலையாமையை பட்டினத் தார் தம்பாடல் மூலம் உணர்த்துகிறார். "மனித உடலின் நிலை யாமையையும் இழிவையும் பாடுவது சீர்திருத்த உணர்வுடன் பாடும் சித்தர்கள் சிலரிடம் காணப்படும் இன்னொரு பண்பாகும். மக்கள் உலக இன்பங்களைத் துறந்து, பற்றற்ற துறவிகளாக மாறும்படி அவர்களை வற்புறுத்தும் நோக்கத்தோடு சித்தர்கள் இத்தகு பாடல்களைப் பாடவில்லை. புற அழகைப் பெறுவதை முக்கியம் எனும் உணர்வை மாற்றி மக்கள் இறையுணர்வு பெறத்

தூண்டுவதே" [25] என்னும் மோசஸ் மைக்கேல் பாரடேயின் கூற்று இங்கு எண்ணத்தக்கது.

பாம்பாட்டிச் சித்தர்

சரீரத்தின் குணம் பற்றிப் பத்துப் பாடல்கள் பாடியுள்ளார்.

ஊத்தைக் குழிதனிலே மண்ணை யெடுத்தே
உதிரப்புனலினிலே யுண்டை சேர்த்தே
வாய்த்தகுய வனாரவர் பண்ணும் பாண்டம்
வரையோட்டுக்கும் ஆகாதென்று ஆடாய் பாம்பே[26]

என்கிறார்.

ஓர் அருவருப்பான குழியிலே ஒருகை மண்ணை எடுத்து, குருதியென்ற நீர் ஊற்றிப் பிசைந்து ஓர் உருண்டையாக்கி, ஒரு குயவனால் செய்யப்பட்ட இப்பானை ஒரு வரையோட்டுக்கும் ஆகாது. "இருவர் மண்சேர்க்க ஒருவர் வனையப் பத்து மாதங் களாகச் சூளையில் வைத்து வேகவைக்கப்பட்ட அரியதாக இருப் பினும் அதற்கு அரைக்காசு மதிப்பும் இல்லையென்று ஆடு பாம்பே"[27] என்று கூறுகிறார். இவ்வுடல் பத்துமாதம் சுமந்து எடுக்கப்பட்டாலும் நிலையானதன்று. இவ்வுடலில் மெய்யைக் கொண்டு மெய்யைக் காண்பதே மெய்யாகும் என்ற இன்னொரு பொருளும் புதைநிலை வடிவமாக இருக்கிறது. அதனால் சித் தர்கள் தம் பாடல்களிலெல்லாம் மறைப்பு வைத்துப் பாடினர் என்றால் தானே உணர்ந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் என்று அறிய முடிகிறது.

கடுவெளிச் சித்தர்

நந்தவனத்திலோ ராண்டி அவன்
நாலாறு மாதமாயக் குயவனை வேண்டி
கொண்டுவந் தானொரு தோண்டி! மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி [28]

என்று இயம்புகிறார்.

தாயின் வயிற்றில் பத்துமாதம் தங்கி ஒருவன் இவ்வுலகில் பிறந்தான். பிறந்த பின்பு இறைவனை நாடாமல் தேவையற்ற தீய பழக்கங்களுக்கு ஆளாகி நாள்தோறும் தன் உடல் நலத்தைக்

கெடுத்துக்கொண்டு, பிறந்த காரணத்தை அறிந்து கொள்ளாம லேயே அவன் இறந்துவிடுகிறான். மனமே! நீயும் அவ்வாறு இருக் காதே என்று ஆணையிடுகிறார். "உடல் நிலையாமையை, இரு நிலைகளில் விளக்குகிறார். அழியக்கூடிய உடலை உரு இலங்கு மேனி" என்றும் உடலை ஒன்று எனவும் அதன் வகை இரண்டு என வும் டி.என். கணபதியும்"[29] விளக்கிக் காட்டுகிறார்.

"கடவுள், மனித ஆத்மாவைப் படிப்படியாக மூன்று சரீரங் களுக்குள்ளே அடைத்திருக்கிறார். எண்ணம் அல்லது காரண சரீரம்; சூட்சும சரீரம், அதாவது மனிதனின் மனம் மற்றும் உணர்ச்சி இயல்புகளின் இருப்பிடம்; மற்றும் சாதாரண ஸ்தூல சரீரம். பூமியில் மனிதன் தன் புலன்களினால் உணரும் திறனைப் பெற்றிருக்கிறான். சூட்சும சரீரவாசி உணர்வு பாவனைகள் மற்றும் உயிரணுத் துகள்களால் (Lifetrons) ஆன உடல், இவைகளைக் கொண்டு செயல்படுகிறான். காரண சரீரத்தை உடையவர்கள் எண்ணங்களின் பரமானந்தமான வெளியில் வாழ்கிறார்கள் என் வேலை, காரண உலகத்தில் பிரவேசிப்பதற்கு முயல்கின்ற சூட்சும சரீர அன்பர்களுடனானதாகும்"[30] என்று யுத்தேஸ்வர் கூறுகின்றார்.

சரீரத்தை மூன்றாகவும் ஒரு யோகியின் சுயசரிதம் எடுத்து ஆள்கிறது. ஒன்று ஸ்தூல சரீரம், பூமியில் மனிதன் தன் புலன் களால் உணரும் திறனைப் பெற்றிருக்கிறான். இரண்டு சூட் சும சரீரம், அதாவது மனிதனின் மனம் மற்றும் உணர்ச்சி இயல்பு களின் இருப்பிடம். மூன்று காரணசரீரம், எண்ணங்களின் பரமா னந்தமான வெளியில் வாழ்கிறார்கள். இவர்களே உண்மையான சித்தர்கள். அதனால் சித்தர்களின் ஸ்தூல தேகம் அழிந்தாலும், சூட்சும தேகத்தாலும், காரண தேகத்தாலும் சித்தர்கள் ஒளி வடிவ மாகக் காட்சி தருகிறார்கள். தேவையென்றால் உடலைத் தோற்று வித்தும் அருள்கிறார்கள். அதனாலே சித்தர்கள் முக்காலம் கடந்த வர்கள் என்கிறார்கள். யுக்தேஸ்வரர் எனும் யோகி மீண்டும் உயிர்த் தெழுந்து தனது உடலுடன் சீடர் பரமஹம்ச யோகானந்தரிடம் ஒரு மணிநேரம் உரையாடுகிறார். இதன்வழி முதல் ஸ்தூல உடலானது நிலையானது இல்லை என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

கூடுபோன பின்பவற்றாற் கொள்பய னென்னோ
கூத்தன் பதங் குறித்துநின் றாடாய் பாம்பே [31]

என்று பாம்பாட்டிச் சித்தர் உடலாகிய கூட்டின் இயல்பை விவரிக்கிறார். உடல் எனும் கூடு போனால் அவற்றால் பெறும் பயன் ஒன்றுமில்லை. இதைச் சித்தர்கள் முக்காலமும் அறிந்ததால் அவர்கள் தில்லைக் கூத்தன் சிவன் பாதத்தைக் குறித்துச் செய்யும் செயலாலே நற்கதிகிட்டும் என்பதைக் குறிப்பாக வைத்துக் கூட்டின் இயல்பையும், அதனால் அடையும் பயனையும் குறித்துள்ளது இங்கு உணரத்தக்கது.

"மனிதன் எப்படித் தனது பழைய உடைகளை எறிந்து விட்டு, புதிய உடைகளை அணிகிறானோ அப்படியே தேகத்தைத் தாங்கவேணும் நைந்த உடலைத் தள்ளிவிட்டு, புதிய தேகத்தை யடைகிறான்"[32] என்று மகாத்மா காந்தியடிகள் குறிப்பிடுவது நோக்குதற்குரியது.

திருவள்ளுவச் சித்தர்

இந்த வுடல் காயம் இறந்துவிடு மிவ்வுலகில்
வந்தவழி தானறியா வாழ்க்கை - இந்தவுடல் [33]

என்பது சித்தர் வாக்கு.

இவ்வுலகில் பிறந்த அனைவரின் உடலும் இவ்வுலகில் அழிந்துவிடும் என்பதில் ஐயமில்லை. அதே போல வாழ்வும், உடலும் வந்த வழி தெரியாது வீணே என உரைக்கிறார்.

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு
பிடிசாம்பலாய் வெந்து மண்ணாவதுங்கண்டு பின்னுமிந்தப்
படி சார்ந்த வாழ்வை நிலைப்பதல்லாற் பொன்னினம் பலவ
ரடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென்றேயறி வாரில்லையே[34]

என்னும் பாம்பாட்டிச் சித்தர் கருத்து இங்கு ஒப்பு நோக்குதற் குரியது.

நாட்டை ஆண்ட மன்னரும் மக்களும் முடிவிலே பிடி சாம்பலாய் மண்ணாவது கண்டும் பின்னும் இந்த வாழ்வை நினைப்பதனால் ஒன்றும் ஆவது இல்லை. எனவே, அம்பலத் தானின் அடியைச் சார்ந்து சரணாகதி அடைந்து நற்கதியடைவதை ஒருவரும் அறிவதில்லையே என வியப்புடன் பாடுகிறார்.

பத்திரகிரியாரும் உடலை உப்பிட்ட பாண்டம் என்றும் அது நிலைக்காது என்றும் சுட்டுகிறார்.

உப்பிட்ட பாண்டம் உடைந்து கருக்கொள்ளு முன்னே
அப்பிட்ட வேணியனுக்கு ஆட்படுவது எக்காலம் [35]

உப்பிட்ட பாண்டத்தைப் போன்ற இவ்வுடலானது அழிந்து மீண்டும் வேறொரு பிறவி எடுக்கும் முன்னர்க் கங்கை யைத் தன் தலையில் சூடிய சிவபெருமானுக்கு அடிமையாவது எக் காலம்? எனக் கேள்விக் கணையை மெய்ஞ்ஞானப் புலம்பலாகத் தொடுத்துள்ளார்.

பட்டினத்தாரும், உடற்கூற்று, வண்ணம் என்னும் இரு பத்தி நான்கு பாடலைக் கொண்டு பிறப்பு முதல் இறப்பு வரை நடக்கும் நிகழ்வுகளைப் படம் பிடித்துக் காட்டுகிறார். இதன் வழி வாழ்வியல் நிலைகளையும் யாக்கை நிலையாமையையும் நன்கு உணர்ந்து கொள்ள முடிகிறது.

வரிசை கெடாமல் எடுமென ஓடி வந்திள மைந்தர்
குனிந்து சுமந்து கடுகி நடந்து சுடலை அடைந்து
மானிட வாழ்வென வாழ்வென நொந்து -
விறகிட மூடி அழல் கொடுபோட வெந்து விழுந்து
முறிந்து நிணங்கள் உருகி எலும்பு கருகி அடங்கி
ஓர்பிடி நீறும் இலாத உடம்பை -
நம்பும் அடியேனை இனி ஆளுமே [36]

என்று உரைக்கிறார்.

உடலிலிருந்து உயிர் பிரிந்தவுடன் உற்றார், உறவினர்கள் வரிசையாக வந்து அழுது பாடையில் எடுத்துச் சென்று சுடு காட் டில் வைத்து எரியூட்ட எலும்பும் கருகி ஒரு பிடி சாம்பல்கூட இல்லாத உடம்பை நம்புகின்றனர் மனிதர்கள். இறைவனிடம் யாக்கையின் நிலையைக் கூறித் தன்னை ஆட்கொள்ளுமாறு வருந்திப் புலம்புகிறார் பட்டினத்தார் .

இதற்கு இணையாக, பிரேம வாஹனி எனும் நூலில் பகவான் சத்யசாயி பாபாவின் விளக்கம் காண்பது ஏற்புடையது.

"வாழ்வைச் சாவு முற்றுகையிடுவது ஒரு நிலையான செயல். இருப்பினும் சாவு என்று சொல்வதைக் கூட மனிதனால் சகித்துக்கொள்ள முடிவதில்லை. ஒவ்வொரு உயிரும் ஒவ்வொரு நொடியும் அதன் அருகே வெகு அருகே சென்ற போதும், வெறும் சொல் துயர் தராதிருப்பினும் அச்சொல்லைக் கேட்பது அமங்கல மாகக் கருதப்படுகிறது. பயணத்துக்கு ஏற்பாடு செய்துவிட்டு அதற்குரிய பயணச் சீட்டையும் வாங்கிய பின்பு, ரயிலில் ஏறிய பின் அதில் நீங்கள் படித்தாலும், படுத்தாலும், அமர்ந்தாலும் தியா னத்தில் ஆழ்ந்தாலும் அவற்றையெல்லாம் ரயில் பொருட்படுத்தா மல் தன் எல்லையை நோக்கி அது உங்களைச் சுமக்கத்தான் செய்யும். அதைப்போலவே ஒவ்வொரு உயிரும் பிறக்கும்போதே சாவுக்குரிய பயணச்சீட்டை எடுத்துக் கொண்டு தன் பயணத்தைத் தொடர்கிறது. எனவே உங்கள் போராட்டமும் முன்னெச்சரிக்கை யும் பாதுகாப்புகளும் எப்படிப்பட்டதாக இருப்பினும், அந்த இறுதி எல்லையை ஒரு நாள் அடைந்தே ஆக வேண்டும். உறுதி யற்றவனாக எத்தனையோ இருக்கலாம்; ஆனால் சாவது உறுதி சட்டத்தை ஒருக்காலும் மாற்ற முடியாது"[37] என வாழ்வும் யாக்கை யும் நிலையில்லாதவை என உறுதிப்படுத்துவதே பொருத்தமான தாகும்.

சிவவாக்கியரும் யாக்கை நிலையாமையும்

யாக்கையின் நிலையைத் தெளிவுப்படுத்துகிறார் சிவவாக் கியர்.

> நடுவன் வந்தழைத்தபோது நாறுமிந்த நல்லுடல்
> சுடலை மட்டுங் கொண்டுபோய்த் தோட்டிகைக்
> கொடுப்பரே [38]

இறைவன் அருளாலே இவ்வுடல் நிலைத்தது. அவன் அழைத்தபோது உடலில் உள்ள உயிர் பிரிந்து விறைத்து நாறும் உடலைச் சுடலை கொண்டு சென்று தோட்டி கைக் கொடுப்பரே என்று யாக்கையின் இயல்பான அழியும் தன்மையை எடுத்துரைக் கிறார். தெய்வத்தின் தன்மையை உடலில் உணர்ந்து வாழ்க்கையை வாழச் சிவவாக்கியச் சித்தர் மக்களின் மனத்தில் எண்ணத்தின் எழுச்சியைத் தூண்டுகிறார்.

"இந்த உடலில் வாசம் செய்யும் ஒரே காரணத்தை வைத்து உடலை 'நான்' எனக் கூறமுடியாது. இந்த மண்டபத்தில் நீங்கள் இருக்கும்போது மண்டபத்தை 'நான்' என்று கூறுவீர்களா? நீங்கள் மண்டபத்தினின்று வேறுபட்டவர்களென்பதையும் இங்கு நீங்கள் இருப்பது தற்காலிகமானதே என்பதையும் அறிந்திருக்கிறீர்கள். நீங்கள் ஒரு வாகனத்தில் செல்லும்போது நீங்கள்தான் அந்த வாகனம் என்று கூறமாட்டிர்கள் அல்லவா? அதேபோன்று நீங்கள் வீட்டை அடைந்து அதிலிருந்து இறங்கிய பின் அந்த வாகனத்தை உங்களுடன் உள்ளேயெடுத்துச் செல்லமாட்டீர்கள். அது போலவே நீங்கள் 'வீட்டை' அடைந்தவுடன் இந்த உடலை உதறித் தள்ள வேண்டும்"[39] என, சித்தபுருஷர் சத்யபாபாவும் விளக்கமளித்துள்ளது சிறப்புடையதாகும்.

சிவவாக்கியர் யாக்கையின் நிலையைப் பல பாடல்களில் பாடுகின்றார்,

மண்கலம் கவிழ்ந்தபோது வைத்து வைத்து அடுக்குவார்
வெங்கலம் கவிழ்ந்தபோது வேணும் என்று பேணுவார்
நம் கலம் கவிழ்ந்தபோது நானும் என்று போடுவார்
எண்கலந்து நின்றமாயம் என்னமாயம் ஈசனே [40]

என்று வினவுவது வழி அறிய முடிகிறது.

உலக மக்கள், தாங்கள் உணவு சமைப்பதற்கென வைக்கப்பட்டிருந்த மண்கலமானது கவிழ்ந்து ஒட்டை அடைந்தாலும் அது வேறெதற்காயினுமுதவு மென்று ஓரிடத்திலடுக்கி வைப்பார்கள், வெங்கல முடையுமானால் அதை வெளியிடத்தில் வைக்காமல் இது வேண்டியதாகுமென்றெண்ணி மறைவிடத்தில் பத்திரப்படுத்தி வைப்பார்கள். ஆனால் நம்முடைய தேகம் இறந்துப்பட்டாலோ துர்நாற்றம் வீசும் எனக் கருதி வெளியிடத்தில் சுடுகாட்டில் கொண்டு போய் விடுவார்கள். இங்ஙனமான தேகநிலையாமையை நோக்கிச் சிவபெருமானைச் சிந்திக்க வேண்டுமென்று கூறி அறியாமையைப் போக்குகிறார்.

சித்தர் படைப்பில் தேகம் அழிவதற்கான காரணம்

"மனிதன் ஆசையுடன் கூடியபோது பாசத்தால் பிணிக்கப்படுகிறான். நன்மைச் செயல்களைச் செய்வதால், புண்ணி

யம் என்ற கயிற்றால் கட்டப்பட்டுள்ளான். அதன் பயன் சொர்க்கம் சென்று மீளப் பூமிக்கு வந்து நல்ல சூழ்நிலையில் பிறந்தும் மேலும் செய்யும் வினைகளுக்கு ஏற்ப இறந்தபின் சொர்க்கமோ, நரகமோ சென்று மீளவும் பிறவிக்கு வருகிறான். பாவம் செய்தவன் நரகம் சென்று கெட்ட சூழ்நிலையில் பிறந்து, வாழ்க்கைப் போராட்டத்தில் வாடி வதங்கி இறந்து நரகமடைந்து பிறவிக்கு வருகிறான். இவ்விதம் புண்ணியமும், பாவமும் பிறவியை உண்டாக்குவதே தவிர அதை மாற்றாது என்பதனால் அதனை அருங்கயிறு என்றார். நல்ல விருப்பமோ, கெட்ட விருப்பமோ உடலைப் பற்றியதாக இருந்தால், மனம் பிரகிருதிமயமாகவே இருப்பதால் ஆத்ம சோதிக்கும் தேகத்திற்கும் இடையே மேகமண்டலம் போலத் திரோதான சக்தி மறைப்பை உண்டாக்கிவிடுவதை மாய இருள் என்றார். ஆத்ம சோதியை அறிவுக்குப் புலப்படாமல் தடுப்பதால் 'வல்வினையேன் தன்னை மறைந்திட மூடிய மாய இருள்' என்றார் 'விலங்கு மனம்' என்றால் கட்டப்பட்ட மனம். எதில் கட்டப்பட்டுள்ளது என்பதை விளக்க, புறம்தோல் போர்த்துப் புழு வழுக்கு மூடி, மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை மலங்க, என்றார் மனிதன் இந்திரியங்களின் வழிச் செல்ல மனத்தை உபயோகிக்கிறான். மனம் பழைய வாசனையினைப் பற்றி அதன் வழியே செல்கிறது. அதனால் தேகம் சீர் குலைந்து மனிதன் சாவினை அடைகிறான்"[41] என மீ.ப. சோமசுந்தரம் விளக்குகிறார்.

நாட்டில் நகரமெனவும் நல்வாழ்வெனவும் வீடும், மனையும் மனையாளும் மக்களும் ஈன்றெடுத்தாரும் இவ்வுலகில் பொருளுக்காக வாஞ்சை கொண்டு அலைந்து திரிந்தாலும் இக்கூடொன்று அழிந்தக்கால் கூடத் தொடராது என ஆச்சரியத்துடன் மக்களை நினைந்து நெஞ்சமுருகப் பாடியுள்ளதை,

> நாடென்றும் நகரமென்றும் நலந்திகழ் வாழ்வதென்றும்
> வீடென்றும் மனையாளென்றும் மிக்கதோர் மைந்தர் என்றும்
> மாடென்றும் சம்பத்தென்றும் வாஞ்சை
> கொண்டலைந்தாய் இந்தக்
> கூடொன்றும் அழிந்தாற் கூடத் தொடருமோ கூறுநெஞ்சே [42]

என்னும் பாடலடிகளால் அறிய முடிகின்றது.

மேலும், இதனை கணபதிதாசன்

உறக்கமும் விழிப்பும் போல உடல் பிறந்திறக்குந் தன்மை
சிறக்கவே அறிந்து மிந்த செகவாழ்வை
மெய்யென் றெண்ணிக்
குளித்தலைக் குலாமர் சொல்லைக் குறிப்புடன் நம்பலாமோ
மறக்கொணா நாகை நாதர் மலரடி வணங்கு நெஞ்சே![43]

என்று கூறுகிறார்.

கணபதிதாசன் உறங்கி விழிப்பது போன்று உடல் பிறந்து உலகில் இறக்குகின்ற தன்மையும் அறிந்து, செகவாழ்வை மெய் யெனக் கருதி வாழும் குல மக்களின் சொல்லை நம்பலாமா என வினவுகிறார். பிறப்பு இறப்பில் இருந்து விடுபடுபவர் இறைவன் திருவடியை வணங்குபவர் என்று ஆச்சரியத்துடன் எடுத்துக் காட்டுகிறார். இதற்கு எடுத்துக்காட்டாக, "பிறப்பு இறப்பு இருப் புப் பற்றிய சித்தர் கருத்துகள் தனிச் சிறப்புடையன. பிறவா திருக்க வரம் பெறல் வேண்டும் எனும் வேட்கையுடைய சித்தர், பிறந்துவிட்டால் இறவாதிருக்க மருந்துண்டுகாண்" [44] என்று சாவா நிலையைச் செம்மாந்து சாற்றுகிறார்.

யாக்கை நிலையாமைப் பண்பினது என்பதனைத் திரு மூலர் இருபத்தைந்து மந்திரங்கள் வாயிலாக உணர்த்துகின்றார்.

மண் ஒன்று கண்டிர் இருவகைப் பாத்திரம்
திண்ணென்று இருந்தது தீவினை சேர்ந்தது
விண்ணின்று நீர்விழின் மீண்டும் மண் ஆனாற் போல்
எண்இன்றி மாந்தர் இறக்கின்றவாறே [45]

மாயையாகிய மண் ஒன்று இருக்கிறது. அதனின்றும் தோன்றியதுதான் இருவினையால் விளைந்த இவ்வுடம்பாகிய பாத்திரம். அப்பாத்திரம் நெருப்பில் இட்டுச் சுட்டபோது வலிமை யாகக் காணப்பட்டது. சுடப்படாத பாண்டம் வானத்திலிருந்து மழை பெய்தபோது அதனால் கரைந்து மண்ணானது. அதுபோல எண்ணற்ற மக்கள் உடல் அழிந்து கெடுகின்றார்கள் என்கிறார் திருமூலர்.

மேலும் இதனை,

பண்டம் பெய் கூரை பழகி விழுந்தக்கால்
உண்டஅப் பெண்டிரும் மக்களும் பின் செலார்
கொண்ட விரதமும் ஞானமும் அல்லது
மண்டி அவருடன் வழி நடவாதே [46]

என்று வலியுறுத்துகிறார்.

வினைபோகங்களை அளவிட்டு வைக்கப்பட்ட இவ் வுடம்பு போகங்களை அனுபவித்து அதன்பின் நீங்கிவிடும். சுக போகங்களை உடனிருந்து அனுபவித்த மனைவியும் மக்க ளும் கூடவரமாட்டார்கள். உயிரோடு வாழ்ந்த காலத்தில் கடை பிடித்த வீரத்தின் பயனும், ஞானமும் தவிர வேறு எந்த ஒன்றும் இறந்தவருடன் கூடவே போவது இல்லை. உடல் அழிந்ததும் கூடவருவது எதுவும் இல்லை என்றார். இதனை அடியொற்றி ஞானக்களஞ்சியமும் குறிப்பிடுகிறது. அருளைப் பெற்றால் நிலை யாமையை உணர்ந்து ஆன்ம அனு பூதியை அடையலாம் என் கிறது. "ஒவ்வொருவருக்கும் பிரத்தி யட்சப் பிரமாணமாய் இருத் தலின், நிலையிலாத் தேகத்தையும், செல்வத்தையும் புகழை யுமே பெரும்பொருளென மதிமயக்கங் கொண்டு, உலக விசயங் களிலேயே ஆழ்ந்து வாழ்நாளை வீண்படுத்தாமல் ஆண்டவன் அருளும், நித்தியானந்த வாழ்க்கையை எய்துவதற்கேற்ற ஆன்ம சுத்தியையும் பெற முயல வேண்டும்"[47] என்று கருணையானந்த ஞானபூபதிகள் குறிப்பிடுகிறார். சுருங்கக் கூறின், அவர் ஞானமும் அருளும் ஒன்றே வாழ்வின் பயனை அடைய உதவும் எனவும் யாக்கை நிலையில்லாதது எனவும் எடுத்தியம்புகின்றார்.

சட்டைமுனி சித்தர் புத்தி கூறல்

மெய்யான தேகமதை நம்ப வேண்டாம் [48]

என்று அறிவுறுத்துகிறார் சட்டைமுனி.

தாயுமானவர்,

மெய்யைப் பொய் என்றிடவும் மெய்யினையாப்
பொய்ந் நெஞ்சே
பொய்யைத்தான் மெய் எனவும் போகுமோ - ஐயமறத்

தன்மயத்தை மெய்யெனவே சார்ந்தனையேல் ஆனந்தம்
என் மயமும் நின்மயமுமே [49]

என்று மெய்யின் இயல்புரைக்கிறார்.

இவ்வுடம்பு நிலையில்லாத மாயையாகிய பொய்யுடம்பு ஆகும். ஆனால், உலகோர் அதனை மங்கல மொழியாக மெய் யென்று சொல்லுவர். உண்மையை உணர்ந்த யான் அதனைப் பொய்யென்று உனக்குக் கூறினும், நீ அவ் உண்மையையறியாமல், உடம்பை மெய்யெனக் கூறுதல் பொருந்தாது என்றும் பேரின்ப வண்ணமே தானாய் நிற்கும் சிவபெருமானையே அனைத்துயிர்க் கும் நிலையான புகலிடமென்று நீயும் யாமும் பேரின்பத்தைச் சார்ந்திருக்கிறார் எனத் தாயுமானவர் எடுத்துரைக்கிறார்.

இந்த உடம்பு நிலையானதன்று என்றும் ஆத்மானந்தம் ஒன்றே ஆபத்துக்கு உதவும் என்றும் வைராக்கிய சதகம் எனும் நூல் விளக்கம் தருகிறது.

"சரீரம் இளமையோடு இருப்பதில்லை கிழத்தனமடைந்த மனிதனுக்கு சரீரம் சுருங்கியும் நடைதழுதழுத்துப் பற்கள் வீழ்ந்து, கண்பார்வை குறைந்து காது அடைத்து, பாயில் ஜலம் வழியும் நிலைமையும் ஏற்படுகிறது. உற்றார் உறவினர்கள் இவனுடைய வார்த்தைகளுக்குச் செவி சாய்ப்பதில்லை. அதிகமேன்? பிள்ளை கூட சத்ருவாகி விடுகிறான். இவ்வளவு அர்த்தமற்ற உடலையும் வாழ்வை வெறுத்து ஆத்மானந்த அனுபவம் பெற முயற்சிக்க வேணும்" [50] என விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.

திருமூலர், இவ்வுடம்பு சிதைவுற்றால் தொண்ணூற்றாறு மெய்களும் உடலைக் காக்காமல் ஓட்டம் எடுக்கும் என உணர்த் துகிறார்.

முப்பதும் முப்பதும் முப்பத் தறுவருஞ்
செப்ப மதிளுடைக் கோயிலுள் வாழ்பவர்
செப்ப மதிளுடைக் கோயில் சிதைந்தபின்
ஒப்ப அனைவரும் ஓட்டெடுத் தார்களே [51]

மூன்று முப்பது தொண்ணூறு, அதனுடன் சேரும் ஆறு ஆகிய தொண்ணூற்றாறு மெய்களும் செம்மையாக அமைக்கப்

பெற்ற மதிலையுடைய கோட்டை முதலியவற்றையுடையதாக உடலை உருவகித்துள்ளார்.

தொண்ணூற்றாறு தத்துவங்களும் உட்பிரிவுகளுமாவன -

ஞான இந்திரியங்கள் = 5
(வாய், கண், மூக்கு, காது, உடல்)

கன்ம இந்திரியங்கள் = 5
(வாக்கு, கைகள், கால்கள், எருவாய், கருவாய்)

தன் மாத்திரைகள் =5
(சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்)

பஞ்ச பூதங்கள் = 5
(மண், நீர், தீ, காற்று, ஆகாயம்)

அந்தகரணங்கள் = 4
(மனம், புத்தி, சித்தம், அகங்காரம்)

நாடி = 10
(இடகலை, பிங்கலை, சுழுமுனை, புருடன், காந்தாரி, அத்தி, அலம்புடை, சங்குனி, குகு, சிகுவை)

அவஸ்தைகள் = 5
(நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கம்)

மலங்கள் = 3
(ஆணவம், மாயை, கன்மம்)

குணங்கள் = 3
(சத்துவம், தமோ, இராட்சதம்)

மண்டலம் = 3
(அக்கினி, சூரியன், சந்திரன்)

பிணிகள் = 3
(வாதம், பித்தம், சிலேத்துமம்)

ஆதாரங்கள் = 6

(மூலாதாரம், சுவாதிட்டானம், மணிப்பூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை)

தாதுக்கள் = 7

(இரத்தம், எலும்பு, தோல், தசைகள், மூளை, சுக்கிலம், இரதம்)

வாயுக்கள் = 10

(பிராணன், அபாணன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிரிதரன், தேவதந்தன், தனஞ்சேயன்)

பஞ்சகோசங்கள் = 5

(அன்ன, பிராண, மனோ, விஞ்ஞான ஆனந்த மய கோசங் கள்)

வாயில்கள் = 9

(கண்கள், காதுகள், மூக்குத்துவாரங்கள், வாய், கருவாய், எருவாய்) எனத் தங்களின் உட்பிரிவுகளைச் சித்தர் கருவூலம் மூலம் அறிய முடிகிறது."[52] மேலும், இதற்கு விளக்கமாக ஆறா தார ஜீவோற்பத்தி சிந்தாமணியும், தத்துவ தீபிகையில் திருநந்தி தேவர் திருமூலருக்கு உபதேசியருளிய பாடல் சான்றாகிறது.

தத்துவந் தொண்ணூற்றாறுந் தாழ்விலா வாயுபத்தும்
மெத்தென நாடிபத்தும் மெய்யுளே ஆறாதாரம்
சுத்தமாங் கரணநான்குந் தோற்றுமண்டலங்கள் மூன்றும்
இத்தனை யறியவல்லா ரிறையவராகுந்தானே [53]

இந்தத் தொண்ணூற்று ஆறு தத்துவமும், வாயு பத்தும், நாடி பத்தும் ஆறாதாரத்தையும், கரணம் நான்கையும், மண்டல மான சந்திரமண்டலம், சூரிய மண்டலம், அக்கினி மண்டலம் மூன்றையும் இத்தனையும் அறியவல்லவர் இறைவனே என்கிறது மேற்பாடல்.

இவை அழியும்போது, அச்சிறந்த உடம்பாகிய கோவில் சிதைவுற்றாலும் உயிர் அப்பொழுதே அத்தொண்ணூற்றாறு மெய் களும் சார்பின்மையால் ஓட்டமெடுக்கும் என்பதாகும்.

சித்தர் கள் அனைவருமே இந்தத் தத்துவம் தொண்ணூற்று ஆறும் அறிந் திருந்தனர். ஏனெனில், அவை தெரியாமல் ஞானம் பெற முடியாது. இதனை ஜீவப்பிரம்மமைக்ய வேதாந்த ரஹஸ்யம் என்னும் நூலில் பரமஹம்ச ஸச்சிதானந்த யோகிஸ்வரர் வெளிப் படையாக உரைப்பார். "சரீரத் தத்துவம் இப்பேர்ப்பட்டதென்று விசாரித்துத் தெரிந்து கொள்ளாவிடில் ஆத்மா இப்பேர்ப்பட்ட தென்னும் ஆத்ம ஞானம் உண்டாகமாட்டா, ஆதலால் சரீரத் தத்து வம் இப்பேர்ப்பட்டதென்பதைச் சிரத்தையுடன், விசாரிப்பதே மிக வும் முக்கியம் என எடுத்துரைக்கிறார்."[54] இதன் மூலம், சித்தர்கள் தத்துவத்தை அறிந்து ஞானம் பெற்றவர்கள் என்பது புலனாகிறது.

"வாழ்வின் முக்கியத்துவத்தைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்து மனித முயற்சியின் தேவையையும் எடுத்துரைக்கிறார். மனித வாழ்க்கை எவ்வளவு அருமையானதென்று உணர்ந்து, மர ணம் உறுதி என்று அறிந்து, அது எத்தருணத் திலும் நம்மைப் பற் றும் என்று அறிந்து நமது வாழ்க்கையின் குறிக்கோளை எய்த நாம் எப்போதும் விழிப்பாய் இருக்க வேண்டும். சிறிதளவும் காலம் தாழ்த்தக்கூடாது. கூடியவரை விரைவாகச் செயல்பட வேண்டும். அதாவது மனைவியை இழந்தவன் மறுமணம் புரிந்து கொள்ள மிகுதியான அக்கறை போன்றும், காணாமற் போன தன் மகனை, அரசன் சல்லடை போட்டுத் தேடுவதைப் போன்றும் இருக்க வேண்டும். எனவே நமது இலக்கை எய்த நம்மிடத்திலுள்ள, எல்லா ஊக்கத்துடனும், வேகத்துடனும் நாம் பாடுபட வேண்டும். அதாவது "தன்னை உணர்தல்" நமது சோம்பேறித்தனத்தை அகற்றி விட்டுத் தூக்கத்தைக் களைந்து அல்லும் பகலும் நாம் ஆத்ம தியா னம் செய்தல் வேண்டும். இதைச் செய்ய நாம் தவறுவோமானால் நாமே மிருக நிலைக்குத் தாழ்த்திக் கொண்டவர்களாவோம்" [55] என சத்திய சாயிபாபா மக்களுக்கு எடுத்துரைக்கிறார்.

உடலினாலும் மனத்தினாலும் துக்கமே என சிதம்பர சுவாமிகள் ஒழிவிலொடுக்கம் என்னும் நூலில் சுட்டியுள்ளதைக் காண முடிகிறது.

இடும்பைக்கே கொள்கலமா பேய் நரகுக் கீடாங்
குடும்பத்தைக் குற்றமறைக்கி – னடுங்காரோ

வைவர்க் கொருவ னறு தொழிலைச் செய்தலான்
மெய்யைப் பொய்யாக்கி விடும் [56]

மனித உடம்பின் ஐம்புலன்களுக்கும் முதல்வனாக ஆன்மா இருந்து புலன்களோடுச் சேர்ந்த ஆன்மாவும் வினைகளைச் செய்வதால் அறுவகைத் தொழிலைச் செய்வதால் மெய்யைப் பொய்யாக்கி விடுகிறது. ஆகையால் உடலின் நிலையாமையை உணர்ந்து உண்மையை அறிதல் வேண்டும் என்று அறிய முடி கிறது.

சமணப் புலவர்களும் யாக்கை நிலையாமையை வலி யுறுத்துகின்றனர்.

வாழ்நாட் கலகா வயங்கொளி மண்டிலம்
வீழ்நாள் படாஅ தெழுதலால் - வாழ்நாள்
உலவாமுன் ஒப்புற வாற்றுமின் யாரும்
நிலவார் நிலமிசை மேல் [57]

ஆயுள் நாள்களை அளக்கும் அளவு கருவியாகப் பிரகாசிக் கின்ற சூரியன் நாள்தோறும் உதித்து வருவது போன்று உங்கள் ஆயுள் குறைந்து கொண்டு வருகிறது என்பதைக் கருத்தில் கொண்டு ஆயுள் முடியுமுன் பிறருக்கு உதவி செய்யுங்கள் எத்தகை யோரும் நிலவுலகத்தில் நிலைத்திருக்கமாட்டார்கள். அறமே நிலைத்திருக்கும் என நாலடியார் வலியுறுத்துகிறது.

மதுரைக்காஞ்சி என்னும் பெயரில் உள்ள 'காஞ்சி' என் னும் சொல் உறுதியாக எதிரூன்றுதலாகிய பொருளைத் தர வில்லை. மதுரைக்கண் நிலையாமையினை நெடுஞ்செழியனுக்கு அறிவுறுத்தியதாகவே கொள்ளுதல் வேண்டும். இப்பாட்டிற்குப் பேருரை கண்ட நச்சினார்க்கினியர் தரும் விளக்கம் காணுதற் குரியது.

"இப்பாட்டிற்கு மாங்குடி மருதனார் மதுரைக்காஞ்சி என்று துறைப் பெயரானன்றித் திணைப் பெயராற் பெயர் கூறினார். இத் திணைப் பெயர் பன்னிரு படலம் முதலிய நூல்களான் கூறிய திணைப் பெயரன்று. தொல்காப்பியர் கூறிய திணைப் பெயர்ப் பொருளே இப்பாட்டிற்குப் பொருளாகக் கோடலின் வஞ்சி மேல்

செல்லலானும், காஞ்சி எஞ்சாது எதிர்சென்றூன்ற லானும்," "வஞ்சியும் காஞ்சியும் தம்முள் மாறே" எனப் பன்னிரு படலத்திற் கூறிய திணைப்பெயர் இப்பாட்டிற்குப் பொருண்மை உணர்க. அவர் முதுமொழிக் காஞ்சி முதலியவற்றையும் பொதுவியல் என்று ஒரு படலமாக்கி அவை திணைப்பெயர் ஆகாமை உணர்க" என்று வரைதல் எண்ணத்தக்கது. "'காஞ்சி' என்பது திணைப் பெய ராகவும், முதுமொழிக்காஞ்சி, பொருண் மொழிக் காஞ்சி, போன்ற குறியீடுகளில் துறைப் பெயராகவும் பயிலப் பெறுதல் உண்டு. துறைப்பெயராக வரும்பொழுது இவை, பொதுவியலுக்கு உரியன வாகத் தொகுக்கப் பெற்றிருத்தல் அறிய முடிகிறது. இவற்றுள் மதுரைக் காஞ்சி என்ற பெயரில் வரும் 'காஞ்சி' என்ற சொல் துறைப்பெயராக வரவில்லை. நிலையாமை உணர்த்தும் திணைப் பெயராக வந்தது"[58] என்று தெளிவுறுத்துகிறார்.

"மதுரையிடத்து அரசனுக்குக் கூறிய காஞ்சி (நிலையாமை பற்றியது) ஆதலின் இப்பாடல் மதுரைக்காஞ்சி எனப் பெயர் பெற்றது. பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் போர்களிலும் உலக இன்பங்களிலுமே தோய்ந்து போகா திருக்க அவனது அவைக்களப் புலவர் தலைவராகிய மாங்குடி மருதனார் என்ற புலவர் பெருமானார் அவனுக்கு அறிவுரை கூறும் முறையில் இப்பாடல் அமைந்தது"[59] என்று மா. இராச மாணிக்கனார் குறிப்பிடுகிறார்.

யாக்கை நிலையாமையைப் பற்றிக் கூறும் தொல்காப்பிய ரும்,

மாற்றருங் கூற்றஞ் சாற்றிய பெருமை [60]

என்றுரைக்கிறார்.

மாற்று அருங்கூற்றம் என்பது யாவராலும் தடுத்து விலக்கு வதற்கு அரிய கூற்றம் என்னும் பொருள் தருவதாகும்.

"உடம்பினின்று உயிரைக் கூறுப்படுத்திப் பிரித்தலின் கூற் றம் என்பது இயமனுக்குரியதோர் காரணப் பெயர். கூற்றம் சாற் றிய பெருமையாவது, ஒருவர்க்கு ஊழாய் வரையறுக்கப்பட்ட வாழ்நாள் முடிந்த எல்லையில் கூற்றம் வரும் எனப் பெரியோரால்

அறிவுறுத்தப்படும் பெருங்காஞ்சித் துறையாகும்"[61] எனக் க. வெள்ளைவாரணர், விளக்கம் பகிர்ந்துள்ளார்.

பிறவியின் பயனை அடையாமல் இறந்தோரே இவ்வுலகில் அதிகம் என்பதைப் பின்வரும் பாடல் வலியுறுத்துகிறது.

கரைபொருது இரங்கும் கனை இருமுந்நீர்த்
திரை இடு மணலினும் பலவேயுரைசெல
மலர்தலை உலகம் ஆண்டு, கழிந்தோரே [62]

செறிதலையுடைய கரிய கடலிற் கரையைப் பொருது ஒலிக்கும் திரை குவிக்கின்ற மணலினும் பலரே ஆவர். புகழ் எங்கும் பரவுமாறு, அகன்ற இடத்தையுடைய உலகங்களில் தமது ஏவலை நடத்தி மக்கட்குரிய மன உணர்வின்மையிற், பிறவியைப் போக்கிக் கொள்ள முயலாமல் பயனின்றி மாண்டோர் பலர் என்று யாக்கையின் நிலையை விளக்குகிறது.

மதுரைக்காஞ்சி யாக்கையின் பயனை அடையாமல் மாண்டோர் அதிகம் என விவரிப்பது போலச் சித்தர்களும் யாக்கையின் பயன்பாட்டையும் நிலையாத் தன்மையையும் நன்கு அறிந்திருந்ததால் நீரில் தோன்றும் குமிழி போன்றது. இவ்வுடல் நிலையில்லாதது அழிந்துவிடக் கூடியது; இதைப் போலவே உடலும் வாழ்வும் நிலையானவையல்ல; பிறவா நிலை எய்துவதற்கே யாக்கை கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை நன்கு அறிந்ததால் சித்தர்கள் அனைவரும் நிலையாமையை வலியுறுத்துகின்றனர். கடுவெளிச் சித்தர்,

நீர்மேற் குமிழியிக் காயம் - இது
நில்லாது போய்விடும் நீயறி மாயம்
பார் மீதின் மெத்தவு நேயம் - சற்றும்
பற்றா திருந்திடப் பண்ணுமுபாயம் [63]

என்று பகர்கிறார்.

நீரில் தோன்றிய நீர்க்குமிழி நீரிலே தோன்றி நீரில் மறையும். அதுபோல தேகமும் பஞ்சபூதங்களால் ஆனது. உடல் பஞ்சபூதங்களோடு கலக்கிறது. அது மாயமாய் மறையும். ஆதலால்

பிறர் மீது அன்பு செலுத்திப்பற்று இல்லாமல் பிறர்க்கு உதவி செய் வாயாக. அதுவே நீ கடைத்தேறுவதற்கு வழி என்றார்.

நீரினிற்கு மிழியொத்த நிலையிலாத காயம் [64]
என்று சிவ வாக்கியமும்,

ஆச்சப்பா தேகமது நிலை நில்லாது [65]
என யாக்கோபு சித்தரும்,

நீர்க்குமிழி ஆம் உடலை நித்தியமாய் எண்ணாதே
ஆர்க்கும் உயிராசை அழியேனே என்குதே [66]
என்று பட்டினத்தாரும்,

நீரில் குமிழிபோல் நிலையற்ற வாழ்வை விட்டுன்
பேரில் கருணை வெள்ளம் பெருக்கெடுப்பதெக்காலம் [67]
என்று பத்திரகிரியாரும் விளம்புகின்றனர்.

சித்தர் பத்திரகிரியார் வாழ்வும் யாக்கையும் நிலையில்லா தது என்பதை உணர்ந்தும் கருணை வடிவமான இறை நாமத்தில் வெள்ளப் பெருக்கெடுத்து ஞானத்தைப் பெறுவது இனி எக்காலத் தில் எனப் புலம்புகிறார். இதனைப் பாம்பாட்டிச் சித்தரும்,

நீரில் எழும் நீர்க்குமிழி நிலைகெடல் போல
நில்லாது உடல் நீங்கிவிடும் நிச்சயம் என்றே
பாரிற்பல உயிர்களைப் படைத்தவன் தன்னைப்
பற்றவே நீ பற்றித் தொடர்ந்து ஆடுபாம்பே [68]
என வலியுறுத்துகிறார்.

நீரின்மேல் தோன்றும் நீர்க்குமிழ் நெடுநேரம் நில்லாது உடைந்துவிடும். அதுபோலத் தான் இவ்வுடலும் நெடுநாட்கள் வாழாது ஒருநாள் அழிந்து விடும். இது உறுதி. இவ்வுலகில் பல் வேறு உயிர்களைப் படைத்து அவற்றைக் காக்கின்றவன் இறை வன். அவரே நிலையானவன். எனவே, அவனுடைய திருவடி களைப் பற்றி நின்று பாம்பே நீ ஆடு என ஆச்சரியப்படும்படியாக தேகத்தின் நிலையை மக்களின் மனத்தில் பதியும்படித் தெளி வாகப் பாடியுள்ளதை அறியமுடிகிறது.

மேலும் பட்டினத்தார் இவ் யாக்கை உண்மையென நினைந்து அழிந்தேன் என நெஞ்சம் கலங்குகிறார்.

நீர்மேற் குமிழிபோல் நிலையற்ற காயமிதைத்
தாரகமென்றெண்ணி நான் தட்டழிந்தேன் பூரணமே [69]

உலகத்தில் நீர்க்குமிழி போன்ற காயத்தை நிலையென்று எண்ணி நம்பி அழிந்தேன். பூரணம் இல்லாத ஒன்றைப் பூரணம் என்று எண்ணியிருந்தேன். இதன்வழி பூரணத்தின் வடிவமாக இறைவனை மறைமுக மாகக் குறிக்கின்றார். அதுவே நிலைத்துள் ளது என்றும் உடல் அழியக்கூடியது என்றும் எடுத்துரைக்கின்றார்.

யாக்கை நிலையில்லாதது என்பதைச் சங்கப் புலவர்கள் உறுதியாகப் பாடியுள்ளனர். சித்தர்கள் பாடல்கள் மூலம் ஒவ் வொருவரும் தன்னை அறிந்து மெய்ஞானம் பெறவேண்டுவதே வாழ்க்கையின் குறிக்கோள் என்பதை அறிய முடிகிறது.

இளமை நிலையாமை

இளமைப் பருவம் என்பது "கானல் நீர்" போன்றது. இது மறையக் கூடியது. அதுபோன்று இளமையும் தோன்றி மறையக் கூடியது. நிலைத்து நில்லாதது. இளமைப்பருவம் பற்றி நற் றிணைப் பாடல்,

முதிர்ந்தோர் இளமை அழிந்தும் எய்தார்
வாழ்நாள் வகை அளவு அறிஞரும் இல்லை [70]

என்றுரைக்கிறது.

இவ்வுலக வாழ்க்கையில் எதுவும் நிலைத்து நிற்பது இல்லை. பிறந்த மக்கள், முடிவில் இறப்பது உறுதி. அதுபோன்று இளமை போனால் போனதுதான். அதை மீண்டும் பெற இய லாது. இதையே காலத்திலே முதுமையை அடைந்தவர் மறுபடி யும் அழிந்த இளமையை எய்துவது என்பது இல்லை. அதே போலத் தம் வாழ்நாளின் அளவு இன்னதென்பதையும் அறிவதற்கு இல்லை என்கின்றன மேற்பாடலடிகள். திருமூலரும் இளமை யுடன் வாழ்தல் அரிதே எனச் சுட்டியுள்ளார். இதனை,

பாலன் இளைஞன் விருத்தன் என நின்ற
காலங் கழிவன கண்டும் அறிகிலார்
ஞாலங் கடந் தண்டம் ஊடறுத் தானடி
மேலுங் கிடந்து விரும்புவன் நானே [71]

என உரைக்கிறார்.

ஒருவரது வாழ்க்கையில் இளமைக் காலம் வசந்த காலம். அந்த இளமைக் காலத்தில் வளர்ச்சியும் வீழ்ச்சியும் மனிதனது வாழ்வில் நிகழும். அந்தப் பருவம் என்றும் நிலைத்து நிற்கிறது. என எண்ணி வாழ்நாளை வீணாகக் கழிப்பவர்க்கு, இளமை நிலை யில்லாதது எனத் திருமூலர் உணர்த்துகிறார்.

இளமை கரும்பாகவும், முதுமை எட்டிக்காயாகவும் இருத் தலைச் சுட்டிப் பாலன், இளைஞன், முதியவர் எனப் பருவங்கள் கழிந்து செல்வதை உலகோர் கண்டும் அறியாமல் இருக்கின்றனர், ஆனால் இவ்வுலகத்தைக் கடந்து அதற்கு மேலாகவுள்ள அண்டங் களைக் கடந்து நிற்கின்ற இறைவனது திருவடியை மேன்மேலும் இளமையிலேயே அன்பு செய்து திருவடியைப் பணிய வேண்டும் என அறிவுறுத்துகிறார்.

காலை எழுந்தவர் நித்தலும் நித்தலும்
மாலை படுவது வாழ்நாள் கழிவதும்
சாலும் அவ்வீசன் சலவியன் ஆகிலும்
ஏல நினைப்பவர்க்கு இன்பம் செய்தானே [72]

என்பது திருமூலர் வாக்கு.

தினமும் காலையில் எழுந்தவர்கள், மாலையில் உறங்கச் செல்வது என்கின்ற செயல்பாடு, வாழ்நாள் குறைதல் இளமை கழி வது போன்றது. அவ்வாறு வாழ்நாளைக் குறைக்கின்ற செயலைச் செய்கின்ற ருத்திரமூர்த்தி கோபம் கொண்டவனாகிலும், அவனை எண்ணுவோர்க்கு இன்பம் அளித்து அருளுகின்றான் என்பதை அறிய முடிகிறது.

இளமையும் இன்பமும் நிழல் போல மறையும் என்று நற்றிணை குறிப்பிடுகிறது.

வைகல் தோறும் இன்பமும் இளமையும்
எய்கணை நிழலின் கழியும், இவ்வுலகத்து [73]

இல்லாத வாழ்விற்குரிய நிலையற்ற பொருளை ஈட்ட வேண்டுமென்று ஈடுபட்ட உள்ளத்தோடு 'யாம் பிரிதும்' என்று நீர் கூறினீர். ஆதலால் உம்மிடத்து இவ்வுலகத்தில் நாள்தோறும் வில்லிலிருந்து புறப்படும் அம்பின் வழிச் செல்லும் நிழல் எப்படி மறையுமோ அப்படி இன்பமும் இளமையும் விரைந்து கழியும் என்று இயம்புகிறார் புலவர்.

பட்டினத்தார்,

வளமையும் மாறி இளமையும் மாறி வன்பல் விழுந்து இரு
கண்கள் இருண்டு வயது முதிர்ந்து நரை திரை வந்து
வாதவிரோத குரோதம் அடைந்து
செங்கையினில் ஓர் தடியும் ஆகியே [74]

வருவதுபோவது ஒரு முதுகூனும் மந்தியெனும்படி
குந்தி நடந்து மதியும் அழிந்து செவி திமிர்வந்து
வாயறியாமல் விடாமல் மொழிந்து [75]

என்று உடற்கூற்று வண்ணப் பாடல்களில் இளமை நில்லாது என்று கூறுகிறார்.

இளமை நில்லாதது. மாற்றம் பெறும் உடல் தோற்றத்தில் பல் விழுந்து கண்கள் இருண்டும் வயது முதிர்ந்து நரைத்துப் பிணி வந்து நடக்க முடியாமல் தடியும் ஊன்றி, வருவது போவது முடியாமல் கூனும் விழுந்து, குந்தி நடந்து அறிவும் மங்கிக் காதும் கேளாமல், என்ன பேசுகிறோம்? என்று தெரியாமல் விடாது விடாது மொழிந்து வாழும் வாழ்க்கை நிலையை அறிந்து உணர வேண்டும்.

அது தள்ளாடி நடக்கிறது. திரைத்த முகத்தில் குழிந்த
கண்கொண்டு விழிக்கிறது. குழந்தைகள் கூடி,
கிழவா! என்று கூவிடும் போது
பல்லேயில்லாப் பொக்கைவாயால் பழிக்கிறது.
அதன் எலும்புக் கூடோ வலுவிழந்து போனதே! [76]

என்பதை, பகவான் சத்ய சாயி பாபாவும் மக்களுக்கு உணர்த்து கிறார். இதனை நன்னெறிக்கு இட்டுச் செல்லும் என்னும் பட்டி னத்தார் கருத்துடன் ஒப்பிட்டுக் காணமுடிகின்றது.

கலித்தொகையில் இளமை நிலையாமைக் கருத்தைக் காண முடிகிறது.

வகை எழில் வனப்பு எஞ்ச வரை போக வலித்து நீ
பகை அறுபய வினைமுயறிமன்; முயல் வளவை
தகை வண்டு புதிது உண்ணத் தாது அவிழ் தண் போதின்
முகைவாய்த்த தடம் போரும் இளமையும் நிலையுமோ? [77]

வகைப்பாடமைந்த உறுப்பழகும் தோற்றப் பொலிவும் கெடும்படி மலையைக் கடந்து சென்று நீ துணிந்து, காவற் பிரிவை மிகவும் முயன்றனை. அதைப்போன்று முயலுங்காலத்து அழகிய வண்டுகள், தன் புதுமையை நுகரும் படி, பூந்தாதுகளோடு விளங் கும் குளிர்ந்த மலரின் முகைக்கு வாய்ந்த நீர் நிறைந்த தடத்தில்; அந்நீர் நாள்தோறும் குறைவது போன்று இளமையும் இவளுடன் நிலை பெறுமோ? பெறாது, என்ற உண்மையை உணர்த்துகிறார்.

இளமை நிலையில்லாதது என்பதை,

யாறு நீர் கழிந்தன்ன இளமை [78]

என, ஆறு நீர் கழிந்தாற் போன்று இளமை கழிந்துபோகும் தன்மை உடையது எனப் பாலை பாடிய பெருங்கடுங்கோவும் பாடுகிறார். மேலும்,

இளமையும் காமமும் நின் பாணிநில்லா [79]

எடுத்துரைக்கிறார்.

இளமையும் காமமும் நின் கையிடத்து நில்லாதனவாய் நாள்தோறும் கழியும் என்கிறார். இதே கருத்தை அகநானூற்றிலும் காண முடிகிறது.

கேளினி வாழிய நெஞ்சே நாளும்
கனவுக் கழிந்தனைய வாகி நனவின்
நாளது செலவும் மூப்பினது வரவும்

அரிது பெறு சிறப்பிற் காமத்தியற்கையும்
இந்நிலை அறியா யாயினுஞ் செந்நிலை [80]

தினமும் கனவு கழிந்தது போல விழிப்பில் நாட்கள் கழி வனவாகவும், மூப்பின் வரவு அரிது பெறுகின்ற சிறப்பையுடைய காமத்தின் இயற்கையும் இந்நிலைமையினை அறியாய் என்பதாக இளமை கழிந்த மூப்பு எல்லோருக்கும் வரும் என்று இளமை நிலையாமையை உணர்த்துகிறார் புலவர்.

திருமூலரும் இளமை நிலையாமையை உணர்த்துவார்.

ஆண்டு பலவும் கழிந்தன அப்பனைப்
பூண்டு கொண்டு ஆரும் புகுந்து அறிவார் இல்லை
நீண்டன காலங்கள் நீண்டு கொடுக்கினும்
தூண்டும் விளக்கின் சுடர் அறியாரே [81]

அறியாமையில் பல ஆண்டுகள் கழிந்துவிட்டன. உயிர்த் தகப்பனான இறைவனை யாரும் தங்கள் உடலில் நிலைபெறச் செய்து அவனது அகண்ட ஒளியில் புகுந்து பேரறிவைப் பெறுவார் இல்லை. நீண்ட காலம் உலகில் வாழும்பேறு பெற்றிருந்தாலும் தூண்டுகின்ற விளக்கின் சுடர்ஒளி போன்று இறைவனை உலகோர் அறியாததால் இளமை நிலையில்லாததாகிவிடுகிறது என்கிறார்.

தேய்ந்து அற்று ஒழிந்த இளமை கடைமுறை
ஆய்ந்து அற்ற பிள்ளை அரிய கருமங்கள்
பாய்ந்து அற்ற கங்கைப் படர்சடை நந்தியை
ஓர்ந்து உற்றுக் கொள்ளும் உயிர் உள்ள போதே [82]

என்பது திருமூலரின் கருத்து.

நாள்தோறும் இளமை சிறிது சிறிதாகத் தேய்ந்து இறுதியில் இற்று ஒழிந்துவிடும். ஆதலால், மூப்படைந்த பின் அருமை யான காரியங்கள் எதனையும் செய்யவியலாது. எனவே, உயிர் செழுமையான உடலில் உள்ள போதே கங்கை பாய்கின்ற சடை முடியை உடைய சிவபெருமானை ஆராய்ந்து அவனை இளமை யுள்ளபோதே வணங்குங்கள் என்கிறார்.

குளித்து மணற் கொண்ட கல்லா இளமை
அளிதோ தானே! யாண்டு உண்டு கொல்லோ
தொடித்தலை விழுத்தண்டு ஊன்றி, நடுக்குற்று,
இரும்இடை மிடைந்த சில சொற்
பெருமூதாளரேம் ஆகிய எமக்கே? [83]

என்பது புறநானூறு.

குதித்து விளையாடி மூழ்கி அடியில் இருக்கும் மணலை எடுத்து வந்து காட்டியவாறு ஆராய்ந்து பார்க்காத இளமைப் பருவம் இரங்கத்தக்கது. அத்தகைய இளமை இன்று எங்கு சென்றதோ? பூண்செறிந்த பெரிய தடியை ஊன்றியவராயும் நடுக்கமுறுபவராயும், இருமல்களுக்கு இடையில் சில சொற்களைப் பேசுகின்ற முதுமையுடையவர்களாகிய எங்களுக்கு அவ்விளமை எங்கிருக்கிறதோ? அது இரங்கத்தக்கது என்று விளக்கப்படுவதன் வழி இளமை நிலையில்லாதது என்பதை உணர முடிகிறது.

இளமையும் நில்லா, யாக்கையும் நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா
புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்
மிக்க அறமே விழுத்துணையாவது [84]

அறம் ஒன்றே அழியாத் தன்மை வாய்ந்தது என்றார் திருவள்ளுவர். மாந்தர் பெற்ற உடலும், உடைமையும் பிறவும் அழிந்தொழியும் வகையால் ஓவாது செய்யும் அறமே உறுதுணையாகும். வள்ளுவர் கருத்தை மணிமேகலையும் வலியுறுத்துகின்றது. இளமை, யாக்கை, செல்வம் மூன்றும் நிலையில்லாதது. நிலையான ஒன்று இவ்வுலகில் உண்டெனில் அது நல்ல அறமே எனச் சுட்டியுள்ளதைக் காணமுடிகிறது.

இளமையின் நிலைமை பற்றிக் கூறுமிடத்து நான்மணிக்கடிகை

சாவாத இல்லை பிறந்த உயிர் எல்லாம்
தாவாத இல்லை வலிகளும்; - மூவாது
இளமை இசைந்தாரும்; வளமையில்
கேடு இன்றிச் சென்றாரும் இல் [85]

என்றுரைக்கிறது.

பிறந்த உயிர்களில் இறவாதவை என்று எவையும் கிடையாது. வலிமை என்பது கெடுவதும் இல்லை. அதைப்போல் எப்போதும் முதிராமல் இளமையாய் நிலையாய் இருந்த வரும் இலர். குறையாத எக்காலத்தும் செல்வராக இருந்தவரும் இல்லை என்கிறது நான்மணிக்கடிகை.

நரைவரும் என்றெண்ணி நல்லறி வாளர்
குழவியிடத்தே துறந்தோர் – புரைதீரா
மன்னா இளமை மகிழ்ந்தாரே கோலூன்றி
இன்னாங் கெழுந்திருப்பார் [86]

என்று இளமை நிலையாமையினை நாலடியாரும் விளம்புகிறது.

நல்ல விவேகிகள், முதுமைப் பருவம் வருமென்று கருதி மனத்திலுள்ள பற்றுகளைத் துறந்து குற்றம் நீங்கப் பெறாததும் நிலையில்லாததுமாகிய முதுமைப் பருவத்தை நிலைத்திருக்கும் எனக் கருதித் தன்னிலை கெட்டுக் களித்திருத்தவர்களே தடியை ஊன்றிக் கொண்டு துன்பத்தோடு எழுந்திருப்பார்கள், என நாலடியார் நவில்கிறது.

திருமூலரும் இளமை நிலையற்றது என்பதை மக்களுக்கு உணர்த்துகிறார்.

கிழக்கு எழுந்து ஓடிய ஞாயிறு மேற்கே
விழக் கண்டும் தேறார் விழி இலா மாந்தர்
குழக்கன்று மூத்து எருதாய்ச் சிலநாளில்
விழக் கண்டும் தேறார் வியன் உலகோரே [87]

என்பது திருமூலரின் கருத்து.

காலையில் கிழக்கே வானத்தில் உதயமாகி நன்கு விளங்கிய சூரியன் மாலையில் மேற்கில் மறைவதைக் கண்டும் அறிவற்ற மக்கள் இளமை நிலையற்றது என்பதை உணரமாட்டார்கள். அதேபோல, இளங்கன்று சில நாளில் வளர்ந்து எருதாகி முதுமை பெற்று இறப்பதைக் கண்டும், பரந்த இவ்வுலகில் உள்ளோர் என்றும் இளமையுடன் வாழ்தல் அரிது என்றும் திருமூலர் உரைத்துள்ளார்.

செல்வம் நிலையாமை

உலக வாழ்க்கைக்கு உயிர் போன்றது செல்வம். அச்செல்வத்தை வெறுக்கும் கொள்கைகளை உடை யோரும் செல்வமின்றி வாழமுடியாது என்று அறிந்து வாழ்ந்தனர். ஆனால், சித்தர்கள் இதிலிருந்து முற்றிலும் வேறுபட்டவர்களாக உலகில் உள்ள அனைத்துச் செல்வமும் நிலைத்து நிற்பது இல்லை என்பதை உணர்த்துகின்றனர். "மெய்ப்பொருள் ஒன்றே" என்றும் உண்மையான அருட்செல்வத்தை அடைய முடியும் என்றும் சித்தர் கள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

நற்றிணைப் பாடல்,

புணரின் புணராது பொருளே; பொருள்வயிற்
பிரியின் புணராது புணர்வே; ஆயிடைச்
செல்லினும் செல்லாய் ஆயினும், நல்லதற்கு
உரியை-வாழி, என் நெஞ்சே! - பொருளே,
வாடாப் பூவின் பொய்கை நாப்பன்
ஓடுமீன் வழியின் கெடுக; யானே [88]

செல்வத்தை நல்வழியில் பயன்படுத்துதல் குறித்தும் தீய வழியில் பயன் படுத்தும்போது செல்வம் இருந்த இடம் தெரி யாமல் அழிந்துவிடும் என்றும் செல்வம் நிலையாமைத் தன்மை யுடையது என்பதை உணர்த்துகின்றது. மேலும்,

பனிக்கால் கொண்ட பையுள் யாமத்து
பல இதழ் உண்கண் கலுழ
நில்லாப் பொருட்பிணிப் பிரிந்திசினோரே [89]

என்றும் நற்றிணை நவில்கிறது.

பனிமிகப் பெருகி, விழுந்து துன்பம் செய்யும் நள்ளிரவில் இமையுடன் மைபொருந்திய கண்கள் கண்ணீர் பெருக்கி அழும் இத்தகைய துன்பத்தைக் கருதாதவராய் நிலையில்லாப் பொருள் கருதிப் பிரிந்தவர் நினையார் போலும். நான் எங்ஙனம் ஆற்று வேன், எனச் செல்வம் நிலையாமைப் பண்பினதெனத் தலைவி உரைக்கக் காண்கிறோம்.

நில்லா பொருட் பிணிச் சேறி;
வல்லே - நெஞ்சம்! வாய்க்க நின் வினையே! [90]

நிலைத்து நில்லாப் பொருள்மீது பற்றுக் கொண்டதன் காரணமாக இளமை இன்பத்தைக் கருதாது விரைகின்ற நெஞ் சமே, நின் செயல் நினக்கு வாய்க்கட்டும் எனச் செல்வம் நிலை யாமையைப் புலப்படுத்தியுள்ளார் புலவர். இதனைப் போன்றே,

திருமூலரும் பொருளின் மீது பற்றினை நீக்கி அகத்தில் உள்ள இறைவனை அறிந்து கொள்ளவேண்டும் என வலியுறுத்து கிறார்.

அருளும் அரசனும் ஆனையும் தேரும்
பொருளும் பிறர் கொள்ளப் போவதன் முன்னம்
தெருளும் உயிரொடும் செல்வனைச் சேரில்
மருளும் பினை அவன் மாதவம் அன்றே [91]

அருள் செய்யும் அரச பதவியையும், யானைப்படையை யும், தேர்ப்படையையும், பொருட்குவியலையும் பிறர் கவர்ந்து செல்லுவதற்கு முன் தெளிந்த உணர்வோடு நிலையான செல்வத் தையுடைய இறைவனை அடைந்து விட்டால் பிறகு அவன் பெரிய எந்தத் தவத்தையும் செய்யத் தேவையில்லை என்று எடுத் துரைக்கின்றார்.

வாழ்வு மனைவியும் மக்கள் உடன்பிறந்
தாரு மளவே தெமக்கென்பர் ஒண்பொருள்
மேவு மதனை விரிவு செய்வார்கட்குக்
கூவுந் துணையொன்று கூடலுமாமே [92]

என்பது திருமூலர் வாக்கு.

ஒருவர் இறக்குந் தறுவாயில் அவருடன் பலவகையாலும் ஒத்து வாழ்ந்த மனைவியும், மக்களும், உடன் பிறந்தாரும் தனித் தனியே தமக்குரிய சொத்துகளை வினவுவர். எவ்வளவு பொருள் இருந்தாலும் இந்த நிலைதான் ஏற்படும். அதனால் நன்மைக்கு ஆகும் சிறந்த பொருளை வழிக்குத் துணையாம் புண்ணியத்தில் செலவு செய்தல் வேண்டும். அப்புண்ணியப் பயனாய்ச் சிவபெரு

மான் அருளால் தோன்றுவன். தோன்றித் திருவைந்தெழுத்தைச் செவியறிவுறத்துவன். அம்மறையினை முறையாகக் கணித்துப் பார்த்துச் செயல்படுத்துவார்க்கு வழித்துணையாக அது கைகூடும் என முழக்கமிடுகிறார்.

"நீதிசதகமும் புண்ணியத்தை முன்னிலைப்படுத்தும் புண்ய கர்மாவானது எது வரையில் நீடிக்கிறதோ அதுவரையில் தான் அழகிய வீடு, செல்வம் இவைகளை அனுபவிக்கலாம். ஆனால் அந்தப் புண்ணியம் முடிந்துவிட்டாலோ மேற்கண்ட செல்வங் கள் நூல் அறுக்கப்பட்ட முத்துமாலை முத்துக்கள்போல் சிதறிப் போகின்றன"[93] என்று செல்வத்தின் நிலையற்ற பண்பு நிலையில் லாது என வலியுறுத்தப்படுகின்றது.

நிலையில்லாத பொருளை நிலைத்ததாகக் கருதி ஆசை கொண்டு வாழ்வில் மூழ்கி அலைந்து திரியும் இயல்பை ஐங்குறு நூறு கூறுகிறது.

நின்றது இல் பொருட்பிணி முற்றிய
என்றூழ் நீடியசுரன் இறந்தோரே [94]

எனும் அடிகள் நிலையில்லாத பொருள் தேடும் கடமையை முற்று வித்தற் பொருட்டு, கோடை வெப்பம் தங்கிய காட்டைக் கடந்தும் சென்றனர் என்றும் செல்வம் நிலையாமையை உணர்த்துகிறது.

கலித்தொகையும்,

வரைவு இன்றிச் செறும் பொழுதில் கண் ஓடாது
உயிர் வெளவும்
அரைசினும் நிலைஇலாப் பொருளையும் நச்சுபவோ? [95]

என வினவுகின்றது. ஓர் எல்லையின்றி, பழைய தொடர்பையும் கருதாமல் அமைச்சரைச் சினந்து உயிரைக் கவரும் அரசரைக் காட் டிலும், நிலையில்லாத பொருளை விரும்புவார்களோ? என்பதைச் சுட்டுகிறது. இக்கருத்தைச் சார்ந்து இடைக்காட்டுச் சித்தர்,

மாடு மனைகளும் மக்களும் சுற்றமும் வான்பொருளும்
வீடு மணிகளும் வெண்பொன்னுஞ்
செம் பொன்னும் வெண்கலமும்

காடுங் கரைகளுங் கல்லாம் பணியும் கரி பரியும்
தேடும் பலபண்டம் நில்லா சிவகதி சேர்மின்களே [96]

என்று வேண்டுகிறார்.

மனிதர்கள் காணும் இவ்வுலகமே மாயை. இங்கு அவர்களின் கண்ணுக்கு நிலையானவை எனத் தோன்றும் பொருள்கள் அனைத்தும் உண்மையிலேயே நிலையற்றவையே. அவர்களிடம் இருக்கும் அளப்பரிய செல்வங்களும், மாடும், வசிக்கும் வீடும் அவர்களுக்குச் சொந்தமில்லை. பெற்றெடுக்கும் பிள்ளைகள் வயதான காலத்தில் காப்பாற்றும் எனப் பெற்றோர் எண்ணுகின்றனர். அது சுத்தப் பொய். பிள்ளைகளும், உற்றாரும் உறவினரும், வானளவு குவித்து வைத்திருக்கும் பணமும், அணிமணிகளும், வெள்ளியும் செம்மையான தங்கமும், வெண்கலமும் வாங்கி வைத்திருக்கும் இடமும் என இவை அனைத்தும் நிலையற்றவை என்பதால் சிவபெருமானின் பாதங்களை அடையுமாறு வேண்டுகிறார்.

திருவடிகளே மெய்யானவை எனப் புரிந்து கொண்டு அவனது மலர்ப் பாதங்களைப் பக்தியினால் அடையும் வழிகளை மக்கள் தேட வேண்டும். அப்பொழுதுதான் ஒருவர் உண்மையான வாழ்வு வாழ்ந்தவர் என்கின்றார் இடைக்காடர். செல்வம் நிலையில்லாதது என்பதனை,

அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல் [97]

என்று திருவள்ளுவரும் குறிப்பிடுகிறார்.

நில்லாத இயல்பினையுடைத்துச் செல்வம். அதனைப் பெற்றால் அதனால் செய்யப்படும் அறங்களைப் பெற்றபொழுதே செய்க. பயன் நோக்காது, செய்யப்படும் கடவுட்பூசையும், தானமும் முதலாயின அவை ஞான ஏதுவாய் வீடு பயத்தலின், அவற்றை 'அல்குப' என்றும் 'செயல்' என்றும் கூறினார்.

செல்வம் நிலையாமையைப் பாலை பாடிய பெருங்கடுங்கோ, செய்த வினைக்குத் தகுந்தவாறும் செல்வம் மாறி மாறித் தங்கும் இயல்புடைத்து என்கிறார்.

கிழவர் இன்னோர் என்னாது பொருள்தான்
பழவினை மருங்கின் பெயர்பு பெயர்பு உறையும் [98]

இத்தன்மையோரே நமக்கு உரியவர் என்று கருதாது, செல்வம் முன் செய்த பழவினைக்கு ஏற்ப இடம் விட்டு இடம் சென்று தங்கும் இயல்பினை உடையது என்ற உண்மையை அறிய முடிகிறது. மேலும், ஈட்டிவைத்த செல்வம் வாழ்நாள் இறுதியில் துணையாக வருவதில்லை, அவரவர் செய்த அறமே துணையாகும் என்கிறது புறநானூறு.

பொதுமை இன்றி ஆண்டிசி னோர்க்கும்
மாண்ட அன்றே யாண்டுகள்; துணையே
வைத்தது அன்றே வெறுக்கை;.....
.....
புணைகை விட்டோர்க்கு அரிதே துணை அழத்
தொக்கு உயிர் வௌவும் காலை
இக்கரை நின்று இவர்ந்து உக்கரை கொளலே [99]

பொதுவானது என எண்ணாமல், தமக்கே உரிமை என்று கருதி ஆட்சி புரிந்த வேந்தர்க்கும் வாழ்நாட்கள் கழிந்தன; அவர் ஈட்டித் தொகுக்கப் பெற்ற குவியல் துணையாக வருவதில்லை, அதுவும் அழியக்கூடியது துணைவர்கள் தம்மில் ஒன்றுகூடி அழ, உயிர் கூற்றுவனால் கவர்ந்து செல்லப்படும்போது வீட்டுலகைப் பெறுவதற்கான தெப்பத்தைக் கைவிட்டோர் வீட்டுலகப் பேறு அடைதல் அரிதாகும். இப்புறநானூற்றுப் பாடலைத் தழுவியது பின்வரும் கணபதி தாசர் பாடல்,

நாடென்றும் நகரமென்றும் நலந்திகழ் வாழ்வதென்றும்
வீடென்றும் மனையாளென்றும் மிக்கதோர் மைந்தர் என்றும்
மாடென்றுஞ் சம்பத் தென்றும் வாஞ்சை
கொண்டலைந்தாய் இந்தக்
கூடொன்றும் அழிந்தாற் கூடத் தொடருமோ
கூறு நெஞ்சே [100]

அரசாளும் அரசனின் நாடும் நகரமும் நலந்திகழ் வாழ்வும் வீட்டை யாளும் மனையாளும் மைந்தரும் மாடென்றும் செல்வ

மென்றும் அலைந்து திரிந்தாய் அவற்றால் ஆவது ஒன்றுமில்லை. உடல்போனால் இவையெல்லாம்கூட வருமோ எனக் கேள்விக ளைத் தொடுத்துச் செல்வம் நிலையாதது என்பதை வலியுறுத்து கிறார்.

சித்தர் வரலாறு என்னும் நூலில், சித்தர் சிவவாக்கியரும் அவரது துணைவியாரும் தங்கத்தின் மீது ஆசை அற்றவர் என் பதை அவர் வரலாற்றின் வழி அறிய முடிகிறது.

"சிவவாக்கியர் மூங்கில் கூடை பின்னி விற்பவர். இருந் தாலும் கொங்கணர், இந்த மகான் தங்கம் செய்யும் வித்தை அறிந் திருந்தும் இப்படி வறுமையில் வாழ்கிறாரே என்று வருந்தினார். சிவவாக்கியர் இல்லாத சமயமாக அவர் வீட்டிற்குச் சென்று அவர் மனைவியைச் சந்தித்துச் சில பழைய இரும்புத் துண்டுகளை வாங்கி அதைத் தங்கமாக மாற்றி அவளிடம் கொடுத்துவிட்டுச் சென்றார். சிவவாக்கியர் வீடு திரும்பியதும் அவர் மனைவி கொங் கணர் வந்ததையும், நடந்த விவரங்களையும் சொல்லி தங்கத்தைக் கணவர் முன் வைத்தார். சிவவாக்கியர், ''இவற்றைக் கொண்டு போய்க் கிணற்றில் போட்டுவிடு'' என்று கூற அவளும் அப்படியே செய்தாள். சிவவாக்கியர் மனைவியை அழைத்து, ''உனக்கு தங்கத் தின்மேல் ஆசையா?'' என்று கேட்டார், அதற்கு அவர் மனை வியோ, ''சுவாமி தங்களுடைய மாறாத அன்பு இருந்தால் அதுவே போதும். எனக்குத் தங்கம் தேவையில்லை'' என்று கூறி விட்டார். இதன்வழிச் சித்தர்கள் செல்வம் நிலையில்லாதது என்பதால் அதன்மீது பற்றற்றவர்களாக இருந்தார்கள்"[101] என்பதை நன்கு அறிந்து கொள்ளமுடிகிறது.

பாம்பாட்டிச் சித்தரின் பாடல்கள் செல்வம் நிலையாமை பற்றிய செய்திகளைப் புலப்படுத்துகின்றன.

நாடு நகர் வீடுமாடு நற்பொருளெல்லாம்
நடுவன் வரும்பொழுது நாடி வருமோ?
கூடுபோன பின்பு அவற்றால் கொள்பயன் என்னோ?
கூத்தன் பதங் குறித்து நின்று ஆடு பாம்பே! [102]

சித்தர்கள் பெண்ணாசை, பொன்னாசை, மண்ணாசை ஆகிய மூன்று ஆசைகளையும் முற்றிலும் துறந்தவர்கள். சாதாரண மக்கள் நாடு, நகரம், வீடு, செல்வம் ஏனைய பொருள்கள் இவை யெல்லாம் நிலையானவை என்றும், இவை தங்களின் வாழ்நாள் முழுவதும் நிலைக்கும் என்றும் அறியாமையில் உழல்கின்றனர். எத்துணைதாம் திறமையாகப் பொருளைக் கையாண்டாலும் ஒருவரை விட்டுப் போகக் கூடிய நாளில் செல்வம் போய்த்தான் தீரும். எனவே, இவற்றைப் பெரிதாக மதிக்கக் கூடாது. இந்தப் பொன்னும் பொருளும் எமன் வந்து உயிரைப் பறிக்கும்போது உதவமாட்டா. உயிரானது உடலில் இருக்கும் வரை மட்டுமே பொன்னும் பொருளும் உதவும். இந்த உடலாகிய கூட்டைவிட்டு உயிர் பிரிந்து சென்றுவிட்டால் இந்த செல்வங்களால் ஆகக்கூடி யது ஒன்றுமில்லை, என்றென்றும் இன்பம் தரக்கூடிய சிவபெரு மானின் திருவடிகள் மட்டும் வேண்டும் என்று ஆடு பாம்பே என ஆச்சரியத்துடன் செல்வம் நிலையாமையைப் பற்றிய சிந் தனையை நிறுத்தி, திருவடிச் சிந்தனையை ஊட்டுகின்றார்.

பட்டினத்தார், உடலைவிட்டு உயிர்போகும்போது பொருள் கூடவராது என்று நெஞ்சத்துக்கு அறிவுறுத்துகிறார்.

உடக்கைத் தகர்த்தே உயிரை எமன் கொள்கையிலே
அடக்கமாய் வைத்த பொருள் அங்குவர மாட்டாதே [103]

என்றும்,

நல்லார் இணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே
அல்லாது வேறு நிலையுளதோ? அகமும் பொருளும்
இல்லாளும் சுற்றமும் மைந்தரும் வாழ்வும் எழில் உடம்பும்
எல்லாம் வெளிமயக்கே இறைவா! [104]

என்றும் வலியுறுத்துகிறார்.

"நிலையாமையை மிக நன்றாக அறிவுறுத்துகின்றார்கள் சித்தர்கள். நம் வாழ்க்கையில் காணுகின்ற பொருள்கள் அழியக் கூடியன. கால ஓட்டத்தில் அவை நிலைப்பதில்லை. பெருஞ் செல்வம் சேர்ப்பார் ஒருவர், காலநிலை மாறும்பொழுது செல் வம் அவரை விட்டுப் போய்விடுகின்றது. முன்பிருந்த நிலை மாறி ஏழ்மையை அடைந்துவிடுகின்றனர். இவ்வாறு சமுதாயத்தில்

எல்லாத் துறைகளிலும் கீழ்மேலாவதும், மேல் கீழாவதும் காண் கிறோம். கண் முன்னால் நிலையானது என எண்ணுவது நிலை யற்றதொன்றாகிவிடுகின்றது. அத்தனையும் வெளி மயக்கமாகும். நிலையற்ற பொருள்களின் மேல் பற்று வைப்பதைக் காட்டிலும் நிலையான கச்சியம் பதியில் வாழும் இறைவனாகிய பரம்பொரு ளின்பால் பற்று வையுங்கள்" [105] என்று பட்டினத்தார் அறிவுரை பகர்கின்றார்.

மனையாளும் மக்களும் வாழ்வுந் தனமுந்தன் வாயில்மட்டே
இனமான சுற்றம் மயான மட்டேவழிக்கேது துணை [106]

என்பது அவரது வாக்கு.

வீட்டைக் காக்கும் மனைவியும், மக்களோடு சேர்ந்து வாழும் வாழ்க்கையும், பொருளும் வாயில்வரை மட்டுமே வரும். இதற்கு இனமான உறவினர்களும் பழகிய பழக்கமும் இடு காடு வரையே வரும், இறந்தபின் போகின்ற வழிக்குத் துணை முன்பு செய்த தவமே அன்றி வேறில்லை என்று செல்வம் நிலை யாமைத்துவத்தை வலியுறுத்துகின்றார்.

வாதுற்ற திண்புயர் அண்ணாமலையர் மலர் பாதத்தைப்
போதுற்ற எப்போதும் புகலுநெஞ்சே! இந்தப் பூதலத்தில்
தீதுற்ற செல்வமென்? தேடிப்புதைத்த திரவியமென்?
காதற்ற ஊசியும் வாராது காணுங் கடைவழிக்கே! [107]

அண்ணாமலையாரின் மலர்ப் பாதங்களைப் போற்றுங்கள் புகழுங்கள் என்று வேண்டுகிறார். இந்தப் பூ உலகில் நிலைத்து இருப்பது எதுவுமில்லை என்பதைப் பட்டினத்தாருக்கு உணர்த்தி ஞானத்தை அளிக்கும் பொருட்டு மருதவாணனே சிவனாக வந்து மாட்டுச் சாண உருண்டையில் வைரத்தையும் ரெத்தினத்தையும் கொண்டுவந்து கொடுக்கிறார். அத்துடன் ஒரு சிறு பெட்டி யையும் அதில் காதற்ற ஓர் ஊசியையும், ஓர் ஓலைச்சீட்டில் "காதற்ற ஊசியும் வாராது காண் கடைநிலைக்கு" என்று எழுதிக் கொடுக் கிறார். தேடிய திரவியமும் செல்வமும் வாராது காதற்ற ஊசியைக் கூட நாம் போகும்போது எடுத்துச் செல்லமுடியாது என்பதன் உட் பொருளை உணர்ந்த பட்டினத்தார், அன்று முதல் அனைத்துச் செல்வங்களையும் உதறிவிட்டுத் துறவியானார். இதன் மூலம்

சித்தர் படைப்புகள் அனைத்தும் செல்வம் நிலையில்லாதது என்ற உண்மையினை ஆணித்தரமாக வலியுறுத்துகின்றன என்பதனை அறிய முடிகிறது.

இடைக்காட்டுச் சித்தரும்,

பொய்யான கல்வி கற்றுப் பொருள் மயக்கங் கொள்ளாமல்
மெய்யான ஞானக்கல்வி விரும்புவாய் கன் மனமே [108]

என்று இயம்புகிறார். உண்மையை அறியாக் கல்வியைக் கொண்டு பொருள் ஈட்டி மயங்கி நில்லாமல், உண்மையான ஞானக் கல்வியை விரும்புவாய் மனமே என எடுத்துரைக்கிறார்.

செல்வம் நிலைத்து நில்லாது, இன்னமும் அச்செல்வத்தின் பண்பு அவ்வாறுதான் உள்ளது.

பலரே தகையஃது அறியா தோரே
அன்னோர் செல்வமும் மன்னி நில்லாது;
இன்னும் அற்ற, அதன் பண்பே; அதனால்
நிச்சமும் ஒழுக்கம் முட்டிலை; பரிசில்
நச்சுவர் கையின் நிரப்பல் ஓம்புமதி; [109]

என்பது புறநானூறு. வாழ்வில், வாழும் தன்மையை அறியாதார் பலராவர். அவ்வறியாதாருடைய செல்வமும் நிலைத்து நில்லாது இன்னமும் அச்செல்வத்தின் நிலையாப் பண்பு அவ்வாறுதான் உள்ளது. அதனால், நாள்தோறும் ஒழுக்கத்தில் குறைபாடில் லாமல் ஒழுக வேண்டும். பொருளை விரும்பி வருவார் வேண்டும் பொருளைக் கைநிரம்ப நல்க வேண்டும் என்று நெஞ்சிற்கு ஆணையிடுகிறார்.

அறிவுடையோரிடம் செல்வம் சேராமல் வறுமையில் வாடினாலும் அவரைப் புகழ்ந்துரைக்கின்றனர்.

சீறூர் மன்னர் ஆயினும்; எம் வயின்
பாடு அறிந்த ஒழுகும் பண்பினாரே;
மிகப்பேர் எவ்வம் உறினும், எனைத்தும்
உணர்ச்சி இல்லோர் உடைமை உள்ளேம்;
நல் அறிவு உடையோர் நல்குரவு
உள்ளுதும், பெரும! யாம்உவந்து, நனிபெரிதே [110]

சிற்றூர் வேந்தராயினும் எம்மிடத்துச் செய்யும் முறை மையை அறிந்து நடக்கும் குணத்தினையுடையவர். யாம் மிகப் பெரிய துன்பமுற்றாலும் சிறிதும் அறிவில்லாதோருடைய செல் வம் பயன்படாமையின் அதனை நினையோம், நல்ல அறிவுடை யோர் மிக்க வறுமையுற்றராயினும் அவ்வறுமை பயன்படுதலின் அதனை யாம் மகிழ்ந்து மிகப்பெரிதும் நினைப்போம். அறிவில் லாதவரிடம் இருக்கும் செல்வம் நிலையற்றது என்று பதிவு செய் கிறார் புலவர்.

இதனை அடியொட்டியே நாண்மணிக்கடிகையும் குறிப் பிடுகிறது.

பிறக்குங்கால் பேர் எனவும் பேரா; இறக்குங்கால்
நில் எனவும் நில்லா உயிர் எனைத்தும் – நல்லாள்
உடம்படின் தானே பெருகும்; கெடும் பொழுதில்
கண்டனவும் காணா கெடும் [111]

பிறக்கும் அனைத்து உயிர்களும் 'போ' எனக் கூறினால் போகமாட்டா. அதுபோன்று இறக்கும்போது 'நில்' என்று சொன் னாலும் உடலில் உயிர் நிலைத்து நிற்கமாட்டாது. அதைபோன்றே திருமகளும் உடன்பட்டால் செல்வம் தானே வளரும். அதைப் போல அச்செல்வம் கெடுகின்ற காலத்தில் கண்ணுக்குப் புலனாகி யுள்ள பொருள்களும் காணாமல், நிலையில்லாமல் போய்விடும் என்று உயிர், செல்வம் நிலையாமையை அறிவுறுத்துகிறது நான் மணிக்கடிகை.

பதினெண் சித்தர்களிலேயே திருமூலருக்கு அடுத்துத் தமது கருத்துச் செறிவுள்ள பாடல்களால் இரண்டாமிடம் பிடிப்பவர் சிவ வாக்கியர் ஆவார். இவர்,

மிக்க செல்வம் நீர் படைத்த விறகுமேவிப் பாவிகாள்
விறகுடன் கொளுத்திமேனி வெந்துபோவ தறிகிலீர்
மக்கள் பெண்டிர்சுற்ற மென்னுமாயைகாண மிவையெலா
மறலிவந் தழைத்தபோது வந்துகூட லாகுமோ [112]

என்று செல்வத்தின் நிலையாமையை எடுத்துரைக்கிறார்.

இவ்வுலகில் மிக்க செல்வம் படைத்தவர்கள் உடலை இடுகாட்டில் வைத்து எரித்தும் சாம்பலாவதும் கண்டும் அறிவ தில்லை. மக்களும், பெண்டிரும் சுற்றிய சுற்றமும் இவையெல் லாம் மாயை; கானல் நீர் போன்றது ஒரு நாள் மறையக் கூடியது. இவர்களை எமன் வந்து அழைத்தபோது இவையெல்லாம் கூட வருமோ வராது, எனச் சிவவாக்கியர் பறைசாற்றுகிறார்.

பட்டினத்தார்

பூலோகத்தில் உள்ள ஊரும், உற்ற உறவினரும், உற்றுப் பெற்ற பேரும், பெண்களும் பெற்ற பிள்ளைகளும், கொண்டுவந்த சீர்வரிசையும், செல்வமும் தேசத்தில் உள்ளவரும் உண்மையல்ல. இறைவா கச்சி ஏகம்பனே நின் திருவடியே உண்மையில் சத மாகும்; நிலைத்திருப்பதாகும். அத்தகைய திருவடியைச் சரண் புகுங்கள் என வேண்டுகிறார்.

ஊருஞ் சதமல்ல; உற்றார் சதமல்ல; உற்றுப் பெற்ற
பேருஞ்சதமல்ல; பெண்டிர் சதமல்ல; பிள்ளைகளுஞ்
சீருஞ் சதமல்ல; செல்வஞ்சதமல்ல; தேசத்தில்
யாருஞ் சதமல்ல; நின்தாள் சதம் கச்சி ஏகம்பனே! [113]

என்று நிலையற்றவற்றைப் பட்டியலிடுகிறார். மனிதர்கள் யாரும் பிறக்கும்பொழுது எதையும் எடுத்து வருவதில்லை. போகும் போது கொண்டு போவதுமில்லை என்று நிலையாமையை உணர்த்துகிறார்.

பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லை; பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவதில்லை; இடைநடுவில்
குறிக்குமிச் செல்வஞ்சிவன் தந்த தென்று கொடுக்கறியாது
இறக்குங் குலாமருக்கு என் சொல்லுவேன்?
கச்சி ஏகம்பனே! [114]

என்று உண்மையை உரைக்கிறார். மனிதன் பிறக்கும்பொழுது எந்தச் செல்வத்தையும் கொண்டு வருவதில்லை. பிறந்து இறக்கும் பொழுதும் எந்தச் செல்வத்தையும் கொண்டுபோவதில்லை. இடைப்பட்ட வாழ்க்கையில் இந்த செல்வம் சிவன் தந்தது என்று அறியாமல் பிறருக்குக் கொடுக்காது இருக்கும் மனிதர்களை என்ன சொல்லுவேன் என்று சிவனை வேண்டி இறைவன் தந்த

செல்வத்தைப் பிறருக்குக் கொடுத்து இன்பம் பெற வேண்டு மென்று பட்டினத்தார் வேண்டுகிறார்.

இதற்கு மேலும் வலு சேர்க்கின்ற வகையில் வழி வழி வள்ளுவம் உணர்த்தும்.

"இளமை, யாக்கை, செல்வம், நிலையில்லாதது அறம் ஒன்றே அழியாத் தன்மை வாய்ந்தது என்றார் திருவள்ளுவர். இதே கருத்தை ஐம்பெரும் காப் பியங்களில் ஒன்றான மணிமேகலையில் சாத்தனாரும் வாழ்க்கையின் நிலையாமையை வலியுறுத்துகிறார்."

இளமையும் நில்லா, யாக்கையும் நில்லா
வளவிய வான் பெருஞ் செல்வமும் நில்லா
புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்
மிக்க அறமே விழுத்துணையாவது [115]

என்று பறைசாற்றுகிறார்.

உலகம் நிலையாமை

இறைவனால் படைக்கப்பட்ட எல்லாப் பொருளும் அழிந்தே தீரும். உடல், இளமை, செல்வம் உலகம் இவையும் அதில் அடங்கும். இவ்வுலகில் நிலையாக இருப்பது மெய்ப் பொருள் ஒன்றே. அதுவே அழிவில்லாதது. இதைச் சங்க இலக்கிய மும், சித்தர் படைப்புகளும் வலியுறுத்துகின்றன.

இவ்வுலகில் மாற்றம் பெறுவதெல்லாம் மாயை. இவ்வுல கமும் மாயையாகும். அழியக்கூடியது நிலையாக இருப்பதில்லை. உலகம் சுற்றுவது கண்ணுக்குத் தெரிவதில்லை. ஆனால் உலகம் சுற்றுகிறது என்பது மாயையாகும். நிலைத்து இருப்பது போல் தோன்றும். ஆனால், நிலைத்து நில்லாதது இவ்வுலகு என்பதை இலக்கியங்களில் காண முடிகிறது.

சங்க இலக்கியத்தில் உலகம் நிலையாமை

நில்லாமையே நிலையியற்று ஆகலின் [116]

என்று கூறுகிறது குறுந்தொகை. பல்லாற்றானும் நில்லா உலகத் தில் நிலையாக உள்ளது நிலையாமை ஒன்றேயாகும். ஊழி ஊழிக் காலமாக உலகம்தோன்றி அழிந்தது எனக் கூறுகின்றது பரிபாடல்.

தொல்முறை இயற்கையின் மதியொ
..... மரபிற் ஆக
பசும் பொன்னுலகமும் மண்ணும் பாழ்பட
விசும்பி ஊழி ஊழூழ் செல்ல [117]

இவ்வுலகில் தொன்றுதொட்டு மாறிவரும் இயல்பினை யுடைய திங்களும், ஞாயிறும்அழிந்து ஒழியும்; விண்ணுலகமும் பாழ்பட்டொழியும். இறுதியில் அழகிழந்த இயல்பினையுடைய வானமும் அழிந்திடும் படியான ஊழிகள் பல முறையாகக் கழிந் தன என்கிறார்.

பதினெண் சித்தர்களில் உலக நிலையாமை பற்றிச் சில சித்தர்கள் மட்டுமே பாடியுள்ளனர். அவர்களில் காகபுசுண்டர், இடைக்காடர், கணபதி தாசர், உலோகாயதச் சித்தர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார். குறுந்தொகை, பரிபாடல் கருத்து களைக் காகபுசுண்டர் பாடல்களில் காண முடிகிறது. காகபுசுண் டர் குறள் வெண்பாவில்;

உலகமே மாயமென வுன்மனதிற் கண்டு
நலமாக நாதனடி நம்பு [118]

என்று உரைக்கிறார்.

கானல் நீர் போன்று இவ்வுலகம் மாயமாய் அழிந்து போகும். அதனால் இறைவனின் திருவடியை நம்பி வாழ்க என உரைக்கின்றார். இத்துடன் உடல் போல் உலகம் தோன்றி அழியும் என்னும் சிவஞானசித்தியாரின் கருத்தினை ஒப் பிடுவது பொருத்த மானதாகும்.

காயத்தின் அழிவு தோற்றம் கண்டனம்; உலகில் காணாம்;
நீ இத்தை உரைத்த வாறு இங்கு என்?
எனில் நிகழ்த்தும் உண்மை
மாயத்த உலகம் பூநீர் தீ வளி வானம் ஆதி
ஆய இத்தான் ஒன்றின் ஒன்று தோன்றி நின்று அழிதலாலே
தோற்றக் கேடுகள் உடற்கு உண்டு [119]

என்பது சிவஞான சித்தியாரின் கருத்து.

மக்கள் காண்கின்ற இவ்வுலகத் தோற்றம் அழியும் தன்மை உடையது, மயக்கத்தைச் செய்யும் இவ்வுலகிற்கு நிலம் முதலிய ஐம்பூதங்களும் முதற் காரணமாக இருத்தலாலும், அவை ஒவ்வொன்றும் தோன்றி நின்று அழிதலாலும், அப்பூதக் கூட்டுற வாலாய இவ்வுலகும் தோன்றி நின்றழியும் என்று விரிவாக எடுத்துரைக்கிறார்.

இடைக்காடரும் உலக நிலையாமையும்

சித்தர் இடைக்காடரும் தமது பாடல்களில் உலக நிலை யாமையைப் பறை சாற்றுகின்றார்.

எப்பொருளுங் கனவென்றே தும்பீபற - உல
கெல்லாம் அழியுமென்றேது ம்பீபற
அப்பிலெழத் துடலென்றே தும்பீபற - என்றும்
அழிவில்லா தாதி யென்று தும்பீபற [120]

செல்வமும் உடலும் உலகமும் அழிந்துபோகும். ஆதி யென்னும் மெய்ப்பொருள் ஒன்றே அழிவில்லாதது என்பதைச் சுட்டியுள்ளார்.

பாம்பாட்டிச் சித்தரும் உலகம் நிலையில்லாதது என்னும் உண்மையை உணர்த்துகிறார். இதன்வழி, சித்தர்கள் அட்டமாசித் துக்கள் பெற்றவர்கள் என்றும் உலகத்தையும் இல்லாமற் செய்யும் சக்தி படைத்தவர்கள் என்பதையும் உணர முடிகிறது.

இப்பெரிய உலகத்தை இல்லாமற் செய்வோம்
எங்கள் வல்லபகங் கண்டு நீ ஆடு பாம்பே [121]

எனத் தமது வல்லமையை உணர்த்துகிறார்.

புறநானூற்றில் புலவர் பக்குடுக்கை நன்கணியார் உலகம் நிலையாமை உடையது. அந்நிலையாமையை உணர்ந்து நற்செயல் களைச் செய்து வீட்டின் பத்தை அடையும் நோக்குடன் பாடிய பாடல் அறியத்தக்கது.

ஓர் இல் நெய்தல் கறங்க, ஓர் இல்
ஈர்ந்தன் முழவின் பாணி ததும்ப,
புணர்ந்தோர் பூவணி அணியப், பிரிந்தோர்

பைதல் உண்கண் பனிவார்பு உறைப்ப,
படைத்தோன் மன்ற, அப்பண் பிலாளன்!
இன்னாது அம்ம, இவ் வுலகம்;
இனிய காண்க இதன் இயல்பு உணர்ந்தோரே [122]

ஒரு மனையில் சாப்பறை ஒலிக்கின்றது. ஒரு மனையில் திருமணத்திற்கு இனிய முழவு ஓசை முழங்குகின்றது. கணவ ரோடு கூடிய மகளிர் பூச்சூடுகின்றனர். ஒருபுறம் கணவரைப் பிரிந்த மகளிர் வருத்தத்துடன் கண்களினின்றும் கண்ணீர் சொரியக் கலங்குகின்றனர். இவ்வாறு பண்பில்லாதோனாகிய நான்முகன் உலகில் இன்பம், துன்பம் ஒருசேரப் படைத்தான், இவ்வுலகத் தினது இயற்கை மிகவும் கொடிது. ஆதலால், இவ்வுலகத்தின் தன்மையறிந்தோர் வீட்டின்பத்தைத் தரும் நல்ல செயல்களைச் செய்தல் வேண்டும். உலகத்தின் இயல்பை உணர்ந்தோர் இவ் வின்னாமை இனியவாகக் காணுதல் வேண்டும் என்று உரைக் கிறார். இவற்றில் உலகம் நிலையானதன்று என்ற பொருண் மையைக் காணமுடிகிறது. இதே கருத்தைக் கணபதிதாசர் என்னும் சித்தரும் உரைக்கிறார்.

காண்பது மழிந்து போகும்; காயமு மழிந்து போகும்;
ஊண்பொருள் அழிந்து போகும்; உலகமும் அழிந்து போகும்;
பூண்பணி நாகை நாதர் பொற்பதம் அழியா தென்று
வீண்பொழு தினைப் போக்காமல் வெளிதனில்
ஒளிபார் நெஞ்சே! [123]

கண்ணால் காணும் காயமும், பொருளும், உலகமும் இவையெல்லாம் ஒரு நாள் அழிந்துவிடும். அழிவில்லாத அழி யாத நாகை நாதரின் பொற்பாதம் மட்டும் அழியாது. அழியக் கூடி யவையை நினைத்து வீண்பொழுது போக்காமல் இறைவன் திரு வடியை நினைத்து வெளிக்குள் ஒளியைப் பார் நெஞ்சே என ஆச் சரியத்துடன் அறிவுறுத்துகின்றார். புறநானூற்றுப் பாடல், உலகம் அழியும் என்கிறது. சித்தர் கணபதி தாசர் உலகம் உடல், பொருள் என அழியக்கூடியதை நினைத்து வாழ் நாளை வீணாக் காமல் அழியாத் திருவடியை நினைந்து வாழ்க என வீடுபேறு அடைய நல்வழி காட்டுகிறார்.

கூத்தாட்டு அவை போன்ற உலகம்

கூத்து என்பது நாடகத்தில் (அ) தெருக்களில் மக்கள் மத்தியில் வாழ்க்கையின் இன்ப, துன்ப நிகழ்வுகளைப் படம் பிடித்துக் காட்டுவதாகும். மக்கள் மத்தியில் நடித்து மகிழ்வித்து வேடத்தைக் களைந்திடுவர். அதுபோன்றது இவ்வுலகம் என உணர்த்துகிறது புறநானூறு.

..... விழவிற்
கோடியர் நீர்மை போல முறைமுறை
ஆடுநர் கழியுமிவ் வுலகத்துக் கூடிய
நகைப்புறன் ஆக நின் சுற்றம்! [124]

விழாக் காலத்தில் ஆடுகின்ற கூத்தரது வேறுபட்ட கோலம் போல இடைஇடையே தோன்றி இயங்கி இறந்து போகின்ற இவ்வுலகத்தின் கண் பொருந்திய மகிழ்ச்சியிடத்ததாக ஆகட்டும் என்று காட்சி தோன்றி அழிகின்றது. இதனால் இவ்வுலகம் நிலையில்லாதது என்பதைத் தெளிவாகக் காண முடிகிறது. உலகம் நிலையாமை பற்றிய செய்திகள் பொருநராற்றுப் படையிலும் பெரும்பாணாற்றுப் படையிலும் இடம் பெற்றுள்ளன.

நில்லா வுலகத்து நிலைமை தூக்கி [125]
என்கின்றது சங்க இலக்கியம்.

நிலையில்லாத உலகத்தில் நிலைபேறுடைய புகழை நல்ல அறங்களைச் செய்து சீர்தூக்கி வாழ்தல் நன்றென்று அறிவுறுத்துகிறது. மேலும், இவற்றுள் புறநானூற்றில் மார்க்கண்டேயனார் என்னும் புலவர், வாழ்க்கை நிலையாமையைக் குறித்துச் சுட்டியுள்ளது சிறப்பிற்குரியது.

முன்னோர் செல்லவும் செல்லாது; இன்னும்
விலை நலப் பெண்டிரின் பலர்மீக்கூற,
உள்ளேன் ஊழியர் யான் எனப் பல்மான்
நிலமகள் அழுத காஞ்சியும்
உண்டு என உரைப்பரால், உணர்ந்தி சினோரே [126]

காஞ்சி பாடிய புலவருள் இம் மார்க்கண்டேயனாரும் ஒருவர் ஆவர். நிலையாமையுணர்வால் தவம் பூண்டு வாழும் அற

வோர் வரிசையில் நிற்கும் இச்சான்றோர், இப்பாட்டில் விசும்பை முகமாக இரு சுடரையும் கண்களாகக் கொண்ட நிலமாகிய மகள் முன்னோர் ஆகிய வேந்தர் பலர் மறையவும் யான் மறையாது உள் ளேனே என அழும் நிலையும் உண்டென நிலையாமைப் பண்பை இனிமையாகக் கூறுகிறார்.

அடுத்த உலகம் என்றென்றுமே இல்லை-கோள்
அடுத்த தல்லால் வேறு லகமும் இல்லை
படுத்தும் நரகமும் சொர்க்கமும் இல்லை - மக்கள்
பண்படா காலத்தில் புகுந்த ஓர் தொல்லை [127]

உலோகாயதச் சித்தர், பண்படாத காலத்தில் மக்கள் இந்த உலகத்தில் இருந்து வேறு ஓர் உலகம் உண்டு, அவை சொர்க்க, நரகம் என்று வகுத்து வைத்தனர். ஆனால், சித்தர்கள் வேறு உலகம் இல்லையெனவும் சொர்க்கமும், நரகமும் இல்லவே இல்லை எனவும் இவை அறியாமையால் புகுந்த தொல்லை என வும் இயம்பியுள்ளதைக் காணமுடிகிறது.

உயிர் நிலையாமை

ஒரு மனிதனுக்கு உடலும் உயிரும் இன்றியமையாதவை. மனிதன் இந்த மண்ணுலகில் பிறக்கும்பொழுது உடல் மற்றும் உயிரோடு பிறக்கிறான். ஆனால், உடலில் உயிர் குறிப்பிட்ட காலம் வரையில் தான் உள்ளது. அந்த குறிப்பிட்ட காலத்தில் அந்த உடலிலிருந்து உயிர் பிரியும் பொழுது மனிதன் இறந்தவனாகக் கருதப்பெறுகிறான். இந்த நிலையில், உடலும் நிலையில்லாத தன் மையை அடையும்பொழுது உயிரும் நிலையற்ற தன்மையை அடைந்துவிடுகிறது. உயிர் நிலையாமையைக் குறித்த சிந்தனை களை சங்க இலக்கியங்களிலும் சித்தர் படைப்புகளிலும் பயின்று வருவதனைக் காண முடிகிறது.

"உலகப் பொருள்களும் நிகழ்ச்சிகளும் தரும் இன்ப துன்பங்களை உடற் கருவி மூலம் ஏற்று நுகர்வது உயிர். பிறப்பு இறப்பிற்கு இடையே உடல் எண் ணற்ற மாற்றங்கட்கு ஆட்பட்ட போது ஒவ்வொரு மனிதனின் தனித் தன்மையைச் சுட்டுவது ஆன்மாவே. தன் உணர்வுகளைத் தானே உணர்கின்ற ஒன்றைக் குறிப்பிட உயிர், ஆன்மா, சிவன், மனம் என்ற சொற்களைப் பயன்

படுத்துகின்றனர். உலகப் பொருள்களைச் சுவைக்கவும், உலகில் செயல்படவும் உடல் உறுப்புகளை இயக்கவும் உயிர் என்ற ஒன்று இன்றியமையாதது. முன்னே அது இருந்தும், அதை உணர்ந்தும் பனிமலரையும் பளிங்குக் கல்லையும் விவரிப்பதுபோல அதை விவரிக்க இயலவில்லை" [128] என்று சொற்களால் விவரிக்க இயலா விடினும் அதன் இருப்பை அனுமானிக்கலாம் என்று கூறுகின்றனர்.

இந்தியத் தத்துவத்தில் உயிர்

"இந்தியத் தத்துவங்களில் சாருவாகம் தவிர மற்றவை உயிர் என்றொரு தனி உறுதிப்பொருள் உண்டென்பதை ஒப்புக் கொள்கின்றன. பொருளியல் வாதிகளான சாருவாகர்கள் பொருள் தன்மைக்கு மாறான 'உயிர்' என்பதைக் கற்பனை என்கின்றனர். நான்கு பூதங்களின் சேர்க்கைக்கப்பால் 'உயிர்' என்ற ஒன்று தனியே இல்லை. பூதங்களின் சேர்க்கை உடைந்து உடல் அழியும் போது உயிரும் அழிகிறது. உடலை நிலைக்களனாகக் கொண்ட ஒரு பண்பே உயிர் எனப்படுகிறது. இவ்வாறு சாருவாகம் கூறுகிறது. சாருவாகத் தத்துவத்தை மற்ற இந்தியத் தத்துவங்கள் மறுக்கின்றன. தேவப் புறம்பான பௌத்தமும் சமணமும் கூட 'ஆன்மா' உண்டென்பதை ஒப்புக் கொள்கின்றன. உடலும் புலன்களும் இயங்கும் ஒழுங்கினைக் கொண்டு அவற்றை இயக்கும் உயிர் உண்டு என்று சமணம் அனுமானிக்கின்றது. உயிர்கள் பல வென்றும் வினைகளால் கட்டுண்டு கிடக்கின்ற காரணத்தால் உழல்கின்றன என்றும் வினைப்பயன் காரணத்தால் உழல்கின்றன என்றும் சமணம் கூறுகின்றது" [129] ஆன்ம விடுதலையைப் பற்றிச் சமணம் விவரிக்கிறது.

வேதாந்தமும் சைவசித்தாந்தமும்

"பொதுவாக வேதாந்தம் எனும் சொல் தத்துவக் கருத்தின் ஒரு பிரிவைச் சுட்டுவதற்காகப் பலரால் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் வேதாந்தம் என்பது வேத இலக்கியத்தின் ஒரு சிறப்பான பிரிவாகும். உபநிடதப் பாடங்கள் அனைத்தும் வேதாந்தத்தின் அங்கமாகும். வேதக்கருத்தின் முடிவும் சிகரமும் வேதாந்தமாகும். அதில் உன்னதமான லட்சியத்தை அடைவதற்கு, மதிப்

பிட முடியாத வழிகாட்டிகளாக இருப்பது வேதங்களாகும். இந்த வேதங்கள் நான்காக பிரிக்கப்பட்டுள்ளன. இவை ரிக் வேதம், சாம வேதம், அதர்வண வேதம், யஜுர் வேதம் எனப்படும். பூரண மாகிய பரப்ரம்மத்திலிருந்து ஜீவனாகிய மனித ஆத்மா தோன்று கிறது. ஜீவன் தான் குடியிருந்த ஊனுடம்பை விட்டு நிரந்தரமான பரப் பிரம்மத்தோடு இணைந்து விடுகிறது"[130] என்னும் கூற்று எண் ணுதற்குரியது.

வேதாந்தம்

சைவக் கோட்பாடு பற்றிப் பலவாறு பலரும் விளக்கு கின்றனர். "ஆன்மா, உண்டென்று ஆன்மாவும் பரம்பொருளும் ஒன்றென்றும் வேறுபட இருப்பது செற்றுத்தோற்றமே என்றும் அத்துவைத வேதாந்தம் கூறுகின்றது. சத்து, சித்து, ஆனந்தம், என்பவற்றின் இயல்பான ஆன்மா, மாயை வலையில் சிக்குண்டு தன் பரம்பொருள் தன்மையை மறந்து நில்லாதனவற்றை நிலை யின என்று பிறழ உணர்ந்தும் பிறவித் தொடரில் சுழல்கின்றது. ஆத்ம ஞானம் கைவரப் பெற்றால் அறியாமையால் விளைந்த மாய இருள் விலக ஆன்மா தன்னையறிந்து இன்பமுறும். சைவ சித்தாந்திகள் இறைவன், உயிர், உலகு ஆகிய மூன்றும் அநாதிப் பொருள்கள் என்பர். இவற்றை முறையே பதி, பசு, பாசம் என்று கூறுகின்றனர். ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களால் சூழப்பட்ட ஆன்மா இறையின்பத்தைச் சுவைக்க முடியாமல் உழல் கின்றது. இம்மலங்களின் தாக்கத்தைச் செயலிக்கச் செய்வதன் மூலம் ஆன்மா இறையின்பதைச் சுவைக்க முனைகின்றது," [131] என்பது சைவசித்தாந்தமாகும்.

உயிர்களின் வகைப்பாடு

உலக உயிர்களை அவற்றின் அறிவு நிலையை ஆறு வகையாகப் பேசுகிறதைத் தொல்காப்பியம்,

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே

ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப் படுத்தினரே [132]

என்று கூறுகிறது.

"ஐம்பூதங்களால் ஐந்து அறிவு வரை அமைகின்றன. ஆறாவது அறிவு மனிதர்க்குரிய மனமாக அமைகிறது. ஓர் அறி உற்று அறிவது, இரண்டு அறி அதனொடு நாக்கு சுவையும் அறி வது, மூன்று அறி அவற்றோடு மூக்கு வாசனைகளை அறிவது, நான்கு அறிவது அவற்றொடு பார்த்தலை அறிவது, ஐந்து அறி அவற்றொடு கேட்டலை அறிவது, ஆறு அறி அவற்றொடு மனம் என்கிறது."[133]

உடலோடு நின்ற உயிரும் இல்லை. இறப்பு, உண்மை பொய்யன்று எனப் புறநானூறு தெளிவுறுத்துகிறது.

இடுதிரை மணலினும் பலரே; சுடுபிணக்
காடுபதி ஆகப் போகித் தம்தம்
நாடு பிறர் கொளச் சென்றுமாய்ந்தனரே
அதனால் நீயும் கேண்மதி யத்தை வீயாது
உடம்பொடு நின்ற உயிரும் இல்லை [132]

இந்நாட்டை ஆண்ட வேந்தர்கள் திரைகள் கொண்டுவந்து இடும் நுண்ணிய மணலினும் பலராவர். பிணங்கள் சுடும் சுடு காட்டைத் தமக்கு முடிவிடமாகக் கொண்டு சென்று சேர்ந்து, தமக்குரிய நாட்டை மற்றவர் கொண்டதனால் இறந்துபட்டனர். அதனால் நீயும் கேட்பாயாக, இறவாமல் உடம்போடே நின்ற உயிர் இல்லை என உயிர்நிலையாமையை எடுத்து உரைக்கின்றது புறநானூறு. சித்தர்களும் உயிர் நிலையாமையினைப் பலவாறாக எடுத்தியம்புகின்றனர்.

உயிர்த் தத்துவமும் சித்தர்களும்

"சித்தர்கள் உடம்பும் உயிரும் ஒன்றே எனவும் உடம் பில்லாமல் உயிர் வாழ முடியாது. இரண்டும் தனியாக இயங்க முடியாது. உடம்பிலே தோன்றி உடம்புடன் வாழ்வதே உயிராகும். உடம்பு அழிந்தால் உயிரும் அழிந்து போகும். ஆதலால் உடம்

பைப் பாதுகாப்பதே உயிரைப் பாதுகாப்பதாகும். உடம்பை அப் பழுக்கின்ற மாசுமறுவின்றி - வலுவுடையதாக வைத்துக் காப் பதே உயிரைக் காப்பதாகும்"[135] என்கின்றனர். இதுவே சித்தர்களின் கொள்கையும் நம்பிக்கையுமாகும்.

உடம்பார் அழியின் உயிரார் அழிவார்;
திடம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார்;
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன்; உயிர் வளர்த்தேனே [136]

என்பது திருமூலர் திருமந்திரம். உடல் அழிந்துவிட்டால் அவ்வுட லில் உள்ள உயிரும் அழிந்துவிடும். உடலும் உயிரும் அழிந்துவிட் டால் மேலான மெய்யறிவு பெற இயலாமல் போய்விடும். உடல் நலமாக இருந்தால்தான் அவ்வுடலில் உயிர் நிலைபெறும். எனவே, உடலை வளர்த்து வாழும் வழியை அறிந்தேன் என்கிறார் திருமூலர்.

உயிரின் பிறப்பு மகத்துவம்

உயிரின் பிறப்பு, செயல் பற்றிச் சிவவாக்கியர் விளக்கம் நல்குகிறார்.

கருத்த ரிக்கும் முன்னெலாம் காயம் நின்றது தேயுவில்
உருத்தரிக்கும் முன்னெலாம் உயிர்ப்பு நின்றது அப்புவில்
அருள் தரிக்கும் முன்னெலாம் ஆசை நின்றது வாயுவில்
திருக்கறுத்துக் கொண்டதே சிவாயம் என்று கூறுவீர் [137]

கருத்தரிக்கும் முன்பு காயமானது நெருப்பில் இருப்பதாக வும், உருவத்தைத் தரிக்கும் முன்பே உயிர் ஆனது நீரில் நிற்ப தாகவும் கூறி, அருளைப் பெறுவதற்கு முன்பு ஆசை நின்று இருந்தது என்கிறார் சிவவாக்கியர்.

உடலுடன் உயிர் இணைந்து மனிதனாக உருவாகிறான். வினையின் பயனாலேயே உயிர் உடலை எடுக்கிறது. வினைப் பயனே உயர் குலத்தில் பிறப்பதற்கும் உயர்ந்தவர், தாழ்ந்தவர் ஆவதற்கும் காரணமாக அமைகிறது. இதனைக் கொங்கண நாயனார்,

ஊமை யெழுத்தே யுடலாச்சு மற்றும்
ஓமென் றெழுத்தே யுயிராச்சி
ஆமிந் தெழுந்தை யறிந்து கொண்டு விளை
யாடிக் கும்மி யடியுங்கடி [138]

என்று பாடுகிறார். உடற் ஒரு கருவியே. ஓங்கார எழுத்தே உயி ராகும். இதை அறிந்தவர்கள் ஆனந்தமாக இருப்பர் என்கிறார். உயிர் ஓம் என்றால் அது உள்ளும் புறமும் நிறைந்திருக்கிறது. இத் திறத்தை அறிந்தவர்கள் சித்தர்கள். தம்மை அறிந்தவர்கள் என்றும் இவர்களைக் குறிப்பர். அதனாலே சித்தர் 'அகம் பிரம்மம் - நீயே கடவுள்' என்னும் தத்துவத்தை எய்திப் பிறர்க்கும் வழிகாட்டிச் செல்கின்றனர்.

வினைப்பயனாலே உயிர் உடலை எடுக்கின்றது என் பதைப் பட்டினத்தார்,

வினைப் போகமே ஒரு தேகங்கண்டாய்!
வினைதான் ஒழிந்தால்
தினைப் போதளவும் நில் லாதுகண்டாய்! சிவன் பாதம் நினை!
நினைப் போரை மேவு; நினையாரை நீங்கி
இந்நெறியில் நின்றால்
உனைப்போல் ஒருவருண்டோ மனமே
எனக்கு உற்றவரே? [139]

என்று வினவுகிறார். இவ்வுயிர் முற்பிறவியில் செய்த வினையின் பயனாக உடலை எடுக்கின்றது. வினைமுடிந்து விட்டால் சிறிது நேரம் கூட உடலில் உயிர்தங்காது. வினையில்லையென்றால் உனக்கு நிகர் உன்னைப் போல் வேறு ஒருவர் இல்லை என்று கூறு கிறார்.

"உடலை விட்டு நீங்கிய பிறகு உயிரானது எந்த உருவத்தில் இருந்து தோன்றியதோ அந்த உருவத்தைச் சென்றடைந்து விடும். உயிர் சிவத்துடன் சேரும்பொழுது தன்னையே அழித்துக் கொள்ளும். சிவமும் அதன் தன்மையினை அழிக்கும். சிவத் தினால் அழிக்கப்பட்ட உயிரானது சக்தியினை அடையும். சக்தியும் தன் தன்மைகளொழிந்த உயிரினைத் தன்னுள் ஒன்றாக்கிக் கொள் ளும். சிவன் ஈசத்துவம் பெற்று ஒன்றுதலே "சீவேச ஐக்யம்"[140] *ஆம்*

என எடுத்துரைக்கிறார்" என்னும் இளமதி சானகிராமனின் கருத்து ஒப்புநோக்குதற்குரியது.

சிவவாக்கியர்,

உடம்பு உயிர் எடுத்ததோ உயிர் உடம்பு எடுத்ததோ
உடம்பு உயிர் எடுத்தபோது உருவம் ஏது செப்புவீர்
உடம்பு உயிர் எடுத்தபோது உயிர் இறப்பது இல்லையே
உடம்பு மெய் மறந்து கண்டு உணர்ந்து ஞானம் ஓதுமே! [141]

என்று விவரிக்கிறார். சமாதி நிலையை அடைந்தவர்களுக்கே ஞானம் கிட்டும் என்றும் உடம்பு உயிரை எடுப்பதில்லை என்றும், உயிர் அருவமாக இருக்கிறது என்றும், உயிரை எடுத்தபோது உயிர் இறப்பது இல்லை என்றும் விளக்குகிறார். சித்தர்கள் உயிருடன் இருக்கும்போதே உடலைவிட்டு உயிரைப் பிரித்துப் பிரமத்தை அடைவர். அதற்கு எடுத்துக்காட்டு திருவண்ணாமலையில் வாழ்ந்த ரமணமகரிஷி. உடலில் இருந்து உயிர் கபாலத்தின் வழி யாகப் பிரிந்து சென்றது. அவர்கள் இறப்பதில்லை. அதை போன்று சித்தர்கள் தாம் இருக்கும்போது கூடுவிட்டுச் கூடு பாயும் திறம் படைத்தவர்களாவர். சமாதி நிலையை எய்தியவர்களும் ஞானத் தைப் பெற்றவர்களும் உடலைவிட்டு உயிர் பிரிந்தாலும் அவர்கள் இறப்பதில்லை. இதற்குச் சான்றாகக் கீழ்வரும் உரையாடலைக் காண்பது இன்றியமையாததாகும்.

"பரமஹம்ஸ யோகானந்தர் சுய சரிதத்தின் மூலம் அவரது குருநாதர் யுக்தேஸ்வரர் மீண்டும் உயிர்த்தெழுகிறார் எனும் 43 வது அத்தியாயம் மூலம் காணலாம். குருதேவரே? நான் பூரியின் கொடிய மணலில் புதைத்த அதே போன்ற சரீரத்தையா தாங்கள் தாங்கி இருக்கறீர்கள்? ஆம், என் குழந்தாய், நான் அதுவேதான். இது இரத்தமும் சதையும் கொண்ட உடல்தான். நான் இதைக் கட்புலனாகாததாக உணர்ந்தாலும் உன் பார்வையில் இது ஸ்தூல உடல்தான். உன் கனவுலகில் பூரியின் கனவுலகில் பூரியின் கனவு மணலில் எந்தப் பேரண்டக் கனவு ஸ்தூல உடலை நீ புதைத் தாயோ, அதைப் போலவே முழுதும் புதிய சரீரத்தைப் பேரண்ட அணுக்களிலிருந்து நான் படைத்தேன். உண்மையில் நான் திரும்ப உயிர்த்தெழுந்திருக்கிறேன்"[142] *என்று உரையாடிவிட்டு ஒரு மணி*

நேரத்திற்குப் பிறகு அவர் மறைந்தார் என யுத்தேஸ்வர் எடுத் துரைக்கிறார்.

இது தனி ஆய்வுக்கு உரியதாகவும் அமைகிறது. இது விஞ் ஞானத்திற்குச் சவால்விடுவதாக அமைகிறது. இந்த மெய்ஞானம் ஆய்வுக்கு அப்பாற்பட்டது. ஆனால், யோகி கள், சித்தர்கள் சமாதி அடைந்தாலும் பருவத மலை, அகத்தியர் மலை, சதுரகிரி மலை, எமகிரி, திருவண்ணாமலை முதலிய இடங்களில் சித்தர்கள் மக்க ளொடு மக்களாக உடலையும் உயிரையும் எடுத்துத் தோன்றி யாருக்கு எதைச் செய்ய வேண்டும் என்பதை அறிந்து அவர்கள் செய்து விட்டு அக்கணமே மறைந்தும் விடுகின்றனர். இதனையே சித்தர்கள் உடம்பு உயிரை எடுத்தது என்று குறிப்பிடுகின்றனர். சாதாரண மக்களுக்கு உடலும் உயிரும் நிலையானவை இல்லை என்பதனை அறியமுடிகிறது.

"சித்தர் தத்துவம் கூறும் அறிவியல் தத்துவ ஆய்வுகளும் பலகோடி ஆண்டுகளாக நிகழும் வரலாற்றுச் சான்றுகளும் மரண மென்பது தவிர்க்க முடியாத முடிவென்பதைக் காட்டி, உயிர் வாழ்க்கையின் நிலையாமையை உறுதிப்படுத்துகின்றன. நின் றதை இயக்கவும் இயங்குவதை நிறுத்தவும் மனி தனின் அறிவிய லறிவு துணை செய்கிறது. ஆனால் மரணத்தைத் தடுக்கவோ மாண் டதை மீட்கவோ போன உயிரை மீட்கவோ மனிதனால் முடிய வில்லை"[143] என்று கு. நாராயணன் சுட்டுகிறார்.

உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பைப் பீர்முகமது சித்தர்,

இந்த உடலுக்கு வேரென்ன தூரென்னசிங்கி - அது
இந்த உடலுக்கு உயிராதி மூலமே சிங்கா [144]

என்று வினாவெழுப்பி அதற்கு விடையும் தருகிறார்.

பிராணனுக்கு வேர் இந்த மூலாதார நாபியில் இருக்கும் நாடிதான். புலன்களின் பற்றுதலால் பிராணனுக்கு அசைவேற்படு கிறது. இடைவிடாது அவ்வசைவினால் இந்தப் பிராண நாடிக்குத் தேய்வு ஏற்பட்டு அறுத்துவிட்டால் பிராணன் உடலை விட்டு ஓடிப் போய்விடும். அதுதான் இந்த உடலுக்கும் உயிருக்கும் உள்ள

இயல்பாகும். இவற்றை அறிய வேண்டுமானால் முதலில் தன்னை அறிய வேண்டும் என்கின்றனர் சித்தர்கள்.

தன்னை அறியுந் தலமெது சொல்லடி சிங்கி - அதை
கண்ணிடையான நடுநிலையல்லவோ சிங்கா [145]

தன்னை அறியும் இடம் இரண்டு கண் நடுவில் அமைந்த நெற்றியே ஆகும். அங்குத் தான் தன்னை அறிய முடியும் என உணர்த்துகிறார்.

உயிர் நிலையில்லாதது,

ஆண்டொறு நூறு கற்பம் ஒளடத மூலியுண்டு
நீண்டதோர் காயசித்தி நெடுநாளைக் கிருந்த பேரும்
மாண்டு தான் போவாரெல்லாம் வையகத் திருப்பாருண்டோ
தீண்டொணா நாகை நாதர் சீர்ப்பதந் தேடு நெஞ்சே!" [146]

என்று எடுத்துரைக்கிறார் கணபதிதாசர்.

ஒருவர் இவ்வுலகில் நீண்ட ஆயுள் பெற்று அதாவது நூறு கற்பங்கள் (ஒரு கற்பம் என்பது 432 கோடி வருடம் கொண்ட பிரமனது ஒருநாள்) வாழச் சித்த வைத்தியத்திலே மருந்துகள் உண்டு. அங்ஙனம் அத்தனைக் கோடி காலம் வாழ்பவர்கள் கூட ஒருநாள் இறந்துதானே போகவேண்டும். அவ்வாறின்றி இவ் வுலகில் உயிருடன் நீடித்திருப்பார். யாருமில்லை. எனவே, என் இனிய மனமே! யாராலுமே எளிதில் அடைய இயலாத நாகை நாதரின் திருவடிகளைத் தேடி வணங்கிச் சரண் அடைந்து வாழ் வாயாக என நெஞ்சிற்கு வலியுறுத்துகிறார்.

சித்தர்கள் நீண்ட வருடங்கள் வாழ்ந்தமைக்குக் காரணம் அவர்கள் செய்தயோக முறையும், காய கற்பமுமேயாகும். காயத்தை வலிமையுள்ளதாகச் செய்வது என்ற வித்தையை அறிந்தவர்கள் "பாபாஜி கி.பி. 203 இல் நவம்பர் 30 இல் தமிழ் நாட்டில் பரங்கிப்பேட்டையில் பிறந்தவர். பின்னர் அகத்திய ரிடம் உபதேசம் பெற்று தீட்சை பெற்றார். கிரியா குண்டலினி யோகத்தைக் கற்றுக்கொண்டு இன்றும் இரண்டாயிரம் ஆண்டு களாக வாழ்ந்து வருகிறார் என்ற செய்தியும் பாபாஜி பொது மக்களுக்கு இடையே வெளிப்படத் தோன்றும் காலம் விரைவில்

வரும் என்றும் கி.பி. 2053இல் நடக்க விருக்கும் உலகச் சமய மற்றும் யோக விவாத மன்றத்தை ஒட்டி நடக்கும் என்றும் யோகி ராமையா சுட்டிக் காட்டியிருக்கிறார்" [147] என்னும் செய்தி எண்ணுதற்குரியது.

திருமூலர் போல் பாபாஜியும் வாழ்ந்து வருகிறார் என் பதனைப் பாபாஜியும் பதினெண் சித்தர் கிரியா யோக மரபும் என் னும் நூலின் மூலம்அறிய முடிகிறது. இவ்வழியும் உடலையும், பிராண உயிர் சக்தியின் ஆற்றலை எப்படி அதிகரிக்கும் விதத்தைக் கிரியா யோகத்தின் மூலம் அடயோகத்தின் மூலமும் ஆயுளை நீட் டிக்கலாமே தவிர உடல் ஒருநாள் அழியும், உடல் அழியும்போது உயிரும் அழியும். ஆனால், உடலையும் உயிரையும் அழிவதைச் சித்தர்கள் காய கற்பத்தினாலும் யோகத்தாலும் நீட்டிக்கின்றனர்.

சித்தர்கள் காரணம் இல்லாமல் காரியங்கள் செய்யமாட் டார்கள். அதைப் போன்று அவர்கள் காயகற்பம் உட்கொண்டனர் என்றால் அதிலும் ரகசியம் உண்டு என்பதைத் "திருமந்திரம் உட லும் வெப்பநிலையும்" என்னும் கட்டுரையின் வழி அறிய முடி கிறது.

"உடல் அழிந்துவிட்டால் அதிலுள்ள உயிரும் உணர்வும் சேர்ந்தே அழிந்துவிடும். ஆகையால் அவர்களால் உண்மையான அறிவினைப் பெற்றிட இயலாமற் போகலாம். இதற்கு வழியானது உடலை அழியாமற் பாதுகாப்பதாகும். உடல் அழியாமல் இருக் கும் இரகசியமே காயகற்பம். இவற்றை உட்கொண்டுதான் உடலை அழியாமல் காத்து ஆயுளை நீடிக்க முடியுமே தவிர நிரந் தரமாக உடலோடு இருக்க இயலாது. தன்னை அறிந்து கொள்ளும் பொருட்டே பல வகையான காயகற்பங்களைச் சித்தர்கள் பயன் படுத்தியுள்ளனர் என்பதை ஆய்வு மூலம் அறிய முடிகிறது." [148] அதன் சிறப்பினை அறிவது இன்றியமையாததாகும்.

காயகல்பம் விளக்கம்

காயம் என்றால் உடல்; கல்பம் என்றால் ஆயுளை நீட் டிக்கும் மருந்து! என்பது பொருளாகும். "அகத்திய முனிவர், பொதிகை மலையிலிருந்து சதுரகிரிக்கு வந்து மாவூற்று மகா லிங்கர் கோயிலுக்கு வடப்புறமுள்ள கும்ப மலையில் ஆசிரமம்

அமைத்துத் தங்கியிருந்தார். ஒருநாள் அவரைப் பார்க்க, ராஜேந்திர புரத்து அரசனான வீரசேன திருமூலருடைய மனைவி குணமதி மற்றும் இளவரசர் களாகத் தன்மார்த்தன, சூரசேனன், அவர்தம் மனைவியர்களான தனமதி, சுகமதி ஆகிய ஐவரும் வந்திருந்தனர். அந்த ஐவரும் அகத்தியரை வணங்கி உபதேசம் செய்தருளுமாறு வேண்டினர். அவர்களை நோக்கி அகத்திய முனிவர் கூறியதாவது. இறவா நிலையை அடைவதற்கு உங்களிடம் திடசித்தமும் வைராக்கிய மும் இருக்கிறது. இருப்பினும், நீங்கள் முதலில் தேகத்தைக் காய கல்பங்களால் சித்தி செய்து கொள்ள வேண்டியது அவசியமாகும். கற்பம் என்பது பல மூலிகைகளாலும் மூப்புச் சத்துக்களாலும் முறை யோடு செய்தால் அமிழ்த மாகும். அதன் பாகம் பல வகை யுண்டு. அக்கற்பங் களை உலகத்தில் எம் போன்ற முனிவர்கள் புசித்த விவரமாவது.

1. நந்தீஸ்வரர் 100 வகைக் கற்பம்
2. போகமுனிவர் 44 வகைக் கற்பம்
3. கொங்கணர் 16 வகைக் கற்பம்
4. திருமூலர் 66 வகைக் கற்பம்
5. கோரக்கர் 96 வகைக் கற்பம்
6. உரோமரிஷி 96 வகைக் கற்பம்
7. மச்சமுனி 96 வகைக் கற்பம்
8. இராமதேவர் 96 வகைக் கற்பம்
9. அகத்தியர் 10 வகைக் கற்பம்

உங்களால் அத்தனை கற்பங்களையும் உட்கொள்ள முடி யாது. ஆகையால் நீங்கள் எத்தனை கற்பங்கள் உட்கொள்ள முடியுமோ அத்தனையையும் சிறிது சிறிதாகப் புசித்துக் காயசித்தி செய்து கொள்ளுங்கள்" [149] என்பதன் மூலமும் சித்தர்கள் கற்பங் களின் மூலமும் யோகத்தின் மூலம் அதிக ஆண்டுகள் பிணி, மூப்பு இல்லாமல் உடலும், உயிரும் நிலையில்லாதவை என்பதை உணர்ந்து வாழ்ந்துள்ளனர் என்பதை உணர முடிகிறது. திருமூலர், திருமந்திரத்தில் உயிர் நிலையாமையைப் பற்றிப் பத்துப் பாடல் கள் பாடியுள்ளார்.

தழைக்கின்ற செந்தளிர் தண்மலர்க் கொம்பில்
இழைக்கின்ற எல்லாம் இறக்கின்ற கண்டும்
பிழைப்பு இன்றி எம்பெருமான் அடி ஏத்தார்
அழைக்கின்ற போது அறியார் அவர் தாமே [150]

துளிர்க்கின்ற செம்மையான தளிரையும், குளிர்ச்சியான மலரையும் உடைய பூங்கொம்பிலே தோன்றுகின்றவை எல்லாம் சருகாக மாறுவதைக் கண்டும், தவறுதல் இன்றி உயிருள்ள போதே இறைவனது திருவடியை வணங்கார் அவர்கள் எமனிடம் இருந்து அழைப்பு வந்தபோது இறைவனை வணங்காதவராவர். காலத்தையறியாதவராக இருக்கின்றார்கள். எனவே, உயிர் உள்ள போதே அவர்கள் இறைவனின் திருவடியை நினைத்துப் பயன்பெறுக என்கிறார்.

ஐவர்க்கு ஒருசெய் விளைந்து கிடந்தது
ஐவரும் அச்செய்கையைக் காத்து வருவார்கள்
ஐவர்க்கு நாயகன் ஓலை வருதலால்
ஐவரும் அச்செய்கையைக் காவல் விட்டாரே [151]

பிரம்மா, திருமால், உத்திரன், மகேஸ்வரன், சதாசிவம் இவர்கள் உடலில் உயிரின் வினையால் நுகரப்பட்டு இருப்பர். இந்த ஐவரும் ஐவருக்கு நாயகனான சிவனிடமிருந்து ஓலை வரும் போது உடலை ஓம்பாதுவிடுவர் என உயிர்பிரிந்து செல்லும் உயிர் நிலையாமையை உணர்த்துகின்றனர் சித்தர்கள்.

மகாத்மா காந்தி, பற்றின்றி வாழ்தல் என்னும் நூலில் உயிர் நிலையாமைக்கு எளிமையான விளக்கம் தருகிறார்.

"உயிர்கள் பிறப்பதற்கு முன்னும் இறந்தபின்னும் கண் களுக்குப் புலப்பட மாட்டா; அந்நிலைகள் வெளித்தோன்றா தவை"[152] *என உயிர்நிலையில்லாதது எனச் சுட்டுகின்றார்.*

கறந்தபால் முலைப்புகா கடைந்த வெண்ணெய் மோர்புகா
உடைந்துபோன சங்கினோசை யுயிர்களு முடற்புகா
விரிந்த பூ வுதிர்ந்தகாயு மீண்டுபோய் மரம்புகா
இறந்தவர் பிழைப்பதில்லை யில்லை யில்லை
யில்லையே [153]

பசுவின் மடியிலிருந்து கறந்தபால் மீண்டும் போய் அம் மடியில் புகாது. அதுபோலக் கடைந்தெடுத்த வெண்ணெய்யும் மீண்டும் போய் மோருக்குள் புகாது. சங்கு உடைந்து அதனுள் ளிருந்து வெளிவரும் உயிர் மீண்டும் சங்கினுள் போய் தங்காது. மரத்திலிருந்து உதிர்ந்த பூவும், காயும் மீண்டும் மரத்தில் போய் ஒட்டிக்கொள்ளா. இவையெல்லாம் எப்படிச் சாத்தியமில்லையோ அதுபோலவே, மனித உடலை விட்டுப் பிரிந்து போன உயிரும் எத்தனை பேர் கதறி அழுதாலும் மீண்டும் உடலில் வந்து புகாது. எனவே, உயிரோடு இருக்கும் வரை இறைவனை நினையுங்கள் என்கிறார். சிவவாக்கியச் சித்தர், எல்லோருக்கும் தெரிந்த, பார்த்த இவ்வெளிய உவமைகளைக் கொண்டு நிலையாமையை உணர்த்துகிறார். சிவவாக்கியர், அனைவரின் நெஞ்சிலும் நீக்கமற நிறைந்தும் அனைவரும் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணமும் உயிர் நிலையானதன்று என்னும் கருத்தை எடுத்தியம்பியுள்ளதை அறிய முடிகிறது. இதனைப் புறநானூற்றுப் பாடலும் சுட்டுகிறது. உடலோடு நின்ற உயிர் இல்லை என்று சித்தர்களும், கறந்தபால் முலைபுகா என்று உயிர் நிலையாமையைச் சங்க இலக்கியமும் சுட்டுவது ஒப்பு நோக்குதற்குரியது. உயிர் நிலையாமை பற்றிப் புற நானூறு விளக்குகிறது.

மடை வேண்டுநர்க்கடை அருகாது,
அவிழ் வேண்டுநர்க்கு இடை யாருளி
விடை வீழ்த்துச் சூடு கிழிப்ப
நீர்நிலை பொருத்த வார்மணல் அடைகரை,
காவு தோறும் .....
மடங்கல் உண்மை மாயமோ அன்றே [154]

ஆட்டுக்கிடாயை வெட்டி வீழ்த்தி, அதன் இறைச்சியைக் கிழித்து, சூட்டுக் கோலிற் கோத்துச் சூட்டிறைச்சியைச் சமைத்து, தெய்வங்கட்கு இலையில் பலி இடுதல் போல, மடைவேண்டு நர்க்கு இலைகளில் படைத்துச் சமயம் பார்த்துக் குறையாமல் கொடுத்தும் சோற்றுணவு வேண்டுநர்க்குச் சமயத்தே வேண்டுவன அருளியும் யமன் உயிர்களைக் கொண்டு செல்வது உண்மை, பொய்யன்று என அறிவிக்கின்றன. பட்டினத்தாரும் உயிர் நிலை

யாமையைப் புலப்படுத்தி உயிர்க்குத் துணை இறைவனின் திருப் பாதம் என வலியுறுத்துகிறார்.

காடோ? செடியோ? கடல் புறமோ? கனமே மிகுந்த
நாடோ? நகரோ? நகர் நடுவோ? நலமே மிகுந்த
வீடோ? புறத்திண்ணையோ? தமியேன் உடல் விழுமிடம்?
நீள்தோய் கழுக்குன்றி லீசா! உயிர்த்துணை நின்பதமே! [155]

சித்தர்கள் காடுகளில் வாழ்ந்தும் காற்றைப் புசித்தும் கிழிந்த ஆடையைச் சுற்றியும், வீடு இருந்தாலும் மெய்ஞ்ஞான வீட்டினைக் கைக்கொள்ளும் பொருட்டு எல்லாவற்றையும் தியா கம் செய்து காடு, செடி, கடல், நாடு, நகரம், வீடு புறத்திண்ணை யென எங்கு உடல் விழுமோ என்பதை அறிந்திருக்கின்றனர் என்பதை மக்களுக்கு உணர்த்தும் பொருட்டு உயிருக்குத் துணை இறைவனின் திருப்பாதம் என உறுதியாகக் கூறுகின்றனர்.

விட்டுவிடப் போகுதுயிர்!
விட்டஉடனே உடலைச்
சுட்டுவிடப் போகின்றார்
சுற்றத்தார் பட்டதுபட்டு
எந்நேரமும் சிவனை
ஏந்துங்கள்! போற்றுங்கள்!
சொன்னேன் அதுவே சுகம் [156]

என்றும்,

ஆவியோடு காயம் அழிந்தாலும் மேதினியில்
பாவி என்று நாமம் படையாதே! மேவியசீர்
வித்தாரமும் கடம்பும் வேண்டா மடநெஞ்சே!
செத்தாரைப் போலே திரி [157]

என்றும் சித்தர்கள் வலியுறுத்துகின்றனர். உடலைவிட்டு உயிர் பிரியும் பொழுது உடலும் உயிரும் நிலையற்றவை ஆகிவிடுகின் றன. எனவே, இடைப்பட்ட வாழ்க்கையோட்டத்தில் தீமை செய்யாமல் இறைச் சிந்தனையுடன் வாழும் அறவாழ்க்கையை வாழ, பட்டினத்தார் வலியுறுத்துகிறார்.

இதனைக் கணபதிதாசரும்

உறக்கமும் விழிப்பும் போல உடல் பிறந்திறக்கும் தன்மை
சிறக்கவே அறிந்தும் இந்தச் செகவாழ்வை
மெய்யென்றெண்ணிக்
குறித்தலை குலாமர் சொல்லைக் குறிப்புடன் நம்பலாமோ?
மறக்கொணா நாகை நாதர் மலரடி வணங்கு நெஞ்சே [158]

என்று குறிப்பிடுகிறார்.

தூக்கமும் விழிப்பும் போல இம்மண்ணுலகில் உயிர்களானவை இறக்கின்றன. பின்பு தம்முடைய வினைகளுக்கு ஏற்பப் பிறக்கின்றன. உடலும் இத்தன்மை வாய்ந்தது. இது அனைவரும் நன்கு அறிந்த உண்மையாகும். இங்ஙனம் நன்றாக அறிந்திருந்தும் இவ்வுலக வாழ்வை உண்மையானது என்று எண்ணி வாழும் சில கீழ்மக்களின் சொல்லை நம்பக்கூடாது. எனவே, இவ்வுலகில் நிலையானவை என்றுமே மறக்க இயலாத நாகை நாதரின் திருவடிகளே ஆகும். எனவே, அவருடைய மலர் போன்ற மென்மையான திருவடிகளை மனமே நீ வணங்குவாயாக என அறிவுரை பகர்கின்றார்.

உயிர் நிலையாததென்பதைத் திருவள்ளுவ நாயனாரும்,

ஆத்துமம் பிரிந்தின்பின் னதிலிருப்ப தென்னவயம்
பூத்தான் மாய்ப்புதைத்துப் போட்டுரவை சல்லாவே
சாற்று மலர் பொழிந்து சாய்ந்துமுடி தானசையக்
காத்துசலாஞ் செய்தெங்கள் கர்த்தனே யெனத்து திப்பார் [159]

என விளம்புகிறார்.

ஆத்துமாவானது சரீரத்தைவிட்டுப் பிரிந்த பின்னர் அந்த சரீரத்தில் ஒன்று மில்லை. ஆகையால், அந்தச் சவத்தை மெதுவாகப் புதைத்து மண் மேலே போட்டு, பூக்களால் அலங்காரஞ் செய்து வணங்குவார்கள் என்று ஞானவெட்டியான் 1500 என்னும் நூலில் மூலம் அறிய முடிகிறது.

திருவள்ளுவ நாயனார் கருத்தைப் பாம்பாட்டிச் சித்தரும், ஒத்துக் கொள்கிறார்.

உயிர்போன பின்பு என்ன இருந்தாலும் இந்த உடலுக்குள் செல்லாது என்றும், மண்ணைத் தான் விழுங்கும் என்றும் எடுத் துரைக்கின்றார்.

முக்கனியுஞ் சர்க்கரையும் மோதகங்களும்
முதிர் சுவைப் பண்டங்களும் முந்தி உண்டவாய்
மிக்க உயிர் போன பின்பு மண்ணை விழுங்க
மெய்யாகக் கண்டோம் [160]

என்று பகர்கின்றார்.

என்றும் நிலையாக நிற்கும் இறைவனையே நீ தொழுது நில் உலகனைத்தையும் படைத்துத் தந்த இறைவனையே துதித்து நில் என்றும் மக்கள், பெண்டிர், சுற்றம், மருமக்கள், மற்று முள்ளோர் யாரும் உடன் வருவதில்லை என்றும் சாற்றுகிறார்.

சித்தர்கள் அமுதத்தையும், காயகற்பத்தையும் உண்டு உடலையும் உயிரையும் அதிக நாள் நீட்டிக்கும் வழிமுறையை நன்கு அறிந்தவர்கள் என்னும் செய்தியை இடைக்காட்டுச் சித்தர் பாடலில் காணமுடிகிறது.

அண்ணாக்கை யூடே யடைத்தே அமுதுண்ணேன்
அந்தரத் தரத்தை அப்பொழுதே யெண்ணேன்
விண்ணாளும் மொழியை மேவிப் பூசைப் பண்ணேன்
மெய்ஞானம் ஒன்று அன்றி வேறே ஒன்றை நன்னேன் [161]

என்பது அவரது கருத்து.

அண்ணாக்கெனும் நுனிநாவை இடையே அசையாமல் வைத்து அங்கே சிவனை நினைத்துக் கசிந்து வரும் அமுதத்தை உண்டு அதனால் கிடைக்கப் பெற்ற மெய்ஞானம் குறித்து இடைக்காட்டுச் சித்தர் தெரிவிக்கிறார்.

ஊன் நிறைந்த காயம் உயிர்இழந்துபோகு முன்னே
நான் இறந்துபோக இனி நாள் வருவது எக்காலம் [162]

என வினவுகிறார்.

வெறும் தசைப்பிண்டங்களால் ஆன இவ்வுடலிலிருந்து உயிர் போவதற்கு முன்பே 'நான்' எனும் அகந்தை அடங்கிப்

போவது எக்காலமோ? என அழகு தமிழில் அரிய கருத்தமைந்த பாடலைப் பாடியவர் பத்திரகிரியார். அஞ்ஞானம், விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம் என ஞானநிலை மூன்று வகைப் படும். இறைவன் இல்லை என்னும் தத்துவத்தைக் கொண்டது அஞ்ஞானம் எனப்படும். நடக்கும் செயல் அனைத்தும் அறிவியலின் அற் புதங்கள் என நினைக்கும் எண்ணத்தைத் தோற்றுவிப்பது விஞ் ஞானம் எனப்படும். 'அவனின்றி ஓரணுவும் அசையாது' என் னும் கொள்கையில் உறுதியாக இருந்து அனைத்துச் செயல் களும் இறைவனின் திருவருளாலே நிகழ்கின்றன என எண்ணம் கொண்டு, அதற்கேற்பத் தம் வாழ்வைச் செம்மையாக அமைத்துக் கொள்ளும் நெறி மெய்ஞானம் எனப்படும். இந்த மெய் ஞானத்தைப் பெறவே சித்தர்கள் நிலையாமைத் தத்துவத்தைப் பாடலாகவும் மெய்ஞானப் புலம்பலாகவும் பாடியுள்ளதை அறிய முடிகிறது.

சிவவாக்கியர் உயிர்நிலையாமையைத் தமது பாடலில் வலியுறுத்துகிறார்.

மாடுகன்று செல்வமு மனைவிமைந்தர் மகிழவே
மாடமாளிகைப் புறத்தில் வாழுகின்ற நாளிலே
ஓடிவந்து காலதூதர் சடுதியாக மோதவே
உடல்கிடந்துயிர் கழன்ற வுண்மை கண்டுமுணர்கிலீர் [163]

என்று, மக்களின் அறியாமையைப் புலப்படுத்துகிறார்.

மாடு கன்று செல்வம் மனைவியுடன் மைந்தருடன் மகிழ்ச் சியாக இருந்தாலும் பெரிய மாளிகைப் புறத்தில் வாழுகின்ற காலத்தில் எமன் வந்து உடனே மோதவே உடலைவிட்டு உயிர் பிரிந்து சென்ற உண்மையைக் கண்டும் உணராமல் இருக் கின்றனர். இறை ஒன்றே நிலையானது என்பதையும் மற்றவை நிலையில்லாதவை உயிரும் நிலையில்லாதது என்பதையும் உணர்த்துகிறார்.

சித்தர் கருத்துக்கு அரணாக, "ஆன்மா ஒன்றே உண்டு. உலகமும் உயிர்களும் வெறுந்தோற்றங்களே. வெவ்வேறு ஆன்மா உண்டென்று பேசுவது அறியாமை. மெய்யறிவினால் ஆய்ந் துணர்ந்தால் அவை பொய்த்தோற்றங்களே. உயிர்களும் உலக

மில்லை" [164] என மறைமலை அடிகளார் உயிரும் உலகமும் நிலை யில்லாதவை எனத் தெளிவுபடுத்துகிறார்.

அனைத்துப் புலவர்களும் "தத்துவ ஞானத்தை உணர்த் தும்" பொருட்டு மெய் உணர்தல் எனும் அதிகாரத்தில் மெய் உணர் தலின் இலக்கணத்தையே கூறுவர். பொருள்தோறும் உலகத்தார் கற்பித்துக் கொண்டு வழங்குகின்ற கற்பனைகளைக் கழித்து நின்ற உண்மையைக் காண்பது மெய்ப்பொருள் காண்பது என்பதாகும். அதேபோன்று புலவர்களும் தாங்கள் பாடிய பாடலில் "கற்றதன் பயன் இறைவனையே வணங்குதல்" என்று குறிப்பிடுகின்றனர்.

சங்க இலக்கியப் புலவர்கள் நிலையாமைத் தன்மையை உணர்ந்தால் நிலைத்த ஒன்றை எய்த முடியும் என்னும் நோக்கம் கருதி யாக்கை, இளமை, செல்வம், உலகம், உயிர் ஆகியவை நிலையில்லாதவை என உச்சநிலையை உணர்த்துகின்றனர். மானிடப் பிறவியின் பயனை மனிதன் மட்டுமே எய்த முடியும் மற்ற உயிரினங்கள் பெறமுடியாது என்று அறிவுறுத்துகின்றனர். பதினெண் சித்தர்களும் இவ்வகை நிலையாமையை ஆமோதிக் கின்றனர்.

சங்க இலக்கியப் புலவர்களும் பதினெண் சித்தர்களும் வாழ்க்கை நிலையாமை, யாக்கை, இளமை, செல்வம், உலகம், உயிர் நிலையாமை என்ற கருத்தில் உடன்பட்டு இருந்தாலும் சித்தர் பாடல்களின் வழி நிலையற்ற உடலைப் பாதுகாப்பதன் மூலம் யோகத்தின் வழியாகத் தெய்வீக நிலையை உணரலாம் என்னும் கருத்து வெளிப்படுவதை அறியமுடிகிறது. அது மட்டு மல்லாமல் உடல் அழியக் கூடியது என்றாலும் ஊனுடம்பு ஆல யம் என்பதாலும் ஜீவனே சிவன் என்பதையும் சித்தர்கள் கண்ட னர். உடலையும் உயிரையும் சித்தர்கள், காயகல்பத்தினாலும், சித் தர்கள் நீண்ட வருடங் கள் வாழ்ந்தார்கள். இருந்தாலும் உடலும், உயிரும் ஒருநாள் மறைந்தே தீரும். அதில் மாற்றமில்லை. மாறாது, அழியாது நிலைத்து நிற்பது பரம்பொருள் ஒன்றே என்பதை அறிந்து அவற்றுடன் ஒன்றியவர்கள். அதனாலேதான் "சித்தர் போக்கு சிவன் போக்கு" என்பார்கள். அப்போது சிவன், சித்தன்

என்னும் பாகுபாடில்லை. தெய்வத்தை ஒன்றியிருப்பவர்கள் மெய்யியலை கைக்கொள்ளவும் சித்தர்கள் நிலையாமைத் தத்து வத்தைப் பாடியுள்ளனர். சங்க இலக்கிய, சித்தர் படைப்புகளில் நிலையாமைத் தத்துவத்தைப் பாடியுள்ளதன் நோக்கம் மக்கள் நற்கதி அடையவும் பிறவிக் கடலை நீந்தவும், பிறவா நிலையை அடையவும் உதவும் என்பது தான் என்று உறுதியாகக் கூறலாம்.

சான்றெண் விளக்கம்

1. மதுரைத் தமிழ்ப் பேரகராதி, ப. 811
2. டாக்டர் மு. இராசமாணிக்கனார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி, ப. 5
3. தொல். பொரு. (இளம்), புறத்திணையியல், நூ. 76
4. க. வெள்ளைவாரணன், தொல், புறத்திணையியல், ப. 236
5. குணா, தமிழர் மெய்யியல், ப. 1
6. சாந்தி சச்சிதானந்தம், சத்குரு விஜயம் இரு திங்கள் ஆன்மீக இதழ், ப. 21
7. ச. தண்டபாணி தேசிகர், வள்ளுவத்தில் மெய்ப்பொருட் சுவடுகள், ப. 7
8. பரிமேலழகர் உரை, குறள். 355
9. மேலது, குறள். 423
10. சோ.ந. கந்தசாமி, இந்தியத் தத்துவக் களஞ்சியம், ப. 10
11. சோ.ந. கந்தசாமி, தமிழும் தத்துவமும், ப. 1
12. மரு. பரமகுரு, மக்கள் சிந்தனை, சமய சமுதாய இலக்கிய திங்களிதழ், ப. 24.
13. ச. சண்டபாணி தேசிகர், வள்ளுவத்தில் மெய்ப்பொருட் சுவடுகள், ப. 37
14. அரு. இராமநாதன், சித்தர் பாடல்கள், குதம். சித். பா. 1
15. தி. பாலசுப்பிரமணியன், திருமந்திர விளக்கவுரையுடன், திருமூ. சித். பா. 85
16. மு. வரதராசன், வாழ்க்கை விளக்கம், ப. 16
17. அ. தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், பக். 78 - 79
18. செ. இராஜமோகன், சித்தர் பாடல்களில் கருத்தியல் மேன்மைகள், ப. 255.

19. பரிமேலழகர் உரை, குறள். 338.
20. அ. விசுவநாதன், கலித்தொகை மூலமும் உரையும், பா. 17:9-12
21. மேலது, பா. 20 : 9
22. கு.வெ. பாலசுப்பிரமணியன், சங்க இலக்கியத்தில் புறப் பொருள், ப. 289
23. கு.வெ. பாலசுப்பிரமணியன், புறநானூறு மூலமும் உரை யும், பா. 51, 9 - 11.
24. அ. மஹாதேவயோகி விளக்கவுரை, பட்டி. பா. 5 - 0
25. மோசஸ் மைக்கேல் பாரடே, தமிழ் சித்தர் பாடல்களும் விவிலியமும், ப. 148.
26. பதினெண் சித்தர்கள், பெரிய ஞானக்கோவை, பாம். சித். பா. 40 : 3 - 4.
27. லியோ இராமலிங்கம், தொகுப்பாசிரியர், சித்தர் வழிச் சித்தர், ப. 86
28. அரு. ராமநாதன், ஞானக்கோவையென வழங்கும் சித்தர் பாடல்கள், கடு. சித். பா. 4
29. டி.என். கணபதி, தமிழ்ச்சித்தர் மரபு, ப. 191
30. பரமஹம்ஸ யோகானந்தர், ஒரு யோகியின் சுயசரிதம், பக். 626 - 627
31. பதினெண் சித்தர்கள், பெரிய ஞானக்கோவை, பாம்.சித். பா. 40, 3-4
32. மகாத்மா காந்தி எழுதிய மொழிபெயர்ப்பு, க. சந்தானம், பற்றின்றி வாழ்தல், ப. 13
33. பதினெண் சித்தர்கள் பெரிய ஞானக்கோவை, திருவள்ளுவர் ஞானம், திரு. சித். பா. 9
34. த. கோவேந்தன், சித்தர் பாடல்கள், பட்டி. சித். பா. 50
35. தமிழ்ப்பிரியன், பதினெட்டுச் சித்தர்களின் முக்கிய பாடல் களும் விளக்கங்களும், பாம். சித். பா. 4
36. அ. மஹாதேவயோகி இயற்றிய பட்டினத்தடிகள் திருப்பாற் றிரட்டு, பா. 23-24.
37. மூலவுரை பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபா, தமிழாக்கம், ல.கி. விஜயராமன், பிரேமவாஹினி, ப. 36

38. பதினெண் சித்தர்கள், பெரிய ஞானக்கோவை, சிவ. பா. 6, 3 - 4.
39. பகவான் சத்திய சாயிபாபா அருளியது தமிழாக்கம், து. குரு சாமி ஐயர், நாளாந்த நற். சிந்தனை, ப. 246
40. மா. வடிவேலு முதலியார் எழுதிய உரை, சிவவாக்கியர் பாடல் 580 மூலம், சிவ. பா. 74
41. மீ.ப. சோமசுந்தரம், சித்தர் இலக்கியம் முதற்பகுதி, ப. 207
42. அரு. ராமநாதன் ஞானக்கோவையென வழங்கும் சித்தர் பாடல்கள், கண. சித். பா. 23.
43. மேலது, கண. சித். நெஞ். பா. 95
44. சித்தர்கள் ஓர் அறிமுகம், ப. 411
45. தி. பாலசுப்பிரமணியன் திருமந்திர விளக்கவுரையுடன், திருமூ. சித். பா. 23
46. மேலது, பா. 144
47. கருணையானந்த ஞானப்பூபதிகள், ஞானக்களஞ்சியம், ப. 434
48. போகர் முனிவர் திருவாய் மலர்ந்தருளிய ஏழாயிரம் ஐந்தாவது காண்டம், சித். பா.125.
49. ப. இராமநாத பிள்ளை உரை, தாயுமானவடிகள் திருப் பாடல்கள், ப. 55
50. எஸ். கல்யாணசுந்தரம், வைராக்கிய சதகம், ப. 76.
51. ப. இராமநாத பிள்ளை எழுதிய விளக்கமும் திருமந்திர முதற்பகுதி, திருமூ. சித். பா. 198.
52. சை. சற்குணன், சித்தர் கருவூலம், பாகம் - 1, பக். 200 - 201.
53. ஆறுமுகநயினார், ஆறாதார நீவோற்பத்தி சிந்தாமணியும் தத்துவ தீபிகையும், ப. 46
54. ஸ்ரீபரமஹம்ச சச்சிதானந்த யோகீஸ்வரர் அருளிய ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம், ப. 288.
55. சொக்கலிங்கம் சுப்பிரமணியன், ஸ்ரீ ஸாயி சரித்திரம், ப. 68
56. சிதம்பர சுவாமிகள் ஒழிவிலொடுக்கம், ப. 290
57. கவிஞர் பத்மதேவன், நாலடியார் மூலமும் உரையும், பா. 22
58. சோ.ந. கந்தசாமி, புறத்திணை வாழ்வியல், ப. 125
59. மா. இராசமாணிக்கனார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி, ப. 5

60. இளம். உரை, தொல். பொரு. புறத்திணையியல், நூ. 77 - 1.
61. க. வெள்ளைவாரணன், தொல். புறத்திணையியல், ப. 238.
62. நச்சினார்க்கினியர் உரை, பத்துப்பாட்டு மூலமும் மதுரைக் காஞ்சி, பா. 235 - 237.
63. அரு. ராமநாதன் ஞானக்கோவையென வழங்கும் சித்தர் பாடல், கடு. சித். பா. 3
64. பதினெண் சித்தர்கள், பெரியஞானக்கோவை, சிவ. பா. 541 - 1
65. போகர் திருவாய் மலர்ந்தருளிய ஏழாயிரம், யாக். சித். பா. 143
66. அரு. ராமநாதன் ஞானக்கோவையென வழங்கும் சித்தர் பாடல், பட்டி. பா. 14
67. த. கோவேந்தன், சித்தர் பாடல்கள், பத்திர, சித். பா. 62
68. தமிழ்ப்பிரியன், பதினெட்டுச் சித்தர்களின் முக்கியப் பாடல் களும் விளக்கங்களும், பாம். சித். பா. 9, 1 - 2.
69. பதினெண் சித்தர்கள், பெரிய ஞானக்கேவை, பட்டி. பா. 87.
70. கு.வெ. பாலசுப்பிரமணியன், நற்றிணை மூலமும் உரையும், பா. 314 : 1 - 2.
71. ப. இராமநாதபிள்ளை எழுதிய விளக்கம், திருமந்திரம், திருமூ. சித். பா. 225.
72. தி. பாலசுப்பிரமணியன், திருமந்திரம் விளக்கவுரை, திருமூ. சித். பா. 182
73. கு.வெ. பாலசுப்பிரமணியன், நற்றிணை மூலமும் உரையும், பா. 46 : 1-2.
74. அரு. இராமநாதன், ஞானக்கோவையென வழங்கும் சித்தர் பாடல்கள், பட்டி. சித். பா. 13
75. ச. மெய்யப்பன், பட்டினத்தார் பாடல்கள், பட்டி. பா. 13
76. பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா மூலம், தொகுப்பு ந. கஸ்தூரி சந்தேக நிவாரணி, ப. 41
77. அ. விசுவநாதன், கலித்தொகை மூலமும் உரையும், பா. 17:13-16.
78. மேலது, பா. 20 : 13.
79. மேலது, பா. 12 : 12

80. ந.சி. கந்தையா, செவ்விலக்கியக் கருவூலம், அகநானூறு, பா. 353, 2 - 6.
81. தி. பாலசுப்பிரமணியன், திருமந்திரம் விளக்கவுரையுடன் திருமூ. சித். பா. 178.
82. மேலது, பா. 179
83. கு.வெ. பாலசுப்பிரமணியன், புறநானூறு மூலமும் உரையும், பா. 243 : 10-14.
84. ரா.பி. சேதுப்பிள்ளை, வழிவழி வள்ளுவர், ப. 30.
85. தமிழ்ப்பிரியன், உரையாசிரியர், நான்மணிக்கடிகை, பா. 77
86. கவிஞர் பத்மதேவன், நாலடியார் மூலமும் உரையும், பா. 11
87. தி. பாலசுப்பிரமணியன், திருமந்திரம் விளக்கவுரை, திருமூ. சித். பா. 77
88. கு.வெ. பாலசுப்பிரமணியன், நற்றிணை மூலமும் உரையும், பா. 16, 1 - 6
89. மேலது, பா. 241, 10 - 12
90. மேலது, பா. 126, 11 - 12
91. தி. பாலசுப்பிரமணியன், திருமந்திரம் விளக்கவுரை, திருமூ. சித்.பா. 168
92. ப. இராமநாதபிள்ளை எழுதிய திருமந்திரம் விளக்கம், திருமூ. சித். பா. 218
93. சு. கல்யாணசுந்தரம், நீதிசதகம், ப. 101.
94. தி. சதாசிவ ஐயர், ஐங்குறுநூறு மூலமும் உரையும், பா. 336, 3 - 4.
95. அ. விசுவநாதன், கலித்தொகை மூலமும் உரையும், பா. 8, 16 - 17.
96. பதினெண் சித்தர்கள் பெரிய ஞானக்கோவை, இடை. சித். பா. 218
97. புலியூர் கேசிகன், திருக்குறள், பரிமேலழகர் உரை, திரு. பா. 333
98. அ. விசுவநாதன், கலித்தொகை மூலமும் உரையும், பா. 21 : 10-11.
99. உ.வே. சாமிநாதையர், புறநானூறு மூலமும் பழைய உரை யும், பா. 357, 3 - 9

100. பதினெண் சித்தர்கள் ஞானக்கோவை, நெஞ்சறி விளக்கம், கண. சித். பா. 23.
101. தொகுப்பாசிரியர் ந. கிருஷ்ணமூர்த்தி, பதினெண் சித்தர்கள் வரலாறு, ப. 106.
102. அரு. இராமநாதன், ஞானக்கோவையென வழங்கும் சித்தர் பாடல்கள், பாம். சித். பா. 40.
103. மேலது, பா. 21 : 3, 4
104. மேலது, திருஏகம்பமாலை, பட்டி. சித். பா. 5
105. ரெ. முத்துக்கணேசன், சித்தர் நெறி, ப. 31
106. பதினெண் சித்தர்கள், பெரிய ஞானக்கோவை, பட்டி. சித். பா. 107, 1-2.
107. அரு. இராமநாதன், ஞானக்கோவையென வழங்கும் சித்தர் பாடல்கள், பட்டி.சித். பா. 10
108. பதினெண் சித்தர்கள், பெரிய ஞானக்கோவை, இடை. சித். பா. 61
109. கு.வெ. பாலசுப்பிரமணியன், புறநானூறு, பா. 360, 10-14.
110. மேலது, பா. 197, 13 - 18
111. தமிழ்ப்பிரியன் உரையாசிரியர், நான்மணிக்கடிகை, பா. 41
112. பதினெண் சித்தர்கள் பெரிய ஞானக்கோவை, சிவ. சித். பா. 81.
113. மேலது, பட்டி. சித். பா. 13
114. ஞானக்கோவையென வழங்கும் சித்தர் பாடல்கள், பட்டி.சித். பா. 7
115. ரா.பி. சேதுப்பிள்ளை, வழிவழி வள்ளுவர், ப. 30
116. மு. சண்முகம் பிள்ளை, குறுந்தொகை மூலமும் உரையும், பா. 143, 3
117. பொ.வே. சோமசுந்தரனார் உரை, பரிபாடல், திருமால், பா. 1- 4
118. பதினெண் சித்தர்கள் பெரிய ஞானக்கோவை, காக. சித். பா. 5
119. சிவஞானசித்தியார் தெளிவுரையுடன், ஆறாவது உலகச் சைவ மாநாடு சிறப்பு வெளியீடு, பா. 28

120. பதினெண் சித்தர்கள் பெரியஞானக்கோவை, இடை. சித். பா. 82
121. மேலது, பாம். சித். பா. 31, 3 - 4.
122. கு.வெ. பாலசுப்பிரமணியன், புறநானூறு மூலமும் உரையும், பா. 194
123. அரு. இராமநாதன், ஞானக்கோவையென வழங்கும் சித்தர் பாடல்கள், கண. சித். பா. 3
124. கு.வெ. பாலசுப்பிரமணியன், புறநானூறு மூலமும் உரையும், பா. 29, 22 - 24.
125. திரு. பொ.வே. சோமசுந்தரனார், பத்துப்பாட்டு, பெரும். பா. 4, 446.
126. கு.வெ. பாலசுப்பிரமணியன், புறநானூறு மூலமும் உரையும், புத்தகம் - 2, பா. 365, 7 - 11.
127. த. கோவேந்தன், சித்தர் பாடல்கள், உலோ.சித்.பா. 19, 3 - 4.
128. க. நாராயணன், சித்தர் தத்துவம், ப. 174
129. மேலது, ப. 175
130. பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா, வித்யாவாஹினி, பக். 2, 4.
131. க. நாராயணன், சித்தர் தத்துவம், ப. 176
132. இளம். உரை, தொல். பொருள். மரபியல், நூ. 571
133. ச.வே. சுப்பிரமணியன், தொல்காப்பியம் உரைவளக் கோவை, ப. 12
134. புறநா. பா. 363, 4-8.
135. சாமி. சிதம்பரனார், சித்தர்கள் கண்ட விஞ்ஞானம், தத்துவம், ப. 47
136. தமிழ்ப்பிரியன், பதினெட்டுச் சித்தர்களும் முக்கியப் பாடல்களும், விளக்கங்களும், திருமூ. சித்.பா. 5
137. அரு. இராமநாதன், ஞானக்கோவையென வழங்கும் சித்தர் பாடல்கள், சிவ. சித். பா. 215
138. மேலது, கொங். சித். பா. 14
139. மேலது, பட்டி. பா. 7
140. இளமதி சானகிராமன், சித்தர்களின் சிந்தனைகள், ப. 16

141. அரு. இராமநாதன், ஞானக்கோவையென வழங்கும் சித்தர் பாடல்கள், சிவ. சித். பா. 87
142. பரமஹம்ஸ யோகானந்தர் ஒரு யோகியின் சுயசரிதம், ப. 624
143. க. நாராயணன், சித்தர் தத்துவம், ப. 59
144. தவத்திரு கன்னியப்ப சுவாமிகள் இயற்றிய மெய் உணர்வின் ஒளி, பீர். சித். பா. 4
145. அரு. இராமநாதன், ஞானக்கோவையென வழங்கும் சித்தர் பாடல்கள், ஞானரத்தினக் குறவஞ்சி, பீரு.சித். பா. 23
146. தமிழ்ப்பிரியன், நெஞ்சறி விளக்கம் மூலமும் உரையும், கண. சித். பா. 79
147. மா. கோவிந்தன், தமிழில் கரு. ஆறுமுகம், பாபாஜியும் பதினெண் சித்தர் கிரியா யோக மரபும், பக். 30 - 57.
148. தமிழய்யா, மருத்துவ ஆய்வுக்கோவை, ஏ.ஆர். தயாநிதி, திருமந்திரம் உடலும் வெப்பநிலையும், ப. 174
149. பா. கமலக்கண்ணன், சதுரகிரியில் கோரக்க சித்தர், பக். 64 - 65.
150. தி. பாலசுப்பிரமணியன், திருமந்திரம் விளக்கவுரை, திருமூ. சித். பா. 185
151. மேலது, பா. 188
152. மகாத்மா காந்தி எழுதிய க. சந்தானம் தமிழில், பற்றின்றி வாழ்தல், ப. 13
153. பதினெண் சித்தர்கள், ஞானக்கோவை, சிவ. சித். பா. 48
154. கு.வெ. பாலசுப்பிரமணியன், புறநானூறு புத்தகம், 2, பா. 366, 17 - 22.
155. அரு. இராமநாதன், ஞானக்கோவையென வழங்கும் சித்தர் பாடல்கள், திருத்தில்லை, பட்டி. சித். பா. 1
156. மேலது, பட்டி. சித். பா. 6
157. மேலது, பட்டி. சித். பா. 7
158. தமிழ்ப்பிரியன், நெஞ்சறி விளக்கம் மூலமும் உரையும், கண. சித். பா. 95
159. திருவள்ளுவ நாயனார் அருளிச் செய்த ஞானவெட்டியான் மூலமும் உரையும், திரு. சித். பா. 615

160. சுவாமி ஆத்மானந்தா, உரையாசிரியர், பாம்பாட்டிச் சித்தர் பாடல்கள் எளிய விளக்கமும் தத்துவ உரையும், பாம். சித். பா. 46
161. அரு. இராமநாதன், ஞானக்கோவையென வழங்கும் சித்தர் பாடல்கள், இடை. சித். பா. 46
162. மேலது, பத்தி. சித். பா. 88
163. மேலது, சிவ. சித். பா. 83
164. மறைமலை அடிகளார், தனித்தமிழ் இயக்கத் தந்தை மறை மலை அடிகளார், ப. 14.

3. சங்க இலக்கியம் – சித்தர் படைப்புகளில் வடிவச் செல்வாக்கு

தமிழ் மொழி தொன்மையானது. தமிழில் பல்வேறு இலக்கிய வகைமைகள் காணப்படுகின்றன. சங்க இலக்கியம், நீதி இலக்கியம், காப்பிய இலக்கியம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், நவீன இலக்கியம் எனத் தமிழ் இலக்கியப்படி வளர்ச்சியுற்றது. இவை ஒவ்வொரு காலக்கட்டத்திலும் தனித்தனியாகத் தோன்றியவை. சங்க இலக்கியங்களில் காலத்திற்கு ஏற்பப் பல வடிவங்கள் தோன்றியுள்ளன. ஆசிரியப்பா, வஞ்சிப்பா, வெண்பா, கலிப்பா போன்ற பல பா வடிவங்கள் காணப்படுகின்றன. இவ்வடிவ நோக்கில் தமிழ் இலக்கியங்களை ஆராயும்போது சங்க இலக்கியத்திற்கும் சித்தர் பாடல்களுக்கும் ஒரு தொடர்பு இருப்பதைக் காண முடிகிறது. இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு இவ்வியல் ஆராய்வதாக இப்பகுதி அமைகிறது.

பா வடிவம்

பாக்களுக்கு வடிவம் மிக முக்கியமானது. நாடக வழக்காகவும் உலகியல் வழக்காகவும் பாடக்கூடிய பா வகையாகத் தொல்காப்பியர் கலிப்பாவையும் பரிபாடலையும் குறிப்பிடுகிறார்.

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்
உரிய தாகும் என்மனார் புலவர் [1]

சங்க இலக்கியங்களில் தொல்காப்பியர் கூறிய இலக் கணத்தையொட்டி அமைந்தவை கலித்தொகையும் பரிபாடலும் ஆகும் என அறிஞர்கள் விளக்கியுள்ளனர். மேலும், அகப் பாடல்களுக்குக் கலிப்பா எவ்வண்ணம் துணை நின்றதோ அவ் வண்ணமே உலக நிலையாமைக் கருத்துகளைக் கூறுவதற்கு கலிப்பாவைச் சித்தர்கள் கையாண்டுள்ளனர். நாடக வழக்காக, உலகியல் வழக்காகத் தொல்காப்பியர் கூறிய கருத்திற்கு ஏற்ப பிற்காலத்தில் தோன்றிய சித்தர்கள், இசைத்தன்மையை மைய மிட்டு இறைத்தன்மையோடு சித்த மருத்துவம், உடற்கூறுகள், இறைவனைக் காணும் விதம், இறைவனாக ஆகும் முறை, அக வழிபாடு, எளியோர்க்கு வழிகாட்டல் முதலான பல கருத்துகளை எடுத்துரைத்துள்ளனர். அவற்றை நாடோடிப் பாடல்கள், தெம் மாங்குப் பாடல் பாடிச் சமுதாயத்தைச் சீர்திருத்தித் தமிழ் இலக் கியத்திற்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

தமிழில் வழங்கும் இலக்கண நூல்களில் மிகவும் பழமை யான தொல்காப்பியம் ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலி என்ற நான்கு முதன்மைப் பாவகைகளைச் செய்யுளியலில் இயம்பி யுள்ளது.

ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென
நாலியற் றென்ப பாவகை விரியே [2]

பாவிற்குரிய உறுப்புக்களாக முப்பத்து நான்கினை வரை யறை செய்து, தமிழின் நெடுங்கால யாப்பியலுக்கு இடமளிக்கும் வகையில் செய்யுளியலை அமைத்துள்ளார் தொல்காப்பியர். இவரது யாப்பியலின் இலக்கியமாக நின்றிலங்கும் சங்கப்பாடல் களிலும் சித்தர் படைப்புகளிலும் இடம் பெற்றுள்ள வடிவச் செல் வாக்குக் குறித்து இனிக் காணலாம்.

''பா என்பது சேட்புலத்து ஒருவன் எழுத்தும் சொல்லும் மற்றவர் செவிப்புலத்தே தெற்றெனப் புலனாகாத வகையில் பாடம் ஓதுங்கால் அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுள் என்று உணர்தற்கு ஏதுவாகிப் பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை''[3] என பண்டித வித்துவான் தி.வே. கோபாலையர் கூறுகிறார்.

யாப்பு

எழுத்து முதலா ஈண்டிய அடியில்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பு என மொழிப யாப்பறி புலவர் [4]

என யாப்புக் குறித்துத் தொல்காப்பியர் விளக்குகிறார்.

எழுத்து, அசை, சீர், அடி எனத் தொடர்ந்து முடித்த அடியில் தான் கருதிய பொருளைப் புலவன் முடிய நிறுத்தி விளங்க வைத்தல் யாப்பு என்று வழங்கப்படுகிறது. குறித்த பொருளை இறுதியடியளவும் முற்றுப்பெற நிறுத்தல் யாப்பு என்று கூறுவர். "இது சொல்ல வேண்டிய செய்யுட் பாடுவார்க்கு இயல்பன்றோ எனின் ஈண்டுச் செய்யுளுறுப்புள் ஓதுகின்றாராதலின் யாதானும் ஒரு பொருட் கண் பல சொல் தொடுத்து வழங்குங்கால் குறித்த பொருளை முடிக்க வேண்டிய சொல்லோடு சேர்த்துக் கூறல் வேண்டும்"[5] என்பதை இளம்பூரணர் உரை வழி விளங்கிக் கொள்ள முடிகிறது.

இக்கருத்திற்கு வலு சேர்க்கும் வகையில் எஸ். செல்வ கணபதி, கூறும் கருத்து பின்வருமாறு அமைகிறது. "கால மாற்றத் திற்குத் தகுந்தாற் போல யாப்பு வடிவமும் மாற்றம் பெறுகிறது. காலந்தோறும் இலக்கியப்போக்குகள் மாறிவருகின்றன. அரசியல் சமுதாயக் காரணங்களால் மாற்றம் பெறுகின்றன. தமிழ் இலக்கியப் போக்கிலும் நன்கு உணரலாம். சங்க காலத் தில் காதலையும், வீரத்தையும், கொண்டு ஆசிரியப் பாவால் பாடினர், சங்கம் மருவிய காலம் நீதிக்கருத்தை அடிப்படையாக அமைத்து வெண் பாவை இயற்றினர், பல்லவர் காலத்தில் தெய்வக் காதலைப் படைக்க விருத்தப் பாக்களை கொண்டனர், சோழர் காலக் காப்பியங்களை விருத்தங்களாகவும், நாயக்கர் கால இலக்கியத்தை சிற்றி

லக்கிய, பிள்ளைத் தமிழைக் கலி வெண்பாவாகவும், சந்த விருத்த மாகவும், தற்காலத்தில் கதை இலக்கியமாகத் தோற்றம் பெற்று உரை நடையாக வளர்ச்சி பெற்றுள்ளதையும் காலந்தோறும் இலக் கியப் போக்கில் உருவகமும் உள்ளடக்கமும் மாற்றம் பெற்று வரு கின்றன" [6] என்கிறார் செல்வ கணபதி.

யாப்பு என்பது கட்டுதல் என்னும் பொருளை உடையது. சொற்களை ஓர் ஒழுங்கு முறைப்படி சேர்த்துக் கட்டிச் செய்யுள் வடிவங்களாக மாற்றுவதே யாப்பு எனத் தமிழிலக்கிய வகையியல் என்னும் நூல் உரைக்கின்றது. [7]

மேற்கண்ட அறிஞர்கள் கருத்துப்படி, சித்தர் படைப்பில் இவை எல்லா வடிவமும் இடம்பெற்றுள்ளதை அறியமுடிகிறது.

சங்க இலக்கியத்தில் யாப்பு

தமிழ் யாப்பியல் பற்றி முதன்மை ஆய்வு நிகழ்த்திய முனைவர் அ. சிதம்பரநாதனார். சங்க இலக்கியத்தில் இடம் பெறும் ஆசிரியப் பாக்களில் இருசீரடி வருதலைப் புள்ளிவிவரம் தந்து விளக்கியுள்ளார்.

''எட்டுத்தொகை நூல்களில் புறநானூற்றில் பதினான்கு விழுக்காடும் பதிற்றுப்பத்தில் பதினேழு விழுக்காடும் இருசீரடி வந்த ஆசிரியப்பாக்கள் ஆகும். இவை இரண்டும் புறப்பொருள் பற்றியவை. அகப்பொருள் முதலிய அகநானூறு, நற்றிணை, ஐங் குறுநூறு, குறுந்தொகை ஆகிய நூல்களில் ஒரு பாடலில்கூட இரு சீரடி பயிலவில்லை. பத்துப்பாட்டில் பொருநராற்றுப்படையில் பதி னெட்டு விழுக்காடும், மதுரைக்காஞ்சியில் இருபத்தி நான்கு விழுக்காடும், பட்டினப்பாலையில் ஐம்பத்தி நான்கு விழுக்காடும் இருசீரடி கொண்ட ஆசிரியப்பகுதிகள் ஆகும். ஏனைய ஏழு பாட்டுகளில் ஒன்றிலும் இருசீரடி வரவில்லை. ஆதலின், தொல் காப்பியர் காலத்திற்குப்பின் சிறிது சிறிதாக இணைக் குறளாசிரி யப்பா வளர்வதாயிற்று என்பர். இப்புதுவரவினைக் கண்டு பிற் கால யாப்பியலார் இவ்வகை ஆசிரியப் பாவிற்கு இலக்கணம் வரைந்தனர்"[8] என்னும் சோ.ந. கந்தசாமியின் கூற்று இங்குச் சுட் டத்தக்கது.

சங்க இலக்கியத்தில் ஆசிரியப்பாவின் ஆட்சியே மேலோங்கியுள்ளது. ஆசிரியப்பா இடம்பெறாத நூல் இல்லை. பத்துப்பாட்டும் இவ்வகையில் இடம் பிடித்தாலும் ஒரு சில பாட்டுகளில் வஞ்சியடிகள் மிக்கு வருதல் உண்டு. எட்டுத்தொகை வரிசையில் புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய புறப்பொருள் பற்றிய இலக்கியங்கள் பெரும்பான்மையும் ஆசிரிய யாப்பின. இவற்றிலும் வஞ்சியடிகள் மிக்குவரும் பாக்கள் சில உள்ளன. குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, ஐங்குறுநூறு ஆகிய அகப்பொருள் தொகை நூல்கள் முழுமையாக ஆசிரியப் பாக்களினால் அமைந்தவை. கலிப்பாவின் வகைகளினால் யாக்கப் பெற்ற பாடல்களைக் கொண்ட கலித்தொகையிலும் ஆசிரியப் பாக்களின் ஆட்சி காணப் பெறு தல் குறிப்பிடத்தக்கது. பரிபாட லிலும் ஆசிரிய யாப்பு இடம் பெறுகிறது. எனவே, நேரிசை ஆசிரிய யாப்பு சங்க காலப் படைப்பாளர்களிடையே மிகவும் பயின்று வழங்கிய செய்யுள் வடிவமாகத் திகழ்ந்துள்ளது.

"அகநானூற்றில் நிலைமண்டில ஆசிரியம் 6, 8, 106, 369, 372 எஞ்சியவை நேரிசை ஆசிரியமாகும். ஐங்குறுநூற்றில் 113, 153, 188 ஆகிய மூன்று பாடல்கள் மட்டும் நிலைமண்டில ஆசி ரியம். எஞ்சியவை நேரிசை ஆசிரியம். இதில் இணைக்குறளா சிரியம் இடம்பெறவில்லை.

நற்றிணையில் நிலைமண்டில ஆசிரியம் (134, 348) இரண்டு மட்டும். எஞ்சியவை நேரிசை ஆசிரியம் இணைக்குற ளாசிரியம் காணப்படவில்லை. குறுந்தொகைப் பாடலில் 16, 18, 93, 107, 113, 222, 292, 309 ஆகிய எட்டுப்பாடல் மட்டும் நிலைமண்டிலம் மீதமுள்ள பாடல்கள் நேரிசை ஆசிரியம் இடம் பிடித்துள்ளன. இணைக்குறளாசிரியம் இடம்பெறவில்லை.

கலித்தொகையில் 87 ஆசிரியப் பாக்கள் இடம்பெற்றுள் ளன. இவற்றுள் 15, 25, 57, 60, 129, 138, 139 கலிப்பாவில் தரவு, தாழிசை, தனிச்சொல் சுரிதகம் ஆகிய உறுப்புகளுடன் துள்ள லோசை பெற்றிருக்கும் உறுப்புகளாக கலிப்பா இடம் பிடித்துள் ளது. ஒத்த தாழிசை கலிப்பாவிற்குச் சிறந்தது. 150 கலிப்பாடல் களில் 68, பாடல்கள் ஒத்தாழிசை கலியாக உள்ளன என்கிறார்."

பரிபாடலில் கொச்சகம், அராகம், எருத்து, சுரிதகம் முதலிய உறுப்புகள் உள்ளது. காமப்பொருண்மை பரிபாடற்கு உரியது. தொல்காப்பியர் காமப் பொருட்டாகப் பரிபாடல் பாடப் பெறும் என்றார். இசை நயம் கெழுமிய பரிபாடல், இசையினால் விளையும் காமப்பொருண்மையினைப் பாடுவதற்கு ஏற்றதே"[9] என்கிறார் சோ.ந. கந்தசாமி.

"பரிபாடற்கு அங்கமாக வருவனவும் யாவும் குறுவெண் பாட்டு, நெடுவெண்பாட்டு ஆகிய இரண்டும் அமையும். தொல் காப்பியர் பரிபாடல் மட்டுமே வெண்பா யாப்பினவாக வரும் என்றார்.

ஏழாம் பாடலில் 77 - 86 அடிகள் இணைக்குறள் ஆசிரியச் சுரிதமாக இடம் பெற்றுள்ளன. பதினேழாம் பாடல் 50 - 52 அடிகள் சிந்தடியாக வந்தமையால் இதுவும் இணைக்குறளாசிரியச் சுரிதமாகும்.

பதிற்றுப்பத்து பண் அடிப்படையில் தொகுக்கப்பெற் றது. பதிற்றுப் பத்துப் பாடல்களில் தூக்கும் வண்ணமும் இடம் பெற்றுள்ளது. ஆசிரிய அடிகளினால் அமைந்த பாக்களைச் செந் தூக்கு என்றும், ஆசிரியமும் வஞ்சியும் தம்முள் மயங்கிவரும் பாக் களைச் செந்தூக்கும் வஞ்சித்தூக்கும் என்றும் சுட்டுவர்.

புறநானூற்றில் மிகுதியாக நேரிசை ஆசிரியம் 321 பாடல் கள். வஞ்சியடி விரவிய நேரிசை ஆசிரியம் பன்னிரண்டு பாடல் களும் நிலைமண்டிலாசிரியம் பதினாறு பாடல்களும், வஞ்சியடி விரவிய நிலைமண்டில ஆசிரியம் இரண்டு பாடல்களும் இணைக் குறளாசிரியம் ஒரு பாடலும், வஞ்சிப்பா பதினேழு பாடலும், ஆசிரிய அடி பயின்ற வஞ்சிப்பா பத்தொன்பது பாடல்களும் பயின்று வந்துள்ளன.

பத்துப்பாட்டிலும் நேரிசை ஆசிரியப்பா ஆட்சியே மேலோங்கி நிற்கிறது. வஞ்சிப்பா நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா ஆகியன காணப்பெறுகின்றன. சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, மலைபடுகடாம் ஆகிய ஆறும் வஞ்சியடி பயி

லாத நேரிசை ஆசிரியம் ஆகும். பொருநராற்றுப்படை மட்டுமே வஞ்சியடி விரவிய நேரிசை ஆசிரியமாக அமைந்துள்ளது"[10] என்று சோ.ந. கந்தசாமி தெளிவுபடுத்துகிறார்.

சித்தர் படைப்புகளில் யாப்பு

சித்தர் படைப்புகளில் யாப்பு வினைக்கேற்ற உடல் பெறும் உயிரைப் போலவே, கருத்துக்கேற்ற வடிவைத் தாங்கியுள்ளது. சித்தர் பாடல்களின் தன்மையையும் அதன் வடிவத்தையும் எட்டுப் பிரிவுகளாகப் பகுக்கலாம்.

1. மரபிலக்கண வகை சார்ந்த பாடல்கள், 2. சிற்றிலக்கிய வகை சார்ந்த பாடல்கள், 3. இசைப் பாடல்கள், 4. நாடோடி இலக்கியப் பாடல்கள், 5. மறை பொருட் கூறுகளைத் தாங்கிய பாடல்கள், 6. இலக்கியத் தாக்கங்களைக் கொண்ட பாடல்கள், 7. புராணக் கதைப்பாடல்கள், 8. பொதுவான தன்மை கொண்டவை. பதினைந் திற்கும் மேற்பட்ட பண்டைய யாப்பு வடிவங்கள் அவை. 1. குறள் வெண்பா, 2. குறள்வெண் செந்துறை, 3. நேரிசை வெண்பா, 4. பின் முடுகு வெண்பா, 5. அகவற்பா, 6. நேரிசை ஆசிரியப்பா, 7. இணைக்குறள் ஆசிரியப்பா, 8. நிலை மண்டில ஆசிரியப்பா, 9. அறுசீர் ஆசிரியர் விருத்தம், 10. எண் சீர் ஆசிரிய விருத்தம், 11. பன்னிருசீர் விருத்தம், 12. தரவு கொச்சகம், 13. கட்டளைக் கலித்துறை, 14. பதினான்கு சீர் விருத் தம், 15. கழித்தாழிசை, 16. கலி நிலைத்துறை, 17. கலி விருத்தம் என்பனவாகப் பதினெண் சித்தர் பாடல்களில் இடம் பெற்றுள் ளன. "திருமூலர் திருமந்திரத்தில் நாற்சீரடி நான்கு கொண்ட கலி வகை யாப்பினால் இத்திருமந்திரமாலை அருளிச் செய்தால் அடி தோறும் பன்னிரண்டெழுத்தும் ஈற்றடி நேரசையினைக் கொண்டு தொடங்கிய தாயின் பதினோர் எழுத்தும் பெற்று வெண்டளை பிழையாது வருவது இத்திருமந்திர யாப்பாகும். செப்பலோசை தழுவிய இக்கலிப்பாவகை திருமூலர் திருமந்திரத்தில் தான் முதன் முதற் காணப்படுகிறது."[11] இதன் வாயிலாகச் சங்க இலக்கிய வடி வத்துடன் சித்தர் பாடல் யாப்பினை ஒப்பு நோக்கி அறிய முடி கிறது.

ஆசிரியப்பா இலக்கணம்

இடைபல குன்றின் இணைக்குற ளெல்லா அடியுமொத்து
நடைபெறு மாயி னிலைமண் டிலநடு வாதியந்தத்
தடைதரு பாதத் தகவல் அடிமறி மண்டிலமே [12]

அகவலோசை அளவடித்தாகியும், இயற்சீர் பயின்றும் அயற்சீர் விரவியும், தன்றளை தழுவியும், பிறதளை மயங்கியும், நிரை நடுவாகிய வஞ்சியுரிச் சீர் வருதலில்லா ஆசிரியப்பாவினை, அடியானும், தொடையானும், ஓசையானும், பொருளானும் பெயர் வேறுபாடுணர்த்தி வருவதாகும்.

ஆசிரியப்பா வகைகள்

1. நேரிசை யாசிரியப்பா, 2. இணைக்குறளாசிரியப்பா, 3. நிலை மண்டிலாசிரியப்பா, 4. அடிமறிமண்டிலவாசிரியப்பா என நான்கு வகைகளாக இலக்கண நூலார் உணர்த்துகின்றனர்.

நேரிசையாசிரியப்பா

இப்பாவகை பற்றித் தொல்காப்பியர்,

ஈற்றய லடியே ஆசிரிய மருங்கின்
தோற்ற முச்சீர்த் தாகு மென்ப [13]

என இலக்கணம் இயம்புவார்.

அடிதோறும் நாற்சீர் பயின்று அகவலோசை உடைத்தாய் ஈற்றயலடி முச்சீரான் வந்தமையால் நேரிசை யாசிரியப்பா எனப் பெயர் பெறும்.

இதைமனங்கொண்ட யாப்பருங்கலக்காரிகை ஆசிரியர்,

கடையயற்பாத முச்சீர் வரின் நேரிசை
ஈற்றயடி முச்சீரான் வருவது நேரிசை ஆசிரியப்பா [14]

என்று குறிப்பிடுகிறார். "மும்முதற் பொருளாகிய அறம், பொருள், இன்பங்களைப் பொதிய வைத்து அரிய கருத்துகளைப் பெரும்பான்மையும் ஆசிரியப் பாவால் தந்தனர் சங்க நூலார்"[15] *என்னும் கு. மோகனராசுவின் கருத்து இங்கு எண்ணுதற்குரியது.*

"சங்க இலக்கியங்களில் அகநானூறு, நற்றிணை, குறுந் தொகை, ஐங்குறுநூறு என்ற அகத்திணை நூல்களும், புறநானூறு, பதிற்றுப்பத்து என்ற புறத்திணைத் நூல்களும் பத்துப்பாட்டில் மதுரைக்காஞ்சி / பட்டினப்பாலை நீங்கலாக எஞ்சிய எட்டுப் பாட்டும் ஆசிரிய யாப்பில் புனையப் பெற்றவை. கலித்தொகை யிலும் பரிபாடலிலும் ஆசிரியப் பாக்கள் உறுப்புக்களாகவும் தனிப்பாக்களாகவும் யாக்கப்பெற்றன"[16] *என்னும் சோ.ந. கந்த சாமியின் கருத்தும் சங்க இலக்கியங்களில் பெரும்பாலானவை ஆசிரியப்பா என்னும் கூற்றை வலியுறுத்துகின்றது.*

"அகமும் புறமுமாய்ப் பொருள் அளவில் அமைந்துள்ள இந்நூல்கள் பா வகையாலும் அளவாலுமே தொகுக்கப் பெற் றுள்ளன. ஆசிரியப்பா, வெண்பா, வஞ்சிப்பா, கலிப்பா என்னும் நான்கு தமிழ்ப் பாவகைகளுள், ஆசிரியப்பாவும் வெண்பாவுமே காலத்தால் பழமையானவை. இவற்றுள்ளும் ஆசிரியப்பாவே சங்க இலக்கியத்தில் அதிகம் பயின்றுள்ளதாகத் தெரிகிறது"[17] *என்கிறார் இரா. தண்டாயுதம்.*

நற்றிணையில் 134ஆம் பாடல், 348ஆம் பாடல் நிலை மண்டில ஆசிரியமாகும். ஏனைய பாடல்கள் நேரிசை ஆசிரி யமாகும். நற்றிணைப் பாடலில் நேரிசைப் பாடலில் ஆசிரியப்பா பயின்று சிறப்பிப்பதைப் பின்வரும் பாடலின் வழி அறியலாம்.

நின்ற சொல்லர் நீடு தோன்றினியர்
என்றும் என்றோள் பிரிபறி யலரே
தாமரைத் தண்டா தூதி மீமிசைச்
சாந்தின் தொடுத்த தீந்தேன் போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை
நீரின் றமையா வுலகம் போலத்
தம்மின் றமையா தந்நயந் தருளி
நறுநுதல் பசத்த லஞ்சிச்
சிறுமை உறுபவோ செய்பறி யலரே [18]

என்று நேரிசை ஆசிரியப்பாவினால் பயின்று வந்துள்ளது.

நற்றிணைப் பாடலில் நேரிசை ஆசிரியம் பயன்பட்டிருப் பதைப் போன்று பட்டினத்தார் படைப்புகளிலும் இதே வடிவம் கையாளப்பட்டிருப்பதைக் காண முடிகிறது.

அந்தரத் தியங்கும் இந்திர சாபம்
அதிரு மேகத் துருவி னருநிழல்
நீரிற் குமிழி நீர்மே லெழுத்து
கண்டுயில் கனவிற் கண்ட கண் காட்சி
அதனினும் பொல்லா மாயக் களங்கம் [19]

என்பது பட்டினத்தார் பாடல். இவர் பாடலில் மட்டுமே, நேரிசை ஆசிரியம், நிலைமண்டிலாசிரியம், இணைக்குறளாசிரியம் இடம் பிடித்துள்ளதைக் காண முடிகிறது.

குறுந்தொகையில் நேரிசை ஆசிரியம்

இத்தொகையில் 402 பாக்கள் கடவுள் வாழ்த்துடன் அடங் கியுள்ளன. இதில் 16, 18, 93, 107, 113, 222, 292, 309 ஆகிய எட்டு மட்டும் நிலைமண்டிலமாகும். எஞ்சிய பாடல்கள் எல்லாம் நேரிசை ஆசிரியமாகும்.

அன்பின் சிறப்பினைப் பாடிய கோப்பெருஞ்சோழனின் பாடலை இதற்குச் சான்றாகக் காணலாம்.

அருளு மன்பு நீக்கித் துணைதுறந்து
பொருள்வயிற் பிரிவோ ருரவோ ராயின்
உரவோ ருரவோ ராக
மடவ மாக மடந்தை நாமே [20]

என, அன்பு இவ்வுலக வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்பதை நேரிசை ஆசிரியப்பா வடிவில் படைத்து, அதன் எளிமைத் தன்மை, இனிமை ஆகிய கார ணங்களால்தான் என்பதனை அறிய முடிகிறது. பட்டினத்தார் கோயிற்றிரு வகலில் நேரிசை ஆசிரி யப்பா பாடலில் உடலின் தன்மையை இயம்புகிறார்.

ஊத்தைப் புன்றோல் உதிரக் கட்டளை
நாற்றப் பாண்டம் நான்முழத் தொன்பது
பீற்றற் றுண்டம் பேய்ச்சுரைத் தோட்டம்

அடவைப் பெரிய சுடலைத் திடருள்
ஆசைக் கயிற்றில் ஆடும் பம்பரம் [21]

பாடலின் இறுதி அடி மூன்று சீர் பெற்று வந்தமையால் இஃது நேரிசை ஆசிரியப்பா என்பதை அறிய முடிகிறது. இதனால் பொருள் எளிமையாகப் புரிவதோடு இனிய ஓசை பயின்று வருவதனையும் உணர முடிகிறது.

ஐங்குறுநூற்றில் நேரிசை ஆசிரியம்

திணைக்கு நூறுபாடல் வீதம் ஐந்திணைக்கும் 500 பாடல்கள் அமைந்த இத்தொகையில் மிகச்சிறிய மூன்றடி ஆசிரியப் பாக்கள் காணப்படுகின்றன. (ஐங்குறுநூறு 121 - 28; 131 - 40; 141 - 50; 341 - 50; 431 - 40; 487 - 491) என்பதை, சோ.ந. கந்தசாமி சுட்டியுள்ளார்.[22]

கடவுள் வாழ்த்தும் இவ்வகையிற் சேரும். இத்தொகை இலக்கியத்தில் மூன்று பாடல்கள் மட்டுமே (113, 153, 188) நிலை மண்டிலம். எஞ்சியவை எல்லாம் நேரிசைப் பாடல்களே யாகும். சான்றாக,

பகலிற் றோன்றும் பல்கதிர்த் தீயி
னாம்பலஞ் செறுவிற் றேனூரன்ன
விவணலம் புலம்பப் பிரிய
வனைநல முடையளோ மகிழ்நநின்பெண்டே [23]

ஈற்றயலடி முச்சீராய் 'ஏ' இறுதியுடன் சங்கப்பா நடையழகோடு ஐங்குறுநூற்றில் நேரிசையாசிரியப்பாவாக அமைந்துள் ளதைக் காணமுடிகிறது. சங்க இலக்கியத்தில் ஐங்குறுநூற்றில் நேரிசை ஆசிரியப்பா யாப்பாகிறது. பட்டினத்தார் பாடலில் இரண் டாவது கோயில் திருவகவலில், நேரிசை ஆசிரியப்பாவால் பாட லாகப் படைத்தளித்துள்ளார்.

ஓயா நோய்கிடம் ஓடு மரக்கலம்
மாயா விகார மரணப் பஞ்சரம்
சோற்றுத் துருத்தி தூற்றும் பத்தம்
காற்றிற் பறக்கும் கானப் பட்டம்
விதிவழித் தருமன் வெட்டுங்காட்டை [24]

உடற் கூற்றுநிலையாமைப் பாடலாக, பட்டினத்தார் பாடல் மட்டுமே அரிதாகக் காணப்படுகிறது. இதில் ஈற்றயலடி மூச்சீராக அமைந்தாலும் நேரிசை ஆசிரியப் பாவாக இடம் பெற்றுள்ளது.

சங்க இலக்கியத்தில் நிலைமண்டில ஆசிரியம்

"யாப்பு சங்கப் பாடலில் பரவலாக இடம்பெற்றுள்ளது. அவை. நற். 134, 348, குறுந். 16, 18, 113, 221, ஐங். 113, 153, 188, பரி - 1:33-36, 5:22-47, 7:7-86, 17:48-53, பதிற்று. 50, கலி. 15, 25, 57, 60, 129, 138, 139, அகம். 6, 8, 106, 372, புறம். 33, 44, 60, 76, 113, 147, 175, 212, 214, 235, 242, 291, 344, 379, 389"[25] பாடல்களின் இடையேயும் முழுமையாகவும் இடம் பெற்றுள்ளன. சங்கப் பாக்களின் அளவை நோக்க இப்பா சிறு வரவிற்றென்பர்.

நிலை மண்டில ஆசிரியப்பா - விளக்கம்

இஃது எல்லா வடிவும் தம்முள் அளவொத்து அடிதோறும் நாற்சீரானியன்று வருவது. இவ்வரையறையைத் தொல்காப்பியர் தனித்துக் கூறிற்றிலரேனும் ஆசிரியத்தின் வகையினைச் சுட்டிய போது,

ஒத்தாழிசையும் மண்டில யாப்பும் [26]
மண்டிலங் குட்டம் என்றிவை இரண்டும் [27]

ஆகிய நூற்பாக்களில் குறிப்பிட்டுள்ளார்.

யாப்பருங்கலக் காரிகை நிலைமண்டில ஆசிரியப்பாவின் இலக்கணத்தை,

ஒத்த வடித்தா யுலையா மரபொடு
நிற்பது தானே நிலைமண்டிலமே [28]

என்றும்,

என்னென் கிளவியை யீறாப் பெறுதலும்
அன்ன பிறவும் அந்தம் நிலைபெற
நிற்கவும் பெறூஉ நிலைமண்டிலமே [29]

என்றும் விரிவாகக் கூறியுள்ளார். நிலை மண்டில ஆசிரியப்பா நாற் சீருடையதாய், அடியொத்ததாய் என் ஈறு பெறுவதாய் இயலும் தன்மையதாகும்.

வெள்ளி வீதியார் பாடல் ஒன்று இவ்வகையில் அமைந்துள் ளது. அது வருமாறு:

நிலவே, நீல்நிற விசும்பில் பல்கதிர் பரப்பி
பான்மலி கடலில் பரந்துபட் டன்றே
ஊரே, ஒலிவருஞ் சும்மையொடு மலிதொகுபு ஈண்டிக்
கலி கெழுமறுகின் விழவய ரும்மே
காணே, பூமலர் கஞலிய பொழிலகந்தோறும்
தாம் அமர் துணை யொடு வண்டிமிரும்மே
யானே, புனை இழை ஞெகிழ்த்த புலம்பு கொள் அவலமொடு
கனையிருங் கங் குலுங் கண்படை இலனே
அதனால் என்னொடு பொருங்கொல்இவ் உலகம்
உலகமொடு பொருங்கொல்என் அவலமுறு நெஞ்சே [30]

இப்பாட்டில் ஈரடிக்கு ஒருமுறை நிலவே, ஊரே, காணே, யானே என்று சீர் கூனாக வந்தது ஈற்றயலடியில் இடம்பெற்றுள் ளது. அதனால் என்ற சொல்லினைக் கூனாகக் கொள்ளின், எஞ்சி யது சிந்தடி ஆகும். சிந்தடியில் சீர் கூனாதற்கு இலக்கணம் கூறப் பெறாமையின், அதனால் என்பதனை அடியுடன் இணைந்த சீராக எண்ணின் அளவடி என்பது அறியத்தக்கதாகும். ஆகையினால், இப்பாட்டு நிலை மண்டில ஆசிரியம் என்பதைக் குறிப்பிட முடி கிறது. இப்பாவினை ஒத்துப் பட்டினத்தார் பாடல்களில் நான் காவது கச்சித்திருவகவல் என்னும் பகுதியில் நிலைமண்டில ஆசிரியப்பா பயின்று வந்து சிறப்பிப் பதனை அறிய முடிகிறது.

திருமால் பயந்த திசை முகன் அமைத்து
வரும் ஏழ் பிறவியும் மானுடத்துதித்து
மலைமகள் கோமான் மலர் அடி இறைஞ்சிக்
குலவிய சிவபதங் குறுகாது அவமே
மாதரை மகிழ்ந்து காதல் கொண்டாடும்
மானிடர்க் கெல்லாம் யானெடுத் துரைப்பேன்
விழிவெளி மாக்கள் தெளிவுறக் கேண்மின்;

முள்ளும் கல்லும் முயன்று நடக்கும்
உள்ளங் காலைப் பஞ்சென உரைத்தும்
வெள்ளெலும் பாலே மேவிய கணைக்கால் [31]

பாடலுள் பெண்மை நலனை மறுத்து, நிலையாமையைச் சுட்டி, விளக்க முறையிலான கருத்துச் செறிவுடன் கூடிய நெடிய பாடலின் தேவைக்காக நிலை மண்டில ஆசிரியப்பா பயன்படுத் தப்பட்டுள்ளதனை அறிய முடிகின்றது.

இணைக்குறள் ஆசிரியப்பா

சங்க இலக்கியத்தில் முதன் முதல் இணைக்குறளாசிரியம் தனிப் பாடலாக வரவில்லை. இணைக்குறள் ஆசிரியப்பா என்பது ஆசிரியப்பாவின் இலக்கணத்தைப் பெற்று ஈற்றடியும் முதலடியும் நாற்சீர் பெற்று இடையடிகள் நாற்சீருக்கு மிகாமலும் சில இடங் களில் நாற்சீருக்குக் குறைந்தும் காணப்படும் பரிபாடலில் தனிப் பாடலாக வரவில்லை எனினும் சுரிதக உறுப்பாக வந்தமையைப் பார்க்க முடிகிறது.

புரிநரம் பின்கொளைப் புகல்பாலை யேழும்
எழுஉப் புணர் யாழுமிசையுங் கூடக்
குழலளந்து நிற்ப முழவெழுந் தார்ப்ப
மன்மகளிர் சென்னிய ராடல் தொடங்கப்
பொருதிழி வார்புனற் பொற்பஃ
துருமிடி சேர்ந்த முழக்கம் புரையும்
திருமருத முன்றுரை சேர் புனற்கண்டுய்ப்பார்
தாமந் தலைபுனை போ நீர்வையை
நிற்பயம் பாடி விடிவுற் றேமாக்க
நிற்படிந்து நீங்காமை யின்றுபுணர்ந் தெனவே [32]

பரிபாடல் ஏழாம் பாடலில் 77-86ஆம் அடிகளைக் கொண்ட ஆசிரியச் சுரிதகத்தில் ஈற்றயலடி முச்சீர்த்தாதலுடன் 81 ஆம் அடியும் குட்டம் பட்டு முச்சீர்த்தாய் முடிதலின், இதனை இணைக் குறள் ஆசிரியச் சுரிதகம் என்று கருதுதல் சாலும்.

மணிநிற மஞ்ஞை யோங்கிய புட்கொடிப்
பிணிமுகம் ஊர்ந்த வெல்போர் இறைவ

பணியொரீஇ நின்புகழ் ஏத்தி
அணிநெடுங் குன்றம் பாடுதுந் தொழுதும்
அவை, யாமுமெஞ் சுற்றமும் பரவுதும்
ஏம வைகல் பெறுகயா மெனவே [33]

பதினேழாம் பரிபாடலில் 48-53ஆம் அடிகள் இறுதி நிலைப்பாட்டு. இதனுள் 50,52 ஆகிய அடிகள் சிந்தடியாக அமைதலின் இதுவும் இணைக்குறள் ஆசிரியச் சுரிதகம் என்று கொள்ளுதற்கு உரியது. சங்க இலக்கியத்தில் முதன் முதல் இணைக்குறளாசிரியம் தனிப்பாடலாக வரவில்லை. வந்தமைக்கு இப் பரிபாடற் பகுதிகள் இரண்டும் ஏற்ற எடுத்துக்காட்டுகள் ஆகும். புறநானூற்றுப் பாடலில் 235ஆம் பாடல் மட்டும் இணைக்குறளாசிரியமாகும்.

கடுவெளி யுருட்டிய சகடக் காலைப்
பாவச் சரக்கொடு பவக்கடல் புக்குக்
காமக் காற்றெடுத் தலைப்பக்
கெடுவழிக் கரைசேர் கொடுமரக் கலத்தை
இருவினை விலங்கொடும் இயங்குபுற் கலனை [34]

முதலடிகள் நாற்சீர் பெற்றுள்ளதும். இறுதிச்சீர் நாற்சீர் பெற்றும் இடை அடிகள் நாற்சீர் குறைந்தும் பெற்றும் வருதலால் மேற்கூறிய பாடல் இணைக் குறளாசிரியம் என அறிய முடிகிறது.

நிலைமண்டில ஆசிரியப்பா

எல்லாவடியுமொத்து நடைபெறுமாயின் நிலைமண்டிலம். "அடிகளெல்லாம் அளவடிகளாய் ஆசிரியப்பா நடக்குமாயின், அது நிலைமண்டில ஆசிரியப்பா எனப்படும். இது நிலையுடைய நாற்சீரடியான் வரல் பற்றி நிலை மண்டிலம் எனப்பட்டது. நிலை - நின்றவாறே நிற்றல். மண்டலம் - நாற்சீர் யாத்து வருவது"[35] *என்று அ. குமாரசுவாமி புலவர் கூறுகிறார்.*

குறுந்தொகை நூல் 401 ஆசிரியப் பாக்களை உடையது. நான்கு அடி முதல் எட்டு அடி வரை இப்பாடல்கள் அமைந்தன எனின் 307,391 ஆம் பாடல்கள் மட்டும் ஒன்பது அடி பெற்றவை. முருகனைப் போற்றிப் பாடிய கடவுள் வாழ்த்து சேர்த்து 402

பாடல்களைக் கொண்ட இந்நூலில் நேரிசை ஆசிரிய யாப்பே மிகுதியும் ஆட்சி பெற்றது. 8 பாடல்கள் மட்டுமே நிலை மண்டில ஆசிரியப்பாவில் தோழிக் கூற்றில் அமைந்துள்ளன.

கைவினை மாக்கள் தம் செய்வினை முடிமார்
சுரும்பு உண மலர்ந்த வாசம் கீழ்ப்பட
நீடிய வரம்பின் வாடிய விடினும்
கொடியோர் நிலம்பெயர்ந்து உரைவேம் என்னாது
பெயர்த்தும் கடித்த செறுவில் பூக்கும்
நின்ஊர் நெய்தல் அனையேம் பெருமை
நீ எமக்கு இன்னா கியபல செய்யினும்
நின் இன்று அமைதல் வல்லா மாறே [36]

வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை ஆகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரல்
சிறுகோட்டுப் பெரும் பழந்தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே [37]

இஃது அடிகளெல்லாம் அளவடிகளாய் மறிந்து செல்லல் இன்றி நின்ற வாறே நிற்றலால் நிலைமண்டலவாசிரியப்பா ஆயிற்று. அடிதோறும் நான்கு சீர்களும், அளவடியாக நின்றதனால் நிலைமண்டிலாசிரியப்பா என்பதை அறிய முடிகிறது.

பதினெண் சித்தர் பாடலில் பட்டினத்தாரின் நான்காவது கச்சித்திருவகவல் நிலைமண்டில ஆசிரியப் பாவால் அமைந்துள் ளது இங்குச் சுட்டுதல் பொருத்தமானதாகும்.

மெச்சிச் சிவபத வீடருள் பவனை
முக்தி நாதனை மூவா முதல்வனை
அண்டர் அண்டமும் அனைத்துள புவனமும்
கண்ட அண்ணலைக் கச்சிற் கடவுளை
ஏக நாதனை இணையடி இறைஞ்சுமின்
போகமாதரைப் போற்றுத லொழிந்தே [38]

நிரைநேர் என்பது அகவற்பா சீராகும். முடிந்த லொழிந்தே என்ற அடியைக் கொண்டு இது நிலைமண்டில ஆசிரியமாகும்.

சித்தரில் பட்டினத்தார் முழுமையான துறவியாக வாழ்ந் தார். மனைவி, மக்கள், சுற்றம், ஈட்டிய செல்வம், இறுதியில் வருவதில்லை என்பதை உணர்ந்த பட்டினத்தடிகள் சிவபத வீடு அருள்பவனை, முக்திநாதனை திருவடியைப் புகழ்ந்து இறைஞ்சு மின் என்றும் மாதரைப் போற்றாது இறைவனைப் போற்றி போக சம்பந்தத்தை அகற்றிடுக என்றும் விரிக்கிறார்.

புறநானூற்றில் நிலைமண்டில ஆசிரியம்

கடவுள் வாழ்த்துடன் 400 பாடல்கள் அடங்கிய இத் தொகையில் 267, 268 ஆம் பாடல்கள் முழுமையாகக் கிடைக்க வில்லை. 244, 282, 283, 306, 317, 328, 352, 355, 361, 366 எண் கொண்ட பத்துப் பாடல்களின் அடிகள் சிதைந்துள்ளமையால், இன்ன ஆசிரியம் என்று வரையறுத்துக் கூற இயலவில்லை. வஞ்சி யடிகள் மயங்கிய நேரிசை ஆசிரியப்பாக்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றில் 16 பாடல்கள் நிலைமண்டில ஆசிரிப்பாவாகும். அவை: 33, 60, 76, 111, 113, 132, 147, 175, 186, 212, 214, 242, 291, 344, 379, 383 போன்றவையாகும். [39]

மோசிகீரனார் பாடல் வருமாறு:

நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர் தலை யுலகம்
அதனால் யானுயி ரென்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே [40]

இப்பாடலில் எல்லாவடியும் நாற்சீராய் அளவொத்து வந் தமையால் நிலைமண்டில் ஆசிரியமாக (புறநா. 186 பாடல்) அமைந்துள்ளது. இவ்யாப்பு வடிவையொட்டிச் சித்தர்களில் அருட் பிரகாச வள்ளலார் எனப் போற்றப்படும் இராமலிங்க சுவாமிகள் அருளிய ஆறாவது திருமுறையில் அருட்பெருஞ்சோதி அகவலில் நிலைமண்டில ஆசிரியப்பா வடிவில் பாடியுள்ளார். 1596 அடிகள் கொண்டதாக இடம்பெற்றுள்ளன அதில் சில பாடல் வரிகள்:

அருட்பெருஞ்சோதி யருட் பெருஞ் சோதி
அருட்பெருஞ்சோதி யருட் பெருஞ்சோதி

ஊக்கமு முணர்ச்சியு மொளிதரு மாக்கையும்
ஆக்கமு மருளிய வருட்பெருஞ் சோதி
ஏறா நிலைமிசை ஏற்றியென் றனக்கே
ஆறாறு காட்டிய வருட் பெருஞ்சோதி [41]

இவ்யாப்பின் அடிப்படையில் ஏற்றியென்றனக்கே என்றும் நான்கு அடியால் அளவெடுத்து வந்தமையாலும் 'ஏ' இறுதியைக் கொண்டமையைக் காணமுடிகிறது. அதனால் இது நிலைமண்டில ஆசிரியப்பாவில் அமைந்துள்ளது.

வஞ்சிப்பா இலக்கணம்

வஞ்சியென்னும் ஒண்பாவடி குறள் சிந்தென்றுரைப்ப 42

வஞ்சிப்பா இருசீரடியானும், முச்சீரடியானும், தூங்கலோசையான் வரப்பெறும் என யாப்பருங்காலக்காரிகையில் அமிர்தசாகரர் உணர்த்துகிறார். "வஞ்சிப் பாவில் இருசீரடி, மிக்கு வழங்கும் என்றும், முச்சீரடி அருகிவரும் என்றும் தொல்காப்பியர் சுட்டியுள்ளார். ஆசிரியப்பாவில் முச்சீரடி வரும் இடங்களை வரையறுத்துக் கூறிய ஆசிரியர் இருசீரடி வருமாயின் கட்டாயம் கூறியிருப்பர். மதுரைக் காஞ்சி, பட்டினப்பாலை. வஞ்சிப்பாவிற் குரிய இரு சீரடியில் தொடங்கி ஆசிரிய அடிகளைக் கொண்டு முடிகின்றன. ஆசிரிய இயல்பில் முடிதல் வஞ்சிப் பாவின் இலக்கணம் ஆதலின் இவை வஞ்சி நெடும் பாட்டுக்களாகும். இவ்வமைப்புக் கொண்ட பாடல்கள் புறநானூற் றில் சிலவும் (16,17,22,97,98,136) உள. இதே காரணத்தினால்தான் வஞ்சிப் பாக்களென மதிக்கப் பெறுவன"[43] என்னும் சோ.ந. கந்தசாமியின் கூற்று நோக்கத்தக்கதாகும். குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, ஐங்குறுநூறு ஆகிய இலக்கியங்களிலும், கலித்தொகை, பரிபாடலிலும் இடம் பெறும் ஆசிரிய உறுப்புகளிலும் வஞ்சிப்பாக்கள் பயிலப் பெறாமை சுட்டத்தக்கது.

"வஞ்சி மருங்கின் எஞ்சிய உரிய என்றோதியவதனால் ஆசிரியவடியோடும் வெண்பா வடிவோடுங் கலியடியோடும் மயங்கி வருவன"[44] என இளம்பூரணர் செய்யுளியலில் குறிப்பிடுகிறார்.

புறநானூற்றில் வஞ்சிப்பாக்கள்

புறநானூற்றில் பொதிந்துள்ள 400 பாடல்களில் 37 பாடல் கள் வஞ்சிப்பாக்களாக உள. அவற்றுள் பதினெட்டுப் பாடல்கள் 2,4,7,11, 26, 29, 38, 40, 98, 136, 139, 166, 339, 343, 345, 360, 382, 389 பிற பா கலப்பு இல்லாத வஞ்சிப்பாக்களாக எண்ணு தற்கு உரியவை, ஆசிரிய அடிகள் கூடுதலாகப் பயின்றுள்ள வஞ் சிப்பாக்கள் 19 (14, 16, 17, 20, 22, 24, 97, 167, 229, 287, 377, 378, 380, 384, 386, 387, 395, 396, 400) ஆகும். இவற்றுள் ஒரு சில பாடல்களில் சில சொற்கள் சிதைந்தன." [45]

பரணர் பாடிய புறநானூற்று வஞ்சிப்பா வருமாறு:-

வாள், வலந்தர மறுப்பட்டன்
செவ்வானத்து வனப்புப் போன்றன
தாள், களங்கொளக் கழல் பறைந்தன
கொல் லேற்றின் மருப்புப் போன்றன
தோல், துவைத்தம்பிற் றுளைதோன்றுவ
நிலைக்கொராஅ இலக்கம் போன்றன
மாவே, எறிபதத்தான் இடங்காட்டக்
கறுழ்பொருத செவ்வாயான்
களிறே, கதவெறியாச் சிவந்துரா அய்
நுதிமழுங்கிய வெண்கோட்டான்
உயிருண்ணுங் கூற்றுப் போன்றன
நீயே, அலங்குளைப் பரீஇஇவுளிப்
பொலத் தேர்மிசைப் பொலிவு தோன்றி
மாக்கடல் நிவந்தெழுதரும்
செஞ்ஞாயிற்றுக் கவினைமாதோ
அனையை ஆகன் மாறே
தாயின் தூவாக் குழவிபோல
ஓவாது கூஉம்நின் உடற்றியோர் நாடே[46]

இப்பாடலின் அடிகளைச் சீர்பிரித்துக் காண்போம்.

வாள், வலந்தர மறுப்பட்டன்
நேர் நிரைநிரை நிரைநேர்நேர்

செவ்வானத்து வனப்புப் போன்றன
நேர்நேர்நேர் நிரைநேர்நிரை

தாள், களங்கொளக் கழல்பறைந்தன
நேர் நிரைநிரை நிரைநிரைநிரை

கொல் லேற்றின் மருப்புப் போன்றன
நேர்நேர் நேர்நேர் நிரைநேர் நேர்நிரை

மூன்று சீர்களைப் பெற்றும் நேர்நிரைநிரை எனும் வாய்ப் பாட்டால் கனிமுன் நிரை வந்தால் ஒன்றிய வஞ்சித்தளை. நிரை நேர்நேர் காய்முன்நேர், வெண்சீர் வெண்டளையும் நேர்நேர்நேர் காய்முன் நிரை கலித்தளையாகும். நிரைநேர்நிரை கனிமுன் நேர் வருமாயின் ஒன்றாத வஞ்சித்தளை வரப்பெற்றமையானும் நேர்நேர் மாமுன்நேர் நேர் ஒன்றிய ஆசிரியத்தளையும், இடம் பெற்றதனாலும், வஞ்சியடிகள் அதிகம் வந்தமையான் வஞ்சிப் பாவாகும். இதன் ஓசை தூங்கலோசை. இப்பாடலில் ஒன்றிய வஞ்சித்தளை - ஏந்திசை தூங்கலையும் ஒன்றாத வஞ்சித்தளை. அகவல் தூங்கலையும் குறிக்கும். இவை இரண்டும் வந்தமை யினால் பிரிந்திசை தூங்கல் ஓசை பயின்ற வஞ்சிப்பா வடிவமாக இடம்பெற்றுள்ளதை அறிய முடிகிறது.

திருவருட்பா ஆறாவது திருமுறையிலே இராமலிங்க சுவாமிகள் தசபங்கி என்னும் செய்யுள் பாடியுள்ளார். அதில் வஞ்சி விருத்தப் பாடல்கள் இரண்டு மட்டுமே இடம் பெற்றுள்ளன.

தசபங்கி என்பது ஒரு செய்யுளாய் உறுப்பைந்தும் ஒரு பொருள் அமைந்து பயப்பதனைப் பத்தாகப் பிரித்து எழுத வெவ்வேறு செய்யுளாய்த் தனித்தனியே பொருள் பயந்து தொடை யும் வினையும் தனித்தனியே காண வருவதாகும்.

தசபங்கி விளக்கம்

தசம் என்றால் பத்து என்று பொருள்படும். ஒரு கட் டளைக் கலிப்பாவில் "வெண்ணிலாவே தீயை வீசும் மீனம் முயர்த்தோன்" என்பது முதல் வரியாகும். இதனை வஞ்சித் துறைகள் மூலமாக "வெண்ணிலாவே எண்ணமேதோ புண்ண தாக்க நண்ணினாயே"

என்றும் நேரிசைவெண்பாவில் இதேபோன்று அதேவரியை "வெண்ணிலாவே தீயைவீசும் மீனம் முயர்த்தோன்" என்றும், கட்டளைக் கலித்துறையில் "வெண்ணிலாவே தீயைவீசும் மீனம் முயர்ந்தோன் விரைந்த" என்றும் ஒரே கட்டளை கலிவெண்பா வைப் பத்தாகப் பாடி பொருள் பயந்து தொடையும், வினையும் தனித்தனியே காணவருமாறு அமைத்துள்ளது சுட்டத்தக்கது. [47]

இங்ஙனமே நூறு பாட்டடங்கிய சதபங்கியும் பாடினார் அது கிடைக்கவில்லை. ஆயின் அந்த தசபங்கியில் வஞ்சி விருத் தப் பாட்டாகப் பாடியுள்ளார். இதைப் போன்ற தசபங்கி பாடல்கள் சங்க இலக்கியத்தில் இல்லை. இதை இராமலிங்க சுவாமிகள் அரி தாகவே பாடியுள்ளார்.

வஞ்சி விருத்தம் - இலக்கணம்

முச்சீரடி நான்காய் வருவது வஞ்சி விருத்தம் என்ப தாகும்"[48] என குண சாகரர் உரைக்கின்றார்.

வஞ்சி விருத்தம்

வெண்ணிலாவே தீயைவீசும் எண்ணமேதோ பாயிளங்கால்
புண்ணதாக்கன் னோய்விளைத்த நண்ணினாயே
ஆய்வதென்னே [49]

விரைந்த செய்கைமே னந்திய புரைந்தமேனி வானம்பெறு
புரிந்துநேரா மானம்வடல் பரிந்தேவாழி வா நம்பியே [50]

வஞ்சிப்பாக்கள் ஆசிரியப்பா அடியில் முடியும் பாக்கள் புறநானூறுற்றில் உள்ளன. பதிற்றுப்பத்தில் வந்த வஞ்சிப்பாக்கள் பட்டினப்பாலையில் நேரிசை ஆசிரிய வஞ்சி அடிகளாக விரவி யுள்ளன. மதுரைக் காஞ்சியிலும் வஞ்சி யாப்பு இடம் பெற்றுள் ளது. சித்தர்களின் படைப்புகளிலும் நேரிசை ஆசிரியம், நிலை மண்டில ஆசிரியம், இணைக் குறளாசிரியம், அறுசீர், எண்சீர் விருத்தங்கள் முதன்மை இடம் வகித்தாலும் வஞ்சிப்பா இடம் பெறவில்லை இருந்தாலும் வஞ்சி விருத்தப் பாக்கள் இரண்டு திரு அருட்பா ஆறாவது திருமுறையில் இடம் பெற்றுள்ளன.

வெண்பா

வெண்பா பொது இலக்கணம்

செப்பலோசையுடையதாயும், ஈற்றடி முச்சீராய் ஏனையடி நாற்சீராய், வெண்சீரும் இயற்சீரும் வந்து, வெண்டளை பெற்று, வேற்றுத்தளை விரவாது, காசு, பிறப்பு, நாள், மலர் என்னும் வாய்ப்பாடுகளுள் ஒன்றினைப் பெற்று வரும்.[51] இதுவே வெண்பா வின் பொது இலக்கணமாகும்.

வெண்பா - பாகுபாடு

"தொல்காப்பியர் வெண்பாவினைக் குறுவெண்பாட்டு நெடுவெண்பாட்டு என்று இருவகையாகப் பாகுபாடு செய்தனர். அவர்க்குப் பின்னர்த் தோன்றிய யாப்பியலார், குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா, எனப் பாகுபடுத்தினர்"[52] என்கிறார் சோ.ந. கந்தசாமி.

வெண்பா வகைகள் பற்றி இலக்கணக் கூறும் சூடாமணி வெண்பா ஆறு வகைப்படும் என்று கூறுகிறது. அவை, குறள் வெண்பா, நேரிசை வெண்பா, சிந்தியல் வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா, சவலை வெண்பா எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. [53]

தமிழ் இலக்கணப் பேரகராதி வெண்பா வகையின் அள வினைக் கூறுகிறது. "ஈரடியுடையது குறள்; இருகுறள் கொண் டது சவலை; இருகுறளும் இடையே தனிச்சொல்லும் பெறுவது நேரிசை; நாலடியும் விகற்பநடை பெற்று வருவது இன்னிசை; நேரிசை இன்னிசைபோல மூவடியால் வருவது சிந்து; நாலடியின் மிக்கு வருவது பஃறொடையாம்"[54] என்கிறார் தி.வே. கோபாலை யர்.

கலித்தொகையில் வெண்பாக்கள்

சங்க இலக்கியத்தில் தனிபட்ட வெண்பாக்களே இல்லை. கலிப்பாவின் உறுப்புக்களாகிய வெண்பாக்களே உள்ளன. மருட்பா இல்லவே இல்லை என்பதை ஆய்வின் வழி அறிய முடி கின்றது.

வெண்பா

குறள் வெண்பாக்கள் எல்லாம் குறுகிய அடிகளால் அமைந் தவை என்பர்.

புக்க வழியெல்லாங் கூறு;
கூறுவேன். மேயாயே போல வினவி வழிமுறைக்
காயாமை வேண்டுவல் யான்!
காயேம்,
மடக்குறு மாக்களோ டோரை யயரும் [55]

ஐஞ்சீரடுக்கியவெண்பா அமைந்துள்ளது. சித்தர் பாடல் தொகுப்பில் ஔவையாரின் 310 குறள்வெண்பாக்கள் இடம் பெற் றுள்ளன. அவற்றுள் உடம்பின் பயன்பற்றிய குறள்,

உடம்பினைப்பெற்ற பயன் ஆவது எல்லாம்
உடம்பினில் உத்தமனைக் காண் [56]

என்று குறிப்பிடுகிறது.

உடலைப் பெற்றதன் பயன் எல்லாம் தன்னுள் இருக்கும் இறைவனைக் காண்பதாகும் என்றும் பிறப்பின் இரகசியத்தையும் எளிமையாகக் குறள் வடிவில் சுட்டுகிறது.

காகபுசுண்டர் குறள் வெண்பா

கண்டோருஞ் சொல்லார் கருத்தாற் பெரியோரைத்
தொண்டு செய்து பெற்ற சுகம் [57]

காகபுசுண்டர் குறள் வெண்பாவில் மொத்தம் - 16 பாடல் கள் உள்ளன. குறுகிய அடிகளைக் கொண்டதால் குறள் வெண்பா எனப் பெயர் பெறும். குறள் வெண்பாவின் இலக்கணத்தைத் தழுவி ஐந்துசீரால் அடுக்கி அமைந்தது கலித்தொகையில் இடம் பெற்றுள்ளது. சித்தர் பாவகைகளில் ஔவையார் இருசீர் அடி களைக் கொண்டு பாடியதைப் போன்று காகபுசுண்டர் குறள் வெண்பாவில் பாடியுள்ளதையும் காண முடிகிறது.

சிந்தியல் வெண்பா

சிந்தியல் என்னும் பெயரினாலும் இவ்வெண்பா சுட்டப் பெறுகிறது. நேரிசை இன்னிசை போல நடந்தடி மூன்றின் வந்தால் நேரிசை இன்னிசைச் சிந்தியலாகும்.

நேரிசை வெண்பா போல இரண்டாமடியினிறுதி தனிச் சொற் பெற்று இருவிகற்பத்தாலும் ஒருவிகற்பத்தாலும் மூன்றடி யான் வருவன நேரிசைச் சிந்தியல் வெண்பா எனவும் இன்னிசை வெண்பாவே போலத் தனிச்சொல்லின்றி ஒரு விகற்பத்தாலும் பல விகற்பத்தாலும் மூன்றடியான் வருவன இன்னிசைச் சிந்தியல் வெண்பா [58] எனவும் வழங்கப்படும்.

கலித்தொகை, பரிபாடல் ஆகிய சங்கப்பாக்களில் சிந்தியல் வெண்பாக்கள் உறுப்புக்களாக வந்துள்ளன என, சோ.ந. கந்தசாமி குறிப்பிட்டுள்ளது[59] இங்குச் சுட்டத்தக்கது.

கலித்தொகையில் சிந்தியல் வெண்பா

கலித்தொகையில் மருதக்கலியின் - 92ஆவது பாடலில் கலிப்பாவில் மட்டுமே சிந்தியல் வெண்பா உறுப்பாகப் பயின்று வருதல் காணத்தக்கது.

ஒருத்தி அடிதாழ் கலிங்கந் தழீஇ ஒருவகை
முடிதாழ் இருங்கூந்தல் பற்றிப்பூ வேய்ந்த
கடிகயம் பாயும் அலந்து [60]

ஈரடி முக்கால் பெற்றும் கலித்தொகைப் பாடல் வருதலால் இது சிந்தியல் வெண்பா என்பதை அறிய முடிகிறது.

அகப்பேய்ச் சித்தர் படைப்புகளில் சிந்தியல் வெண்பா

சிந்துப்பா, கலிப்பாவின் வகையைச் சார்ந்தது. சிந்துப்பா ஓரடியில் மோனை தொடையெடுப்பின் முன்னும் பின்னும் உள்ள அரையடி சிந்தியல் அடி ஆகும். இப்பாவிற்குத் தளை வரையறை கிடையாது. முதல் அரையடி ஈற்றில் தனிச் சொல் பெற்றும் பெறா மலும் வரும்.

"சிந்து இருவகையாகப் பாடப்படும். ஒன்று சமநிலைச் சிந்து மற்றொன்று வியநிலைச் சிந்து, அடிகள் ஒத்து வருவது சம நிலைச் சிந்து. அடிகள் ஒத்து வராதது வியநிலைச் சிந்து என்பர்." [61]

அகப்பேய்ச் சித்தரின் பாடல்கள் சமநிலைச்சிந்திற்குச் சான் றாகும். மனத்தினை அதன்செயலால் பேயாக உருவகித்துப் பாடும் அகப்பேய்ச் சித்தர் பாடலில்,

நஞ்சுண்ண வேண்டாவே
நாயகன் தாள்பெறவே
நெஞ்சும் அலையாதே
நீயொன்றுஞ் சொல்லாதே [62]

சைவம் ஆருக்கடி
தன்னை யறிந்தவர்க்கே
சைவ மானவிடம்
சற்குரு பாதமடி [63]

அகப்பேய்ச் சித்தரின் முதற்பாடலில் அடிகள் ஒத்துவராத தால் நஞ்சுண்ண, நாயகன், நெஞ்சம் என்ற மாறிவந்ததால் இது விய நிலைச் சிந்து அடிகள் என்றும், அடிகள் ஒத்துவந்ததால் அது சமநிலைச் சிந்தியல் வெண்பா என்றும் கூறுவர். கலித்தொகைப் பாடலுடன் ஒப்பிட்டுச் சிந்தியல் பாவை அறிந்து கொள்ள முடி கிறது.

பரிபாடலில் சிந்தியல் வெண்பா

பரிபாடலில் பதினோராம் பாடலில் (103-5) மூன்று அடி கள் மட்டும் சிந்தியல் வெண்பாவாகும்.

கல்லகாரப் பூவாற் கண்ணி தொடுத்தாளை
நில்லிகா என்பாள் போல் நெய்தல் தொடுத்தாளே
மல்லிகா மாலை வளாய் [64]

இப்பாடல் அடிகள் ஒத்துவராத சிந்தியல் வெண்பாவாகும்.

மாங்காய்ப்பா லுண்டு மலைமே லிருப்போர்க்குத்
தேங்காய்ப்பா லேதுக்கடி- குதம்பாய்

தேங்காய்ப்பா லேதுக்கடி - குதம்பாய் [65]

என்பது குதம்பைச் சித்தர் பாடலாகும். இவற்றில் குதம்பைச் சித்தர் பாடலில் அடிகள் ஒத்து வருவதால் சமநிலைச் சிந்தியல் வெண்பா ஆகும்.

பரிபாடலில் நேரிசை வெண்பா

நேரிசை வெண்பாவின் இலக்கணம் பெற்று நான்கடி உடையதாய், தனிச்சொல் இரண்டாம் அடியின் இறுதிச்சீராய் அமைந்து, அவ்விரண்டாமடி ஒரூஉத்தொடை, மேற்கதுவாய்த் தொடை, கீழ்க்கதுவாய்த்தொடை, முற்றுத் தொடை ஆகியவற் றில் ஒன்றினைப் பெற்று இரண்டு விகற்பத்தாலும் ஒரு விகற்பத் தாலும் பாடப் பெறுவது நேரிசை வெண்பா [66] எனப்படும்.

பரிபாடல் திரட்டில் மதுரையின் சிறப்பைப் புலப்படுத்துவ தாக அமைந்த ஆறாம் பாடல் நேரிசை வெண்பாவில் அமைந் துள்ளது.

உலகம் ஒருநிறையாத் தானோர் நிறையாய்
புலவர் புலக்கோலால் தூக்க - உலகைத்தும்
தான்வாட வாடாத தன்மைத்தே தென்னவன்
நான்மாடக் கூடல் நகர் [67]

பட்டினத்தார் தாம் பாடிய பாடல்களில் இவ்வகை நேரிசை வெண்பாவைப் பெரிதும் பயன்படுத்தியுள்ளார். ஆனால் சங்க இலக்கியங்களில் பரிபாடல் திரட்டில் மட்டுமே (5, 6 ஆகிய பாடல்களில் மட்டுமே நேரிசை வெண்பா பயின்று வந்தது சுட்டத் தக்கது. மேலும், சித்தர்களில், பட்டினத்தார் ஞானம் 100 என்னும் நூலில் அடங்கிய 101 பாடல்களும் நேரிசை வெண்பாவில் அமைந்தவையாகும்.

பட்டினத்தார் இயற்றிய பாடல்கள் நேரிசை வெண்பா வைச் சார்ந்தவையாகும். அவரது காப்புச் செய்யுளானது,

நண்பான நெஞ்சுக்கே ஞானத்தால் நல்லபுத்தி
வெண்பாவாய் நூறும் விளம்பவே- பண்பாக்

ககனப் பதமுறவக் கன்ம மருகக்
ககனதிர் வேல்முருகன் காப்பு [68]

இது இறைவணக்கத்தோடு அமைந்த இருவிகற்ப நேரிசை வெண்பாவால் அமைந்தது. மேலும், தாயாருக்குத் தகனக் கிரியைச் செய்யும் போது பாடிய பட்டினத்தார் பாடல்கள் ஒன்பதும் நேரிசை வெண்பாவைச் சார்ந்தவை.

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்தே
அந்திபக லாச்சீவனை ஆதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்து பெற்றதாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டு வேன் [69]

இடைக்காட்டுச் சித்தர் பாடலில் நேரிசை வெண்பாவாக ஒரு பாடல் இடம் பெற்றுள்ளது. திருவள்ளுவர் ஞானத்தில் நேரிசை வெண்பாக்கள் (11 பாடல்கள்) இடம் பெற்றுள்ளன.

ஞானமறிந் தோர்க்கு நமனில்லை நாள் தோறும்
பானமதை யுண்டு பசியினால்- ஞானமது
கண்டா லுடலுயிருங் காயம் வலுவாகும்
உண்டா லமிர்தரச முண் [70]

என்னும் பாட்டு ஞானம் அறிந்தோர்க்குப் பயமில்லை. ஞானம் பெற்றால் உடல், உயிர், காயம் வலுவாகும், அமிர்தரசம் உண் பார்க்கே என்னும் திருவள்ளுவர் ஞானப் பாடலின் கருத்து ஆழ்ந்து உணரத்தக்கது. இதுவும் நேரிசை வெண்பா யாப்பால் பயின்றுள்ளது என அறிய முடிகிறது.

கலிப்பா

கலிப்பா பொது இலக்கணம்

கலிப்பாவின் பொது இலக்கணத்தை இரண்டாகக் கூறுவர். தனக்கு வரையறுக்கப்பட்ட உறுப்புகளிற்குன்றாது வருதல் கலிப் பாவின் முதல் இலக்கணமாகும். தன்னிடத்தில் பயின்று வரும் சொல்லமைதி, பொருளமைதிகளுக்குத் தகுந்தாற்போல் துள்ளல் இசை பெற்றுவருதல் இரண்டாவது வரையறையாகும். இவ்வாறு தெளிந்தவர் காக்கைப்பாடினியாரும் அவிநயனாரும் ஆவர். இவ் விருவரும் துள்ளல் ஓசையினைத் துள்ளல் இசை என்று சுட்டு

கின்றனர். இவ்வினிய ஒலி நயத்தினால் கலிப்பா இசை நலம் கெழுமிய பாட்டாக விளங்கிய திறம் கருதுதற்குரியது. மயேச்சுரர், துள்ளல் ஓசையின் தள்ளாதாகி வருவது கலிப்பா என்பர்.[71] இத னால் ஓசையே பாவிற்கு இன்றியமையாத உறுப்பு என்பது தெளிவு.

தொல்காப்பியர் செய்யுளியலில் கலிப்பாவிற்கு உரிய அடி யின் அளவை உணர்த்துகிறார்.

அளவடி மிகுதி யுளப்படத் தோன்றி
இருநெடில் அடியுங் கலியிற்குரிய [72]

அளவடியின் மிக்க பதின்மூன்றெழுத்து முதலாக நெடிலடி யுங் கழிநெடிலடியுமாகிய இருபதெழுத்தில் வரும்.

"எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் அடிவரையறை களை அடிப்படையாகக் கொண்டு பகுக்கப்பட்டுள்ளன. இவை யாப்பிலும் வடிவத்திலும் வேறுபாடுடையன." [73]

மேலும், சங்க இலக்கியத்தில் அமைந்துள்ள யாப்புகளைப் பற்றி அறிஞர்கள் கூறும் கருத்துகளைக் காண்பது இங்கு இன்றி யமையாதது.

காமங்கண்ணிய நிலைமைத்தாகும் என்னும் நூற்பாவைக் கொண்டு தொல்காப்பியர் செய்யுளியல் நூற்பாவில்,

கொச்சகம் அராகஞ் சுரிதகம் எருத்தொடு
செப்பிய நான்கும் தனக்குறுப் பாகக்
காமங் கண்ணிய நிலைமைத் தாகும்[74]

என்று குறிப்பிடுகிறார். அறத்தினும் பொருளினும் வராத இவை கொச்சகக் கலி, அராகம், சுரிதகம், தரவு என்னும் கலிப்பாவின் இனமாகிய கொச்சகக் கலிப்பா அகத்திணைக்கு மட்டுமே உடை யது என்று கூறுகிறார் தொல்காப் பியர்.

தொல்காப்பியர் அகத்திணை பாடுதற்குச் சிறப்புடைய யாப்பாகக் கலிப்பாவைக் கூறியுள்ளார். சங்க இலக்கியத்தில் தொல்காப்பியருக்குப் பின்னர் வந்த படைப்பாளர்கள் ஆசிரிய

யாப்பில் காதற் பொருண்மையினை மிகுதியாகப் பாடியிருத்தல் நோக்கத்தக்கது.

ஆசிரியப்பாவிற்கு உள்ள சிறப்பு ஏனைய பாக்களுக்கு இல்லை. அகத்திணையேயன்றி, புறத்திணைக் கூறுகளையும் புலப்படுத்துவதற்கு ஆசிரியப்பாவினையே பயன்படுத்திக் கொண்டனர். அகவல் யாப்பில் தகவலைப் புலப்படுத்துவது எளிதாதலின் இப்பாவகை, சங்க காலத்தில் மிக்க செல்வாக்குப் பெற்றுள்ளது. பத்துப்பாட்டினுள் பொருநராற்றுப்படை, மதுரைக் காஞ்சி, பட்டினப்பாலை ஆகியவற்றுள் வஞ்சியடிகள் மிகுந்திருத்தலின் அதனை வஞ்சி நெடும்பாட்டு என்றும் கூறுவர். கலிப் பாவில் அதன் உறுப்புகள் வெண்பாக்களில் யாக்கப்பட்டுள்ளன. தனிப்பட்ட வெண்பா இல்லை, கலித் தொகை, கலித்துறை யினால் பெரிதும் யாக்கப்பெறும். இப்பாவகை, துள்ளல் ஓசை மிக்கது. வெண்பாவின் நடையை ஒத்த நடையினை உடையது கலிப்பா. அகத்திணையியலில் காமப் பொருட்டாகப் பாடப் பெறும் கலிப்பா செய்யுளியலில் தேவர்ப் பரா அய ஒத்தாழிசைக் கலி கடவுட் பொருளினும் வரும் என்றார். 1. ஒத்தாழிசை, 2. கலி வெண்பாட்டு, 3. கொச்சகம், 4. உறழ்கலி என்ற நான்கும் பெரும் பிரிவுகளாக உள்ளன"[75] என்னும் சோ.ந. கந்தசாமியின் கூற்று இங்கு எண்ணுதற்குரியது.

கலிப்பாவின் இலக்கண விளக்கம்

தொல்காப்பியர் கூறிய கருத்து உண்மையாதலைக் கலித் தொகையில் காண முடிகிறது. பிற அகப்பாடல்களில் புறச் செய்தி கள் இடம் பெறுவது போல் கலித்தொகையில் புராணச் செய்திகள் இடம்பெறுகின்றன. கலிப்பா ஆடலுடன் கூடிய பாடல் என்பதை அதன் வடிவம் உணர்த்தும். கலிப்பாவின் உறுப்புகள் அகத் திணைப் பாட்டுக் கூறுகளாகத் திகழ்கின்றன.

தரவு - தோற்றுவாய் போல அமைந்து கேட்குநரைத் தன் வயப்படுத்தும்.

தாழிசை - கருத்துப் புலப்பாடு கூறுநர் சொற்சுவை, பொருட் சுவை அமையக் கூறும்.

தனிச்சொல் - கேட்குநரின் ஆவலைத் தூண்டவும், கருத்தின் வன்மை மென்மைகளைப் பகுக்கவும் (இடை நிறுத்த, கருத்தைத் தொடர) உதவுகிறது.

சுரிதகம்- கருத்துப் புலப்பாட்டின் பயன் (நிறைவு எனலாம்) ஆடல், பாடல் வழிக் கருத்துப் புலப்பாடு நிகழ்த்த இத்தகைய இலக்கண அமைப்புகள் (ஒழுங் கமைவு) வகுக்கப்பட்டுள்ளன"[76] என விளம்பும் இரெ. குமரனின் கூற்று பொருத்தமானதாகும்.

கலித்தாழிசை விளக்கம்

"கலித்தாழிசை என்பது இரண்டடியும், பலவடியும் வந்து, ஈற்றடிமிக்கு, அல்லாதவடி தம்முள் ஒத்தும், ஒவ்வாதும் வருவது கலித்தாழிசை"[77] என, குணசாகரர் குறிப்பிடுகின்றார்.

கலிப்பாவில் தாழிசை

கலித்தொகையில் கலிப்பாவில் தாழ்ந்த ஓசைபெறாத தாழிசை வந்தமைக்கு,

வலிமுன்பின் வல்லென்ற யாக்கைப் புலிநோக்கிற்
சுற்றமை வில்லர் சுரிவளர் பித்தைய
ரற்றம்பார்த் தல்குங் கடுங்கண் மறவர்தாங்
கொள்ளும் பொருளில ராயினும் வம்பலர் [78]

இத்தரவின் பின் நான்கு அடிகளில் அவ்வோசை அமைந் திருத்தல் குறிக்கத்தக்கது.

அழுகணிச் சித்தர் பாடலில் கலித்தாழிசை

மூலப் பதியடியோ மூவிரண்டு வீடதிலே
கோலப் பதியடியோ குதர்க்கந் தெரு நடுவே
சாலப் பதிதனிலே தணலாய் வளர்த்தகம்பம்
மேலப் பதிதனிலே எண் கண்ணம்மா
விளையாட்டைப் பாரேனோ [79]

பதினெண்சித்தர் ஞானக்கோவையில் அழுகணிச்சித்தர் பாடிய 32 பாடல்களும் கலித்தாழிசைப் பாடலேயாகும். கலிப்

பாவின் இலக்கணத்தைப் பல அடிகளில் பெற்று அவ்வோசை அமைந்திருப்பதால் கலித்தாழிசையாகும். இவை அழுகணிச் சித்தர், வள்ளலார் பாடல்களில் இடம் பெறுவதைக் காண முடி கின்றது.

திருவருட்பா ஆறாவது திருமுறையில் நெஞ்சொடு கிளத் தல் என்னும் பகுதியில் கலித்தாழிசைப் பாடல் இடம் பெறுகிறது.

காலங் கடந்த கடவுளைக் காணற்குக்
காலங் கருதுவதேன்- நெஞ்சே
காலங் கருதுவதேன் [80]

என்பது அப்பாடல்.

இத்தரவில் மூன்று அடிகள் கொண்டும் ஓசை ஒத்தும் காலங் கருதுவ தேன் என்று வந்தமையால் இப்பா கலித்தாழிசை பாடலால் அமைந்த யாப்பாகும்.

கலிப்பாவில் தரவு, கொச்சகம்

தரவு, கொச்சகம், நான்கு, ஆறு, எட்டு ஆகிய அடிகளில் ஒன்றினைப் பெற்றுவரும் என்பது நச்சினார்க்கினியரின் கருத் தாகும். திருவாசகத்தில் இடம்பெறும் திருக்கோத்தும்பி, திருவம் மானை, திருவெம்பாவை முதலியன இங்ஙனம் வந்த கொச்சக ஒரு போகு என்பது இவர் துணிபெனத்தோன்றுகிறது. பேராசிரியர் தரவு கொச்சகத்தினை, (1) தன்பொருளோடு தான் முடிவது (2) தம் பொருளோடு தாம் முடியாதவை என்ற இருவகையாகப் பாகு படுத்திக் கூறுவர். தரவு கொச்சகம், தரவினைக் கொச்சகம் என்பன இரண்டு தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்றும் பெறாதும் வரு தலையும் குறித்தனர். [81]

உறுப்புகளின் அடியளவு

தரவு

தரவு, நாலடி இழிபாகவும் பன்னிரண்டடி உயர்பாகவும் இடை வரும் அடி எல்லாவற்றாலும் வரப்பெறும் என்று தொல் காப்பியச் செய்யுளியலில் இளம் பூரணர் உரைப்பர்.

தரவே தானும் நாலடி யிழிபாய்
ஆறிரண் டுயர்வும் பிறவும் பெறுமே [82]

அடியின் வரையரையை தரவிற்கு உணர்த்தினர்.

கலித்தொகையில் தரவு கொச்சகப் பாடல் பின்வருமாறு அமைகிறது.

நீரார் செறுவில் நெய்தலொடு நீடிய
நேரித ழாம்பல் நிரையிதழ் கொண்மார்
சீரார் சேயிழை யொலிப்ப ஓடும்
ஓரை மகளிரோதை வெரீஇயெழுந்
தாரலார்கை யஞ்சிறைத் தொழுதி
உயர்ந்த பொங்கர் உயர்மரம் ஏறி
அமர்க்கண் மகளிர் அலம்பிய அந்நோய்
தமர்க்குரைப் பனபோற் பல்குரல் பயிற்றும்
உயர்ந்த போரின் ஒலிநல்லூரன் [83]

மருதக்கலியில் நான்கு அடிகளுக்கு மேல் இடம் பெற்ற தரவு, பாவாகும். நச்சினார்க்கினியர் பாட்டின் உரை முடிவில் பதின்மூன்றடியான் வந்த தரவு என்பர்.

சித்தர் பாடல்களில் திருவள்ளுவர், சித்தர், இடைக்காடர் மற்றும் பட்டினத்தார் பாடல்களில் தரவு கொச்சகம் நெஞ்சோடு புலம்பல் பாடலில் மொத்தம் 37 பாடல்கள் காணக்கிடைக்கின்றன. அவையாவன:

மண்காட்டிப் பொன்காட்டி மாயவிருள் காட்டிச்
செங்காட்டி லாடுகின்ற தேசிகனைப் போற்றாமல்
கண்காட்டும் வேசியர்தங் கண் வலையிற் சிக்கிமிக
அங்காடி நாய்போல் அலைந்தனையே நெஞ்சமே [84]

திருவள்ளுவர் ஞானம்

அண்டரண்ட வான்புவியும் ஆகமத்தினுட்பொருளும்
கண்டிதமா யான்விளங்குங் காயமதி லேயறியும்
வண்டறெனை நீசனென்ற வாறுதனையே யொழித்தேன்
விண்டரக சியந்தன்னை விளக்கமது காண்கிலரே [85]

இடைக்காடர்

சீரார் சிவக் கொழுந்தைத் தெள்ளமுதைச் செந்தேனைப்
பாராதி வான் பொருளைப் பஞ்சவுரு வானவென்றைப்
பேரான விண்ணொளியைப் பேரின்ப வாரிதியை
நேராக எந்நாளும் நெஞ்சிருத்தி வாழ்வேனே [86]

கலிப்பாவின் தரவு கொச்சகப்பாவிற்குப் பக்தி இலக்கியத் தில் இருந்து மாணிக்கவாசகரின் திருவெம்பாவைப் பாடலைச் சான்று காட்டலாம்.

ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடம் கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார் கழல்கள் வாழ்த்திய வாழ்த்து ஒலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மிமெய் மறந்து
போது ஆர் அமளியின் மேல் நின்றும் புரண்டும் இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எம்தோழி பரிசு ஏல் ஓர் எம்பாவாய் [87]

மாணிக்கவாசகரின் திருவெம்பாவை கொச்சகக் கலிப்பா வில் அமைந்தது. திருவள்ளுவர் ஞானம் நூறும், பட்டினத்தாரின் நெஞ்சொடு புலம்பலும், இடைக்காட்டுச்சித்தர் பாடல்களும் தரவு கொச்சகக் கலிப்பாவில் அமைந்திருக்கின்றன. சங்க இலக்கியத் தில் கலித்தொகையின் வடிவ அடிப்படையிலான தாக்கத்தைச் சித்தர்கள் படைப்புகளில் காண முடிகிறது.

சங்க இலக்கியத்தில் உள்ள யாப்பமைவுகள், சித்தர்கள் பாடல்களில் காணப்படுகின்றன. அவை நேரிசை ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா ஆகும். வஞ்சிவிருத்தம் மட்டும் திருவருட்பாவில் அரிதாகக் காணக் கிடைக்கின்றது. வெண்பாக்கள், குறள் வெண்பாவாகவும், சிந்தி யல் வெண்பா வாகவும், கலிப்பா கலித்தாழிசையாகவும், தரவு கொச்சகமாகவும் சித்தர் படைப்புகளில் இடம் பெற்றுள்ளன. மேலும், சித்தர் பாடல்கள் பழமைக்குப் பழமையும், புதுமைக் குப் புதுமை, கொண்ட வையாகவும் உயர்தனிச் செம்பண்பாக வும், நாட்டுப்புற மக்களின் பாமர மொழியாகவும், புலமைக்குப்

புலமையாகவும் அமைகின்றன. சித்தர் பாடல்கள் யாப்பமைதியிலும், சொல்லாட்சியிலும், மொழியின் வழக்காற்றிலும் செம்மை இலக்கியமாகத் திகழ்கின்றன. இவற்றால் வடிவ அடிப்படையில் சங்க இலக்கியச் செல்வாக்கு சித்தர் பாடல்களில் இடம் பெற்றுள்ளதைக் காண முடிகிறது.

சான்றெண் விளக்கம்

1. தொல். இளம். பொரு. நூ. 56
2. மேலது, 410
3. பண்டித வித்வான் தி.வே. கோபாலையர் கட்டுரை - 1, ப. 38
4. தொல். இளம். செய். நூ. 383.
5. மேலது, ப. 93
6. எஸ். செல்வகணபதி, ஒப்பிலக்கிய நோக்கில் தமிழிலக்கியம், ப. 18.
7. சா. கிருட்டிணமூர்த்தி, தமிழ் இலக்கிய வகைமையியல், ப. 198.
8. சோ.ந. கந்தசாமி, தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும், முதற்பாகம், ப. 465.
9. மேலது, ப. 373
10. மேலது, ப. 374
11. க. வெள்ளைவாரணன், பன்னிரு திருமுறை இரண்டாம் பகுதி, ப. 416.
12. அமிர்தசாகரர் இயற்றிய குணசாகரர் உரை, யாப்பருங்கலக் காரிகை, ப. 86.
13. தொல். இளம். செய். நூ. 374
14. அமிர்தசாகரர், யாப்பருங்கலக்காரிகை, ப. 86
15. கு. மோகனராசு, தமிழ் யாப்பு, ப. 75
16. சோ.ந. கந்தசாமி, சங்க இலக்கியத்தில் யாப்பு, ப. 82
17. இரா. தண்டாயுதம், சங்க இலக்கியம், பத்துப்பாட்டு, ப. 11
18. நாராயணசாமி அய்யர், நற்றிணை, மூலமும் உரையும், நற், பா. 1
19. ஞானக்கோவையென வழங்கும் சித்தர் பாடல்கள், பட்டி. பா. 30-34

20. ரா. இராகவையங்கார், குறு. பா. 20.
21. பதினெண் சித்தர்கள், பெரியஞானக்கோவை, பட்டி. பா. 10
22. சோ.ந. கந்தசாமி, தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும், முதற்பகுதி, ப. 599
23. பொ.வே. சோமசுந்தரனார், ஐங்குறுநூறு மூலமும் உரையும், ஐங். பா. 57.
24. பதினெண் சித்தர்கள், பெரிய ஞானக்கோவை, பட்டி. பா. 15-19.
25. மு. இளமுருகன், தமிழ்ப் பெருங்காப்பியங்களில் சங்க இலக்கியத்தின் செல்வாக்கு, ப. 42
26. தொல். இளம். செய். நூ. 420 - 1.
27. அமிர்தசாகரர் இயற்றிய குணசாகரர் உரை, யாப்பருங்கலக் காரிகை, நூ. 29
28. மேலது, ப. 89
29. மேலது, ப. 89
30. பின்னத்தூர் நாராயணசாமி அய்யர், நற்றிணை, மூலமும் உரையும், நற், பா. 348.
31. அரு. ராமநாதன், ஞானக்கோவையென வழங்கும் சித்தர் பாடல்கள், பட்டி- பா. 70, 5-10.
32. பொ.வே. சோமசுந்தரனார், பரிபாடல் மூலமும் உரையும் பரி-பா.7,77-86.
33. மேலது, பரி. பா. - 17, 48 - 53.
34. பதினெண் சித்தர்கள், பெரியஞானக்கோவை, பட்டி- பா. 35.
35. அ. குமாரசுவாமி புலவர், யாப்பருங்கலக்காரிகை புத்துரை, ப. 94
36. மு.சண்முகம் பிள்ளை, குறுந்தொகை மூலமும் உரையும், குறு. பா. 309.
37. ரா. இராகவையங்கார், குறுந்தொகை விளக்கம், பா. 18.
38. பதினெண்சித்தர்கள் பெரியஞானக்கோவை, பட்டி- பா. 65-70.
39. சோ.ந. கந்தசாமி, தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும், முதற் பாகம், ப. 55.

40. ஔவை. சு. துரைசாமிபிள்ளை, புறநானூறு மூலமும் உரையும், ப. 186.
41. இராமலிங்க சுவாமிகள், திருஅருட்பா ஆறாவது திருமுறை பா.1,2, 1.3-14,17-18.
42. குணசாகரர் உரை, யாப்பருங்கலக்காரிகை, செய்- நூ. 1.
43. சோ.ந. கந்தசாமி, தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும், முதற் பாகம், ப. 311.
44. தொல். இளம். உரை, செய். ப. 120
45. சோ.ந. கந்தசாமி, தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும், முதற் பாகம், பக்.554-559.
46. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை, புறநானூறு மூலமும் உரையும், பா. 4.
47. இராமலிங்க சுவாமிகள், திரு அருட்பா ஆறாவது திருமுறை, பா- 618, 619.
48. அமிர்தசாகரர் இயற்றிய குணசாகரர் உரை, யாப்பருங்கலக் காரிகை, ப. 127
49. மேலது, பா- 7.
50. மேலது, பா- 9.
51. மேலது, ப. 64.
52. சோ.ந. கந்தசாமி, தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும், ப. 377
53. த.கோ. பரமசிவம், இலக்கணச் சூடாமணி, ப. 717
54. தி.வே. கோபாலையர், தமிழ் இலக்கணப் பேரகராதி, பொருள். யாப்பு, ப. 222
55. நச்சினார்க்கினியர் உரை, கலித்தொகை, மூலமும் உரையும் கலி-பா-82, பக். 5-9.
56. த. கோவேந்தன், சித்தர் பாடல்கள், ஔ. பா. 11.
57. அரு. ராமநாதன், ஞானக்கோவையென வழங்கும் சித்தர் பாடல்கள், கா.சு.கு.பா. 12
58. அமிர்தசாகரர் இயற்றிய, குணசாகரர் உரை, யாப்பருங்கலக் காரிகை, ப.73.
59. சோ.ந. கந்தசாமி தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும், ப. 380.

60. நச்சினார்க்கினியர் உரை, கலித்தொகை மூலமும் உரையும் கலி- பா. 92, 42-44.
61. இளமதி சானகிராமன், சித்தர்களின் சிந்தனைகள், பாகம்-11, ப. 70.
62. பதினெண் சித்தர்கள், பெரியஞானக்கோவை, அக. சி-பா. 1.
63. மேலது, பா. 55.
64. பொ.வே.சோமசுந்தரனார் பரிபாடல், மூலமும் உரையும், பரி. 103-5.
65. பதினெண் சித்தர்கள், பெரியஞானக்கோவை, குத-சி-பா. 28.
66. சோ.ந. கந்தசாமி, தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும், முதற்பாகம், ப. 380.
67. பொ.வே. சோமசுந்தரனார், பரிபாடல் மூலமும் உரையும், பரி-பா. 6.
68. பதினெண் சித்தர்கள், பெரிய ஞானக்கோவை, பட்டினத்தார், ஞானம். 100, பட்டி-சித்-பா.1.
69. பதினெண் சித்தர்கள், பெரிய ஞானக்கோவை, பட்டி. சித்.பா.2.
70. மேலது, திருவள்ளுவர் ஞானம், திருவ-சித்-10.
71. சோ.ந.கந்தசாமி தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும், ப. 458.
72. தொல். இளம். உரை, செய்-நூ. 365.
73. இரெ. குமரன், சங்க இலக்கிய அகப்பாடல்களில் கருத்துப் புலப்பாட்டு உத்திகள், ப. 138
74. தொல். இளம். செய். நூ. 426
75. சோ.ந. கந்தசாமி, தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும், முதற்பாகம், ப. 465
76. இரெ. குமரன், சங்க இலக்கிய அகப்பாடல்களில் கருத்துப் புலப்பாட்டு உத்திகள், ப. 138
77. அமிர்தசாகரர் இயற்றிய குணசாகரர் உரை, யாப்பருங்கலக் காரிகை, ப. 118
78. நச்சினார்க்கினியர் உரை, கலித்தொகை மூலமும் உரையும் கலி- பாலை - பா. 4-4.

79. பதினெண் சித்தர்கள், பெரியஞானக்கோவை, அழு. சித். பா. 1.
80. இராமலிங்க சுவாமிகள், திருவருட்பா ஆறாவது திருமுறை நெஞ். கி- பா. 3.
81. சோ.ந.கந்சாமி, தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சி யும், ப.436.
82. தொல். இளம் உரை, செய்-நூ.438.
83. நச்சினார்க்கினியர் உரை, கலித்தொகை மூலமும் உரையும் கலி. மரு. பா.75,1-9.
84. பதினெண் சித்தர்கள், பெரிய ஞானக்கோவை, பட்டி, நெஞ். புல. பா.1.
85. மேலது, திரு.ஞா. பா. 3.
86. மேலது, இடை.சி. பா. 11.
87. ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர், திருவாசகம், திருவெம் பாவை, பா. 1.

4. சங்க இலக்கியம் – சித்தர் படைப்புகளில் உத்திச் செல்வாக்கு

சங்க காலப் புலவர்களும் சித்தர்களும், வாழ்க்கை நிகழ்வு களையும், அனுபவங்களையும் பாடல்களாகப் படைத்துள்ளனர். அவற்றை எளிமையாகப் புரிந்து கொள்வதற்கும், விளக்குவதற் கும் பயன்படுத்திய உத்திகளான உவமை, உருவகம், தொன்மம் போன்றவற்றை ஒப்பிட்டு ஆராய்வதாக இப்பகுதி அமைகின்றது.

உத்தி விளக்கம்

"உத்தி எனும் சொல் பல்பொருள் நிலையினது. தமிழ்ப் பேரகராதி பல்வகை அடிச்சொல் நிலையில் இதற்குப் பல்வேறு வகைப் பொருள் நிலைகள் காட்டுகின்றது. 'உந்து' எனும் அடிப் படைச் சொல் தொடர்பில் ஆபரணத் தொடர்கள், சீதேவி உருவம் பொறித்த தலையணி எனும் பொருண்மைகள் அமைகின்றன உக்தி என்ற அடிப்படையில் பேச்சு எனும் பொருள் உணர்த்தப் படுகின்றது. வடமொழிச் சொல் மரபுத் தொடர்பில் சேர்க்கை, யுக்தி (தந்திரம்), முப்பத்திரண்டு வகை உத்திகள் போன்றவை சுட்டப்படுகின்றன"[1] *என்கிறார் ச.வே. சுப்பிரமணியன்.*

ஆங்கிலச் சொல்லான டெக்னிக் (Technique) எனும் சொல் லுக்கு நிகரான சொல்லாக உத்தி என்னும் சொல் கையாளப்படு கிறது. நா. கதிரைவேற் பிள்ளை அவர்களின் தமிழ் - தமிழ் அக ராதி உத்தி எனும் சொல்லுக்கு அனுமானம், அறிவு, சேர்தல், அபின், இசைவு, இணக்கம், செல்வம், சொல், தந்திரவுத்தி"[2] ஆகிய பல பொருளைக் குறிப்பிடுகிறது.

"இதனைத் தமிழ்ச் சொல்லாகக் காட்டும் பொருள் நிலை யில் அடிப்படையில் ஆய்வும் காணப்படுகிறது. மேன்மையானது, உயர்ந்தது, சிறந்தது எனப் பொருள்படுகிறது. உகப்பு, உச்சி, உம்பர், உயரம், உன்னு, உன்னதம், உயர்வு எனப் பொருள்படப் பொருத்தமாக உகரம் - உயரச் சுட்டுக்கு ஆகி வருதல் நினைக் கப்படுகின்றது."[3]

"உள்ளடக்கத்தின் வெளிப்பாட்டு முறையே உத்தியாகும். ஒரு கலைஞன் தன் துறையின் செவ்விய வெளியீட்டிற்குப் பயன் கொள்ளும் ஆற்றலும் ஆக்க முறையும் உத்தி எனப்படுகிறது"[4] என்கிறார் சி.இ. மறைமலை.

உவமை

உவமையின் சிறப்பை அறிந்து உவம இயல் என்னும் ஓர் இயலையே வகுத்துள்ளார் தொல்காப்பியர். உவமையின் இலக் கணத்தைக் கூறும் தொல் காப்பியர்,

> **வினைப்பயன் மெய்யுரு என்ற நான்கே**
> **வகைபெற வந்த உவமத் தோற்றம்** [5]

உவமை என்பது பொருளைத் தக்க ஒப்புமை கொண்டு உணர்த்துவதாகும். ஒரு பொருளின் வண்ணம், வடிவு, தொழில், பயன் முதலிய இயல்புகளை நன்கு புலப்படும்படி செய்வதாகிய பொருட் புலப்பாட்டு நெறியாகும். பிறிதொன்றினை ஒப்புமை யாக எடுத்துக்காட்டித் தான் சொல்லக் கருதிய பொருளின் இயல் பினை விளக்குவதே உவமை எனப்படும். வினை, பயன், மெய், உரு எனும் நான்கு நிலைகளில் உவமை ஓர் உத்தியாகப் பயன் படுத்தப்படுகிறது.

"ஒரு பொருளை அறியாதான் ஒருவற்கு அப்பொருளை அறிவிக்குங்கால் அதனோடு ஒத்த பொருள் பிறிதொன்றனைக் காட்டி இது போல்வது அது என்று கூறுவதே உவமம்" [6] என்று விளக்கப்படுவதைக் காண முடிகிறது.

உவமை என்பது அதன் உயர்வைக்காட்ட அதனின்றும் உயர்ந்த பொருளையே வரையறையாக அமைக்க வேண்டியுள் ளது. உவமைப் பொருளைவிட உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்பதால்,

உயர்ந்த தன் மேற்றே உள்ளுங்காலை
என்று இலக்கணம் எழுந்தது [7]

உவமை என்பது உயர்ந்த பொருளாகவரும் என்பதோடு அது சிறப்பு, நலன், காதல், வலி ஆகிய சிறப்புகளால் அமைகிறது.

சிறப்பே நலனே காதல் வலியோடு
அந்நாற் பண்பும் நிலைக்களம் என்ப [8]

சங்க இலக்கியத்தில் உவமை

"இலக்கியத்தை அழகுபடுத்தும் முதல் அணி அல்லது தாயணி உவமையேயாகும். அது காலத்தால் மிகவும் முற்பட்ட தாகும். தொல்காப்பியர் 'உவமவியல்' என ஓரியலை வகுத்திருப் பது போலச் சங்கப் பாடல்களிலும் ஏறத்தாழ தொண்ணூறு விழுக் காடு உவமையே இடம் பெறுகிறது. ஏனைய பத்து விழுக்காடு பிற அணிகளும் இடம் பெறுகின்றன என்றாலும், அவற்றுள் பல உவமையின் வழிபட்டனவேயாகும்."[9]

வடமொழியிலும் வேத இலக்கியத்தில், குறிப்பாக இருக்கு வேதத்தில் உபமம், அதிசயோத்தி, ரூபகம் என்பன காணப்படுகின்றன என்பர். பரத முனிவர் உபமம், ரூபகம், தீபகம், யமகம் என்ற நான்கு அணிகளை மட்டுமே குறித்துள்ளார். எனவே எம்மொழி இலக்கியத்திலும் உவமையே தொன்மை மிக்க அணி"[9] என்கிறார் தமிழண்ணல்.

சங்க காலப் புலவர்கள் தமது கருத்தை மிகவும் வலி யுறுத்திச் சொல்ல வேண்டிய இடங்களிலெல்லாம் மிக அழகிய

உவமைகளைக் கையாண்டனர். உவமைப் பொருளுக்கும், உவமேயப் பொருளுக்கும் மிக நெருங்கிய பொருத்தமிருக்குமாறு படைத் திருப்பது சங்கப் புலவர்களின் தனிச்சிறப்பாகும். அவ்வுவமைகளைக் கேட்போருக்கும் கற்போருக்கும் சிறப்பினவாய் அவை விளங்குகின்றன. சங்கச் செய்யுட்களில் வடிவு, வண்ணம் என்ற வகையில் அமைவது ஒரு பகுதியாகும். தொழில், பண்பு, பயன் என்ற இவைகாரணமாகப் பிறக்கும் உவமைகள் மேற் சொன்ன வடிவு, வண்ண உவமைகளைவிட மிகுதி எனலாம்.

உவமையின் வகைகளான வினை, பயன், மெய், உரு என்ற நான்கையும் சித்தர்கள் தங்கள் பாடல்களில் இந்நான்கு உவமைகளும் பயின்று வருமாறு பயன்படுத்தியுள்ளனர்.

சித்தர் பாடல்களில் உவமை

மக்களின் பேச்சு வழக்கினை மிகுதியும் பயன்படுத்தும் சித்தர்கள், பேச்சு வழக்கில் பயன்படுகின்ற உவமைகளையே தம் பாடல்களில் எடுத்தாளுகின்றனர். பேச்சு வழக்கில் உவமையும் உருவகமும் பல வகையில் பயன்படுவதை அறிஞர் ரிச்சர்டும் குறிப்பர்.[11]

சித்தர்கள் தங்கள் பாடல்களில் அறவுரைக் கருத்துக்களை விளக்க, உவமைகளை மிகுதியாகக் கையாண்டுள்ளார்கள்.

மக்கள் அறிந்த ஒன்றினைக் கொண்டே அவர்களுக்கு உண்மைப் பொருளை உணர்த்த விரும்பியதால் வாழ்க்கையில் அன்றாடம் காணுகின்ற பொருள்களையே உவமைப் பொருளாக அமைத்துள்ளனர்.

இவ்வகையில் அமைந்துள்ள உவமைகள் சமுதாய உவமைகள், தத்துவ உவமைகள், ஒரு பொருளுக்குப் பல உவமைகள், பல பொருளுக்கும் ஓர் உவமை, ஓர் உவமையையே பலரும் மேற் கொள்ளுதல் எனும் பிரிவுகளில் இடம் பெற்றிருப்பதைக் காண முடிகிறது.

உறுப்புகள்

உடலுறுப்புகளுக்கு உவமைகளாகச் சங்க நூற் புலவோர் கண்டவை இலக்கியங்களில் செல்வாக்குப் பெற்றுள்ளன.

மணியும் பொன்னும்

மகளிரின் மேனி பொன்னுக்கும் அவர்களின் கூந்தல் நீல மணிக்கும் இணைத்து உவமப்படுத்தப் பட்டுள்ளன.

பொன்னும் மணியும் போலும் யாழநின்
நன்னர் மேனியும் நாறிருங் கதுப்பும் [12]

என உடம்புக்குப் பொன்னும் மணியும் உவமைகளாக அமைந்தன.

பொன்னுடை மணியண்ண மாமை [13]

என்பது கலிப்பாடல்.

பலநாளும் நினைவு வருத்தத்தினால் பசலையாலே நுகரப் பட்டவளுடைய பொன்னையுரைத்ததொரு மணியுண்டாயின் அதனையொத்த பசலை நிறத்தின்கண் அது செய்த பழிகள் இல்லை என்பதாகக் கூறுகின்றார் புலவர். பசலை நோயுண்ட உடலை பொன்னை உரைத்த மணிக்கு உவமித்துள்ளது பொருத்தமானதாகும்.

அங்கையை பார்த்துக் காந்தள் என்றுரைத்தும் [14]
முன்னிய பல்லை முத்தென மொழிந்தும் [15]
உள்ளங்காலைப் பஞ்சென உரைத்தும் [16]

இந்த உடல் அழியக்கூடியது அதை நம்பி வாழ்வில் ஏமாற்றம் அடை யாதீர்கள் என்பதற்காகப் பட்டினத்தார் தமது பாடலில் உண்மையையே உவமையாகச் சுட்டியுள்ளது காணத்தக்கதாகும்.

வினையுவமம்

நீரின் வழியே மிதவை செல்லும்; அதுபோல் ஊழின் வழியே உயிர்களின் போக்கு அமையும்.

வானம் தண்டுளி தலைஇ ஆனாது
கல்பொரு திரங்கும் மல்லல் பேர் யாற்று

நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம் [17]

ஊழுக்கு நீரினையும் உயிருக்கு மிதவையையும் உவமித் துள்ளனர். தண்ணீர் செல்லும் வழியில்தான் மிதவை செல்லும். அது போன்று செய்த வினைக்கேற்றவாறுதான் உயிரின் பயணமும் அமையும் என்று எளிதில் புரியும் வண்ணம் கருத்தினைச் சொல் லிச் செல்கின்றார்.

சித்தர்கள் பெரும்பாலும் வினையைப் பற்றியே உவமை களைப் பயன்படுத்தியுள்ளனர். வினை உவமைகளே சித்தர்களின் பாடல்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன.

தாம் பெற்ற மக்களைக் காக்கும் வகையறியாது உலகிய லில் அகப்பட்டு வருந்தும் மக்களைப் பெரும்பாலான பாடல் களில் சுட்டுகிறார். பட்டினத்தார் கூறும் உவமை சிறப்புடையது.

எடுத்துக்காட்டாக,

பூப்பிளக்க வருகின்ற புற்றீசல் போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர் கைவிடவும் மாட்டிர்
கவர்பிளந்த மரத்துளையில் கால் நுழைத்துக் கொண்டே
ஆப்பதனை அசைத்துவிட்ட குரங்குதனைப் போல
அகப்பட்டிர்; கிடந்துழல அகப்பட்டிடிரே! [18]

என்னும் பாடலைக் குறிப்பிடலாம். பூமியினைப் பிளந்து கொண்டு பொலபொலவென்று வெளியில் வருகின்ற புற்றீசல் களின் செயல், மிகுதியான குழந்தைகளைப் பெறுகின்றாரின் செயலுக்கு உவமையாகின்றது.

குரங்கு மரக்கிளையிலுள்ள பிளவில் காலை வலிய நுழைத்துக் கொண்டு, அந்தப் பிளவில் மூடுகின்ற ஆப்பினைத் தானே அசைத்துவிட்டு வெளியே காலினை எடுக்க இயலாது. துன்பமடைவதைப் போல, இல்லற இன்பத்தினை அனுபவிக்க விரும்பி, இல்லறத்தில் வினைப்பயனால் அகப்பட்டுப் பின் தம்

மக்களைக் காக்கும் திறன் அறியாது துன்பப்படும் செயல் சிறந்த உவமையாகும்.

பயன் உவமை

பருகுபவர்க்கு இனிமை பயப்பது நீர் என்று நீரைப் பருகு பவரே அல்லாமல் நீர்க்கு இனிது என்று பருகார். அதுபோலத் தமக்கு நலமென்று கருதினால் பிறர் சொல்லும் சொல்லை எவரும் கேட்பாரே அல்லாமல் அவர்க்கு நலனென்று எண்ணிக் கேளார் என்பதை பின்வரும் அடிகள் சுட்டுகின்றன.

சுடர்த்தொடி,
போற்றாய் களைநின் முதுக்குறைமை போற்றிக்கேள்
வேட்டார்க் கினிதாயின் அல்லது நீர்க்கினிதென்
றுண்பவோ நீருண்பவர் [19]

நீரைப் பருகுபவருக்கும், சொல்லைக் கேட்பவருக்கும் பயன் அளிக்கும் என அதன் பயனை உவமித்துள்ளனர்.

சித்தர் பாடல்களில் பயன் உவமை மிகக் குறைவாகவே பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காண முடிகிறது. பட்டினத்தார் பாடலில்,

கல்நெஞ்சின் உள்ளே கழுநீலம் பூத்தாற்போல்
என்நெஞ்சின் உள்ளே இணையடிகள் வைத்தாண்டி [20]

என்று, கல்லின் இடையில் கழு நீல மலர் மலர்ந்து பயன் தருவது போல் தம் முடைய நெஞ்சமாகிய கல்லில் தம் இணையடிகளை வைத்துத் தம்மையும் பய னுடைய ஒரு பொருளாக்கிவிட்டான் என்று குறிப்பிடுகின்றனர். கல்லை நெஞ்சத்திற்கும், கழுநீல மலரை இறைவனின் திருவடிக்கும் உவமையாகப் பயன்படுத்தி யுள்ளார்.

மெய் உவமம்

எல்லாப் பொருள்களும் இறைவனே; இப்பொருள்களின் உட்பொருளாக இருப்பவனும் இறைவனே. அவ்விறைவனே; தீயினுள் வெம்மை; பூவினுள் மணம்; கல்லினுள் மணி; சொல்லினுள் வாய்மை; அறத்தினுள் அன்பு; மறத்தினுள்மைந்து;

வேதத்தினுள் மறை; பூதத்தினுள் முதல்; ஞாயிற்றினுள் ஒளி; திங்களுள் அளியாகவும் இருக்கிறான். ஆதலின் படைத்தல் முதலிய தொழில் வேற்றுமை பற்றி நீ பிறவாப் பிறப்பில்லை நின்னைப் பிறப்பித்தோரும் இலர் என்று குறிப்பிடுகின்றனர்.

தீயினுள் தெறல்நீ பூவினுள் நாற்றம் நீ
கல்லினுள் மணியும் நீ சொல்லினுள் வாய்மை நீ
அறத்தினுள் அன்பும்நீ மறத்தினுள் மைந்தும் நீ
வேதத்து மறைநீ பூதத்து முதலும் நீ
வெஞ்சுடர் ஒளியும்நீ திங்களுள் அளியும் நீ
அனைத்தும் நீ அனைத்தினுட் பொருளும் நீ [21]

தீவினுள் வெம்மையும், பூவினுள் மணமும், கல்லினுள் மணியாகவும், சொல்லினுள் உண்மையாகவும், அறத்தில் அன் பாக வும், மறத்தில் மைந்தாகவும், வேதத்தின் மறையாக, பூதத் தின் முதலாக, ஞாயிற்றின் ஒளியாகத் திங்களுள் அணியாக அனைத்துப் பொருளின் உண்மைத் தன்மைக்குப் புலவர்கள் மெய் உவமத் தைக் கையாண்டுள்ளனர்.

சித்தர்களும் மெய் உவமத்தை வினைக்கு அடுத்தாற்போல் மிகுதியும் கையாளுகின்றனர். மெய்யுவமம் என்பது வடிவுவமம் என்று அழைக்கப்படும்.

ஒரு பொருளுக்குப் பல உவமைகளைக் காட்டிய சித்தர்கள் பல பொருளுக்கு ஓர் உவமையினையும் எடுத்துக்காட்டுகின்றனர். பலராலும் நன்கறியப்பட்ட பொருளையே பல பொருளுக்குரிய ஓர் உவமையாகக் கொள்கின்றனர். நீர்மேல் குமிழி, எள்ளில் எண்ணெய், பாலின் கண்நெய், சிலந்திடை நூல், நீரும் உப்பும் முதலிய உவமைகளைப் பலரும் கையாளுகின்றனர்.

சிவவாக்கியரின்,

எள்ளகத்தில் எண்ணெய் போல எங்குமாகி எம்பிரான்
உள்ளகத்தி லேயிருக்க ஊசலாடும் மூடர்காள் [22]

என்னும் அடிகள் சிறந்த எடுத்துக்காட்டு.

எள்ளை உள்ளத்திற்கும், எண்ணெய்யை எம்பிரானுக்கும், உவமைப்படுத்துவது யாதெனில் எள்ளில் எண்ணெய் இருப்பது போல் அனைவரின் உள்ளத்திலும் இறைவன் உள்ளான் என்பதை விளக்க வேண்டும்.

எள்ளில் எண்ணெய்போல் எங்கும் நிறைந்தவன் எம்பிரான் இதன்வழி உள்ளத்தில் இருப்பதை அறியாமல் அலையும் மூடர் களே என விளிக்கின்றார்.

பாலின்கண் நெய்

இவ்வுடலாகிய பாலினை யோகச் செயல்முறைகளால் தயிராக்கிப் பெறும் ஞானத்தால் அதனைக்கடைந்து பலமுறை சமாதியிலிருந்து உடலைக் காய்ச்சி இவ்வுடலுள் நெய் போல இருக்கின்ற இறைவனைக் காண வேண்டும் என்னும் கருத்தில் பாலின்கண் நெய் என்னும் உவமையினைக் கையாள்வர். இதனை,

நாலுபொருள் நற்பொருளின் ஆறறியப்
பாலுமது நெய்யெனவும் பார் [23]

பாலின் கண் நெய் இருந்தாற்போலப் பரஞ்சோதி
ஆலிங்கணம் செய்து அறவிழுங்கிக் கொண்டாண்டி! [24]

பாலில் நெய் போல் நம்உடலில் இறைவன் உள்ளதைக் காண வேண்டுமென்னும் மெய் உவமத்தினை அறியமுடிகின்றது.

உரு உவமம்

'உரு' என்பது நிறத்தையும் குணத்தையும் குறிக்கும். வேண்டிய இடங்களில் இந்த உருவ உவமத்தினைப் பயன்படுத்தி யுள்ளதைக் காண முடிகிறது.

நின், வெம்மையும் விளக்கமும் ஞாயிற்றுள
நின், தண்மையும் சாயலும் திங்களுள
நின், சுரத்தலும் வண்மையும் மாரியுள
நின், புரத்தலும் நோன்மையும் ஞாலத்துள
நின், நாற்றமும் ஒண்மையும் பூவையுள
நின், தோற்றமும் அகலமும் நீரினுள
நின், உருவமும் ஒலியும் ஆ காயத்துள

நின், வருகையும் ஒடுக்கமும் மருத்தினுள
அதனால், இவ்வும் உவ்வும் அவ்வும் பிறவும்
ஏம மார்ந்த நிற்பிரிந்து
மேவல் சான்றன வெல்லாம்
சேவலோங் குயர்கொடி யோயே [25]

என உரு உவமம் சிறப்பாக ஆளப்பட்டுள்ளது.

உலக உயிர்களின் தோற்றமும் நிலைபேறும் ஒடுக்கமும் நின்னிடத்தே என்றவாறு உருவத்தைப் பெற்று, ஒன்றோடு ஒன்று அமைந்து வருதலைப் பரிபாடல் கொண்டு அறிய முடிகிறது.

இடைக்காட்டுச் சித்தர்,

காய்ந்த இரும்பு நிறங்காட்டுதல் போல் ஆத்துமத்தை
வாய்ந்திலங்கச் செய்து வளம் பெறுநீமட வனமே [26]

என்று கொல்லன் உலைக்களத்தில் உலையின்கன் இடப்பட்ட இரும் பானது நல்ல செம்மையான நிறம் காட்டுவதுபோல் இறை வனது அருள்நினை வென்னும் உலைக்களத்தில் உன்னுடைய 'ஆத்மா'வாகிய இரும்பினை இட்டு இலங்கச் செய்து ஒளி பெற்று வளமை அடைதல் வேண்டும் என்கிறார்.

இரும்பின் உண்மை இயல்புத்தன்மை. எல்லா உலோகத்தின் உண்மைத் தன்மையும் செம்மை நிறம் உடையது. ஆனால், உலையில் இரும்பை வைக்காமல் இருந்தால் அதன் உண்மைத் தன்மையை இழந்து துருப்பிடித்து விடுகிறது. அதே இரும்பை நெருப்பில் இடும்போது அதன் உண்மை நிறமான செம்மை நிறத்தை அடைகிறது. அதேபோன்று மனத்தை ஆத்மா வாகிய உலையில் இட்டு மனம் இல்லாது செய்து ஒளி பெற்று உண்மை இயல்பை அனைவரும் தன்னை அறிதல் என்ற தெய்வீக நிலையை எய்த வேண்டும் என இடைக்காட்டுச் சித்தர் இரும்பை மனத்திற்கும், நெருப்பை ஆத்மாவிற்கும் உருவ உவமையாகப் பயன்படுத்தியுள்ளார்.

உரோம ரிஷி,

சொரூப சித்திக் கடையாளம் ஏதென்றக்கால்
சுடர்போலத் தோன்றுமடா தூலதேகம் [27]

என்னும் பாடலில், சொரூப சித்தி பெற்றவர்க்கு இவ்வுடம்பானது சூரியனைப் போலச் சுடர்வீசும் என்கிறார்.

உருவ உமத்தைச் சங்க இலக்கியத்திலும் சித்தர் படைப்பு களிலும் காண முடிகின்றது.

உருவகம்

ஒரு பொருளின் அழகைக் கண்டு மற்றொரு பொருளின் அழகை நினைந்து இதனை அதனோடு ஒப்பிடுதல் உவமை. அதே மனநிலை மேலும் சிறிது வளர்ந்து, இரண்டு பொருளையும் வேறு வேறாகக் காணாமல் ஒன்றிலேயே மற்றொன்றைக் கண்டால் அது உருவகம் எனப்படும். [28]

உருவக்காட்சி

கண்ணால் காண்பதன் மூலம் உள்ளத்தில் ஓர் உருவத் தோற்றத்தை ஏற்படுத்து வதே உருவக்காட்சி (Imagery) ஆகும். காட்சி என்பது மனக்காட்சியைக் குறிக்கும். ஐம்புல உணர்வு களால் புலனாகும் மனக்காட்சியே உருவகம். செல்விஸ் பர்ஜியன் உருவகம் ஒவ்வொன்றையும் குறிப்பதற்குக் கிடைத்த ஒரே சொல் என்பதால் உருவக்காட்சி என்ற சொல்லை, தான் ஆள்வதாகக் கூறுகிறார்.[29]

சி.டே. லூயிஸ் (C. Day Lewis) என்பவர் இது சொற்களால் உருவாக்கப்படும் சித்திரம் என உருவகம் பற்றி விளக்கம் தரு கிறார். ஐம்புலத்திற்கும் காட்சியாவன எல்லாம் உரு எனப்படும். மனத்திற்குக் காட்சியளிப்பதையும் உரு என்றும் பல வகையாகக் கூறுவர். [30]

உருவகம்

உவமையும் பொருளும் வேற்றுமை யொழிவித்
தொன்றென மாட்டினஃ துருவகமாகும் [31]

உவமையாம் பொருளையும், உவமிக்கப்படும் பொருளை யும், வேறுபாடொழிவித்து ஒன்றென்பதோருள்ளுணர்வு தோன்ற வொற்றுமை தோன்றினால். அஃது உருவகமென்னும் அலங்கார மாகும்.

பரிபாடல்,

அருள்குடை யாக, அறம் கோலாக,
இருநிழல் படாமை, மூ ஏழ் உலகமும்
ஒருநிழல் ஆக்கிய ஏமத்தை மாதோ! [32]

அருளே குடையாக, அறமே குடைக்காம்பாக இரண்டாவதான குடை நிழலிலே தங்காதவாறு, மூவேழ் உலகங்களையும் தன் ஒரு குடைநிழலிலே தங்கச் செய்த இனிய காவலை உடையவன் என்று திருமாலுக்கு உருவகப்படுத்தியுள்ளதை மேற் பாடலடிகள் காட்டுகின்றன.

இடைக்காட்டுச் சித்தர் பால் கறத்தல் என்ற தலைப்பின் கீழ் ஆறு பாடல்களைப் பாடியுள்ளார். அவரது பாடலில் அருள் அமுது பாலாக உருவகிக்கப்பட்டுள்ளதை,

சாவா திருந்திடப் பால்கற - சிற
தன்னி லிருந்திடும் பால்கற
வேவா திருந்திடப் பால்கற - வெறும்
வெட்ட வெளிக்குள்ளே பால்கற [33]

அண்ணாவின் மேல்வரும் பால்கற- பேர்
அன்டத்தி லூறிடும் பால்கற
விண்ணாட்டி வில்லாத பால்கற தொல்லை
வேதனை கெடவே பால்கற [34]

என்னும் அடிகளால் அறிய முடிகின்றது.

அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் உள்ளது என்பர். இதனை இடைக்காடர், இறவாது வாழ்வதற்குப் பால்கற. அது தன்னுள் இருந்து பால்கற, உடல் அழிவதற்குள் பால்கற, வெட்ட வெளியான இடத்தில் இருந்து கற என்பது நம் மனத்தை ஒரு நிலைப் படுத்துவதன் மூலம் புருவ மத்திக்கும் உள் நாக்குக்கும் தொடர்பு ஏற்படுகிறது. இதனால் நமக்குள்ளே அமிர்த ரசம் ஊறுகிறது. அதனைப் பருகுபவருக்கு வேதனையில்லை. இறப்பு இல்லையென உருவகப்படுத்துவதை அறிய முடிகிறது.

சிரம் தன்னில் இருக்கும் பால் என்பது சகஸ்ராரத்தில் சுரக்கும் அமுதம் ஆகும். வெட்ட வெளிக்குள்ளே 'பால்கற' என் பது வெட்டவெளியில் தியானிப்பதன் மூலம் அருள் அமுதைப் பெறுவதைக் குறிக்கும். இந்த அருள் அமுதத்தைப் பருகினால் எல்லாத் துன்பங்களும் தொலைந்தது என வேதனை கெடவும் அருளைப் பெறவும் வெட்டவெளியைத் தியானித்து அருளை - அமுதைப் பெறவேண்டும் என்றும் தமது பாடலில் உருவகப் படுத்துகிறார்.

புறநானூறு

இல்வழங்கு மடமயில் பிணிக்கும்
சொல்வலை வேட்டுவன் ஆயினன்முன்னே [35]

இளம் பெண்ணின் அழகை மயிலுக்கும் வேடன் வீசும் வலைக்குச் சொல்லையும் புலவர் உருவகப்படுத்தியுள்ளார். வேடன் வலைவீசிச் சொக்க வைக்கும் பேச்சால் இளம் பெண் ணைக் கவர்கின்ற வேட்டைக்காரனாக முன்பு இருந்தான் எனப் பாடல் உருவகிக்கின்றது.

திருமூலர்

இந்திரியங்களை யானைகளாக உருவகிக்கப்பட்டது. போலவே சிங்கங் களாகவும் உருவகப்படுத்திப்பாடல் எழுதியுள் ளார் திருமூலர். அவர் தமது திருமந்திரத்தில்,

அஞ்சுள சிங்கம் அடவியில் வாழ்வன்
அஞ்சும்போய் மேய்ந்துதம் அஞ்சகமேபுகும்
அஞ்சின் உகிரும் எயிறும் அறுத்திட்டால்
எஞ்சா திறைவனை எய்தலு மாமே [36]

என உருவகப்படுத்தியுள்ளார்.

இவ்வுடம்பாகிய தத்துவக் காட்டில் ஐந்து பொறிகளான மெய், வாய், மூக்கு, கண், செவிகளைச் சிங்கமாக உருவகித்து இவை ஐந்தும் புறமே சென்று புறப் பொருளைப் பற்றி நுகர்ந்து அகம் வந்து சேரும். அச்சிங்கத்தின் கூரிய நகத்தினையும் பல் லினையும் திருவருளால் அறுப்போமானால் திருவடிப்பேறு எய் தக்கூடும். அறுக்காமல் ஐந்து பொறிகளை விட்டோமானால்

தீவினைக் கருவியாக மாறி, திருவடியை எய்த இயலாது எனப் பாடலில் திருமூலர் உருவகப்படுத்தியுள்ளார்.

அழுகணிச் சித்தர்

உடலின்கண் உள்ள ஐம்பொறிகளின் நுகர்வுகளாகிய ஐம்புலன்களும் தத்தமக்குரிய நுகர்ச்சியை ஒருபோதும் விட்டுக் கொடுப்பதில்லை. புலன் நுகர்ச்சியைக் கட்டுப்படுத்தாது யோகம் பயில முடியாது. புலன் நுகர்ச்சியை முற்றிலும் விட்டுவிடுவதே யோகம் பயிலுதலின் முதல் படியாகும்.

யோகம் பயிலுகின்ற போதே, பொறிகளின் தாக்கம் குறைந்துவிடும். அழுகணிச்சித்தர் இக்கருத்தினைத் தம் பாடலுள் புதை நிலை வடிவமாகப் பதிவு செய்துள்ளார். அவர் தமது பாட லில், உடலையும் புலன்களையும் பற்றிக் குறிப்பிடுகிறார்.

பட்டணத்தை யாளுகின்ற பஞ்சவர்கள் ராசாக்கள்
விட்டுப் பிரியாமல் வீரியங்கள் தாம் பேசி
விட்டுப் பிரிந்தவரே வேறு படுங்காலம்
பட்டணமுந் தான் பறிபோய் என் கண்ணம்மா
படை மன்னர் மாண்டதென்ன [37]

என்று பாடி, புலன்களைப் பட்டணத்து ராசாக்களாக உருவகித்துப் பாடியுள்ளார். இப்பாடலில்,

1. பட்டணம் என்பது உடலையும்
2. பஞ்சவர்கள் என்பது ஐம்புலன்களாகிய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்தினையும்
3. வீரியங்கள்தாம் பேசி என்பது புலன்கள் தம் நுகர்ச்சியைச் சிறிதும் விடாதிருந்தலையும்
4. வேறுபடுங்காலம் என்பது யோகமுயற்சியில் ஈடுபடுவதையும்
5. பட்டணம் பிறபோதல் என்பது புலன் நுகர்ச்சியை இழத்தலை யும்
6. படைமன்னர் மாண்டு விடுதல் என்பது பொறிகள் செயல் படாது அடங்குதலையும் குறிக்கும்.

யோக முயற்சியில் ஈடுபடும் வரை சாதகனுக்கு உடல் பற்றிய உணர்வே ஓங்கி இருக்கும். யோகத்தில் ஈடுபடுங்காலத் தில் பொறிகளின் ஆதிக்கம் குறைந்து புலன் நுகர்ச்சி அற்று விடும் என்பது இப்பாடலின் பொருளாகும்.

"சங்க இலக்கியங்களைப் பொறுத்தவரை உவமைகளைப் பற்றிக் கிடைக்கும் செய்திகளைப் போல உருவகத்தைப் பற்றி அதிகம் கிடைக்க வில்லை என்றாலும் ஒருசில எடுத்துக்காட்டுகள் சிதறி ஆங்காங்கு கிடைக்கின்றன. அவற்றைக் கொண்டு அவற் றின் அமைப்புகளையும் சிறப்புகளையும் காணமுடிகிறது"[38] என் கிறார் ரா. சீனிவாசன்.

"பொருள் இல்லாமலேயே உவமச் செய்திகள் உருவகங் கள் ஆகி விடுதல் உண்டு. பயின்று வரும் மரபால் வெறும் உவமைகளே உருவகங்களாக நின்று விடுகின்றன. உவமைகளை விட உருவகங்களே ஆற்றல் மிக்கவை"[39] என்னும் கூற்று இங்கு எண்ணுதற்குரியது.

கலித்தொகையில் உருவகம்

காதல் ஒரு நுண்பொருள். அதனை ஒரு முப்பரிமாணம் உள்ள காட்சிப் பொருளாகக் காட்ட முயல்கிறது ஒரு குறுந் தொகைப் பாட்டு. தலைவி, தலைவன் மீது கொண்ட காதலைத் தோழியிடம் சிறப்பித்துக் கூறுகிறது.

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே, சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக் கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே [40]

இங்கு அகலம், உயரம், ஆழம் மூன்றும் கூறிக்காதலின் 'உரு' புனையப்பட்டுள்ளது. குறிஞ்சிப்பூ மிகவும் சிறியது. அதைக் கொண்டு தேனீக்கள் மிகப் பெரிய தேன்கூட்டைக் கட்டு வது போலத் தலைமகன் மிகப் பெரிய காதலைக் கொண்டவன் என்பது கருத்து. 'நிலத்திலும் பெரியது. வானினும் உயர்ந்தது, நீரி

லும் ஆழமானது' என்பனவற்றால் காட்சிக்குரிய பருப்பொருள் களைக் காட்டி நுண்பொருளான நட்பை (காதலை) 'உரு' வாக்கிக் உருவகத்தின் மூலம் வெளிப்படுத்திக் காட்டுகிறார்.

புலன்கள் நிலையற்றவை. அவை உறையும் உடலைக் காடு என்றும், நெறிப்படுத்தப்பட்ட பொறிகள் உறையும் நாடு என்றும் சித்தர் இலக்கியங்கள் சுட்டுகின்றன. உடலை ஆதார மாகக் கொண்டே மூலமாகிய இறையைத் தேட வேண்டும். அவ் வாறு மூலத்தைத் தேடிக் கண்டு, மரணமில்லாமல் வாழ வழி காட்டும் கடுவெளிச் சித்தர் பாடல்களிலும் உருவகங்கள் குறியீடு களாகப் (Symbol) பயன்படுத்தப்படுகின்றன.

ஐந்துபேர் சூழ்ந்திடுங்காடு - இந்த
ஐவர்க்கும் ஐவர் அடைந்திடும் நாடு
முந்தி வருந்தி நீதேடு - அந்த
மூலம் அறிந்திட வாமுத்தி வீடு [41]

ஐந்து பேர் சூழ்ந்த காடு என்பது உடல் ஆகும். ஐந்து பேர் என்பது ஐம்பொறிகளாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகும். ஐவருக்கும் உரிய ஐந்து நாடு என்பது கன்மந்திரியங்களான வாக்கு, கை, கால், எருவாய், கருவாய் முதலியன ஆகும். இது ஐந்து பேருக்கும் உரிய நாடாகும். முந்தி வருந்தித் தேடுதல் என் பது யோக முயற்சியையும், முக்தி வீடு என்பது இறைப் பதத்தை யும் குறிக்கும்.

இந்த உடலைப் பற்றுக்கோடாகக் கொண்டு மூலா தாரத்தை வருந்தித் தேடிக் கண்டுகொண்டால் அதுவே முக்தி யாகும்.

சித்தர் பாடல்களில் எளிமையான உவமைகளும் உருவகங் களும் முழுமையான உவமைகளும் உருவகங்களும் முழுமை யான கருத்துகளைத் தாங்கியுள்ளன. வலிய பொருள் கொள்ள முடியாது. ஆனால், படித்தவுடன் புரிந்துகொள்ளக் கூடியவையாக உள்ளது.

குதம்பைச் சித்தரின் உருவகம்

மாவடு போன்ற சுரப்பியில் சுரக்கும் தேனைக் குறிப்பிடும் குதம்பைச் சித்தர், அமுதத்தை மாங்காய்ப்பால் என்றே உருவகப்படுத்துகிறார். இவரது பாடலில்,

மாங்காய்ப்பால் உண்டு மலைமேல் இருப்போர்க்குத்
தேங்காய்ப்பால் ஏதுக்கடி - குதம்பாய்
தேங்காய்ப்பால் ஏதுக்கடி [42]

இங்கு மாங்காய்ப்பால் என்பது ஞானப்பாலைக் குறிக்கும். மலைமேல் என்பது தலைமேல் உச்சியாகிய சகஸ்ர நாமம்-ஆயிரம் இதழ் கொண்ட தாமரைப் பீடம் அமுது சுரக்கும் இடம். தேங்காய்ப்பால் என்பது உலக இச்சையாகிய பிற பற்று, காதல் ஆகிய இன்பங்கள் ஆகும். இவ்வடிவப் பாடல் மறைமுகமாக, அமுதத்தைச் சுரக்கும் இடத்தையும் பயனையும் மறைமுக உருவக மாகக் குறிக்கின்றது. சங்க இலக்கியப் புலவர்கள் பற்றுதல் கொண்டு பாடலை உருவகம் செய்கின்றனர். ஆனால் சித்தர்கள் பற்று இல்லாமல் மறைப்பாகத் தன்னை அறிவதின் பயனை உருவகமாகப் பாடியுள்ள உண்மையினை அறிய முடிகிறது.

அணி

அனைத்து மொழிகளிலும் செய்யுளை அழகு பெறச் செய்வது அணி யாகும். செய்யுள் அணிநலம் பொருந்தி அமைய வேண்டும் என்ற கொள்கை அன்றுதொட்டு இன்றுவரை புலவர் களிடையே ஓர் இலக்கியக் கொள்கையாக இருந்து வந்துள்ளது. அணி என்பது பல பொருள் குறித்த ஒரு சொல். அச்சொல் அழகு, வனப்பு, ஒப்பனை, ஆபரணம், பெருமை, இனிமை, வரிசை முதலிய பல பொருள்களைக் குறித்து வருகிறது.

மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்
ஆடமைத் தோள் நல்லார்க்கு அணியும் போல் [43]

என்ற (நன். 45) பவணந்தியார் கருத்தும் அணிநலச்சிறப்பை வலி யுறுத்துகிறது.

அணி நலம்

கருத்து விளக்கம் பெறுவதற்காகத் தக்க ஒப்புமையுடன் அமைவது உவமை. "உவமையணி ஒன்றே சங்கத் தமிழ் இலக்கியத்திற்குச் சிறப்பாக அமைத்து தமிழ் மக்களுக்கே உரியதாகத் தொல்காப்பியர் கால முதற்கொண்டு விளங்குகிறது என்பர்." [44]

இதற்கு மேலும் வலிமை சேர்க்கிறார் தொல்காப்பியர். உவமை அணியையும் அதன் பல்வேறு வகைகளையுமே குறிக்கின்றார். சங்க இலக்கியம் தொண்ணூறு விழுக்காடு உவமை அணியினையும், பத்து விழுக்காடு வேறு அணிகளையும் பெற்றிருப்பதாக அறிஞர் தமிழண்ணல் கூறுவார். [45]

அணிகளுக்கு அடிப்படை உவமையே

"உருவகத்தையும் உவமையிலேயே அடக்கி விடுகின்றார். உண்மையிலே எல்லா அணிகளும் உவமையைத்தான் அடிப்படையாய் கொண்டன. இக்காரணத்தாலேயே,

உவமை யென்னும் தவலருங் கூத்தி
பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து
காப்பிய அரங்கிற் கவினுறத் தோன்றி
யாப்பறி புலவ ரிதயம்
நீப்பறு மகிழ்ச்சி பூப்ப நடிக்கும்மே

என்று கூறப்படுகிறது. இக்கருத்தைக் கொண்டே தொல்காப்பியரும் உவமை யைப் பற்றி மட்டுமே விவரித்து, மற்றை அணிகளைக் குறித்து யாதும் கூறாது விடுத்தனர்"[46] என்கிறார் எஸ். வையாபுரிப்பிள்ளை.

சங்க இலக்கியத்தில் உவமையணியையே புலவர்கள் பாடல்களில் பயன்படுத்தியுள்ளனர். சித்தர் இலக்கியத்தில் பட்டினத்தார் பாடல்களில் உவமையணியை மிகுதியாகக் கையாண்டுள்ளார்.

நேரல்நேறை உவமை அணி

உவமைகள் ஒன்றன்பின் ஒன்று அடுக்கிக் கூறப்படுகின்றன அவற்றைத் தொடர்ந்து அதே முறை வைப்பில் பொருள்களும்

அடுக்கிக் கூறப்படுகின்றன. இதனைத் தொல்காப்பியனார் நிரல் நிறை உவமை என்பர்.

நிரனிறுத்தமைத்தல் நிரனிறை சுண்ணம் [47]

சங்க இலக்கியத்தில் ஒழுங்காக, முறைபிறழாமல் உவமை களும் பொருள்களும் அமையும் முறையில் நிரல்நிறை உவமை யணி இடம் பெற்றிருக்கக் காணலாம்.

பொன்னும் மணியும் முறையே மகளிரின் மேனிக்கும் கூந்தலுக்கும் உவமைகளாக இடம் பெற்றுள்ளன.

பொன்னும் மணியும் போலும் யாழ நின்
நன்னர் மேனியும் நாறு இருங் கதுப்பும் [48]

ஒரு செய்யுளில் முதலில் சில சொற்களை ஒரு வரிசை யாகக் கூறி, பின்னர் அச்சொற்களுக்கேற்ற பொருளமைந்த சொற் களை அதே வரிசையாகக் கூறுவது நிரல்நிறை அணியாகும். இந்த அணியைப் பட்டினத்தார் கையாண்டுள்ளதைக் காணமுடிகிறது.

பற்றறார் பற்றாகப் பற்றி இருந்தாண்டி!
குற்றம் அறுத்தாண்டி! கூடி இருந்தாண்டி! [49]

என்பார் ஒரு சித்தர். வள்ளுவரும்,

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது [50]

இல்வாழ்கையின் பண்பு அன்பு இல்வாழ்க்கையின் பயன் அறன் என்று கூற வந்த திருவள்ளுவர், அன்பும் அறனும் என் னும் சொற்களை முதலடியில் கூறி, அதனோடு பொருந்தும் வகை யில் பண்பும், பயன் என்னும் சொற் களை இரண்டாம் அடியில் கூறினார். இவ்வாறு சொற்களை ஒரு வரிசைப்படி கூறி அதற் கேற்ற சொற்களைப் பின்னர் அதே வரிசைப்படி அமைத்துள்ள தால் இது நிரல்நிறை அணியாகும்.

சித்தர்கள் பற்றை - பற்றார் - பற்றில்லாத பற்றைப் பற்றி இருத்தல் அடுத்த அடியில் குற்றம் அறுத்தவர் இறைவனோடு கூடி யிருந்தாண்டி என்று பாடியுள்ளனர்.

பல்பொருள் உவமையணி

ஒரு பொருளுக்கு ஓர் உவமை கூறுவது மரபாகும். ஒன்றுக்கு மேற்பட்ட பல பொருள்களை உவமையாகக் கூறும் பொழுது அது வியப்புணர்ச்சியினை வழங்குவதோடு கவிஞனின் கற்பனையாற்றலையும் காட்டி நிற்கின்றது. இவ்வாறு அமையும் உவமையணியினைப் பல்பொருள் உவமை அணி என வழங்குவர்.

பரிபாடலில் முல்லை, மகளிர் பற்களுக்கு உவமை காட்டப்படுவது உண்டு. இது போன்று முத்து, மகளிர் பற்களுக்கு உவமை கூறப்படுவது உண்டு. சில சமயங்களில் முல்லையும் முத்தும் மகளிரின் பற்களுக்கு உவமையாகத் தரப்படுவது உண்டு. வெண்ணிறமும் வடிவமும், ஒளியும் இவற்றின் பொது இயல்புகளாகும்.

முகை முல்லை வென்றெழின் முத்தேய்க்கும் வெண்பல் [51]

அன்னமும் மயிலும் புறாவும் மகளிரின் நடைக்கும் சாயலுக்கும் எழிலுக்கும் முறையே உவமிக்கப்பட்டுள்ளன.

ஆய்தூவி யன்னமென அணிமயிற் பெடையெனத்
தூதுணம் புறவெனத் துதைந்தநின் னெழினலம் [52]

ஒரு பொருளுக்குப் பல உவமைகளைக் கையாளுகின்ற தன்மை சித்தர்களிடத்துப் பெரிதும் காணப்படுகின்றது. இந்நிலையில் பட்டினத்தார் சிறந்தவராக விளங்குகிறார்.

பட்டினத்தார்

தம்பாடலில் பல்பொருள் உவமையணியை கையாளுகிறார். தம்மிடம் செல்வம் இருந்தும் வறுமையில் உள்ளவர்கட்கு உதவாமல் தம்மிடமே வைத்துக் கொள்ளும் ஈயாத மனிதர் பயனற்றவராவர் என்பதனை,

“காயா மரமும் வறளாங்குளமும் கல் ஆவும் அன்ன
ஈயாமனிதரை ஏன் படைத்தாய்?” கச்சி ஏகம்பனே [53]

என்று காயாத மரத்தினால் எப்பயனும் இல்லை; கல்லினால் ஆன பசுவினால் எப்பயனுமில்லை; இவற்றைப் போல ஈயாத

மனிதரிடம் செல்வம் இருந்து என்ன பயன்? ஒன்றுமில்லை என்று சுட்டுகின்றார். ஈயா மனிதருக்கு மூன்று உவமைகள் ஒரே பாடலில் காட்டப்பட்டுள்ளன. இதனால் ஒரு பொருளுக்குப் பல உவமைகளை மேற்கொள்ளுவதன் மூலம் அப்பொருளை வலியுறுத்துகிற தன்மையும் அதன் இன்றியமையாமையும் நன்கு வெளிப்படுகின்றன.

தொன்மம்

சங்க இலக்கியங்களில் புராண இதிகாசக் கருத்துகள் இடம் பெற்றுள்ளன. அதில் கலித்தொகை, பரிபாடல், பதிற்றுப் பத்து ஆகிய மூன்று நூல்களில் மட்டும் இதிகாசச் செய்திகள் நிரம்ப இடம்பெற்றுள்ளன. இதைப் போன்று சித்தர்களும் சில பாடல்களில் புராண இதிகாசக் கருத்துகளை எடுத்தாண்டுள் ளனர். மக்கள் மத்தியில் நிலவும் கதைகளைப் பயன்படுத்தி இலக்கியங்களைப் படைக்கும்போது இலக்கியங்கள் நிலைபேற டையும். படைப்பு நெறியை ஒப்பிட்டு அதில் உள்ள செல்வாக் கினை, இலக்கிய உத்தியைத் தொன்மம் (Myth) என்று குறிக் கின்றனர்.

"தொன்மை அல்லது மித் (Myth) என்பது, காலத்தால் பழமையானது; கருத்தால் சமயச்சார்புடையது. தலைமை மாந்த ரும் தலைமைச் செயலும் தெய்வநிலையில் காணப்பெறுவர். இது தலைமுறை தலைமுறையாகச் சொல்லிவரும் மரபினை உடையது. இதிற் சடங்காசாரங்கள் இடம்பெறும்; இயற்கை இகந்த கூறு இருக்கும். கதைமாந்தர்கள் கடவுளர், தேவதைகள், கடவுள் தன்மைமிக்கோர் ஆவர், பண்பாட்டு வீரராய்ப் படைத் திருப்பினும் தெய்வத்துடன் தொடர்புபடுத்தியும் கூறப்படும். மனித உணர்வின் ஆர்வத்தாலும் ஆற்றலாலும் போலிப் புனை வாகப் படைக்கப்பெற்ற இப்புராணக் கதைகளில் பழங்கால மக்களின் முழுமையான உணர்ச்சிகளும் அனுபவங்களும் காணப் பெறுகின்றன"[54] என, தமிழண்ணல் விளக்குகின்றார்.

தொன்ம வரையறை

தமிழில் தொன்மைக்குரிய இலக்கணத்தைத் தொல்காப் பியர்,

தொன்மைதானே உரையொடு புணர்ந்த பழமை மேற்றே [55]

என்று குறிப்பார். தொன்மை என்பதற்குப் பழமை என்று பொருள். பழைமைத்தாகிய பொருள் அமைதலின் இப்பெயர் பெற்றது. புராணம் என்ற சொல்லிற்குத் தொன்மம் என்றும் பொருள் கூறுவர். தொன்மம் என்ற சொல்லாக்கம் மித் (Myth) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையான பொருள் தரும் சிறப் புடையது என்பர் கா. மீனாட்சிசுந்தரம். இதில் தொன்மம் என் பதைக் தொன்மை வாய்ந்த கதையாகவும் புராணக் கதைகளுடன் கூடிய சமயம் சார்ந்ததாகவும் கொள்வதில் தவறில்லை என்ற இக் கருத்தினடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. [56]

தொன்மத்தின் காலம்

"தொன்மத்தின் தொன்மை எல்லையைக் கி.மு. 10000 முதல் 4000 வரை என்று கணக்கிடுவது பொருந்தும் என்றும், கி.மு. 4 அல்லது 5ஆம் நூற்றாண்டில் இருந்ததாக வையாபுரிப் பிள்ளை கருதுகின்றார்."[57]

தொன்மம் வளர்ச்சி

"தொன்மத்தின் தொன்மை வரலாற்றிற்கு முற்பட்டதாகும். வரலாறு தோன்றுவதற்கு முன்பே தொன்மம் தோன்றி வளர்ந்து நிலைகொண்டு விட்டது. நம்மைக் கேட்டுக்கொண்டு உடல் வளர்வதில்லை. நம்மைக் கேட்காமலே உடல் வளர்வதுபோல் இயற்கையாகவே தொன்மங்கள் உரம் பெறுகின்றன."[58]

புராண வடிவம்

பழங்காலக் கருத்துக்கு மொழி வடிவம் கொடுக்கும் பொழுது புராணங்கள் முகிழ்க்கின்றன. புராணம் என்னும் சொல் லிற்குப் பழமை என்பது பொருளாகும். புராணம் என்னும் சொல் வடமொழிச் சொல்லாகும். இச்சொல்லிற்குத் தமிழ் லெக் சிகன் பழமை, பழங்கதை வியாசரால் சொல்லப்பட்ட புனித நூல்கள் எனப் பொருள் தருகிறது. பழைய மரபினை, பழைய வரலாற்றினைத் தெய்வங்களோடு தொடர்புபடுத்திக் கதைகள் வாயிலாகத் தெரிவிப்பது. புராணம் என்று விளக்கம் தருவது ஏற்புடையதாகும். சிவபுராணம் என்பதற்குப் பெரியார், "சிவனது அநாதிமுறைமையான பழமை சிவனது அருவ நிலைமை

கூறுதல்" எனப்பொருள் உரைக்கிறார். இக்கருத்தை மேலும் வலிவுபெறச் செய்கிறது எனப் பேராசிரியர் கு.முத்துராசன் விளக்கம் தருகிறார்.[59]

தொன்ம ஆளுமை

"தொன்மத்தை இலக்கியப் படைப்பாளர்கள், விளக்க முடியாதவற்றைக் குறிப்பாக விளக்குவதிலும். இது பயன்படும் அடிமனக் கருத்துக்களில் கூற முடியாதவற்றை இது விளக்கியும் கருத்துக்களை உணர்த்தவும் கையாளுகின்றனர் என்பர்" [60] தமி ழண்ணல்.

தொன்ம வகைகள்

ஒப்பிலக்கிய ஆய்வாளர்கள் தொன்மத்தைப் பலவகை களாக இலக்கிய வளர்ச்சிக்கு ஏற்றவாறு பகுத்துள்ளனர். தமிழண் ணல் தம் ஒப்பிலக்கிய அறிமுகம் என்னும் நூலில் குறித்துள்ளார்.[61]

கதிர் மகாதேவன், தன் தொன்மம் என்ற நூலில்

"1. மெய்ப்பொருள் இயக்கம் (Mystical function)

2. பரவெளி தரும் உருவளவை (Cosmological Dimension)

3. சமூகவியல் சார்பு- தொன்மம் (Sociological Basis)

4. அறிவு கொளுத்தும் தொன்மம் (Pedagogical)

என நான்காகப் பகுத்துள்ளார்."[62] இவற்றில் கலியிலும் பரிபாட லிலும் வடமொழி புராண மரபுக் கதைகள் விரவியுள்ளன. புராண மரபுக்கதைகள் வரலாற்று அடிப்படையின் சமயம் சார்ந்தன. அறக்கருத்துக்களை விளக்குவன. ஒரு நாட்டின் நாகரிகம், பண் பாடு, சமயங்களைப் பற்றி விளக்கவல்லன. விளக்க முடியாத வற்றைக் குறிப்பாக விளக்கவரும் இலக்கிய உத்தியே புராண மரபுக் கதை என்பது அறியத்தக்கதாகும். இவற்றில் புராண, மெய்ப்பொருள் சார்ந்த வகைகள் சங்க இலக்கியங்களிலும் சித்தர் கள் பாடல்களிலும் காணப்பெறுகின்றன.

சங்க இலக்கிய, சித்தர் இலக்கியத்தில் தொன்மங்கள்

சங்க இலக்கியங்களில், இலக்கியத்தின் மையப்பொருளின் விளக்கமாகத் தொன்மங்கள் அமைந்துள்ளன. இவ்வாறு அமைகையில் அகத்திணை ஐந்தின் கடவுளர்கள் இடம் பெற்றுள்ளதை அறிய முடிகிறது. குறிஞ்சிக்கு முருகனும், முல்லைக்குத் திருமாலும், மருதத்திற்கு இந்திரனும், நெய்தலுக்கு வருணனும், பாலைக்குக் கொற்றவையும் தொன்மங்களாக அமைந்துள்ளன. இவற்றோடு இராமாயணமும் பாரதக்கதைகளும் புராண இதிகாசக் கதைகளும் சங்க இலக்கியங்களில் காணப்படுவது போலச் சித்தர். இலக்கியங்களிலும் இடம்பெற்றுள்ளன.

பரிபாடலில் திருமால்

மாஅ யோயே மாஅ யோயே
மறுபிறப் பறுக்கும் மாசில் சேவடி
மணிதிக ழுருபின்மா அ யோயே [63]

திருமாலே திருமாலே மறுபிறவியினை அறுப்பவரே அன்பால் அவனின் திருவடியை வணங்குபவனுக்குப் பிறவிப்பிணி தீர்த்து வீடுபேறு நல்குவான் என்பதாகும்.

இதனை,

நானிலந் துளக்கற முழுமுத னாற்றிய
பொலம்புனை இதழணி மணிமடற் பேரணி
இலங்கொளி மருப்பிற் களிறுமாகி
மூவுரு வாகிய தலைபிரி யொருவனை [64]

நில உலகம் ஊழிக்காலத்தே நீரின்றிக் கிடந்தமையால் அதனைக் காக்கத் திருமால் வராக அவதாரம் கொண்டு பூவுலகத்தைக் காத்தருளினார்.

சிவவாக்கியர்

இராமாயணத்தில் இராமன் ஏழு மராமரங்களையும் துளைத்த கதையினை,

கார கார கார கார காவதூழி காவலன்
போர போர போர போர போரில்நின்ற புண்ணியன்
மார மார மார மார மரங்கலேழுமெய்தசி
ராம ராம ராம ராம ராம வென்னும் நாமமே [65]

எனும் பாடலில் அமைக்கிறார்.

ஒரு இல், ஒரு சொல், ஒரு வில் என்று இராமாயணத்தை ஒரு வரியில் கூறுவர். அதைப்போன்று அந்த ஒருவில்லின் வலிமையை ஒரே அம்பில் ஏழு மரங்களையும் இராமர் தனது இராமபானத்தினால் துளைத்துத் தனது வீரத்தையும் ஆற்றலையும் மெய்ப்பித்தார். தருமத்தை நிலைநாட்ட இராமபுராணக் கதையைச் சிவவாக்கியர் எடுத்துரைக்கின்றார். பரிபாடலில் திருமாலின் அவ தாரமும், இராம அவதாரமும் தொன்மைப் பாடலாக அமைந்துள் ளன.

கலித்தொகை

சங்க இலக்கியங்களில் கலிதொகையிலும் பரிபாடலிலும் தொன்மை அதிக அளவில் இடம் பெற்றுள்ளது. அதில் அறம் பற்றிய பாடல்வரி இடம் பெற்றுள்ளது.

ஐயந்தீர்ந் தியார் கண்ணும் அருந்தவ முதல்வன் போல்
பொய் கூறா யென நின்னைப் புகழ்வது கெடாதோதான் [66]

தலைவியின்மீது அன்புற்ற தலைவன் உன்னைப் பிரியேன் என்று தெரிவித்து இனிப் பிரிந்தால் வாழேன் என்று தெளிவாகப் பொய் கூறாமல் எடுத்துக் கூறுகிறான்.

பட்டினத்தார்

வாளால் மகவரிந் தூட்டவல் லேனல்வன்; மாதுசொன்ன
சூளால் இளமை துறக்கவல் லேனல்லன்; தொண்டுசெய்து
நாளாறிற் கண்ணிடற் தப்பவல் லேனல்லேன்;
நானினிச் சென்று
ஆளாவ தெப்படியோ [67]

என்ற பாடலில், சிறுத்தொண்ட நாயனார் கதை, மனைவி சொன்ன சாபத்தால் இளமை துறந்த திருநீலகண்டநாயனார் கதை, கண்

ணிழந்து அப்பிய கண்ணப்ப நாயனார் கதை முதலான பெரிய புராணக் கதைகள் எடுத்தாளப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

கலித்தொகையில் பாரதம்

கலித்தொகையில் பாரதக் கதைச் செய்திகள் பலவும் இடம் பெற்றுள்ளன. பாரதப் போர்க்களம் (கலி 104,57-59) பீமன் அரக்கர் இல்லிருந்து ஐவரைக் காத்தல் (கலி 25,7-8) பீமன் துச்சாதனன் நெஞ்சத்தைப் பிளந்து வஞ்சினம் முடித்தமை (கலி 101,18-20) பீமன் துரியோதனன் துடையை முறித்தது (கலி. 52,2-3) என்று கலித்தொகையிலும் செல்வாக்குப் பெற்றுள்ளதை அறிய முடிகிறது.

அம்சீர் அசைஇயல் கூந்தற் கை நீட்டியான்
நெஞ்சம் பிளந்து இட்டு நேரார் நடுவண், தன்
வஞ்சினம் வாய்த்தானும் போன்ம் [68]

துரோபதையின் தூய்மையான கூந்தலில் கையை நீட்டிய துச்சாதனனின் நெஞ்சைப் பிளந்துபோட்டு பகைவரின் நடுவே தான் சொன்ன வஞ்சினத்தை முடித்த செய்தியைக் காண முடி கிறது.

கலித்தொகை

வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர்பெற்ற
முகத்தவன் மக்களுள் முதியவன் புணர்ப்பினால்
ஐவரென் றுலகத்தும் அரசர்கள் அகத்தராக்
கைபுனை யரக்கில்லைக் கதழெரி சூழ்ந்தாங்கு [69]

வடமொழிப் பெயரால் வயக்குறு மண்டிலம் போலும் முகத்தவனுடைய மக்களுள் மூத்தவன் துரியோதனனின் சூழ்ச்சி யால் ஐவரென்று புகழும் தருமபுத்திரர் முதலியோர் உள்ளே இருக்க கையாலே புனையப்பட்ட அரக்குமாளிகையை விரைந்து நெருப்பு பற்றிய செய்தி அறிய முடிகிறது.

கொங்கணர்

உற்றது சொன்னக்கா லற்றது பொருந்தும்
உண்டோ உலகத்தில் அவ்வை சொன்னாள் [70]

என்ற பகுதியில் "மகாபாரதக் கதையின் ஒரு நிகழ்ச்சியைச் சுட்டிக் காட்டுவர். அருச்சுனன், சுமித்திர முனிவரின் நெல்லிக்கனியைத் திரௌபதியின் விருப்பத்தின் பொருட்டுப் பறித்தான். அக் கனியைப் பறித்தால் விளையப்போகும் துன்பத்தைச் சுற்றியிருந் தோர் அவனுக்குக் கூறினர். இந்நிலையில் என்ன செய்வதென்று குருவாகிய கண்ணபிரானிடம் அருச்சுணன் கேட்டான். கண்ண பிரான், திரௌபதியும் பஞ்சபாண்டவர்களும் தங்கள் மனதில் உள்ளதை ஒளிக்காமல் கூறினால் பறித்த கனி மீண்டும் மரத்தில் பொருத்தும் என்று கூற அனைவரும் தங்கள் மனத்தில் உள்ளதைக் கூறினர். பழம் சென்று மரத்தில் சேர்ந்தது. இக்கதையில் உண்மை யான குரு அனைத்தையுமறிவார் என்ற உண்மை புலப்படுத்தப் படுகிறது." [71]

மறுபிறப்புப் பற்றிய செய்திகள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. இவை சித்தர் படைப்புகளிலும் இடம் பிடித் துள்ளன. "சுவர்க்கச் சிந்தனை யோடு இணைத்து ஆராயப்பட வேண்டியது மறுமை பற்றிய சிந்தனை"[72] என, பெ. மாதையன் குறிப்பிடுகிறார்.

சங்க இலக்கியத்தில் குறுந்தொகை, புறநானூறு, அக நானூறு, கலித்தொகை ஆகியவற்றில் மறுமை எனும் சொல் இடம்பெற்றுள்ளது. இதனை அம்மூவனார் பாடலில் காணலாம்.

அணிற் பல்லன்ன கொங்குமுதிர் முண்டகத்து
மணிக்கே ழன்ன மாணீர்ச் சேர்ப்ப
இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியரென் கணவனை
யானா கியர்நின் னெஞ்சு நேர்பவளே[73]

தலைவி தலைவனை நோக்கி இப்பிறவி மாறி மறுபிறப்பு எடுத்தாலும் நீயே என் கணவனாக அமைய வேண்டும். நானே உனது காதலியாக இருக்க வேண்டும் எனக் கூறுவதைக் காண முடி கிறது.

பல பிறப்பு உண்டென்றும் பிறப்பு எழுவகையென்றும் குறளில் காணலாம்.

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு [74]

ஒருவர் நமது துன்பத்தினை நீங்கினவருடைய நட்பினை எழு பிறப்பிலும் நினைப்பர் என வள்ளுவர் சுட்டுகிறார்.

இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிக னாயலன் பிறரும்
சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன் றவன் கைவண் மையே [75]

இப்பிறப்பில் செய்யும் கொடை அறச்செயல்களின் பயன் மறுபிறப்பிற்கும் இன்பத்தைக் கொடுக்கும் எனப் புறநானூற்றுப் பாடல் உணர்த்துகிறது.

பட்டினத்தார் திருத்தில்லைப் பாடலில் நல்ல அறச்செயல் கள் செய்தாலும் பிறவியுண்டு. பிறவாதிருக்க அம்பலவாணர் திரு வடியை வணங்குங்கள் என்கிறார்.

பிறவா திருக்க வரம்தரல் வேண்டும்; பிறந்துவிட்டால்
இறவா திருக்க மருந்துண்டு காண்இது எப்படியோ
அறமார் புகழ்வதில்லை அம்பல வாணர் அடிக்கமலம்
மறவா திருமனமே! அதுகாண் நல் மருந்துனக்கே [76]

பிறவி உண்டென்று சங்க இலக்கியமும் சித்தர் படைப்பு களும் உரைக்கின்றன. பிறவி உண்டென்பதைக் கூறி, பிறவா திருக்க இறைவன் திருவடியை மறவாதிருக்க வேண்டும் என்றும் மேற் கூறிய இரு இலக்கியங்களும் எடுத்துரைக்கின்றன.

மேலே காட்டிய கருத்துக்கு அரணாகப் பத்திரகிரியார் பாடல் அமைந்துள்ளது.

புல்லாய் விலங்காய்ப் புழுவாய் நரவடியாய்
எல்லாப் பிறப்பின் இருள் அகல்வது எக்காலம் [77]

கல்லாய் மரமாய்க் கயலாய்ப் பறவைகளாய்ப்
புல்லாய்ப் பிறந்த சென்மம் போதும் என்பது எக்காலம் [78]

இப்பாடல்களில் புல், விலங்கு, புழு, பறவை, மனிதன் கல், மரம் என்று பிறப்பு வகைகளைச் சுட்டப் பெற்றுள்ளதை அறிய முடிகிறது.

சித்தர், பத்திரகிரியார் போலவே ஆண்டாளும் திருப் பாவையில் எழு பிறப்பு உண்டென்பதைக் கூறுகிறார்.

எற்றைக்கு மேழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மற்றேலோ ரெம்பாவாய்[79]

என்று எழுபிறப்பிலும் இறைவனோடு தொடர்பு வேண்டும் என உணர்த்துகின்றார் ஆண்டாள்.

இம்மை யுலகத் திசையொடும் விளங்கி
மறுமை யுலகமும் மறுவின் றெய்துப
செறுநரும் விழையுஞ் செயிர்தீர் காட்சி [80]

என்று இம்மை மறுமையின் பயனை அகநானூறு விளம்புகிறது.

இவ்வுலகத்தில் புகழோடு வாழ்ந்தவர்கள் மறுமை எனும் மறு பிறப்பிலும் குறைவின்றி வாழ்வர் என்பது சான்றோர் உரைத்த உண்மையாகும்.

இம்மையும் மறுமையும் பகையாவது அறியாயோ [81]

என்பது கலித்தொகை. தலைவன் பொருள் தேடலை விரும்பித் தலைவியைப் பிரிந்து போகிறான். பொருள் தேடும் முறைமை யினின்று நீங்கிப் பொருள் தேடுபவரானால் அவர்க்கு அப்பொருள் தான் அவரைவிட்டு நீங்கிச் சென்று இம்மையிலும் மறுமையிலும் அவர்க்குப் பகையாகும். இதனால் மக்கள் இருமைகளையும் அவற்றின் பயன்களையும் அறிந்திருந்தனர் என்பதை அறிய முடி கிறது.

வள்ளுவரும் பிறப்பின் சிறப்பினை,

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு [82]

என்று கூறுகிறார். பிறப்பிற்குக் காரணமான அறியாமை கெட்டு

வீட்டிற்குக் காரணமான செவ்விய பொருளைக் காண்பதே ஒரு வர்க்கு மெய்யுணர்வாகும்.

அகத்தியரும் பிறவியின் எண்ணிக்கையை எடுத்துரைக் கிறார்.

பாரப்பா வுலகுதனிற் பிறவி கோடி படைப்புகளோ
பலவிதமாய்க் கோடாகோடி
வீரப்பா அடைத்திற் பிறவி கோடி; வெளியிலே
யாடுதப்பா வுற்றுப்பாரு[83]

சங்க இலக்கியம் பிறவி உண்டென்றும், அகத்தியர் பிறவி பல உண்டென்றும் எண்ணிக்கையாகச் சுட்டியுள்ளதை அறிய முடிகிறது. பரிபாடலும் மறுபிறப்பை எடுத்துரைக்கிறது.

முன்முறை செய்தவத் திம்முறை இயைந்தோம்
மறுமுறை யமையத்து மியைக [84]

முற்பிறவியில் செய்த தவத்தால் இப்பிறப்பில் இயைந் தோம். அத்தவத்தால் மறுபிறப்பிலும் இயைவோம் என்னும் கருத்தை அறிய முடிகிறது. இக்கருத்தின் அடிப்படையில் பார்க் கின்றபொழுது முற்பிறப்பை நோக்க இப்பிறப்பு மறுமை ஆதலை உணரமுடிகிறது.

இறைவனின் திருவடியை வணங்க மறுபிறப்பு தொலை யும் எனப் பரிபாடல் குறிப்பிடுகிறது.

மறுபிறப்பறுக்கு மாசில் சேவடி [85]

சித்தர் சிவவாக்கியர், பிறப்பை அகற்ற மும்மலத்தை அகற்ற வேண்டும் எனத் தெரிவிக்கின்றார்.

எப்பிறப்பி லும்பிறந்து இறந்தழிந்த ஏழைகாள்
இப்பிறப்பி லும்பிறந்து என்னநீறு பூசுறீர்
அன்புடன் மலமறுத்தே ஆசைநீக்க வல்லீரேல்
செப்புநாத ஓசையில் தெளிந்து காணலாகும் [86]

என்பது அவர் வாக்கு.

மும்மலம் என்பது ஆணவம், கன்மம், மாயை ஆகும். அன்புடன் இவற்றை நீக்கினால் இறைவனின் நாதத்தைக் கேட்டுத் தெளிந்து கண்டுகொள்ளலாம் என்கிறார்.

திருமூலரும் இறைவனின் திருவடியை வணங்குவோர்க்குப் பிறவி இல்லையென வலியுறுத்துகிறார்.

திருவடி ஞானஞ் சிவமாக்கு விக்குந்
திருவடி ஞானஞ் சிவலோகஞ் சேர்க்குந்
திருவடி ஞானஞ் சிறைமல மீட்குந்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே [87]

திருவடியை வணங்கினால் சிவமாகலாம், சிவலோகம் அடையலாம். பிறவி என்னும் சிறையில் இருந்து மீண்டு வரலாம். பிறவா நிலையை அடையலாம் எனத் திருவடியின் பெருமையை உணர்த்துகிறார். திருவடியை வணங்குபவர்க்குப் பிறவியில்லை என்னும் பரிபாடல் கருத்தைத் திருமூலரும் எடுத்து இயம்புவது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்து
ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேஎம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன் [88]

என்னும் மாணிக்கவாசகரின் கருத்து பிறப்பின் பரிணாமத்தைச் சுட்டுவது இங்கு ஒப்புநோக்குதற்குரியது. செடி, மிருகம், விலங்கு, பூதகணங்கள், தேவர், மக்கள் என எல்லாப் பிறப்பும் பிறந்து பல கோடி பிறவிகளை எடுத்து இறைவா நான் சலிப் படைந்து உனது ஒப்பற்ற திருவடியை வணங்கவே வீடுபேறு என்னும் பிறவா நிலையை அடைந்தேன் என மக்களுக்கு உணர்த்துகிறார். தொன்மச் செய்திகள் பிறவியைப் பற்றி அமைந்துள்ளதை அறிய முடிகிறது.

சித்த புருஷர் சத்ய சாயிபாபாவும் குருவின் திருவடியே பிறவிக் கடலைக் கடக்க உதவும் சாதனம் என்கிறார்.

மானஸ பஜரே, குருசரணம்
துஸ்தர பவஸாகர தரணம் [89]

குருபெருமானின் திருவடிகளை மனத்தில் தியானம் செய்து வணங்குபவர்கள் பிறவி என்னும் கடத்தற்கரிய கடலைக் கடப்பர் என்பது மேற்குறித்த அடிகளின் மையக் கருத்தாக அமை கிறது.

"பிறவிப் பிணிக்கு இறைவன் திருவடி மருந்தாகலின் அவற்றையே கடவுள் வாழ்த்தில் திருக்குறள் சிறப்பித்துப் போற்று கிறது. அவ்வதிகாரத்தில் அமைந்த பத்துக் குறளில் ஏழு திருவடி களை ஏத்தும்"[90] என, இரா. சாரங்கபாணி குறிப்பிடுகிறார்.

இத்தகைய பாடல்களை முன்னோடியாகக் கொண்டு சங்க நூல்களில் உள்ள தொன்மங்களையும் சித்தர் பாடல்களில் உள்ள தொன்மங்களையும் ஒப்பிட்டறிவது இன்றியமையாததாகும்.

சங்க இலக்கியங்களில் உவமைகள், மகளிரின் மேனியை உவமப்படுத்துவது போன்று, சித்தர்பாடல்களிலும் பெண்களின் உடல் அழகை உவமையாகச் சுட்டுகின்றனர். வினை, பயன், மெய், உரு என்னும் அடிப்படையிலேயே இவ்வுவமைகள் அமைகின்றன. உருவகத்தை திருமாலின் அருள் திறத்திற்குக் காட்டியும், சித்தர் பாடலில் 'ஆன்ம உயர்நிலையை' மறைப்பாக வைத்தும் உருவகப்படுத்துகின்றனர். கணவன் மனைவி உறவு, தலைவியின்மீது கொண்ட காதல் ஆகியவை சங்கப் பாடல்களில் உருவகங்களாக அமைகின்றன. சித்தர்களின் உருவகம் சாதனை யில் முன்னேறிய நிலையைப் பற்றியதாகவும் இருக்கின்றது. சங்க இலக்கியத்தில் உவமை அணியே அதிகமாக இடம் பிடித் துள்ளது. சித்தர் இலக்கியத்தில், உவமை அணி, நிரல் நிரை உவமையணி, பல்பொருள் உவமையணி உள்ளதை நோக்க முடிகிறது. தொன் மங்களைப் பொருத்தமட்டில் பழமையான புராணக் கதைகள், இராமாயணம், மகாபாரதம், நாயனார், சிறு தொண்டர் பற்றிய தொன்மச் செய்திகள் இடம் பிடித்துள்ளன.

தொன்மத்திலும் சங்க இலக்கியத்திலும் சித்தர்கள் பாடல்களிலும் செல்வாக்குப் பெற்றுள்ளன. இராமாயணத்தில், புலவர்களும் சித்தர்களும் புராணக்கதைகளைப் பயன்படுத்தியுள்ளதன் நோக்கம் மக்களின் மனத்தைப் பண் படுத்தவும், நல்வழிப்படுத்தவுமே என்னும் உண்மையை சங்க இலக்கியமும் சித்தர் படைப்புகளும் உறுதிப்படுத்துகின்றன.

சான்றெண் விளக்கம்

1. ச.வே. சுப்பிரமணியன், கம்பன் இலக்கிய உத்திகள், ப. 37
2. மருதம், கரந்தை மலர், 4, ப. 206
3. ச.வே. சுப்பிரமணியன், கம்பன் இலக்கிய உத்திகள், ப. 38
4. சி.இ. மறைமலை, புதுக்கவிதை முப்பெரும் உத்திகள், ப. 19
5. தொல்காப்பியம் இளம். உரை. உவ. நூ. 200
6. பண்டித வித்துவான், தி.வே. கோபாலையர் கட்டுரை- 1, பா. 71
7. ரா. சீனிவாசன், சங்க இலக்கியத்தில் உவமை, பக். 3-4
8. தொல்காப்பியம், இளம். உரை. பொரு. உவ. நூ. 275
9. தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு, ப. 54
10. மேலது, ப. 55
11. க. இளமதி சானகிராமன், சித்தர்களின் சிந்தனைகள், பாகம்-1, ப. 77
12. கு.வெ. பாலசுப்பிரமணியன், நற்றிணை மூலமும் உரையும், நூ. 166, பக்.1-2
13. நச்சினார்க்கினியர், கலித்தொகை மூலமும் உரையும், கலி. பா. 48-17
14. அரு. ராமநாதன், பெரியஞானக்கோவையென வழங்கும் சித்தர் பாடல்கள், பட்டி. கச்சி. அக. பா. 30-26
15. மேலது, பா.35-32
16. மேலது, பா.10-09
17. உ.வே. சாமிநாதையர், புறநானூறு மூலமும் உரை, புறநா. பா. 192
18. பதினெண் சித்தர்கள் ஞானக்கோவை, பட்டி. பா. 65.
19. நச்சினார்கினியர், கலித்தொகை மூலமும் உரையும், கலி.பா. 62, பக்.9-11

20. க. இளமதி சானகிராமன், சித்தர்களின் சிந்தனைகள், ப. 74.
21. பொ.வே. சோமசுந்தரனார், பரிபாடல் மூலமும் உரையும், பரி.பா.3, பக்- 62-67.
22. அரு. ராமநாதன், பெரியஞானக்கோவையென வழங்கும் பதினெண் சித்தர் பாடல்கள், சிவ.பா.397, பக், 1-12.
23. பதினெண் சித்தர்கள் ஞானக்கோவையென வழங்கும் பதி னெண் சித்தர் பாடல்கள், பா. 12, பக். 11 - 12.
24. அரு. ராமநாதன், பெரியஞானக்கோவையென வழங்கும் பதினெண் சித்தர் பாடல்கள், சிவ.பா. 397
25. பொ.வே. சோமசுந்தரனார், பரிபாடல் மூலமும் உரையும், பரி. பா. 4
26. இளமதிசானகிராமன், சித்தர்களின் சிந்தனைகள், பா.74.
27. மேலது, ப. 73.
28. மு. வரதராசன், இலக்கியத்திறன், பக். 194
29. தமிழண்ணல், ஒப்பிலக்கிலக்கிய அறிமுகம், பா. 177.
30. ஆ. கருணாநிதி, தமிழ் இலக்கியத் திறனாய்வு வளர்ச்சி ஓர் அறிமுகம், பக். 75-76
31. சுப்பிரமணிய தேசிகர் உரை, தண்டியலங்காரம், பா. 36
32. பொ.வே. சோமசுந்தரனார், பரிபாடல் மூலமும் உரையும், பரி. பா. 3, பக். 74-76
33. பதினெண் சித்தர்கள் பெரியஞானக்கோவை, இடை.சித்.பா. 107.
34. மேலது, பா- 112.
35. உ.வே. சாமிநாத அய்யர், புறநானூறு மூலமும் உரையும், புறநா-பா-252, பக். 4-5.
36. திருமூலர், திருமந்திரம், பா. 2026.
37. பதினெண் சித்தர்கள் பெரியஞானக்கோவை, அழு- சித்- பா. 24.
38. ரா. சீனிவாசன், சங்க இலக்கிய உவமைகள், ப. 81
39. மேலது, ப. 82
40. மகாவித்வான் ரா. இராகவையங்கார், குறுந்தொகை விளக் கம், பா. 3
41. அரு. ராமநாதன், பெரியஞானக்கோவையென வழங்கும் பதினெண் சித்தர் பாடல்கள், கடு. சித். பா. 13

42. மேலது, குத.சித். பா. 28
43. பவணந்தி முனிவர், நன். நூ. 45
44. க. இளமதி சானகிராமன், சித்தர்களின் சிந்தனைகள், ப. 72
45. கு.வெ. பாலசுப்பிரமணியன், சங்க இலக்கியத்தில் புறப் பொருள், ப. 248
46. எஸ். வையாபுரிப்பிள்ளை, இலக்கியச் சிந்தனைகள், நூற் களஞ்சியம், தொகுதி - 1, ப. 87
47. தொல். இளம். உரை.உவம.நூ. 309.
48. கு.வெ. பாலசுப்பிரமணியன், நற்றினை மூலமும் உரையும் நற்.பா.166, பக். 1-2.
49. த. கோவிந்தன், சித்தர் பாடல்கள், அருட்புலம்பல், பட்டி.பா. 65.
50. பரிமேலழகர் உரை, திருக்குறள், பா. 45
51. பெ.வே. சோமசுந்தரனார், பரிபாடல் மூலமும் உரையும், பரி.பா. 8,76
52. நச்சினார்க்கினியர், கலித்தொகை மூலமும் உரையும், கலி பா, 56,13-14.
53. த. கோவேந்தன், சித்தர் பாடல்கள் திரு ஏகம்பமாலை பட்டி. பா-21.
54. தமிழண்ணல், ஒப்பிலக்கிய அறிமுகம், ப. 184
55. தொல். இளம். உரை, செய்.நூ. 538
56. ச. அகத்தியலிங்கம், சோ.ந.கந்தசாமி ஆய்வுக்கோவை மூன் றாம் கருத்தரங்கு தொகுதி- 1, பா. 468.
57. கெ. இரவி, சங்கத் தொன்மம், ப. 42
58. மேலது, ப. 44
59. பேராசிரியர் கு. முத்துராசன், இலக்கிய வடிவங்கள், பக். 155.
60. தமிழண்ணல், ஒப்பிலக்கிய அறிமுகம், ப. 184.
61. மேலது, ப. 189.
62. மு. இளமுருகன், தமிழ்ப் பெருங்காப்பியங்களில் சங்க இலக் கியத்தின் செல்வாக்கு, ப. 244
63. பொ.வே. சோமசுந்தரனார், பரிபாடல் மூலமும் உரை, பரி. பா.3,பக். 1-3.
64. மேலது, பக். 34-37.

65. பதினெண் சித்தர்கள் ஞானக் கோவை, சிவ.பா. 119.
66. நச்சினார்க்கினியர், கலித்தொகை மூலமும் உரையும் கலி.பா.100,பக். 7-8.
67. க. இளமதி சானகிராமன், சித்தர்களின் சிந்தனைகள். ப. 58.
68. நச்சினார்க்கினியர் உரை, கலித்தொகை, பா. 101 : 18 - 20.
69. நச்சினார்கினியர், கலித்தொகை, மூலமும் உரையும், கலி. பாலை, பா- 25, பக்-1-4.
70. அரு. ராமநாதன், பெரியஞானக்கோவையென வழங்கும் சித்தர் பாடல்கள், கொங். சித்.பா-101, பக். 1-2.
71. இளமதிசானகிராமன், சித்தர்களின் சிந்தனைகள், பாகம்- 1. ப. 57.
72. பெ. மாதையன், வரலாற்று நோக்கில் சங்க இலக்கியப் பழமரபுக் கதைகளும் தொன்மங்களும், ப. 153
73. ரா. இராகவையங்கார், குறுந்தொகை விளக்கம், பா. 49
74. பரிமேலழகர் உரை, திருக்குறள், 107
75. ஔவை துரைசாமிப் பிள்ளை, புறநா. 134
76. அரு. இராமநாதன், ஞானக்கோவையென வழங்கும் சித்தர் பாடல்கள், பட்டி. பா. 16.
77. மேலது, பா. 49
78. மேலது, பா. 128
79. ஜெகத்ரட்சகன், ஸ்ரீ நாலாயிரதிவ்ய பிரபந்தம், ஆண்டாள் திருப்பாவை, பா. 474, 6 - 8.
80. ந.சி. கந்தையா, அக. பா. 66, 1-3
81. நச்சினார்க்கினியர், கலித்தொகை மூலமும் உரையும், கலி. பா.14-15.
82. பரிமேலழகர் உரை, திருக்குறள் 358.
83. அரு. இராமநாதன், ஞானக்கோவையென வழங்கும் சித்தர் பாடல்கள், அகத். பா. 8, 1-2.
84. பொ.வே. சோமசுந்தரனார், பரிபாடல் மூலமும் உரையும், பரி.பா.11.
85. மேலது, பரி.பா. 3: 2.
86. அரு. இராமநாதன், ஞானக்கோவையென வழங்கும் சித்தர் பாடல்கள், சிவ.பா. 412.

87. தி.எம். குமரகுருபரன் பிள்ளை, திருமந்திரம், திருமூ. பா. 1598.
88. ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர், திருவாசகம், பக். 121-122
89. என். கஸ்தூரி, சத்யம் சிவம் சுந்தரம், ப. 65
90. இரா. சாரங்கபாணி, சித்தர் இலக்கியங்களில் திருக்குறள், ப. 181.

5. நிறைவாக...

'செவ்விலக்கியமும் சித்தர் படைப்புகளும்' எனும் பொருண்மையில் ஆய்வு மேற்கொண்டதன் வாயிலாக அறிய வரும் உண்மை(Fact)கள் நிரல்பட ஈண்டு தொகுத்தளிக்கப்படுகின்றன.

நாட்டார் வழக்கினின்று வீரநிலைக்கால (Heroic age) தேவை நோக்கிச் செவ்வியல் பதிவான படைப்புக்களாக அறியப் பெறுவது சங்க இலக்கியம். இந்நெடும் பரப்பின் வளர்ச்சியாக மானுட மண்ணாசைப் போர் வேகத்தினின்று, விண்ணுலக மறுவுலக மெய்ப்பொருள் தேடல் வாழ்நெறிக்குச் சங்ககால இறுதிகளம் கண்டது. இதன் விளைவாகவே காஞ்சித் திணையும், பாடாண் திணைசார் வாழ்த்தியல் வகையும் எழுந்தன.

வீரநிலைக்காலப் போர், போரான் முடியுடை அரசுகள் சிதைவுறுதல், வேத வேள்வியை இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி போன்றோர் பெரும்பொருட் செலவில் நிகழ்த்தியமை, மகளிர் மாண்பு, பரத்தமை உறவால் கவலைக்குள்ளாதல், வேத வழி அரசு ஆர்வம், ஆகியவற்றால் மானுட ஓர்மை சிதைந்தன.

இச்சிதைவான் மானுடத்தை அன்பு வழியில் கட்டமைக்க அறம், பொருள், இன்பம் என்ற முப்பொருள் மெய்ம்மைகள் வலியுறுத்தப்பட்டதைச் சங்க நூற்கள் பதிவுறுத்தின என அறிய முடிகிறது. இதற்குத் தொல்காப்பியப் பொருளதிகாரம் இலக்கணம் கண்டது என உறுதியாக நம்ப முடிகிறது.

இம்முப்பொருண்மையுடன் வீடுபேறு பற்றிய மெய்யியல் கூறுகள் கொல்லாமைக்கு எதிரான அன்பு மேவல், மானுட ஒழுக்கக்கேட்டைக் கண்டிப்பதற்கான அறவுரைகளைச் சமூகக் குரலாகப் படைப்பாளர்கள் ஒலித்ததை அறிய முடிகிறது.

அரசியல் இறையாண்மை வழுவாதிருக்க பொருளுக்குத் துணைக் காரணமாய அரச நீதி வள்ளுவத்தால் வகுக்க நேர்ந்தது. இவ்வழிமுறை தமிழகத்தில் நீதிநூற்களாகத் தனித்தே எழுந்தன என்பதை அறியலாம்.

காஞ்சித்திணை செவியறிவுறூஉம் பொருண்மொழிக் காஞ்சி என்ற இரண்டு துறைகளும் சமண, பௌத்த வரவால் விரிந்து உயிர்க்கொலை, அஃறிணை உயிர்களிடத்தும் அருளுடைமையாக வாழ்வதற்கான பரப்புரை செய்ய முற்பட்டதைக் காண முடிகிறது.

இம்மெய்யியல் கலப்பால் தமிழர் இலக்கியக் கலையின் பாடுபொருள் தமிழ் மரபு வழியான அறம், பொருள், இன்பம் என்ற மூன்றும் பௌத்தத்தின் நான்குவகை வாய்மையாகவும், ஐந்து வகை சீலங்களாகவும் விரிவடைந்தன. இவ்விரிவுகளைச் சுமந்து மணிமேகலை என்ற காப்பியமே தனித்து எழுந்தமை மேலைய ஆய்வை உறுதிப்படுத்தவல்லது.

இப்போக்கின் வரலாற்றில் கி.பி. 575 முதல் சிம்ம விஷ்ணு பிற்காலப் பல்லவ அரசைத் தோற்றுவித்தது முதல் பிற்கால பாண்டிய, சோழ அரசர்கள், சமண, பௌத்த மெய்யியலைப் பின்னடைவு செய்தனர். இதற்கு அரணாக சைவமும், வைணவமும் தமிழ்ப் படைப்பு வரலாற்று மெய்யியலை வேதவழி அரசு சார்பினதாக ஆக்கின.

இம்மாற்றத்தால், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கணியன் பூங்குன்றனார் குரலும், 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற வள்ளுவர் வாய்மொழியும் வலுவிழந்தன. அறமென்பது மக்கட்கு, மண்ணுயிர்கட்குப் பொது என்ற கருத்தியல் அறவோர், துறவோர், அந்தணர் என்றவர்கட்கே உரிய தென்றும், மனுவழி வாழ்வே மாந்த மெய்யியல் என்ற நிலைப்பாடு எழுந்தது.

இந்நிலைப்பாட்டைத் தகர்க்கவே திருமூலர் உள்ளிட்ட பதினெண் சித்தர்கள் தத்தம் படைப்புக்களில் 'மனத்தகத்து அழுக்கறுத்த மௌன ஞான யோகிகள்' என்ற குரலை வலியுறுத்தினரென்று இவ் ஆய்வின் மூலம் உணர முடிகிறது.

'அறமெனப்பட்டதே இல்வாழ்க்கை' என்ற செவ்விலக்கியக் குரல் சமண, பௌத்தத்தால் முழுமையாக ஏற்கப்பட வில்லை. தமிழியம் இல்லறம் கண்டு மிகைகாமவேட்கைத் துய்த்துப் பின் சிறந்தது பயிற்றல் சிறந்ததன் கடனே என வரையறுத்தது.

இவ்வரையறையைச் சித்தர்கள் ஏற்றுப் போற்றியுள்ளனர். சித்தர்கள் புலனறுத்து வாழ்ந்தாலும் வெகுமக்கள் புலனின்பங்களில் அளவே துய்த்து பிற உயிர்கட்கு இடையூறின்றி உதவியாகவே வாழ வேண்டினர் என்பது இவ் ஆய்வால் தெளிவடையலாம். முக்திக்கு இல்லறம் தடையில்லை என்பது தமிழர் மரபு. தத்துவம் என்ற புரிதல் சித்தர் படைப்புகளில் பதிவாகியுள்ளன.

வாழ்வில் யாக்கை, இளமை, செல்வம், உலகம், உயிர் ஆகியவை நிலையற்றன. இவற்றைப் புரிந்து ஒழுகலே உயர் வாழ்வும், கவலையற்ற வாழ்வுமாகும் எனச் சித்தர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

செறிவான, கற்றவர் அறியும்படியான யாப்பு மரபை இளகச் செய்து மானுடப் புரிதல் நோக்கிச் சித்தர்கள் நாட்டார் வழக்காற்றியலுடனான பா வடிவ முறையைக் கையாண்டுள்ளனர். நாடோடிப்பா, தெம்மாங்கு பா வடிவங்களும் இவர்களால் பின்பற்றப்பட்டுள்ளன.

சங்கப் புலவர்கள் கையாண்ட பா வடிவம் நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறளாசிரியப்பா, நிலைமண்டிலாசிரியப்பா ஆகிய மூன்று ஆசிரிய வகைகளைச் சித்தர் பட்டினத்தார் பாடல்களில் காணக் கிடைக்கின்றன.

புறநானூறு, பதிற்றுப்பத்து, பட்டினப்பாலை, மதுரைக் காஞ்சி ஆகிய ஆசிரியப்பா பாடல்களில் வஞ்சியடிகள் விரவி இடம் பிடித்துள்ளன. திருவருட்பா ஆறாவது திருமுறையில் இடம்பெற்றுள்ள தசபங்கியை, வஞ்சி விருத்தமாகப் பாடி யுள்ளார். இதேபோல் வஞ்சிப்பாவின் இனமான வஞ்சித் துறை, வஞ்சி விருத்தம் ஆகியன சித்தரால் போற்றப்படும் வள்ளலார் பாடலில் காணப்படுகின்றன.

வெண்பா, சங்க இலக்கியங்களில் தனிப்பட்ட வெண்பாக் களே இல்லை. பரிபாடல், கலிப்பா உறுப்புக்களான சில வெண் பாக்களாகவே காணப்படுகின்றன. குறள் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா, நேரிசைச் சிந்தியல் வெண்பா, இன்னிசைச் சிந்தியல் வெண்பா என வெண்பா வகையில் குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா ஆகிய மூன்று வெண்பா வகைகளும் சித்தர் களான ஔவையார், காகபுசுண்டர் பாடல்களில் குறள் வெண்பா வைக் கையாண்டுள்ளனர். சிந்தியல் வெண்பாவை அகப்பேய்ச் சித்தர் பயன்படுத்தியுள்ளார். நேரிசை வெண்பாவினை பட்டினத் தார் பாடல்களில் காண முடிகிறது.

சங்க இலக்கியத்தில் கலித்தொகை மட்டும் கலிப்பாவாகக் காணப்படு கிறது. கலித்தாழிசையை அழுகணிச்சித்தர், வள்ளலார் ஆகியோர் பயன்படுத்தியுள்ளனர். தரவு கொச்சகத்தை, திருவள்ளு வர், இடைக்காடர், பட்டினத்தார் படைப்புகளில் காண முடிகிறது. சித்தர்கள் தத்தம் படைப்புகளில் தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் எனும் கலிப்பாவின் உறுப்புகளில் தரவு, கொச்சகம், தாழிசை எனும் உறுப்புகளையே கையாண்டுள்ளனர்.

அகம், புறம் சார்ந்த பாடுபொருள் தெளிவிற்காகச் சங்க இலக்கியம் கையாண்ட உவமை, உருவகம், தொன்மம் என்ற

உத்திகள் சித்தர் படைப்புகளில் தத்தம் தத்துவப் பொருள்களுக்கு ஏற்றவாறு ஏற்கப்பட்டுள்ளதைக் காண முடிகிறது.

சங்க இலக்கியத்தில் இடம்பெறும் உவமை ஆட்சியை பட்டினத்தார், சிவவாக்கியர், இடைக்காடர், உரோமரிஷி ஆகிய சித்தர்கள் எளிமையாகக் கையாண்டுள்ளதை அறிய முடிகிறது.

உருவகம் சங்க இலக்கியங்களில் குறுந்தொகை, புற நானூறு, பரிபாடல் களில் மிகுதியாகக் காணப்படுகிறது. இவை இடைக்காடர், திருமூலர், அழுகணிச் சித்தர், குதம்பைச் சித்தர் ஆகியோர் பாடல்களில் பரவலாகக் கையாண்டுள்ளதைக் காண முடிகிறது.

சங்க இலக்கியத்தில் மிகுதியாக இடம்பெறும் உவமை பட்டினத்தார் பாடல்களில் உவமையணியாக வளர்ச்சி பெற்றுள் ளது.

சங்க இலக்கியத்தில் தொன்மச் செய்திகள் பரிபாடல், கலித்தொகை ஆகியவற்றில் இராமாயணம், பாரதக் கதைகள், இதிகாசக் கதைகள் காண படுகின்றன. இவ்வாறே தொன்மம் பற்றிய செய்திகளை சிவவாக்கியர், பட்டினத்தார், கொங்கணவர் பயன்படுத்தியுள்ளனர். தொன்மத்தில் மறுபிறப்பு, சங்க இலக் கியங்களில் மறுபிறப்பு, சொர்க்கம் பற்றிய சிந்தனை ஆகியன பத்திரகிரியார், அகத்தியர், சிவவாக்கியர், திருமூலர், மாணிக்க வாசகர் முதலியோர் படைப்புகளில் செல்வாக்குற்றுப் பாடு பொருள் தெளிவு பெற்றுள்ளதை அறிய முடிகிறது.

துணைநூற்பட்டியல்

மூல நூல்கள் (சங்க இலக்கியம்)

ஔவை துரைசாமிப்பிள்ளை (உ.ஆ), புறநானூறு, பகுதி – 1, கழக வெளியீடு, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை. பதினோறாம் பதிப்பு, 2002.

கந்தையா, ந.சி., செவ்விலக்கிய கருவூலம் அகநானூறு, தமிழ்மண் அறக்கட்டளை, சென்னை, முதற்பதிப்பு, 2008

சண்முகம் பிள்ளை (ப.ஆ.), குறுந்தொகை மூலமும் உரையும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். முதற்பதிப்பு 1985

சதாசிவ ஐயர், தி. (உ.ஆ), ஐங்குறுநூறு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை. முதற்பதிப்பு, 1999.

சாமிநாதையர், உ.வே. (உ.ஆ)., குறுந்தொகை, உ.வே.சா. நூல் நிலையம், பெசண்ட் நகர், சென்னை. 2009

சாமிநாதையர், உ.வே. (உ.ஆ)., புறநானூறு மூலமும் உரையும், தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியீடு, தஞ்சாவூர், நிழற் படப் பதிப்பு, 1985

சோமசுந்தரனார், பொ.வே. (உ.ஆ), பத்துப்பாட்டு (பகுதி - 2), கழக வெளியீடு, ஆழ்வார்பேட்டை, சென்னை. 2008

சோமசுந்தரனார், பொ.வே. (உ.ஆ.), பரிபாடல், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை. 2007

தண்டாயுதம், இரா., சங்க இலக்கியம் - பத்துப்பாட்டு, தமிழ்ப் புத்தகாலயம், 576, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை. முதற்பதிப்பு, 1978

தமிழண்ணல் (உ.ஆ.), அகநானூறு நித்திலக்கோவை (பகுதி-3), கோவிலூர் மடாலயம், கோவிலூர், மூன்றாம் பதிப்பு, 2004.

நச்சினார்க்கினியர் (உ.ஆ.), கலித்தொகை, கழக வெளியீடு, திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்., ஆழ்வார்பேட்டை, சென்னை. முதற்பதிப்பு, 1943

நச்சினார்க்கினியர் (உ.ஆ.), பத்துப்பாட்டு, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர். 1986

பாலசுப்பிரமணியன், கு.வெ. (உ.ஆ), புறநானூறு (பகுதி - 1), நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை. முதற் பதிப்பு, 2004

பாலசுப்பிரமணியன், கு.வெ. (உ.ஆ)., புறநானூறு (பகுதி - 2), நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை. முதற் பதிப்பு, 2004

பாலசுப்பிரமணியன், கு.வெ. (உ.ஆ)., நற்றிணை மூலமும் உரை யும், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை. முதற்பதிப்பு, 2004

பின்னத்தூர் நாராயணசாமி, நற்றிணை, கழக வெளியீடு, திருநெல் வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் (பி) லிட்., சென்னை. இரண்டாம் பதிப்பு, 2007

விசுவநாதன், அ., கலித்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., அம்பத்தூர், சென்னை.

இராமநாதன், அரு. (ப.ஆ), ஞானக்கோவையென வழங்கும் சித்தர் பாடல்கள், பிரேமா பிரசுரம் வெளியீடு, சென்னை. பதினான்காம் பதிப்பு, 2008.

சரவணமுத்து பிள்ளை, வா. (தொ.ஆ), பதினெண் சித்தர்கள் பெரிய ஞானக்கோவை, மூன்று பாகங்கள், பி. இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ் வெளியீடு, சென்னை, 2010.

அரங்கநாதன், தி., வாசுதேவன், கா., தமிழ் இலக்கிய வரலாறு - ஒரு புதுப்பார்வை, தேவன் பதிப்பகம், 16/43, திருநகர், திருவானைக்கோவில், திருச்சிராப்பள்ளி, முதற்பதிப்பு, 2001.

அமிர்தசாகரர், யாப்பருங்கலக்காரிகை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்., 79, பிரகாசம் சாலை, சென்னை. முதற் பதிப்பு, 1940.

ஆறுமுக நயினார், திருநந்திதேவர் திருமூலதேவருக்கு உபதேசித்தருளிய ஆறாதார ஜீவோற்பத்தி சிந்தாமணியும் தத்துவ தீபிகையும், 1903.

ஆறுமுகம், கரு., பாபாஜியும் பதினெண் சித்தர் கிரியா யோக மரபும், பாபாஜியின் கிரியா யோக ஆசிரியர் மரபு அறக் கட்டளை, பெங்களூர், 1991.

இரவி, சங்கத் தொன்மம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட்., சென்னை. முதற்பதிப்பு, 2003.

இராசமாணிக்கனார், மா., இல்வாழ்க்கை, பாரி நிலையம், சென்னை. முதற்பதிப்பு, 1957

இராசமாணிக்கனார், மா., பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை. முதற்பதிப்பு, 1970.

இராமநாத பிள்ளை, ப., திருமந்திரம் - முதற்பகுதி, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. 1964

இராமநாத பிள்ளை, ப., தாயுமானவரடிகள் திருப்பாடல்கள் சிந்தாந்த சிறப்புரை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. 1975.

இராமநாதன் செட்டியார், லெ.ப.கரு. பத்துப்பாட்டு வளம், முத்தையா நிலையம், பிளவர்ஸ் சாலை, சென்னை. ஐந்தாம் பதிப்பு, 1976

இராமலிங்க சுவாமிகள், திரு அருட்பா ஐந்து திருமுறை, ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள், மடாலயம் வெளியீடு, முதற் பதிப்பு, 1964.

இராமலிங்க சுவாமிகள், திரு அருட்பா ஆறாவது திருமுறை, ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள் மடாலயம் வெளியீடு, முதற்பதிப்பு, 1964.

இளம்பூரணர் (உ.ஆ.), தொல்காப்பியம் செய்யுளியல், கழக வெளியீடு, சென்னை. 2001.

இளம்பூரணர் (உ.ஆ.), தொல்காப்பியம் பொருளதிகாரம், திரு நெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்., சென்னை. 2004

இளமதி சானகிராமன், க., சித்தர்களின் சிந்தனைகள், பாகம் - 1, குறிஞ்சி பதிப்பகம், புதுச்சேரி. முதற்பதிப்பு, 2008

இளமதி சானகிராமன், க., சித்தர்களும் சமூகப்பார்வையும், டி9, ஆசிரியர் குடியிருப்பு, புதுச்சேரி, முதற்பதிப்பு, 1990.

இளவரசு, சோம., (ப.ஆ.), நன்னூல் விருத்தியுரை, அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, சிதம்பரம். 1990.

இளமுருகன், மு., தமிழ்ப் பெருங்காப்பியங்களில் சங்க இலக்கியத்தின் செல்வாக்கு, கலையகம் வெளியீடு, தஞ்சாவூர். 1999

ஊரன் அடிகள், வள்ளுவரும் வள்ளலாரும், சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், கடலூர். முதற்பதிப்பு, 2005.

கணபதி, டி.என்., தமிழ்ச் சித்தர் மரபு, ரவி பப்ளிகேஷன்ஸ், சென்னை. இரண்டாம் பதிப்பு, 2005

கந்தசாமி, சோ.ந., தமிழும் தத்துவமும், 241, லிங்கிச் செட்டித் தெரு, சென்னை. 1976.

கந்தசாமி, சோ.ந., பௌத்தம், 241, லிங்கிச்செட்டித்தெரு, சென்னை. முதற்பதிப்பு, 1978

கந்தசாமி, சோ.ந., தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும் (முதற்பாகம்), தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர். முதற்பதிப்பு, 1989

கந்தசாமி, சோ.ந., புறத்திணை வாழ்வியல், தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு, தஞ்சாவூர். முதற்பதிப்பு, 1994

கந்தசாமி (தொ.ஆ.), போக முனிவர் திருவாய் மலர்ந்தருளிய சத்த காண்டம், ஏழாயிரம், சென்னை. 1959

கமலக்கண்ணன், பா., சதுரகிரியில் கோரக்க சித்தர், வானதி பதிப்பகம், சென்னை. மூன்றாம் பதிப்பு, 2008.

கருணாநிதி, ஆ., தமிழ் இலக்கிய திறனாய்வு வளர்ச்சி ஓர் அறிமுகம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. முதற்பதிப்பு, 1999

கருணையானந்த ஞானபூதிகள், ஞானக்களஞ்சியம், கருணாநிதி அச்சுநிகேதனத்தில், சென்னை. 1930

கல்யாணசுந்தரம், சி., நீதி சதகம், கும்பகோணம், 1930

கல்யாணசுந்தரம், சி., வைராக்கிய சதகம், ஜனரந்தன பிரிண்டிங், டவுன் உயர்நிலைப்பள்ளி ரோடு, கும்பகோணம். 1950

கன்னியப்ப சுவாமிகள், மெய் உணர்வின் ஒளி, மெய்கண்ட சபை, 8, டெலிகிராப் அப்பாஸ் நாயுடு சந்து, கொண்டித் தோப்பு, வள்ளலார் நகர், சென்னை. முதற்பதிப்பு, 1962

கஸ்தூரி, ப. (தொ.ஆ.), சந்தேக நிவாரணி (பகவான் ஸ்ரீசத்திய சாயிபாபா), ஸ்ரீ சத்யசாமி கல்வி நிறுவனம், பிரசாந்தி நிலையம், ஆந்திரப்பிரதேசம். முதற்பதிப்பு, 1971.

கிருட்டினமூர்த்தி, சா., தமிழிலக்கிய வகைமையியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. முதற்பதிப்பு, 2005.

கிருஷ்ணமூர்த்தி, ந., பதினெண் சித்தர் வரலாறு, ஸ்ரீ வன்னி விநாயகர் புத்தக நிலையம், மதுரை. 2005

குணா, தமிழர் மெய்யியல், பொதுமை வெளியீடு, சென்னை. முதற்பதிப்பு, 1980

குமரகுருபன் பிள்ளை, தி.எம்., திருமந்திரம், குமரகுரு பரசுவாமி மடம், ஸ்ரீ வைகுண்டம், இரண்டாம் பதிப்பு, 1960

குமரன், இரெ., சங்க இலக்கிய அகப்பாடல்களில் கருத்துப் புலப் பாட்டு உத்திகள், அனன்யா, 8/37, பிஏஓய் நகர், குழந்தை ஏசு கோயில் (அருகில்), தஞ்சாவூர். மூன்றாம் பதிப்பு, 2001.

குருஸ்வாமி ஐயர் (மொ.ஆ)., நாளாந்த நற்சிந்தனை, பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா அவர்கள் அருளியது, இலங்கை ஸ்ரீ சத்யசாயி நிறுவனங்கள், 12, தாமரைக்கேணி வீதி, மட்டக்களப்பு, இலங்கை, 1997.

சற்குணன், சை., சித்தர் கருவூலம், சைவமணி பதிப்பகம், திருச்சி, முதற்பதிப்பு, 2010.

சாரங்கபாணி, இரா., சங்க இலக்கிய மேற்கோள்கள், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம். முதற்பதிப்பு, 2008.

சாரங்கபாணி, இரா., சித்தர் இலக்கியங்களில் திருக்குறள், அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, சிதம்பரம். முதற்பதிப்பு, 1991

சித்பவானந்தர், திருவாசகம், இராமகிருஷ்ண தபோவன வெளி யீடு, திருப்பாராய்த்துறை. இரண்டாம் பதிப்பு, 1970.

சிதம்பர சுவாமிகள், ஒழிவிலொடுக்கம், சென்னை. 1960

சிதம்பரனார், சாமி., சித்தர் கண்ட விஞ்ஞான தத்துவம், இலக்கிய நிலையம், சென்னை. நான்காம் பதிப்பு, 1974

சிவகாந்தன், கே.ஆர்., சித்தர்கள் தத்துவமும் யோகநெறி முறைகளும், திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம் லிட்., சென்னை. முதற்பதிப்பு, 1973.

சிவஞான சுவாமிகள் (உ.ஆ.), நன்னூல் மூலமும் விருத்தியுரையும், முத்துக்குமரன் இல்லம், 2/22, மாரியம்மன்கோயில் தெரு, திருப்பனந்தாள்.

சின்னத்தம்பி மூப்பனார், வள்ளுவர் காட்டும் பேரின்பம், சுந்தர பெருமாள்கோயில். 1972

சீனிவாசன், ரா., சங்க இலக்கியத்தில் உவமைகள், அணியகம், சென்னை. முதற்பதிப்பு, 1973.

சுந்தரம், பி.கே., (மொ.ஆ.), உபநிஷத வாஹினி - பகவான் சத்திய சாயிபாபா, ஸ்ரீ சத்திய சாய் கல்வி நிறுவனம், சென்னை. முதற்பதிப்பு, 1975.

சுந்தரேசம் பிள்ளை, எம். (ப.ஆ.), நாற்கவிராச நம்பி இயற்றிய அகப்பொருள் விளக்கம், முத்துக்குமரன் இல்லம், 2/22, மாரியம்மன் கோயில் தெரு, திருப்பனந்தாள்.

சுப்பிரமணியன், ச.வே., கம்பன் இலக்கிய உத்திகள், மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம். முதற்பதிப்பு, 2002.

சுப்பிரமணியன், ச.வே., தொல்காப்பியம் - உரைவளக்கோவை, மெய்யப்பன் பதிப்பகம், 63, புதுத்தெரு, சிதம்பரம். முதற்பதிப்பு, 2009.

சுப்பிரமணியன், பெ., பழந்தமிழ் நூல்களில் ஊழ், குருவருள் பதிப்பகம், குறிஞ்சி நகர், தஞ்சாவூர். 1999

சுப்பிரமணிய தேசிகர் (உ.ஆ), தண்டியலங்காரம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 79, பிரகாசம் சாலை, சென்னை.

சுவாமி ஆத்மானந்தர், பாம்பாட்டிச் சித்தர் பாடல்கள் எளிய விளக்கமும் தத்துவ உரையும், வானதி பதிப்பகம், சென்னை. 2006

செங்குட்டுவன், மா., தொல்காப்பியம் - திருக்குறள் வாழ்வியல் நெறியும் ஆன்மீகமும், தி பார்க்கர், சென்னை. பதினைந் தாம் பதிப்பு, 2006.

செல்வகணபதி, எஸ்., ஒப்பிலக்கிய நோக்கில் தமிழிலக்கியம், கற்பகம் பதிப்பகம், தஞ்சாவூர். முதற்பதிப்பு, 1986.

சேதுப்பிள்ளை, ரா.பி., வழிவழி வள்ளுவர், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை. ஏழாம் பதிப்பு, 1970

சொக்கலிங்கம் (தொ.ஆ.),சுப்பிரமணியன், ஸ்ரீ ஸாயி ஸத்சரித் திரம், எக்ஸிகியூடிவ் ஆபீஸர், ஸ்ரீ ஸாயிபாபா சம்ஸ்தான், சீரடி, அகமத்நகர் ஜில்லா, மகராஷ்டிரா. ஆறாம் பதிப்பு, 2003.

சோமசுந்தரம், மீ.ப., சித்தர் இலக்கியம் முதற் தொகுதி, சோமு வெளியீட்டுத் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம். இரண்டாம் பதிப்பு, 1993

சோமசுந்தரம், மீ.ப., சித்தர் இலக்கியம் இரண்டாம் தொகுதி, சோமு வெளியீட்டுத் துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம். இரண்டாம் பதிப்பு, 1993

தட்சிணாமூர்த்தி, அ., தமிழர் நாகரிகமும் பண்பாடும், வெற்றிச் செல்வி வெளியீட்டகம், தஞ்சாவூர். 1980

தமிழ்ப்பிரியன், ச., கணபதிதாசர் சித்தரின் நெஞ்சறி விளக்கம் மூலமும் உரையும், சங்கர் பதிப்பகம், சென்னை. முதற் பதிப்பு, 2007.

தமிழ்ப்பிரியன், ச., நான்மணிக்கடிகை மூலமும் உரையும், கற்பகம் புத்தகாலயம், சென்னை. முதற்பதிப்பு, 2007.

தமிழ்ப்பிரியன், ச., சிறுபஞ்ச மூலமும் உரையும், கற்பகம் புத்த காலயம், சென்னை. முதற்பதிப்பு, 2009

தமிழ்ப்பிரியன், ச., பதினெட்டு சித்தர்களின் முக்கிய பாடல்களும் விளக்கங்களும், நர்மதா பதிப்பகம், சென்னை. 2010

தமிழண்ணல், ஒப்பிலக்கிய அறிமுகம், மீனாட்சி புத்தக நிலை யம், மதுரை. முதற்பதிப்பு, 1986

தமிழண்ணல், இராம. பெரியகருப்பன், இலக்கிய ஒப்பீடு இலக் கிய வகைகள், சோலை நூலகம், மதுரை. இரண்டாம் பதிப்பு, 1979

தமிழரசு, ச., குறள்நெறி வெண்பா - உரையுடன், மீனா புத்தகப் பண்ணை, விழுப்புரம். முதற்பதிப்பு, 2004.

தாயுமானவன், மறை, தி., தனித்தமிழ் இயக்கத் தந்தை மறை மலை அடிகளார், மறைமலையடிகள் பதிப்பகம், 28, தாமரைத்தெரு, சென்னை, முதற்பதிப்பு, 2009.

திருவள்ளுவ நாயனார், ஞானவெட்டியான் (1500 பாடல்கள்), இரத்தின நாயக்கர் அண்ட் சன்ஸ், சென்னை. 2009.

துரை அரங்கசாமி, மொ.அ., அன்பு நெறியே தமிழர் நெறி, மீனாட்சி புத்தக நிலையம், 60, மேல கோபுரத்தெரு, மதுரை. மூன்றாம் பதிப்பு, 1966.

நக்கீரர் (உ.ஆ.), இறையனார் அகப்பொருள், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. 1969

நாகராசன், கி., ஸ்ரீ குருதெட்சிணாமூர்த்தி சுவாமிகள் அருளுரை, குருவருள், 7, காளியம்மன் கோயில் தெரு, நாகப்பட்டி னம். 2002

நாராயணன், க., சித்தர் தத்துவம், மாரி பதிப்பகம், சிவகலை நாகத் தம்மன் ஆலயச் சூழல், கொட்டிப்பாளையம், புதுச்சேரி. இரண்டாம் பதிப்பு, 1990.

நிர்மலா மோகன் (தொ.ஆ.), தமிழ்ச் சித்தர் இலக்கியம், சாகித்திய அகாடமி, டெல்லி. முதற்பதிப்பு, 2011

பத்மதேவன், நாலடியார் மூலமும் உரையும், கற்பகம் புத்தகாலயம், சென்னை. 2010

பரமசிவானந்தம், அ.மு., பாட்டும் பயனும், தமிழ்க்கலைப் பதிப்பகம், சென்னை - 30. முதற்பதிப்பு, 1959

பரமஹம்ச யோகானந்தர், ஒரு யோகியின் சுயசரிதை, யோகதா சத்சங்கம், கல்கத்தா. மூன்றாம்பதிப்பு, 2003.

பரமஹம்ச ஸச்சிதானந்த யோகீஸ்வரர், ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரகஸ்யம் ஸ்ரீ ஸச்சிதானந்தர் கம்பெனி, சென்னை. முதற்பதிப்பு, 2009.

பரமசிவானந்தம், அ.மு., பாட்டும் பயனும், தமிழ்க்கலைப் பதிப்பகம், சென்னை - 30. முதற்பதிப்பு, 1959

பாலசுந்தரம், தி.சு., பண்டைத் தமிழ்ப் பொருளியல் வாழ்க்கை, கழக வெளியீடு, சென்னை.

பாலசுந்தரம், ச. (உ.ஆ)., தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகை யுரை பொருளதிகாரம், தாமரை வெளியீட்டகம், 367, மேலவீதி, தஞ்சாவூர். முதற்பதிப்பு, 1989

பாலசுப்பிரமணியன், கு.வெ., சங்க இலக்கியத்தில் புறப் பொருள், மீரா பதிப்பு, 6, கணேஷ் நகர் 4ஆம் வீதி, புதுக் கோட்டை. முதற்பதிப்பு, 1986.

பாலசுப்பிரமணியன், தி., திருமந்திர விளக்கவுரை, பாகம் – 1, கங்கை புத்தக நிலையம், சென்னை. முதற்பதிப்பு, 2010

புலியூர்க் கேசிகன் (ப.ஆ.), திருக்குறள் - பரிமேலழகர் உரை, பூம்புகார் பதிப்பகம், சென்னை. ஒன்பதாம் பதிப்பு, 2004

புலியூர்க் கேசிகன் (ப.ஆ.), ஔவையார் தனிப்பாடல்கள் விளக்க வுரை, கங்கை புத்தக நிலையம், சென்னை. முதற்பதிப்பு, 2009.

புவனேஸ்வரி இராமானுஜம், திருமந்திரம் காட்டும் வாழ்வியல், சகுந்தலை நிலையம், சென்னை. முதற்பதிப்பு, 2006.

பொம்மி, இல., சங்க இலக்கியங்களில் கற்புக் கோட்பாடு, அய்யா நிலையம், 2870, கல்யாணசுந்தரம் நகர், இ.பி. காலனி, நாஞ்சிக்கோட்டை சாலை, தஞ்சாவூர். முதற்பதிப்பு, 2006.

மகாத்மா காந்தி, சந்தானம், க. (மொ.ஆ.), அனா ஸகத் யோகம், பற்றின்றி வாழ்தல், சென்னை. 1939

மருதநாயகம், ப., ஒப்பில் வள்ளுவம், சாரதா பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு, 2008

மறைமலை, சி.இ., புதுக்கவிதை முப்பெரும் உத்திகள், நீலமலர் வெளியீட்டகம், சென்னை.

மஹாதேவ யோகி, அ., பட்டினத்தார் பாடல் மூலமும், தத்து வார்த்த விளக்கவுரையும், இரத்தின நாயகர் சன்ஸ் வெளி யீடு, சென்னை. பதினோறாம் பதிப்பு, 2001

மாணிக்கவாசகம், (மொ.ஆ.), வித்யா வாஹினி, பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபா, ஸ்ரீ சத்ய சாயி பப்ளிகேஷன்ஸ், சென்னை. 1985

முத்துகணேசன், ரெ., சித்தர் நெறி, செல்வி பதிப்பகம், காரைக் குடி. முதற்பதிப்பு, 1985

முத்துராசன், கு., இலக்கிய வடிவங்கள், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம். முதற்பதிப்பு, 1984.

முருகேசன், சி.எஸ்., பதினெண் சித்தர் வரலாறு, அழகு பதிப் பகம், சென்னை. 2004

மோகனராசு, தமிழ் யாப்பு - சில புதிய கோணங்கள், வள்ளுவர் கழகம், சென்னை. முதற்பதிப்பு, 1980

மோசஸ் மைக்கேல் பாரடே, தமிழ்ச் சித்தர் பாடல்களும் விவிலியமும், சென்னை பேராய அச்சகம், சென்னை. முதற்பதிப்பு, 1999

வரதராசன், மு., தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அகாடமி, ஔவை சண்முகம் ரோடு, சென்னை. 1980

வரதராசன், மு., இலக்கியத்திறன், பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை. இரண்டாம் பதிப்பு, 2000

வரதராசன், மு., திருவள்ளுவர் (அ) வாழ்க்கை விளக்கம், பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை.

விஜயராமன், ல.கி. (மொ.ஆ.), பிரேமவாஹினி, பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா, ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதி, தஞ்சாவூர். முதற்பதிப்பு, 1994

வெள்ளை வாரணன், க., பன்னிரு திருமுறை வரலாறு, இரண் டாம் பகுதி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம் பரம். 1969

வெள்ளை வாரணன், க., தொல்காப்பியம் புறத்திணையியல் மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை. முதற் பதிப்பு, 1983

வெள்ளை வாரணன், க., பாம்பாட்டிச் சித்தர் பாடல், பூமகள் விலாச அச்சகம், சென்னை. 1928

வெள்ளை வாரணன், க., சித்தர்கள் ஓர் அறிமுகம், மாணிக்க வாசகர் பதிப்பகம், சிதம்பரம். முதற்பதிப்பு, 1987.

வெள்ளை வாரணன், க., சிவஞான சித்தியார் (தெளிவுரை), ஆறாம் உலகச் சைவ மாநாடு வெளியீடு, திருப்பனந் தாள். 1997.

ஆங்கில நூல்

Meenakshi Sundaram Pillai, Somasundaran Pillai, T.M., Two thousand years of Tamil Literature An Anthrology, Madras, 1959.

இதழ்கள்

சாந்தி சச்சிதானந்தம் (ப.ஆ.), சத்குரு விஜயம், இருதிங்கள் ஆன்மீக இதழ், ஸ்ரீ அகண்ட பரிபூரண சச்சிதானந்த சபை, தஞ்சாவூர். 2012

பரமகுரு, ம. (ப.ஆ.), மக்கள் சிந்தனை, சமய சமுதாய இலக்கியத் திங்களிதழ், குன்றக்குடி. 2012

கட்டுரைகள்

அகத்தியலிங்கம், ச., கந்தசாமி, சோ.ந., சங்க இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்களே (ஆய்வுக்கோவை மூன்றாம் கருத்தரங்கு) மணிவாசகர் பதிப்பகம், சென்னை. இரண்டாம் பதிப்பு, 2000

இளமுருகன், மு., (ப.ஆ.),மதிவாணன், பா., அரங்க. சுப்பையா, மருதம் (கரந்தை மலர் - 4) கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர். முதற்பதிப்பு, 2002.

கோபாலையர், தி.வே., பண்டித வித்துவான் தி.வே. கோபாலையர் கட்டுரை, தமிழ் மண் பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு, 2007.

தமிழய்யா, தமிழ் இலக்கியங்களில் மருத்துவம், (மருத்துவ ஆய்வுக்கோவை) ஔவைக் கோட்டகம், திருவையாறு. முதற்பதிப்பு, 2005.

தமிழய்யா, மண்ணில் நல்லவண்ணம் வாழலாம், பன்னிரு திரு முறைக் கருத்தரங்க ஆய்வு மாலை, கோவை, முதற் பதிப்பு, 2000.

அகராதிகள்

கந்தசாமி, சோ.ந., இந்தியத் தத்துவக் களஞ்சியம், தொகுதி – 1, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம். முதற்பதிப்பு, 2003

கோபாலையர், தி.வே., தமிழ் இலக்கணப் பேரகராதி, (யாப்பு - 2) தமிழ்மண் பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு, 2004.

சந்தியா நடராஜன் (பதி.ஆ.), மதுரைத் தமிழ்ப் பேரகராதி (இரண் டாம் பாகம்), சந்தியா பதிப்பகம், சென்னை. 2004

சாந்தி சாதனா, திவாகரம் - பிங்கலம் - சூடாமணி அகராதி, 125, சேமியர் சாலை, சென்னை. முதற்பதிப்பு, 2000.

சிங்காரவேலு முதலியார், ஆ., அபிதான சிந்தாமணி, புதுதில்லி, நான்காம் பதிப்பு, 1984.

சுப்பிரமணியன், பா.ரா., கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, திருவான்மியூர், சென்னை. 1992

பரமசிவம், த.கோ., இலக்கணச் சூடாமணி, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர். 1990

பாலுசாமி, நா., (ப.ஆ), வாழ்வியற் களஞ்சியம், தொகுதி – 2, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். 1991

பாலுசாமி, நா., (ப.ஆ), வாழ்வியற் களஞ்சியம், தொகுதி – 3, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். 1991

பாலுசாமி, நா., (ப.ஆ), வாழ்வியற் களஞ்சியம், தொகுதி – 8, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். 1998

வையாபுரிப் பிள்ளை, எஸ்., இலக்கியச் சிந்தனைகள், நூற்களஞ் சியம், தொகுதி - 1, சென்னை. 1989.

ஜெகத்ரட்சகன், எஸ்., ஸ்ரீ நாலாயிர திவ்ய பிரபந்தம் நயவுரை, 10, நானா தெரு, பாண்டி பஜார், தி. நகர், சென்னை. மூன்றாம் பதிப்பு, 2002.

தொடர்ச்சியான கருத்தரங்குகள், உயராய்வு அமர்வுகள், பதிப்புப் பணி, இவற்றுடனான தமிழ்ப் பேராசிரியர் என இவரின் தமிழுறவு பாராட்டத்தக்கது. 'செவ்விலக்கியமும் சித்தர் இலக்கியமும்' என்ற இந்த நூல் பெரும் வரவேற்பைப் பெறும் என்பதில் ஐயம் இல்லை. தன் மாணாக்கர் கற்றல், ஆய்தல், கற்பித்தல், கற்றறிந்தவற்றை ஆவணப் படுத்தி அறிவுலகிற்குத் தன் பங்களிப்பாக நூலாக்கம் செய்தல் கண்டு பயிற்றுவித்தவன் என்ற நிறைவில் தம்மினும் தம் மக்கள் அறிவுடையோராகத் திகழ்வதை நாளும் நற்காட்சிப்பேறு எமக்கு வாய்த்த மாணவர் வரலாற்றில் முனைவர் கோ. வெங்கடேசன் வளர்ச்சி பெரிதும் பாராட்டுதற்கு உரியதாகும்.

- முனைவர் மு. இளமுருகன்

ISBN
9788197394706

வைரமுல்லை பப்ளிஷர்ஸ்
தஞ்சாவூர்